
இதயம் முழுதும்
உனது வசம்
தயம் முழுதும்
உனது வசம்
நிவேதா
ஜெயாநந்தன்
NJ1

## முன்னுரை

*கற்பனைகள் அற்புதமானவை!*
*கற்பனைகள் அபூர்வமானவை!*
*கற்பனைகள் அழகானவை!*
*கற்பனைகள் புனிதமானவை!*
*கற்பனைகள்.....!*

இந்தப் புள்ளிகளெல்லாம் நிரப்பப்பட்டாலும் கூட கற்பனைகளின் வீரியத்தை விவரிக்க முடியாது. என் கற்பனைகள் அனைத்தையும் பேனா மையின் உதவி கொண்டு கதைகளாக தீட்டியிருக்கிறேன்... வாசிக்கப்படும் போது திருப்திபடுத்தும் விதமாய் அமையும் என்ற நம்பிக்கையுடன். இது எனது முதல் கதை... எழுத்தையும், தமிழையும் என் உயிருக்கு நிகராக நோக்க ஆரம்பித்தது மகாகவி பாரதியைப் பார்த்துத் தான்..! குடும்பக் கதை எழுதுவதில் முடி சூடா ராணியாக வலம் வந்து கொண்டிருக்கும் எனது மானசீக குருவான திருமதி.ரமணிசந்திரன் அவர் களுக்கு இந்தக் கதையை சமர்ப்பிக்கிறேன். என் எழுத்திற்கு மதிப்பளித்து புத்தகமாக பரிணாமப்படுத்திய சுபம் பதிப்பகத்தினருக்கு கோடி நன்றிகள்...! இதோ எனது முதல் படைப்பு.. உங்களுக்காக...

தமிழ் வாழ்க,
நிவேதா ஜெயாநந்தன்.

# இதயம் முழுதும் உனது வசம்

## 1

***வானவில்லின் ஏழு வண்ணம் போல்..!***
***முழு நிலவின் வெளிச்சத்தைப் போல்...!***
***இரவில் தாலாட்டும் குளிர் காற்றைப் போல்...!***
***என்னுடன் இணைந்தது என் புன்னகை..!***

அழகான அந்தக் காலைப் பொழுது நகருக்கே உரிய பரபரப்புடன் சுறுசுறுப்பாக தொடங்கிக் கொண்டிருந்தது. வெளிப்புறத்துப் பரபரப்பைக் காட்டிலும் சற்றே மிகுதியான பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது அந்தப் பெண்கள் விடுதி.

“இந்த மனோரமா லேடீஸ் ஹாஸ்டலில் இதற்கு

முன் இது போன்று எந்த சம்பவமும் நடந்ததே இல்லை" என்று பெண்கள் இருவர் உரையாடிக் கொண்டிருந்தனர்.

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கென கட்டப்பட்டிருந்த அந்த விடுதியில் காலை நேர உற்சாகமின்றி அனைவரும் ஒரே இடத்தில குழுமி இருந்தனர். பெண்களின் கூச்சலாலும், அழுகைச் சத்தத்தாலும்,அந்த இடமே பெரிய பரபரப்புடன் காட்சியளித்தது.

அந்தக் கூச்சல் அனைத்தையும் அடக்கிய படி, அந்தப் பரபரப்பை உடைத்த படி நடுத்தர வயது பெண்மணி ஒருவர் "தள்ளுங்க தள்ளுங்க.." என்று அனைவரையும் ஒதுக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

அறை எண் முப்பத்தி ஐந்து.

அந்த விடுதியின் பெண்கள் அனைவரும் குழுமி இருந்தது அந்த அறையில் தான். "என்னவாயிற்று..? எதற்காக இங்கே இவ்வளவு கூட்டம்..?" என்று அந்தப் பெண்மணி வினவ..

"மேடம்...." எனக் கண்களைக் கசக்கிக் கொண்டு இளம் வயது பெண்ணொருத்தி அவரின் வழியை மறித்தபடி முன்னே வந்து நின்றாள்.

"என்ன நடந்தது சத்யா? என்னை உள்ளே செல்ல விடாமல் இதென்ன அழுகை..?" என்றார் வார்டன் சலித்த குரலில்.

"மேடம்... மேடம்.. ஸ்வேதா..." என்று தேம்பலுடன் கூறி விட்டு மீண்டும் அழத் துவங்கினாள் சத்யா என்று அழைக்கப்பட்ட பெண்.



"ஸ்வேதாவா? அவளுக்கென்ன ஆயிற்று...?" எனக் கூறி அவளை ஒதுக்கி விட்டு அறையினுள் எட்டிப் பார்த்தார். அங்கிருந்த கட்டிலில் அமைதியாக ஒரு அழகி உறங்கிக் கொண்டிருந்தாள்.

"என்ன சத்யா..? உறங்கிக் கொண்டு தானே இருக்கிறாள்..?" என்றார் அந்த வார்டன் குழப்பத்துடன்.

"ஐயோ... மேடம்.. அருகில் இருக்கும் டேபிளில் பாருங்கள்" என்றாள் இன்னொரு பெண்ணொருத்தி. அந்தக் கட்டிலின் அருகே இருந்த மேஜையின் மீது தூக்க மாத்திரை புட்டியொன்று இருந்தது,காலியான நிலையில்.

பயத்துடன் விழிகளை விரித்தபடி அந்த மேஜையின் அருகே சென்றார். "இது.... இது... ஸ்வேதா எதற்காக தூக்க மாத்திரை சாப்பிட வேண்டும்..? அவளுக்கு என்ன பிரச்சனை...?" என்று பயத்தினால் நடுங்கிய குரலுடன் வினவியவரிடம்..

"இல்லை மேடம்.. நேற்று இரவு தாமதமாகத் தான் விடுதிக்கு வந்தாள். அலுவலகத்தில் ஏதோ பிரச்சனை என்று ராத்திரி முழுதும் புலம்பிய படியே இருந்தாள். விடிந்த பின் பார்த்தால்.... பார்த்தால்.... அந்தத் தூக்க மாத்திரை புட்டி காலியாக இருந்தது மேடம்.. எவ்வளவு எழுப்பியும் அவள் எழவே இல்லை.. பயமாக இருக்கிறது மேடம்.." என்று கண்ணைக் கசக்கினாள் சத்யா.

"ஐயோ அழாதே சத்யா.. எனக்கும் பயமாகத் தான் உள்ளது" என்று கட்டிலின் அருகே சென்று ஸ்வேதாவின் மூக்கில் கை வைத்துப் பார்த்தார். மூச்சு வருவதும் போவதும் கூடத் தெரியாமல் உடல் நடுங்க ஈஸ்வரா.. இது

என்ன சோதனை..? இந்த விடுதி ஆரம்பித்த ஐந் வருடங்களில் ஏதோ இந்த இரண்டு வருடமாகத் தான் நாலு காசு சம்பாதிக்கிறேன்.. அது பொறுக்கவில்லையா..?

ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டாள் என்றால் போலீஸ், விசாரணை, பத்திரிகை என்று அல்லல்பட வேண்டியிருக்குமே. இனி யார் இந் ஹாஸ்டல் பக்கம் வரப் போகிறார்கள்...? ராட்சசி. உயிரோடு இருந்த போதெல்லாம் என் பிராணனை வாங்கியது போதாதென்று செத்த பின்பும் என்னைப் பழி வாங்குகிறாளே'' என ஸ்வேதாவை மனதுக்குள் சபித்தபடி பயத்துடனே நின்றிருந்தார் வார்டன் அம்மையார்.

பெண்கள் அனைவரும் தன் முகம் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து மெல்ல நிமிர்ந்து "நான்... நான்... மருத்துவமனைக்கு போன் செய்கிறேன்...'' என்றபடி கைபேசியில் எண்களை அழுத்தத் துவங்கினார்.

"ஐயோ...! சத்யா நம் நேரத்தை பாரேன், பிஸி ஆகவே உள்ளது'' என்று எரிச்சலுடன் அவர் கூற..

"மேடம்...! அதுக்கு அவசியமே இல்லை மேடம்'' எனக் கூறியபடி அங்கே நடந்த அத்தனை தடபுடல்களுக்கும் காரண கர்த்தாவான ஸ்வேதா கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்தாள்.

அங்கே குழுமியிருந்த அத்தனை விழிகளும் ஆச்சரியத்தில் மூழ்க சத்யாவும், ரம்யாவும் மட்டும் ஸ்வேதாவைப் பார்த்தபடி ஒரு நமுட்டுச் சிரிப்புடன் நின்று கொண்டிருந்தனர்.

"ஸ்வேதா..யூ...யூ...இடியட்.., இந்த முறையும் விளையாட்டு தானா..? அறை எண் முப்பத்தைந்தில்



ப்ரச்னை எனும் போதே நான் சுதாரித்திருக்க வேண்டும், வழக்கம் போல் உங்கள் மூவரின் திட்டம் தான் என்று... எவ்வளவு தண்டனை வாங்கியும் திருந்தவில்லையா நீங்கள்..?'' என்று உறுமத் தொடங்கினார்.

நன்றாக விழித்தபடி... முன்னே விழுந்த கற்றைக் கூந்தலை காதோரத்தில் ஒதுக்கி கொண்டு "சாரி மேடம்'' என்றாள் ஸ்வேதா சிரித்துக் கொண்டே! மற்ற இருவரும் இவள் அருகில் வந்து நின்று கொண்டனர்.

"உங்கள் மூன்று பேருடைய அட்டகாசத்திற்கு அளவில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. மற்ற பெண்கள் அனைவரும் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கையில் நீங்கள் மட்டும் ஏன் என் பிராணனை வாங்குகிறீர்கள்? உங்களால் காலை நேரமே கெட்டாயிற்று. பார், அலுவலகத்திற்கு கிளம்புபாமல் அனைவரும் இங்கே நின்று கொண்டிருக்கிறார்கள். இனி இது போன்று நடந்தால் நீங்கள் இந்த விடுதியில் இருக்கவே வேண்டாம். காலி செய்து விட்டு வேறு இடம் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றார் கோபத்துடன்.

உள்ளுக்குள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டிருக்கும் மனசாட்சியை அடக்கிய படி நிமிர்ந்து "இனிமேல் இப்படி நடக்காது மேடம்..'' என்றாள் ஸ்வேதா.

"ம்.. ம்.. எத்தனையாவது முறையாக இதே வசனத்தைக் கூறுகிறாய் ஸ்வேதா..? இந்த முறை நீங்கள் மூவரும் தண்டனையிலிருந்து தப்பிக்கவே முடியாது.. உங்கள் மூவருக்கும் ஒரு மாதத்திற்கு நம் மெஸ்ஸில் சாப்பாடு கிடையாது..'' எனக் கோபத்துடன் கூறியபடி வெளியேறி விட்டார் வார்டன்.

"உங்கள் மூவருக்கும் சாப்பாடு கிடையாது" என்று வார்டனைப் போலவே சொல்லிச் சிரித்தாள் ஸ்வேதா. "ஐய்யயோ!" என்ற படி தரையில் அமர்ந்தாள் சத்யா. "சிரிக்கிறாயே ஸ்வேதா..? இனிமேல் வெளியே தான் சாப்பிட்டாக வேண்டும்..." என்றவளிடம் "சந்தோசம்.." என்றனர் ஸ்வேதாவும், ரம்யாவும் ஒரு சேர.

"ஏய் சத்யா.. ஒரு மாதத்திற்கு நல்ல சாப்பாடு சாப்பிடலாம்.. சந்தோசமாய் சிரிப்பதை விட்டுவிட்டு ஒப்பாரி பாடுகிறாயா..?" என்று அடக்கினாள் ஸ்வேதா.

"ஆனால் சத்யா உன்னைப் பாராட்டியே ஆக வேண்டும் .. நிஜமாகவே ஸ்வேதா விஷம் குடித்து விட்ட மாதிரி அப்படி ஒரு அழுகை..? அதுவும் அந்தக்கால நடிகைகள் மாதிரி குலுங்கிக் குலுங்கி.. ஹா ஹா ஹா .. நீ மெகா சீரியல்களில் சான்ஸ் தேடலாம்.." என்று சிரித்தவளிடம் "உன்னையும் பாராட்டியே தீர வேண்டும் ஸ்வேதா. அவ்வளவு கூத்து நடந்தும் கொஞ்சம் கூட அசைவே இல்லாமல்.. அமைதியாக படுத்திருந்தாயே..!!" என்று ஒருவரையொருவர் மாற்றி மாற்றிப் புகழ்ந்த படி கலகலத்துச் சிரித்துக் கொண்டிருந்தனர் மூவரும்..

"சரி,சரி நேரமாயிற்று கிளம்புங்கள்.." என்று இருவரையும் விரட்டி,அடுத்த அரைமணி நேரத்தில் சிவப்பு நிற சுடிதாரில்.. முகம் முழுதும் புன்னகையுடன் தோழிகளுடன் சலசலத்தபடியே தன் ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து அலுவலகத்திற்கு கிளம்பினாள் ஸ்வேதா.

ஸ்வேதா... அழகான விழிகள், எப்போதும் புன்னகை புரியும் இதழ்கள் என்று பார்ப்பவரை திரும்பிப் பார்க்கச் செய்யும் அழகான பெண். அப்பா அம்மாவிற்கு ஒரே



பெண். உடன் பிறந்தோர் யாரும் இல்லாததால் பெற்றோரால் மிகச் செல்லமாக வளர்க்கப்பட்ட பெண். சொந்த ஊர் மதுரை என்றாலும் படித்தது சென்னையில். படிப்பு முடிந்ததும் சென்னையிலேயே வேலையும் கிடைத்து விட விடுதியில் தங்கி பணி புரியத் துவங்கினாள்.

கல்யாணம் என்று பேச்செடுத்த பெற்றோரிடம் "உஷ்" சொல்லிவிட்டு சென்னையிலேயே தங்கி விட்டாள். மற்ற படி ரம்யா, சத்யா, வேலை, சென்னை கடற்காற்று, என்று பரபரப்புடன் பழகி விட்ட ஸ்வேதாவிற்கு அந்த ஊரை விட்டுச் செல்ல மனமில்லை..

அன்றைய அலுவலகப் பணியில் ஈடுபட்டிருந்த ஸ்வேதாவை டெலிபோன் அழைத்தது. எடுத்து "ஹலோ" என்றாள்.

"ஸ்வேதா நான் ரம்யா பேசுகிறேன். நாளை நம் ஹரிணிக்குப் பிறந்தநாள். நான் மறந்தே போய் விட்டேன். உன் பிறந்தநாளன்று ஹாஸ்டலுக்கு வந்து கலக்கியவள் அவள்! நீ அவள் வீட்டிற்குச் சென்று சர்ப்ரைஸ் கொடுத்தே ஆக வேண்டும்.." என்றாள்.

"என்னடி இடைவெளி விடாமல் பேசிக் கொண்டே போகிறாய்...? ஹரிணியின் பிறந்த நாள்.. கொண்டாட வேண்டும்.. அவ்வளவு தானே? செய்து விடலாம்.." என்றாள் அவளது வழக்கமான சிரிப்புடன்.

"ஸ்வேதா,பிரச்சனை அது இல்லையடி.. நான் இன்று மதியம் வேலை விஷயமாக பெங்களூர் கிளம்புகிறேன்.. நாளை மாலை தான் திரும்பி வருவேன்.. நீ சத்யாவுடன்

சென்று விடுவாய் தானே?" என்றவளை கோபமாகக் குறுக்கிட்டாள்.

"என்னடி விளையாடுகிறாயா...? சத்யாவின் மாமா வீட்டில் விஷேசம் என்று அவளும் இன்று மாலை புறப்படுவதாக இருக்கிறாள். நீயும் சென்று விடுவாய்.. நீங்கள் இருவரும் இல்லாமல் நான் மட்டும் எப்படிச் செல்வது..? அதுவும் நட்டநடுராத்திரி பன்னிரெண்டு மணிக்கு.."

"ஸ்வேதா வேண்டுமென்றேவா செய்கிறோம்? சூழ்நிலை அப்படியடி.. ஆனால் நீ ஏன் திடீரென்று நல்லவள் போல் நடிக்கிறாய்? பன்னிரெண்டு மணி என்று பயப்பட வேறு செய்கிறாய்? இப்போது சத்யா இருந்திருந்தால் நாங்கள் இருவரும் சேர்ந்து உன்னை கேலி செய்திருப்போம்.. ஹாஸ்டல் அருகில் தானே அவளுடைய வீடு? எத்தனை முறை வெளியே சுற்றி விட்டு பன்னிரெண்டு மணிக்கு மேல் சுவர் ஏறி குதித்திருக்கிறோம்..? பயப்படுவது போல் நடிக்க முயற்சிக்காதேடி.. என்னால் நம்ப முடியாது.." என்றாள்.

"ஏய் ரம்யா... நீங்கள் இருவரும் இருந்தீர்கள்.. செய்தோம்... நான் மட்டும்.." என்று இழுத்தவளிடம்....

"ஆஹா ஸ்வேதா என்கிற வீரப் பெண்மணி, புலியை முறத்தால் துரத்திய பெண்களின் பரம்பரையில் பிறந்தவள்... தவறான சில வாலிபர்களை செருப்பால் அடித்து தன் வீரத்தை நிலை நாட்டிய மங்கை... ஜான்சி ராணியின் ஒன்று விட்ட அத்தை மகள் ஸ்வேதா சுப்ரமணியம் பேசுகிற பேச்சா இது? நீ நிஜமாகவே அந்த வீரப் பெண்மணி தானா..?" என்றெல்லாம் கூறிக் கொண்டே சென்றவளை எரிச்சல் மாறாத குரலில் தடுத்து.



"போகிறேன்டி போகிறேன்.. நீ தயவு செய்து வசனம் பேசுவதை நிறுத்தி விடு, என் காதில் ரத்தம் வடிகிறது.." என நிறுத்தியவள் "சீக்கிரம் வந்து விடு.. நீங்கள் இருவரும் இல்லையென்றால் பொழுதே போகாது.. அந்த டுமீலை (வார்டன்) வேறு நானே சமாளித்தாக வேண்டும்.." எனச் சிரித்தவளிடம்

"ஓகே ஸ்வேதா ஹரிணிக்கு என் வாழ்த்தை சொல்லி விடு.. பை.. என்ஜாய்.." எனக் கூறி போனை கட் செய்தாள்.

மாலையானதும் ஒரு பெரிய பிறந்தநாள் கேக் வாங்கிக் கொண்டு விடுதிக்குச் சென்றாள். இரவு உணவை முடித்துக் கொண்டு, உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டவள் சென்றது கடற்கரை. ஸ்வேதாவிற்கு மிகவும் பிடித்த இடம். அலைகளுடன் கால் நனைத்து விளையாடுவது ஒரு சுகமென்றால்... கரையில் அமர்ந்து அலையை வேடிக்கை பார்ப்பது மற்றொரு சுகம்..

பரந்து விரிந்த தண்ணீர்ப் பரப்பை காண்கையில் மனக்கஷ்டங்கள் அனைத்தும் தவிடு பொடியாவதை உணர்ந்திருக்கிறாள். சுண்டல் விற்கும் சிறார்கள், அலையில் துள்ளி விளையாடி கலகலக்கும் சிறுமிகள், கை கோர்த்த படி தங்களுக்கென ஒரு உலகை வடிவமைத்துக் கொள்ளும் காதல் ஜோடிகள், கடற்கரை ஒரு மிகச் சிறந்த ரசிக்கத்தக்க இடம் என்று மனதில் எப்போதும் எழும் எண்ணங்களுடன் அமர்ந்திருந்தாள் .

இது மாதிரியான நேரங்களில்... அதாவது தோழிகளின் பிறந்த நாளைக் கொண்டாடும்

வேளைகளில்.. ஸ்வேதா மனம் முழுவதும் குதூகலித்தபடி, மகிழ்ச்சியுடனே செல்வாள்.

ஆனால் இன்று ஏனோ.. மனதில் ஒரு மூலையில் நெருடிக் கொண்டே இருந்தது. காரணமேயில்லாமல் இது என்ன நெருடல் என்று முகம் சுளித்தவள்.. ரம்யா, சத்யா இல்லாதது தான் போலும்.. என்று தன் கேள்விக்கான பதிலைத் தானே முடிவு செய்து கொண்டு கையைத் திருப்பி மணி பார்த்தாள்.

பதினொன்று எனக் காட்டியது. இப்போது சென்றால் சரியாக இருக்கும் என்று தோழியின் வீட்டை நோக்கிக் கிளம்பினாள்.ஹரிணியின் வீட்டை அடைந்து.. அவள் பெற்றோரை எழுப்பி.. சரியாக மணி பன்னிரெண்டு அடித்ததும் தோழியுடன் கேக் வெட்டிக் கொண்டாடி விட்டு அங்கேயே தங்கக் கோரிய ஹரிணியிடம் மறுத்து விட்டுக் கிளம்பினாள் .

“பத்திரமாக சென்று விடுவாயா....?உடன் வரட்டுமா..?” என்ற ஹரிணியின் தந்தையிடம், “வேண்டாம் அங்கிள். நடு ராத்திரியில் உங்களுக்கு ஏன் வீண் சிரமம்..? நானே சென்று விடுவேன்..” எனக் கூறி விடைபெற்றாள்.

விரைவாகத் தான் வண்டியைச் செலுத்திக் கொண்டு சென்றாள். ஆனாலும் சுற்றுப்புற அமைதி, தோழிகள் இல்லாதது, தனிமை என்று ஸ்வேதாவை சிறிது சிறிதாக பயம் சூழ்ந்தது. இப்படித் தனியாக வந்திருக்கக் கூடாதோ..? அவ்வளவு தூரம் கெஞ்சிய ஹரிணியின் தந்தையுடனாவது வந்திருக்கலாம்..

“ஐயோ! ரம்யா பேயே! ஜான்சி ராணி, புலி, முறம், வீர மங்கை என்றெல்லாம் கூறி உசுப்பேற்றி அனுப்பி வைத்து இப்படி இக்கட்டில் மாட்டி விட்டு விட்டாளே...! ரம்யா துரோகி.. இப்போது எனக்கு எது நடந்தாலும் நீ தானடி முழுப் பொறுப்பு.. சதிகாரி..” என தோழியை மனதுக்குள் சபித்த படி.. சாலையின் இரு புறமும் இருந்த மரங்கள் மிருகங்களாய் மிரட்டியதைப் பொருட்படுத்தாமல் வேகத்தைக் கூட்டினாள்.



என்றுமில்லாத திருநாளாய் மனதில் ஏற்பட்ட அத்தனை பயத்திற்கும், நெருடல்களுக்கும் பதிலாய்.. அந்த நீண்ட சாலையில் தள்ளாடியபடி இருவர் ஸ்வேதாவின் வண்டியை வழி மறித்து நின்றனர். ஏற்கனவே பயந்து கொண்டிருந்தவள் மிரண்ட விழிகளோடு.. அவர்களை மீறி வண்டியைச் செலுத்தவும் முடியாமல் தடுமாறிய படி வண்டியை நிறுத்தினாள்.

“யார் நீங்கள்? எதற்காக வண்டியை நிறுத்து கிறீர்கள்?” என்றாள் பயத்தில் தொண்டையை விட்டு வர மறுத்த வார்த்தைகளை வெளியே தள்ளியபடி.. “நா.. நாங்கள் போலீஸ்...” என்றான் ஒருவன், அவன் பேசியதில் இருந்தே தெரிந்தது அவன் போதையில் இருக்கின்றான் என்பது.

கை,கால்கள் நடுங்கத் தொடங்க... “போ.. போலீசா? இல்லை... பொய் கூறுகிறீர்கள்... என்னை விட்டு விடுங்கள்... நான் சென்று விடுகிறேன்.. என் பையில் இருக்கும் பணத்தை எல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள்.. என்னை விட்டு விடுங்கள்..” என்று மன்றாடியவளிடம்...

“பணம் யாருக்கு வேண்டும்...? எனக்கு இப்போதிருக்கும் மூடிற்கு நீ தான் கண்ணே வேண்டும்...”

என்று ஏக வசனம் பேசிய படி அருகில் நெருங்கி வந்தான் ஒருவன்.

அவ்வளவு தான்! அவ்வளவு தான் என் நிலைமை!! மிரண்ட விழிகளுடனும் வெடவெடத்த கை, கால்களுடனும் இருவரையும் நோக்கியவளின் கண்கள், இருவரையும் கடந்து பின்னால் சென்றது... ஏனெனில் தூரத்தில் அந்தச் சாலை முழுதிற்கும் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிய படி கார் ஒன்று வந்துக் கொண்டிருந்தது...

# 2

வாழ்க்கையின் சுவாரசியமே...

எதிர்பாராதது நடப்பது தான்....

அப்படி எதிர்பாராமல்....

நடந்த ஒன்று தான் உனது சந்திப்பு....!

**கா**ரைக் கண்டதும் கடவுளைக் கண்ட மகிழ்ச்சியில் கலங்கிய கண்களுடன் அவர்களைக் கடந்து ஓடிச் சென்று இரு கைகளையும் நீட்டி "ஸ்டாப்.. ஸ்டாப்" என்று கத்த அருகில் வந்து அவளைச் சற்றே உரசிக் குலுங்கி நின்றது அந்தக் கார்.

"சார்...." என்ற படி பதறி அடித்துக் கொண்டு அருகே ஓடினாள். காரைத் திறந்து கொண்டு வெளியே



வந்து நின்றான் அந்த ஆறடி உயர இளைஞன்.

"சார்...சார்.. இவர்கள்.... இவர்கள்.... யாரென்றே தெரியவில்லை சார்..., என் வண்டியை நிறுத்தி கலாட்டா...." என்று பதற்றத்துடன் உளறிக் கொட்டியவள் அவன் பார்வையைக் கண்டு அடங்கினாள்.

வாயடைத்துப் போய் விழித்துக் கொண்டு நின்றவளை கடந்து அந்த ரௌடிகளிடம் சென்றவன்.., "என்ன தனியே வரும் பெண்ணிடம் வம்பு செய்கிறீர்களா...?" என்றான்.

அவனது ஆறடி உயரமும், குரலின் கம்பீரமும், அவர்களை பயமுறுத்த, "இல்லை சார்.... இல்லை.... அந்தப் பொண்ணு..." என்று இழுத்தவர்களைத் தவிர்த்து விட்டு அவளின் புறம் திரும்பி "இவர்களை உனக்குத் தெரியுமா....?" என்று வினவினான்.

தொண்டையை விட்டு வெளி வர மறுத்த வார்த்தைகளைச் சமாளித்துக்கொண்டு இல்லை என்பது போல் தலையசைத்தாள் .

பின்பு அவர்களின் பக்கமாகத் திரும்பி "இன்னும் ஐந்து நிமிடம் இங்கே நின்றீர்களானால்.... கை, கால்களை உடைத்துக் காரில் போட்டுக் கொண்டு போய் கடலில் எறிந்து விடுவேன். மரியாதையாக இங்கிருந்து சென்று விடுங்கள். ம், ஓடுங்கள்..." என்று விரட்டினான்.

அவன் விழிகளில் தெரிந்த கோபமும், திடகாத்திரமான உடலும் பயத்தை ஏற்படுத்த, விட்டால் போதுமென்று தலை தெறிக்க ஓடினார்கள்...

நிம்மதிப் பெருமூச்சுவிட்ட ஸ்வேதா கண்களை துடைத்துக் கொண்டு அவன் முன்னே வந்து நின்றாள் "சார்.... ரொம்ப நன்றி சார்... நீங்கள்..." என்று தொடங்கியவளிடம் கையமர்த்திவிட்டு....

"இந்த ராத்திரியில், ஆளரவமற்ற இந்த சாலையில்..., அதுவும் தனியாக வேறு அலைகின்றாயே.. மிகவும் தைரியமான பெண்ணோ...? ஆனா நடந்திருப்பதைப் பார்த்தால் அப்படித் தெரிய வில்லையே...," என்று கீழே கிடந்த கைப்பையையும் வண்டியையும் பார்த்துக் கொண்டே சட்டை பாக்கெட்டினுள் கை விட்டு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டே அந்த காரின் பானெட் மீது ஏறி அமர்ந்தான்.

அவனிடம் மேலும் அவமானப்படுவது பிடிக்காமல் தன்னை அவனிடம் புரிய வைத்து விடும் முயற்சியுடன் "இல்லை சார்...." என்று தொடங்கியவளை மேலே பே விடாமல் தடுத்து...

"தனியாக இந்த நேரத்தில் வருவது ஆபத்து என்று தெரியாதா...? எப்படித் தான் உன்னைப் பெற்றவர்கள் உன்னை இப்படி அனுப்பி விட்டு வேடிக்கை பார்க்கிறார்களோ...? படித்த பெண் தானே...? புத்தி இல்லை..? ஏதாவது தவறு நடந்திருந்தால் என்ன செய்திருப்பாய்...? ம்..? பாய் ஃப்ரண்டுடன் பார்ட்டி, பப், டிஸ்கோதே என்று பாதி இரவைக் கழிக்க வேண்டியது.. ஏன்..? அவனுடனே வீட்டிற்கும் செல்ல வேண்டியது தானே..? ஓ! பெற்றவர்களை ஏமாற்றி சுற்றித் திரியும் கும்பலா..?" என்று நக்கல் பாதியும் கோபம் பாதியுமாய்



பொரிந்து தள்ளினான் அவன்.

முதல் சந்திப்பிலேயே இவனிடம் இவ்வளவு வசவுகளையும் வாங்கி கட்டிக் கொண்டோமே! என்று உள்ளே பொறுமினாலும் மறைத்துக் கொண்டு.... "தவறு நடக்கத் தான் அவசியம் இல்லாமல் போயிற்றே சார்..... நீங்கள் தான் என்னைக் கடவுள் போல் வந்து காப்பாற்றிவிட்டீர்களே....." என்றாள் சின்னக் குரலில்.

புருவத்தைத் தூக்கி நக்கலாகச் சிரித்தபடி "நானா... நான் உன்னைக் காப்பாற்றினேனா...?" என்று பலமாகச் சிரித்தான் அவன். சூழ இருந்த அமைதியில் அவன் சிரிப்புச் சத்தம் அதிர.. லேசாக நடுங்கியபடி அவனைப் புரியாமல் ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஓஹோ...! விலை உயர்ந்த காரில் இருந்து இறங்கியதால்..., இரண்டு ரௌடிகளைத் துரத்தியதால்..., என்னை ஆபத்பாந்தவன், அனாதரட்சகன், நல்லவன் ரீதியில்... எண்ணிக் கொண்டாய்..., ம்., அப்படித் தானே...?" என்றான் கண்களில் தேங்கிய சிரிப்புடன்.. என்ன கூறுவதென்று தெரியாமல்... அவனை நம்பவும் முடியாமல்.. பேந்த பேந்த விழித்தபடி செய்கையற்று அவனையே பார்த்த வண்ணம் நின்றிருந்தாள்.

திமிரான பார்வையுடன் மெதுவாக அவளருகே வந்து நின்றவன் "ஒருவேளை நான் உன்னிடம் தவறாக நடந்து கொண்டால் என்ன செய்வாய்..? ம்..? அடுத்த காரை வழி மறைப்பாயா...?" என்றான் தணிந்த குரலில்.

தப்பித்து விட்டோம் என்று குதூகலித்த மனது..., பெரிய ஆபத்தில் சிக்கிவிட்டதாய்க் கதற... கை,

கால்களின் நடுக்கத்தை மீறி.. மனதில் ஏற்பட்ட
நடுக்கத்தை மறைத்துக்கொண்டு எச்சில் விழுங்கினாள்..

நடுங்கிய உதடுகளைப் பற்களால் கடித்தபடி சலனமற்று அழுத்தமாக நோக்கிய அவனது விழிகளை சந்திக்க மறுத்து, பயம் அனைத்தும் ஒரு சேர எழுந்த தைரியத்தில் அவனை அடித்துத் தள்ளி விட்டு ஓடிவே விட்டாள்.. "இடியட் ... இடியட்...." என்று அவன் கத்து சத்தம் பின்னால் ஒலித்தாலும் மனதில் எழுந்த வேகத்துடன் ஓடிச் சென்று விட்டாள்.

விடுதி வரை நிற்காமல் ஓடி வந்தவள், விடுதி வாசலுக்கு வந்ததும் திரும்பிப் பார்த்தாள். நல்ல வேளை அவன் பின் தொடரவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு.. பெரிது பெரிதாக எழுந்த மூச்சுடன் சுவர் ஏறி குதித்து உள்ளே சென்றாள். அறைக்குச் சென்று குளித்து விட்டு படுக்கையில் அமர்ந்தவளுக்கு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள வெகு நேரம் தேவைப் பட்டது.

அவனும், அவனது உயரமும், அதை விட மனதின் எண்ணங்களை வெளிக் காட்டாத சலனமற்ற அழுத்தமான அவன் விழிகளும், அவன் பேச்சும்... அப்பப்பா! என்று கண்களை மூடித் திறந்தாள். அவனிடம் அகப் பட்டிருந்தால் என்னவாகியிருக்கும்..? எண்ணங்களே அவள் மனதில் கலக்கத்தை ஏற்படுத்த, எப்படியோ அவனை எதிர்த்து, தப்பித்து, ஓடி வந்தாயிற்று... வண்டி கைப்பை என்று அனைத்தையும் அங்கேயே விட்டு வந்தாயிற்று... ஆனால் அகப்பட்டிருந்தால் ஏற்படும் இழப்பிற்கு இது எவ்வளவோ மேல் தான்..!



எவ்வளவு இழப்பு! பெண் என்று பயமும், அடக்கமும் இல்லாமல் தான்தோன்றியாய்த் திரிந்ததற்கு இன்று தண்டனை கிடைத்தாயிற்று.. எத்தனை முறை இது போல் அநியாயம் செய்திருப்பாள்..? அனைத்திற்கும் இன்று ஆப்பு வைத்தாயிற்று.. தேவையா..? தேவையா...? என்று தலையில் அடித்துக் கொண்டாள். தனக்குள்ளே புலம்பிய படி.. இரவு முழுவதும் முனகிக்கொண்டு.. விடியற்காலையில் உறங்கிப் போனாள்.

**ம**றுநாள் அலுவலகத்திற்கு பேருந்தில் செல்ல புறப்பட்டாள். "வண்டி எங்கே ஸ்வேதா..," என வினவியவர்களிடம் "சர்வீஸிற்கு கொடுத்திருக்கிறேன்.." என்று உளறிக் கொட்டிவிட்டு வெளியேறினாள். நேற்று இரவு அவள் சென்றதும் எப்படியும் அவனும் சென்றிருப்பான். சென்றவன் வண்டியையும் எடுத்துக்கொண்டா சென்றிருப்பான்..? ஒருவேளை... அங்கேயே விட்டுச் சென்றிருந்தால்... இந்த எண்ணம் தோன்றியதும்.. மீண்டும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றாள். ஆனால் அங்கே அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றத் தடமே இல்லை. மேலும் குழம்பியபடி அலுவலகம் நோக்கிச் சென்றாள்.

நேற்றைய நிகழ்வின் பாதிப்பால் அமைதியாக வேலையில் ஈடுபட்டிருந்த ஸ்வேதாவிடம் "ஏனிந்த திடீர் மாற்றம்.... போதி மரத்திற்குச் சென்றாயா..? புத்தர் கனவில் வந்தாரா..?" என்று பற்பல கேள்விகள் கேட்டனர். "உடல்நிலை சரி இல்லை.. அதனால் தான்" என்று ஏதோ கூறிச் சமாளித்தாள்.

சில மணி நேரங்களிலேயே பாஸ் அழைப்பதா
தகவல் வர சலித்தபடி எழுந்து சென்றாள். அனுமதி கேட்டு
உள்ளே நுழைந்தவளிடம் "குட் மார்னிங் ஸ்வேதா.." என்ற
எம்.டி. செந்தில்குமரன். . பதிலுக்கு குட் மார்னிங்
என்றவளை உற்று நோக்கியபடி "என்ன ஸ்வேதா.. மிகவும்
டல்லாகத் தெரிகிறாய்.. வழக்கமான டெலிபோன்
சிரிப்பைக் காணவில்லையே... என்னாயிற்று...?" என்று
வினவினார்.

"ஒன்றுமில்லை சார்... லேசாய் தலைவலி..." என
சமாளித்தவளிடம் "இல்லை, நீ பொய் சொல்கிறாய்
எனக்குக் காரணம் தெரியும்.." என்று தங்கமலை
ரகசியத்தை தெரிந்து வைத்துக் கொண்டது போல்
பெருமையுடன் கூறியவரை எரிச்சலுடன் நோக்கினாள்.
இந்த ஆன்டனி ஏன் காலையிலேயே கடுப்படிக்கிறார்.
(பாட்ஷா படத்தில் வரும் ரகுவரனைப் போல் அவர்
பேசுவதால் ஸ்வேதாவினால் வைக்கப்பட்ட செல்லப்
பெயர் இது) என்று வெம்பியபடி நின்றிருந்தாள்.

"உன்னுடைய ஸ்கூட்டி தொலைந்து போயிற்று...
அது தானே...?" என்றவரை ஆச்சர்யத்தில் விழி விரித்து
நோக்கினாள். "சார்... உன்..உங்களுக்கு எப்படித்
தெரியும்....?" என்றவளைப் பார்த்து லேசாக நகைத்தவர்
"உன் ஸ்கூட்டி-யை வைத்திருப்பவர் தான் எனக்கு போன்
செய்தார்....." என்றார்.

"ஆ..!" என வாய் திறந்தபடி இமைக்கவே மறந்து
போய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தவளை
"ஸ்வேதா... ஸ்வேதா..." என இருமுறை அழைத்து
நடப்பிற்கு கொண்டு வந்தவர்...



"ரிலாக்ஸ் ஸ்வேதா... ஸ்கூட்டி கிடைத்தாயிற்று... ஆம்... அது பத்திரமான இடத்தில் தான் உள்ளது. கார்த்திக் க்ரூப் ஆஃப் கம்பெனீஸின் எம்.டி உன் ஸ்கூட்டி-யை வைத்திருப்பதாய் தகவல் தெரிவித்தார். இந்த முகவரிக்கு வந்து உன்னை வாங்கிக்கொள்ளும் படியும் கேட்டுக் கொண்டார். என்ன விழிக்கிறாய்...? பீ ஹாப்பி" என்று அவளிடம் ஒரு காகிதத்தை நீட்டினார்.

புன்னகை புரிய முயன்றபடி அவரிடமிருந்து அந்தக் காகிதத்தை வாங்கினாள். "தேங்க் யூ சார்..." எனக் கூறி விட்டு வெளியே வந்து தன் இருக்கையில் அமர்ந்த ஸ்வேதாவிற்கு என்ன நடக்கிறதென்றே புரிந்து கொள்ள முடியவில்லை.., நடப்பவை அனைத்தையும் உணர்ந்து கொள்ள முடியாமல் குழம்பிப் போயிருந்தாள். தான் எண்ணியதுபோல் அவன் கெட்டவன் அல்ல.., முட்டாள்தனமாக அவனை அறைந்து தள்ளி விட்டு வந்தாயிற்று! பெரிய பணக்காரன் வேறு, என்ன செய்ய காத்திருக்கிறானோ? என்று பலவாறு மனதில் ஏற்பட்ட எண்ணங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு மாலை வரும் வரை காத்திருந்தாள்.

மாலையானதும் எம்.டி. கொடுத்த முகவரிக்கு போய்ச் சேர்ந்தாள். இருபுறமும் மரங்கள் அடர்ந்த அந்தச் சாலையில் நடப்பது சுகமாகத் தான் இருந்தது. ஆனால் அடுத்த நொடி, அவனைக் கண்டதும் என்ன நடக்கப் போகின்றதோ.. என்பதை நினைக்கையில்.. திக் திக் என்று சத்தமிட்டது இதயம். ஏதேதோ எண்ணமிட்டபடி அந்த முகவரியைச் சென்றடைந்தாள்.

அது வீடல்ல.. மாளிகை.. வெளிப்புற பிரமாண்டத்தைக் கண்டே விழி அகல பிரமித்துப் போய்

நின்றிருந்தாள். இவ்வளவு பெரிய பணக்காரனை.. வெண்பஞ்சு மெத்தையில் உருள்பவனை... பட்டுக் கம்பளத்தில் நடப்பவனை, வெள்ளித் தட்டில் உண்பவனை அடித்து விட்டாயிற்று.

மூட மதி என்று சரியாகத் தான் கூறியிருக்கிறார்கள். சாரி எனக் கூறி காலில் விழ வேண்டியது தான்.. வேறு வழி இல்லை.. ஆண்டவா.. கிருஷ்ணா.. காப்பாற்று.. என்று புலம்பிய படி கேட்டின் அருகே சென்றாள்.

வாட்ச்மேன் யாரும் இல்லாததைக் கண்டு சுற்றும் முற்றும் நோக்கியவள் பின்பு தானே கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். அடுத்த அடி எடுத்து வைக்கையில் உள்ளூர பயம் எழுந்தது. இவ்வளவு பெரிய வீட்டில் நிச்சயம் நாய்கள் இருக்குமே..! ஒரு வேளை அவனை அடித்ததற்கு நாயை விட்டுக் கடிக்க வைத்து தண்டனை கொடுப்பானோ...? இந்த எண்ணம் எழுந்ததுமே, திரும்பிச் சென்று விடலாமா என்று ஒரு கணம் நின்று விட்டாள்.

சென்றுவிடலாம் தான்! ஆனால் அவன் மறுபடியும் செந்தில் சாருக்கு ஃபோன் செய்ய மாட்டான் என்பது என்ன நிச்சயம்...? நான் கூறியும் நீ ஏன் செல்லவில்லை என்று அவர் வினவினால் அவமானமாகி விடும்.. வேண்டாம்! வேண்டாம்! உள்ளே செல்லலாம் என்று, அசட்டுத்தனமாக மனதில் எழுந்த எண்ணத்திற்குத் தன்னையே கடிந்து கொண்டு உள்ளே சென்றாள் ஸ்வேதா.

வெளிப்புறத்துத் தோற்றத்தைக் காட்டிலும் உட்புறத் தோற்றம் மிக அழகாய், ரசனையுடன் கட்டப்பட்டிருந்தது.



ரசிகன் தான் என்ற படி சுற்றும் முற்றும் பார்த்தபடி நின்றவளின் விழிகள் ஓரிடத்தில் நிலைத்து நின்றன. ஏனெனில் அங்கிருந்த ஓர் அறை வாயிலில் மார்பின் குறுக்காக கைகளை கட்டிக்கொண்டு அவளையே பார்த்தவண்ணம் நின்றிருந்தான் அவன்.

விழிகளைத் தாழ்த்தி குற்ற உணர்வுடன் அவனை நோக்கினாள். மெதுவாக நடந்து வந்து அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான். 'இங்கே வா' என்பது போல் சைகையால் அழைத்தான். நடுக்கத்துடன் நடந்து சென்று அவன் முன்னே நின்றாள். தவறு செய்த மாணவன் ஆசிரியர் முன்பு பயத்துடன் நிற்பது போலிருந்தது அவளது நிலைமை.

நடுங்கிய உதடுகளைக் கடித்தபடி தரையைப் பார்த்தவண்ணம் அசைவற்று நின்றிருந்தாள். அவளை உட்காரக் கூடச் சொல்லாமல் மேலிருந்து கீழ் வரை ஏற இறங்க நோக்கியவன் "வர மாட்டாய் என்றல்லவா நினைத்தேன்...! பரவாயில்லையே.... வந்து விட்டாய்..." என்றான் வழக்கம் போல் வார்த்தைகளில் நக்கலைக் கலந்து...

வலது காலின் பெருவிரலைத் தரையில் வைத்து அழுத்தியபடி அமைதியாக நின்றிருந்தாள். ஒரு வேக மூச்சுடன் எழுந்து அவளருகே வந்தான்.

"உனக்கு மூளை என்று ஒன்று இருக்கிறது தானே? அல்லது அது இருக்குமிடத்தில் களிமண் இருக்கிறதா...? புத்தி இல்லை..? காப்பாற்றியவன் தவறாக நடந்து கொள்வானா என்று யோசிக்க வேண்டாம்...??

எவ்வளவு... எவ்வளவு தைரியமிருந்தால் என்னையே அடித்துச் சென்றிருப்பாய்..? ம்? என்னை பெற்றவர்கள் கூட என்னை அடித்ததில்லை தெரியுமா....? அவசர புத்தி... இடியட் ...'' என்றவனைக் கோபத்துடன் இடைமறித்தாள்.

மூளை இல்லை? புத்தி இல்லை? இவன் தன்னைப் பார்த்து இவ்வளவு வார்த்தைகளும் கூறுகிறான்...! மன்னிப்பு கேட்க வேண்டுமென்று வாசலில் எடுத்த உறுதி இருந்த இடம் தெரியாமல் காணாமல் போக, கோபத்துடன் அவன் பேச்சை இடைமறித்து விட்டாள்.

''காப்பாற்றியவன், காப்பாற்றியவன் என்று பெரிதாய்ப் பேசுகிறீர்களே....! காப்பாற்றியவர் எதற்காக அப்படிப் பேச வேண்டும்...? ஏற்கனவே பயத்தில் இருந்த நான் என்ன செய்வதென்று தெரியாமல் தான்....'' என அவன் முகம் பார்க்காமல் பேசியவள் இப்போது தயங்கி பேச்சை நிறுத்தி அவனை நோக்கினாள். மீண்டும் கோபம் தலைக்கேற அவளை உறுத்து நோக்கினான்.

''என்ன செய்து விட்டேன்...? ம்..? கையைப் பிடித்து இழுத்தேனா..? அல்லது காதல் வசனம் பேசினேனா..? பயமாகத் தெரிகிறாயே என்று உன்னைச் சாதாரணமாக்க முயற்சிக்கலாமே என்று விளையாட்டாகப் பேசியது தவறா...? சரி, உனக்கு தவறாகவே பட்டாலும்... ஓடுகிறவள்... சும்மா ஓட வேண்டியது தானே..? என்னை எதற்காக அடித்து விட்டு ஓடினாய்..? வேலை மெனக்கெட்டு அந்த நடு ராத்திரியில்.. அந்த யாருமற்ற சாலையில் காரை நிறுத்தி உன்னைக் காப்பாற்றியவனுக்கு நீ செலுத்தும் நன்றிக்கடன் இது தானா?'' என்றான் கன்னத்தை தடவியபடி.



அவன் செய்கை சிரிப்பை வரவழைத்தாலும் காட்டிக்கொள்ளாமல் "விளையாட்டிற்கா..? என்ன சொன்னீர்கள்..? விளையாட்டிற்கா...? பயத்தில் முகம் வெளிறிப் போய் நின்றிருப்பவளிடம்... "நான் உன்னிடம் தவறாக நடந்து கொண்டால் என்ன செய்வாய்?'' என்று ஆணித்தரமாகக் கேட்டு வைத்து விட்டு இப்போது விளையாட்டு என்கிறீர்களா....? இப்போது முட்டாள் தனமாகப் பேசுவது நான் அல்ல. நீங்கள் தான்.''

"தவறும் செய்துவிட்டு எதிர்த்து வேறு பேசுகிறாயா..? அடித்தது மட்டுமில்லாமல் என்னையே முட்டாள் என்பாயா..? என் தவறு தான்..., ரோட்டில் நீ காரை வழி மறித்த போதே கண்டுகொள்ளாமல் சென்றிருக்க வேண்டும்...., உன்னைப் போன்ற அதிகப் பிரசங்கிகளுக்கு உதவி செய்தால் என் நிலைமை தான்.. இல்லை, இல்லை, உன்னைப் பேச விடுவதே தவறு....'' என்று நிறுத்தியவன் எதையோ நினைத்துக் கொண்டு மறுபடியும் சிரிக்கத் துவங்கினான்.

"நேற்றே என்னால் உன்னைத் தொடர்ந்திருக்க முடியாது என்று நினைத்தாயா.....? இந்த பி.டி உஷாவை ஓட்டத்தில் பிடிப்பது என்ன அவ்வளவு கடினமான காரியமா..? அதை விடு, இன்று உன்னை எதற்காக இங்கே வரவழைத்தேன் என்றாவது யோசித்தாயா....?'' என்ற படி மேலும் மேலும் விழி விரித்து நோக்கிக் கொண்டிருந்தவளின் அருகில் நெருங்கி நின்றான்.

தடதடத்த இதயத்தைக் கட்டுபடுத்திக் கொண்டு அவனை அண்ணாந்து நோக்கினாள். "சார்...சார்.... நீ....நீங்கள் நல்லவர் என்று நம்பித் தான்.....'' என ஆரம்பித்தவளிடம் தணிந்த குரலில் "நேற்று எது நடந்து

விடும் என்று பயந்தாயோ... அது... இப்போது... இங்கே... நடக்கப் போகிறது... என்ன செய்யப் போகிறாய்..? ம்..? என்னை அறைந்து விட்டுச் செல்லும் திட்டம் ஏதுமிருந்தால் அழித்து விடு... ஏனெனில் இது யாருமற்றச் சாலை இல்லை பெண்ணே.. என் வீடு... என் கோட்டை வீட்டைச் சுற்றிக் காவல் உள்ளது.. தெரியுமா உனக்கு...?"

அவன் அருகாமையும்... அவன் குரலும்.. அந்த விழிகளும்.. சிலிர்ப்பை ஏற்படுத்த "வே..வேண்டாம் சார்.. நீங்கள் நேற்று நடந்து கொண்ட விதத்திற்கு எந்தப் பெண்ணாக இருந்தாலும்..." என்றவளை மேலே பேச விடாமல்...

"எந்தப் பெண்ணாக இருந்திருந்தாலும் என்ன செய்திருப்பாள்..? ம்? யாரோ இரு தேர்ட் ரேட் ரௌடிகளிடம் மாட்டுவதற்கு இவன் எவ்வளவோ மேல் என்று நினைத்திருப்பாள். விட்டுவிடுங்களென கெஞ்சியிருப்பாள்..." என்று கேலியாகக் கூறி அவள் முகம் நோக்கியவன் அதில் பிரதிபலித்த அருவெறுப்பைக் கண்டு "இப்போது கூட உனக்கு மன்னிப்பு கேட்க வேண்டுமென்று தோன்றுகிறதா....?"

"ஒரு பொறுக்கியிடம் அப்படிக் கெஞ்சி எனக்கு பழக்கமுமில்லை... மன்னிப்பு கேட்கவேண்டிய அவசியமும் இல்லை..." என்று மிடுக்காகக் கூறியவளை "ஏய்...." என்ற உறுமலுடன் அவளின் கையைப் பற்றி தன்னருகில் இழுத்தான்.

"தைரியமில்லாமல் நேற்று ஓடிச் சென்றுவிட்டு இன்று என் வீட்டில்.. என்னையே.. பொறுக்கி என்பாயா...? பொறுக்கித் தனமான காரியங்களை நேற்றே



செய்திருக்க வேண்டும்... சின்னப் பெண்ணாயிற்றே என்று பாவம் பார்த்தது என் தவறு தான்.." என்றபடி... அவளையே கோப விழிகளால் நோக்கியவன்.., சட்டெனக் குனிந்து அவள் கன்னத்தில் அழுந்த முத்தமிட அதிர்ச்சியுடன் நிமிர்ந்து நோக்கினாள்.

பற்றிய வேகத்திலேயே அவளை விடுவித்தவன், "இது... நீ என்னை அடித்ததற்கான.. அதிகபிரசங்கித் தனமான வார்த்தைகளை விட்டதற்கான தண்டனை.... போ...." என்றவன் திரும்பி நடந்து உள்ளே சென்றான். "உன் கைப்பையையும், சாவியையும் எடுத்துக் கொண்டு போ..." என்று உள்ளே செல்லும் போதே கூறி மறைந்தான்.

இமைக்க மறந்து சிலையென வீற்றிருந்தாள் . மூளை இயங்க மறுத்து.. இதயம் நின்று விட்டதைப் போல் உணர்ந்தாள். இப்போதே... இந்த நொடியே... பூமி பிளந்து தன்னை உள்ளிழுத்துக் கொள்ளாதா என்றிருந்தது.. வேரோடிப் போயிருந்த கால்களை சிரமப் பட்டு நகர்த்தி கண்களைக் கசக்கி மூளையைச் செயல்பாட்டுக்கு கொண்டு வந்தாள். அங்கேயே நின்று கொண்டு மேலும் அவமானப் படாமல் கைப்பையும் சாவியையும் எடுத்துக் கொண்டு கண்களில் வழிந்த நீருடனும் கலங்கிய மனதுடனும் வெளியேறினாள்.

# 3

*வார்த்தைகளால் காயப்படுத்தி விட்டு*

புன்னகையால் மருந்திடுகிறான்...

அவன் வார்த்தைகளால்..

ஏற்பட்ட காயத்தை விட...

புன்னகையால் ஏற்பட்ட..

காயமே அதிகம்...!

எப்படி அவன் வீட்டிலிருந்து வெளியேறி விடுதிக்கு வந்து சேர்ந்தாள் என்பது ஸ்வேதாவிற்கு புரியாத புதிராகத் தான் இருந்தது. எம்.டிக்கு ஃபோன் செய்து வண்டி கிடைத்து விட்டதைக் கூறி விட்டு சோர்வுடன் படுக்கையில் அமர்ந்தாள்.

தலையில் கை வைத்துக் கண் மூடி அமர்ந்தவள்... தன்னையும் மீறி.. தேம்பித் தேம்பி அழலானாள்... ஸ்வேதா! எவ்வளவு தைரியமான பெண்!.., பஸ்ஸில் கலாட்டா செய்தவர்களை போலீசில் மாட்டிக் கொடுத்து வீரசாகசம் புரிந்தவள்!! அனைவராலும் துணிச்சலான பெண் என்று பாராட்டப்பட்டவள்....!! இன்று கோழைத்தனமாக அழுது கொண்டிருக்கிறாள்.

துணிச்சல், தைரியம், பேச்சு என்று அவளது அடிப்படை குணங்கள் அனைத்தும் அவன் முன்பு தோற்று ஒடுங்கிப் போனது தான் பெரிய ஆச்சரியம்! அவன் பார்க்கும் பார்வையில்... வார்த்தைகள் தொண்டைக் குழியில் சிக்கிக் கொண்டு பேச்சு வா



மறுத்து உதடுகள் ஒட்டிக் கொள்வதும்... மனதின் தைரியம் அனைத்தும் மறந்து, படபடப்புடன் விழிக்கத் தொடங்கி விடுவதும்... ச்ச, என்ன விதமான உணர்விது..? கோழைத்தனம்!! முட்டாள்தனம்! இந்த அளவிற்கு அவனைத் துணிய விட்டது மிகப் பெரிய முட்டாள்தனம்!

அறைந்து தள்ளி விட்டு வந்ததுடன் விட்டுத் தொலைத்திருக்கலாம். அவன் பணக்காரன், திமிர் பிடித்தவன் என்று தெரிந்தே அவன் வீட்டிற்குச் சென்றது பெரும் தவறு.. அவனை எதிர்க்கும் அளவு பலம் இல்லையெனும் போது அவனைத் தேடிச் சென்றது முதல் தவறு..... மேலும் மேலும் பேசி அவன் ஆத்திரத்தைத் தூண்டி விட்டது இரண்டாவது தவறு.... நேற்றைய சம்பவம் இவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விட்டதே!! இரண்டு நாளைக்கு முன்பு "ஸ்வேதா நீ விரைவிலேயே அழுவாய்.." என்று யாரேனும் கூறியிருந்தால் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்திருப்பாள்..

அந்தப் படு பாவியினால் இந்த நிலைக்கு ஆளாக நேரிட்டு விட்டதே!! அடித்ததற்கு தண்டனையாம்!! எவ்வளவு சாதாரணமாகக் கூறுகிறான்..? ராஸ்கல்.., ஐயோ ஐயோவென ஸ்வேதாவின் மனம் கதறலாயிற்று. வெகு நேரம் அழுது கொண்டிருந்தவள் கதவு தட்டும் சத்தம் கேட்டு வேகமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டு கதவைத் திறந்தாள்.

"ஹாய் ஸ்வேதா....," என்ற படி ரம்யாவும்,சத்யாவும் நின்று கொண்டிருந்தனர். "வாங்க" என்று உள்ளே சென்றவளிடம் "என்ன ஸ்வேதா முகமே சரியில்லை....?, உடம்பு சரியில்லையா..?" என்று நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள் சத்யா.

"என்னடி நாங்கள் இருவரும் இல்லாதது உனக்கு காய்ச்சலையே உண்டாக்கி விட்டதா...?" என்று நன்றாக சிரித்தாள் ரம்யா. "ஒன்றுமில்லை வேலை இன்று அதிகம்...." எனக் கூறி அதிகம் பேசாமல் படுத்து கொண்டாள். "சரியில்லையே..." என்றபடி இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

மறுநாள் முழுவதும் அமைதியுடன் காணப்பட்ட ஸ்வேதாவை அலுவலகத்திலும் சரி,விடுதியிலும் சரி அனைவரும் வித்தியாசமாக நோக்கினர். அன்று மாலை விடுதியில் ஏதோ எழுதியபடி அமர்ந்திருந்த ஸ்வேதாவை அழைத்தாள் ரம்யா.

"ஸ்வேதா.., ஏன் இப்படியிருகிறாய்? என்ன தா நடந்தது..? வழக்கத்திற்கு மாறாக இதென்ன ஊமைச்சாமியார் மாதிரி இருக்கிறாய்..? சொல்லி தொலையேன்டி.." என்றாள் பொறுமையிழந்து.

"அதை நான் கூறுகிறேன் ரம்யா.." என்ற சத்ய தலைகுனிந்தபடி அமர்ந்திருந்த ஸ்வேதாவை ஒரு முறை பார்த்து விட்டு "ஸ்கூட்டி... கார்த்திக்....." என்று இழுத்தாள்.

சட்டென அவளைத் திரும்பிப்பார்த்த ஸ்வேதா உடனேயே அமைதியுடன் "தெரிந்து விட்டதா..? ஆபீஸிற்கு போன் செய்தாயாக்கும்..?" என்றாள்.

"ஆமாமடி ஆமாம்.., என்ன தவறு...? நீ எதுவுமே கூறாமல் முழுதாக இருபத்தி நான்கு மணி நேரம் மௌன விரதமிருக்கிறாய். காரணம் கேட்டால் சொல்ல மறுக்கிறாய். அதனால் தான் உன் பக்கத்து சீட் அஞ்சலை சாரி.. அஞ்சலாவிற்குக் கால் செய்தேன். ஸ்வேதா எங்கே



என்று நான் கேட்ட ஒரே கேள்விக்கு அவள் அனைத்தையும் ஒப்பித்து விட்டாள்.

இதில் என் தவறென்று எதுவுமில்லை தெரிந்து கொள்.." என ஸ்வேதாவிடம் பாய்ந்தவள் ரம்யாவின் புறம் திரும்பி...."ஆனால் ரம்யா.. அந்த கார்த்திக் அழகனடி!! எவ்வளவு ஸ்மார்ட் தெரியுமா....?" என்றவளிடம் 'நீ எப்போது அவனைப் பார்த்தாய்' என்பது போல் பார்த்த ஸ்வேதாவை அலட்சியம் செய்து விட்டு "போன வாரம் அவரைப் பற்றி ஒரு புத்தகத்தில் கட்டுரை படித்தேன்.. அதிலே பார்த்தது தான்.. வெரி ஹாண்ட்சம் டி.. அவரைப் பார்த்ததில் இருந்து தான் ஸ்வேதா சைலன்ட் மோடில் இருக்கிறாள்" எனக் கூறி ஸ்வேதாவின் எரிகிற மனதில் எண்ணையை ஊற்றினாள்.

"ஐயோ ஆண்டவா அந்தப் பேச்சை விட்டுத் தொலைங்களேன்.. ஹாண்ட்சமா? மண்ணாங்கட்டி! தொலைத்த வண்டியை அவன் திருப்பிக் கொடுத்தான் போதுமா..? விஷயம் அத்துடன் முடிந்து விட்டது.., தேவையில்லாமல் உளறுவதை நிறுத்தி விடு.....," என நெற்றிக் கண்ணைத் திறந்தவளை ஆச்சர்யமாக நோக்கி..

"உன்னையும், உன் மாறுதல்களையும் பார்த்தால் விஷயம் அத்துடன் முடிந்து விட்டதாகத் தெரியவில்லையே..." என ஆரம்பித்தவள் ஸ்வேதாவின் எரித்து விடும் பார்வையைக் கண்டு அடங்கி அறையை விட்டு வெளியேறினாள்.

அதற்குப் பிறகு அந்தச் சம்பவத்தை ஸ்வேதா முழுதாக மறந்துவிட்டாள் என்று கூறமுடியாவிட்டாலும் வெளிப்படையாக அனைவரும் கேள்வி கேட்குமளவிற்கு

மாற்றத்தைக் காண்பிப்பதையும் வெகுவாகக் குறைத்து விட்டிருந்தாள்.

அன்று விடுமுறை நாள் என்பதால் கட்டிலில் படுத்து புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த ஸ்வேதாவிட "ஸ்வேதா நான் வெளியே கிளம்புகிறேன்" என்றபடி வந் நின்றாள் ரம்யா. புத்தகத்திலிருந்து கண்களை எடுக்காமலேயே "ம்,ம்" என்றவளிடம் 'ஒரு உதவி செய் வேண்டும் ஸ்வேதா" என்றாள்.

"என்ன புடவையைக் கீழே சரி செய் வேண்டுமா..?" என்றவளை "ஐயோ ஸ்வேத அதெல்லாம் தேவை இல்லை.. நம்முடன் படித் ப்ரியாவிற்கு புதன் கிழமை கல்யாணம்.." என்றவளிடம்

"ம்,ம் பத்திரிகை வந்ததே....,இப்போது என்ன பிரச்சனை..?" என்று எரிச்சலுடன் மீண்டும் புத்தகத்தி கண்களை ஓட்டியவளிடம் "பத்திரிகை வாங்கி வைத்தா போதுமா? கிஃப்ட் எதுவும் வாங்க வேண்டாமா..? என்றாள்.

"அதற்கு..." என்றவளிடம் "நீ சென்று வாங்கி வந் விடு.. லேட்டஸ்ட் கலெக்சன் கிஃப்ட் கடைக்கு செல்லடி.. டாட்டா...." என்றபடி அவளது பதிலுக்கு காத்திராமல் ஓடி மறைந்தாள் சத்யா.

"ஒரு நாள் நிம்மதியாக இருந்தால் பொறுக்காதே என்றபடி கட்டிலை விட்டு எழுந்து உடை மாற்றி கொண்டு புறப்பட்டாள் ஸ்வேதா.

அது ஒரு மிகப் பெரிய கிஃப்ட் ஷோரூம் எப்போதுமே பரிசுப் பொருட்கள் வாங்குவதென்றா



மூவரும் இந்தக் கடைக்கு வந்து தான் பழக்கம். வண்டியை பார்க் செய்து விட்டு கடைக்குள் நுழைந்தாள். "என்ன மாதிரியான கிஃப்ட் பார்க்கிறீர்கள் மேடம்..., கிளாஸ் ஒர்க் காட்டட்டுமா.." என்று வினவிய விற்பனைப் பெண்ணிடம் "சரி" எனக் கூறி அவள் காட்டிய திசையில் சென்றாள்.

கண்ணாடியில் விதவிதமாக வடிவமைக்கப் பட்டிருந்த பொருட்களை பார்வையிட்டபடியே வந்து கொண்டிருந்தவள்..., "ஹலோ விஜயசாந்தி மேடம்..." என்ற குரல் கேட்டு சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். முகம் முழுக்க புன்னகையுடன் அவளைப் பார்த்த வண்ணம் நின்றிருந்தான் கார்த்திக்.

இவனா...? இங்கே எப்படி வந்தான்..? அதுவும் இவன் எப்படி.... சிரித்த முகத்துடன் காட்சி தருகிறான்...? இவனுக்குச் சிரிக்க வேறு தெரியுமா....? சதா எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன்... முசுட்டு முகத்துடன் வலம் வரும் இவனா இப்போது வாயெல்லாம் பல்லாக நின்று கொண்டிருப்பது..? இல்லை, ஒரு வேளை இது அவனாக இருக்காதோ.....? என்று தனக்குள்ளே பட்டிமன்றத்தில் இறங்கியவளின் முன்பு கை நீட்டி சொடுக்கிட்டான்.

"ஹலோ... என்ன..? என்னைக் கண்டால் அவ்வப்போது உறைந்து போய் விடுகிறாய்....?"

"ஆமாம்.. உங்களைக் கண்டதும் என் மனது தன்னாலே நடந்து சென்று ஃபிரிட்ஜில் அமர்ந்து கொள்கிறது.. அதனால் தான் உறைந்து போய் விடுகிறேன்..." என்று உதடுகளைக் காது வரை நீட்டி இளித்து வைத்தாள்.

அதற்கும் "ஹா ஹா ஹா" என்று ஏதோ பெரிய ஜோக்கைக் கேட்டவன் போல் நகைத்தவனிடம் 'என்னை என்ன சொல்லி அழைத்தீர்கள்..? விஜயசாந்தியா..? அப்படியென்றால் என்ன அர்த்தம்...? எதற்காக என்னை இப்படி அழைக்கிறீர்கள்..?" என்று நிறுத்தாமல் கேள்விகளைத் தொடுத்தவளிடம்.... "என்ன மேடம் இவ்வளவு கேள்விகளையும் ஒரே நேரத்தில் கேட்டால் இந்தச் சிறுவன் என்ன செய்வேன்..?" என்றான் கண்களால் சிரித்த படி.

சிறுவனாம்! சிறுவன்! இவன் எதற்காக இங்கே முளைத்தான்..? இந்தச் சந்திப்பு எதற்காக..? நடந்ததை மறந்து இவனைத் தலை முழுகிவிடலாம் என்று எண்ணியிருந்தால் இவன் என்ன *விடாது கருப்பு* போல தொடர்ந்து கொண்டிருக்கிறான்..? என எண்ணியபடி அவனை வெறுப்புடன் நோக்கிக் கொண்டிருந்தவளிடம்...

"தாங்கள் தான் உதவி புரிந்தவனை அடித்து விட்டு ஓடும் வீரப் பெண்ணாயிற்றே!! அதனால் தான் இப்படி ஒரு பெயரை வைத்திருக்கிறேன் இந்த அடியேன்!!" என்றபடி அவள் முன்பு இடை வரை குனிந்து நிமிர்ந்தான் அவன்.

இது என்ன புதுத் தொல்லை? இவன் விடமாட்டானா...? இவனிடம் ஒருமுறை பட்டது போதாதா..? மேலும் வளர்த்துக் கொள்வது என் தலையில் நானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதற்குச் சமம். ம்ஹ்ம்ம்... இவன் கதையை இத்துடன் முடித்து கொள்ள வேண்டியது தான்..! பயந்த மனதை அடக்கித் துணிவை திரட்டி அவனை நேராகப் பார்த்தாள்.

"இதோ பாருங்கள், நீங்கள் எனக்குப் பெயர் வைக்க



வேண்டிய அவசியமில்லை.. என் பெற்றோர் எனக்கு வைத்த பெயரே போதும்.... அத்தோடு என்னுடன் வம்பு வளர்க்கும் திட்டமேதும் இருந்தால் தயவு செய்து அழித்து விடுங்கள்... இல்லையென்றால்.." என்றபடி அவனை நோக்கி தீப் பார்வை செலுத்தியவளை.. ஒரு மாதிரியாகப் பார்த்தபடி..

"இல்லையென்றால்? என்ன செய்து விடுவாயாம்? ம்...? உன் தைரியத்தின் அளவைப் பற்றித் தான் எனக்கு நன்றாகத் தெரியுமே.." என்றவனின் குரலும் முகமும் மாறிய விதத்தைக் கண்டுப் படபடத்த இதயத்துடன்.. கன்றிச் சிவந்த முகத்தை மறைத்துக் கொண்டு வேறு புறம் திரும்பினாள். அவன் அருகில் நிற்பதே திகிலை ஏற்படுத்த கையில் அகப்பட்ட பொருளை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

அடுத்த இரண்டு நாட்கள் எந்தவித இடையூறுமின்றி அமைதியாகக் கழிய... உடன் பயின்ற தோழி ப்ரியாவின் திருமண நாளும் வந்தது..

"ஸ்வேதா.. உனக்கு இந்தப் பச்சை நிறப் புடவை வெகுவாக பொருந்தியிருக்கிறதடி..." எனக் கூறியபடியே அவள் தலையில் மல்லிகைச் சரத்தைச் சூட்டிக் கொண்டிருந்தாள் சத்யா.

"இவ்வளவு பூ எதற்கு..? கல்யாணம் எனக்கா..? இல்லை ப்ரியாவிற்கா..?" எனக் கேலி செய்தவளிடம் சிரித்தபடியே மூவரும் திருமண மண்டபம் நோக்கிக் கிளம்பினர்.

கல்யாண மண்டபமே விழாக் கோலம்

பூண்டிருந்தது. வாசலில் வரவேற்றுச் சிரித்தவர்களி முகத்தில் இருந்த மகிழ்ச்சியும்... நாதஸ்வர ஓசையும் குட்டீஸ்களின் சேட்டைகளும்.. இளசுகளின் கும்மாளமும் மணமக்களின் கள்ளப் பார்வையுமாக... பார்ப்பவரி மனதில் இனம் புரியாத குதூகலத்தைத் தோற்றுவிக்கு திறமை திருமணமெனும் சடங்கிற்கு உண்டு...

மண்டபத்தினுள் நுழைந்த மூவரையும் வரவேற் ப்ரியாவின் தாயார் "என்னம்மா..? உள்ளூரில் இருக்கு நீங்கள் கூட இவ்வளவு தாமதமாக வருவதா.. முதல்நாளே வந்திருக்க வேண்டாமா..? உள்ளே வாருங்கள்.." என்று பாசத்துடன் வரவேற்றார். நேரா தோழி இருக்கும் அறைக்குச் சென்றனர் மூவரும்.

'அழகுநிலைய'பெண்ணின் கை வண்ணத்தி மேலும் அழகாக மாறிக்கொண்டிருந்த ப்ரியாவின் அருகி சென்றனர். "வாங்கடி மூதேவிகளா.." என்றவளை "ஏய்....." என மூவரும் ஒருசேர குரல் கொடுக்க "ஹி ஹி.. சாரி. மூன்று + ஸ்ரீதேவிகள் தான் மூதேவியாக மாறி வாயி வந்து விட்டது.., இப்போது வீரமாகக் குர கொடுக்கிறீர்களே, பத்திரிகை கொடுக்கும் போது என்ன கூறினேன்..? முதல் நாளே வரவேண்டுமென்ற அவ்வளவு கெஞ்சினேனே.. சரியாக முஹுர்த்ததிற்கு அரைமணி நேரம் முன்பு விஐபி போல் வருகை தருகிறீர்கள்..? நீங்கள் என் தோழிகளா..? ச்ச.." என்று சலித்துக் கொண்டாள்.

"ப்ரியா.... என்னவோ எங்களை மிகவும் மிஸ் செய்தது போல் அதிகமாக நடிக்கிறாயே... நேற்று நீ உன் அவரிடம் வழிந்ததில் மண்டபம் முழுதும் தண்ணீ



கடலில் தத்தளித்து விட்டதாமே...! பத்மா மாமியை நீ வாவென்று கூட அழைக்கவில்லையாமே! அவர் என்னிடம் பெரிதாக குறை பட்டுக் கொண்டார். நான் போடும் ஃபில்டர் காஃபியை ஒவ்வொரு முறையும் சப்புக் கொட்டிக் குடிப்பவள்.. இப்போது வரவேற்கக் கூட இல்லை என்று மாமி கம்ப்ளைன்ட் செய்கிறார் தெரியுமா?" என்று சத்யா தன் பங்கிற்கு வாரி இறைக்க..

"போதும்...போதும்.. பத்மா மாமி அவர் பையனைப் பார்க்க யு.எஸ் சென்று விட்டார்.. நீ உன் புளுகு மூட்டையை அவிழ்த்து விட வேண்டாம்.. ஆனால் நீ சொன்னது உண்மை தானடி அவரின் அருகில் நிற்கும் மகிழ்ச்சியில் பல பேரை நான் வரவேற்கவில்லை.." எனக்கூறிச் சிரித்தவளை மாறி மாறி கேலி செய்த படி நகைத்துக் கொண்டிருந்தனர் மூவரும்.

சிறிது நேரத்திலேயே ப்ரியாவின் அன்னை வந்து "வாசலில் வரவேற்பில் நிற்க யாருமே இல்லை.. நீங்கள் மூவரும் செல்கிறீர்களா...?" என்றவரிடம் "ஒ.." என்றபடி தலையாட்டி சம்மதம் தெரிவித்தனர் மூவரும்.

"அம்மா இவர்கள் மூவருக்கும் ஏற்ற வேலை தான்... வருகிறவர்களை எல்லாம் வம்பு செய்து கொண்டிருப்பார்கள்.." என மாட்டி விட்ட ப்ரியாவை முறைத்துக் கொண்டு வெளியேறினர் மூவரும்.

"அந்தச் சிவப்புச் சட்டையைப் பாரேன்.. அந்த பெண் ஏன் இவ்வளவு மேக்கப் போட்டிருக்கிறாள்..?" என சளசளத்த படியே நின்று கொண்டிருந்தனர் மூவரும். சிறிது நேரத்தில் வெள்ளை நிற பென்ஸ் கார் ஒன்று அனைவரின் கவனத்தையும் ஈர்த்த படி வந்து நின்றது. உள்ளே இருந்து

இறங்கியவனைக் கண்டு விழிகளை அகல விரித்தா ரம்யா.

"ஸ்வேதா...." என அவள் கையைப் பற்றியவ "கார்த்திக் சார் டி... அங்கே பார்.." என்றாள்.

சட்டெனத் திரும்பிப் பார்த்த ஸ்வேதா மெலிதா அதிர்ந்தாள். நீல நிற கோட் சூட்- இல் வசீகரமாக புன்னகைத்தபடி கையில் பரிசுடன் உள்ளே வந் கொண்டிருந்தான் கார்த்திக்.

வரவேற்பில் கைகளைப் பிசைந்து கொண் நின்றிருந்த ஸ்வேதாவைக் கண்டதும் 'நீ எப்படி இங்கே என்பது போல்... புருவம் நெரித்தான் பின்பு புன்னகை புரிந்தபடியே அவள் முன்னே குனிந்து நின்றான்.

விழித்தபடியே செய்கையற்று நின்று கொண்டிருந் ஸ்வேதா தன் முன் குனிந்து நின்றவனைக் கண் திகைத்தாள். இவன் இன்று என்ன செய் காத்திருக்கிறான்? என திருதிருவென்று விழித்தபடியே நின்றிருந்தவளின் தோளில் இடித்தாள் சத்யா.

பிறகு தான் புரிந்தது அவள் கையில் இருந்தத பன்னீர் கூஜா என்று! சட்டென கைகளைத் தூக்கி அவள் மீது பன்னீரைத் தெளித்தாள். நிமிர்ந்து அவளைக் கண்டு மீண்டும் புன்னகைத்து விட்டுச் சென்றான்.

அவன் நகர்ந்ததுமே "ஸ்வேதா...." என்று ஒரு சே அழைத்தனர் இருவரும். "என்னடி என்ன நடக்கிறது இங்கே..? அவர் என்ன உன் மீது மன்மத பானத்தை செலுத்தி விட்டுப் போகிறார்..? என்னடி...? எங்களுக்கு தெரியாமல் ஏதோ நடந்திருக்கிறது.." என்றவளிடம்...



"சத்யா.. நாம் உடனே இங்கிருந்து சென்று விடலாம்.. ப்ளீஸ் டி.." என்று ஸ்வேதா கெஞ்சத் துவங்கினாள். "ஏய்.. ஸ்வேத்.. என்ன உளறுகிறாய்..? ஏற்கனவே நாம் லேட்டாக வந்ததற்கு இன்னும் ப்ரியா சுப்ரபாதம் பாடிக் கொண்டிருக்கிறாள். இதில் நாம் திருமணம் முடியும் முன்பே வெளியேறிவிட்டோம் என்று தெரிந்தால் காளி அவதாரமே எடுத்து விடுவாள்" எனச் சிரித்த சத்யாவை அடக்கி விட்டு ஸ்வேதாவை யோசனையாக நோக்கினாள் ரம்யா.

"ஸ்வேதா உனக்கு கார்த்திக் சாரிடம் என்ன பயம்...? சரி, நீ கூற வேண்டாம். காரணம் எதுவாக இருந்தாலும் நீ எதற்காக பயந்து ஓட வேண்டும்..? இவ்வளவு பேர் இருக்கையில் அவர் உன்னை என்ன செய்து விடுவார்..? உன் துணிச்சல் எல்லாம் என்னவாயிற்று..? முட்டாள் தனமாக உளறிக் கொண்டிராமல்.. வந்த வேலையை மட்டும் கவனி.." என்று அவளைக் கண்டித்து விட்டு உள்ளே விரைந்தனர் இருவரும்.

நீ என்ன சாதாரணமாகக் கூறி விட்டாய்..! அவன் சூராதி சூரனாயிற்றே! எனக் கலங்கிய படி.. மறந்தும் கூட அவன் பக்கம் பார்வையைச் செலுத்தாமல் கருமமே கண்ணாயிருந்தாள். சிறிது நேரத்தில் மணமகளை அழைத்து வருமாறு ஐயர் கூற ப்ரியாவை அழைத்து கொண்டு மூவரும் சென்றனர்.

பிரியாவைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்த மூவரில் ஸ்வேதாவை நிறுத்திய ப்ரியாவின் தாயார்...., "ஸ்வேதா.. ஒரு உதவி புரிய வேண்டும்.. முக்கியமான விருந்தாளி ஒருவர் அவசரமாகச் செல்ல வேண்டுமாம்.

அவரைச் சாப்பிட வைக்காமல் அனுப்ப முடியாது. நான் இப்போது இந்தச் சடங்கில் உடன் இருந்தாக வேண்டும். நீ கொஞ்சம் அவரைக் கவனித்து அனுப்புகிறாயாமா..? என்றவரிடம்....

''ஓ..., கண்டிப்பாக செய்கிறேன். யார் அம்மா அவர்?' என்ற ஸ்வேதாவை ''என்னுடன் வா' என்று உடன் அழைத்துக் சென்றது கார்த்திக்கிடம்.

இவனிடமா...? ஆண்டவா...! இதென்ன சோதனை மேல் சோதனை...! ''தம்பி, நீங்கள் சாப்பிடாமல் செல்லக் கூடாது.. எங்களுக்காக ஒரு பத்து நிமிடம்...' என்றவரிடம்

''ஷ்யூர் மேடம் ..' என்றான் முறுவலித்தபடி.

ஸ்வேதாவின் புறம் திரும்பி ''இவரைச் சாப்பாட்டு அறைக்கு அழைத்து செல்லம்மா..' என்றார்.

''வாருங்கள்' என்று நடந்தவளின் உடன் நடந்தபடி ''சாப்பாடு பரிமாறப் போவது நீயா..? சரியாகச் சாப்பிடவில்லையென்றால் அடிப்பாயோ....?' என்றான் சிரித்துக் கொண்டே..

ஆண்டவா! இவன் அதை விட மாட்டானா..? என்றெண்ணியபடி பரிமாறுபவர்களிடம் சென்று விவரத்தைக் கூறி தானே பரிமாறினாள்.

சாப்பிட ஆரம்பித்தவன் சிறிது இடைவெளி விட்டு ''நீ எப்படி இங்கே..? மேடமிற்கு சொந்தமா...?'

''இல்லை சார்... மணப்பெண் என் தோழி...'என்றாள்.

''ஓ...' என்றவன்.. ''ஏன் நின்று கொண்டே இருக்கிறாய் ஸ்வேதா...? நீயும் அமர்ந்து



சாப்பிடலாமே...?' என்றவனை திகைப்புடன் நோக்கினாள்.

ஸ்வேதாவா...! இவனுக்குப் பெயரெல்லாம் கூடத் தெரியுமா... என்றவளின் மனதைப் படித்தவன் போன்று.. ''நீ உன் மூளையை எமர்ஜென்ஸிக்குக் கூட உபயோகப் படுத்த மாட்டாய் போலிருக்கிறதே!' என்றவனை கோபத்துடன் ''ஏனோ...?' என்று வினவினாள்.

''பின்னே? உன் பெயர் தெரியாமலா உன் அலுவகத்திற்கு போன் செய்து வண்டி பற்றிய விவரத்தைக் கூறியிருப்பேன்? ம்? உன் கைப்பையில் இருந்த விசிட்டிங் கார்டில் உன்னைப் பற்றிய அனைத்து விவரங்களும் இருந்தது' எனக் கூறிக் கொண்டே தோசையைப் பிய்த்து வாயில் அடைத்தான்.

சரி தான், அவன் கூறியது மிகவும் சரி தான்! இப்பொழுதெல்லாம் பல சமயங்களில் அவளுடைய மூளை வேலை நிறுத்தம் செய்து விடுகிறது... அது இவனைப் பார்த்த பின்பு தான்.. இவன் முன்பு தான் இப்படி முட்டாளாகவே மாறிப் போய் விடுகிறாள். எல்லாம் இவனால் தான்.. என்று மனதுக்குள் புலம்பிய படியே சேலை முந்தானையைக் கசக்கிக் கொண்டு நின்றவளை சிரிப்புடன் நோக்கியவன்... உடனே முகம் மாறி...

''உதவி புரிந்தவனுக்கு நன்றி சொல்லத் தான் உனக்குத் தெரியாது என்று நினைத்திருந்தேன். ஆனால் உனக்குச் சாப்பாடு பரிமாறக் கூட தெரியவில்லையே...!' என்றவனிடம் மெலிதாக எழுந்த கோபத்துடன் ''என்ன சார் சொல்கிறீர்கள்?' என்றாள்.

''என் இலையில் சாம்பார் தீர்ந்து பொய் வெகு

நேரமாயிற்று... இது தான் நீ சாப்பாடு பரிமாறு லட்சணமா..? ' என்றான்.

ஆமாம், இப்போது சாம்பார் தீர்ந்தது ஒன்று தா குறை... அவன் முகத்தில் சாம்பார் ஊற்றத் துணி கைகளை அடக்கிக் கொண்டு அவன் இலையி ஊற்றினாள். "போதும் போதும்..., என்ன முகத்தி ஊற்றுவதாக கற்பனையாக்கும்...?' என்றபடி ரசித்து சுவைத்து உண்பவனை ஆத்திரத்துடன் நோக்கி கொண்டிருந்தாள்.

அவன் உண்டு முடித்ததும் பின்னோடு சென்று அவன் தேவைகளை கவனித்து விட்டு திரும்பியவளிடம்... "நீ எங்கே தங்கியிருக்கிறாய்..? உ பெற்றோர்கள் எங்கே இருக்கிறார்கள்...?' என்றான் மிக சாதாரணமாக.

இவனுக்கு பதில் கூறுவது நன்மை தானா.. இவனிடம் நட்பை வளர்த்துக் கொள்வது என்ன விளை ஏற்படுத்தும்.. என்றெண்ணியவள் வேறு வழியில்லாம "அவர்கள் மதுரையில் இருக்கிறார்கள், நான் இங்கே ஹாஸ்டலில் தங்கியிருக்கிறேன் என்றாள்.

"ஓஹோ...' என்றபடி கைகளைத் துடைத்தவ நிமிர்ந்து அவள் முகம் நோக்கினான். அவனைக் காணு போதெல்லாம் கலங்கிய மனதுடனும், மிரண் கண்களுடனும் அவஸ்தையுடன் நின்று கொண்டிருக்கு ஸ்வேதாவைக் கண்டு அவனுள் சிரிப்பும், இரக்கமும் ஒ சேர எழுந்தது.

"ஸ்வேதா.. ஸ்வேதா நிமிர்ந்து என்னை பார்..' என்றவனின் குரலில் வழக்கத்திற்கு மாறா



அக்கறை தென்பட லேசான திகைப்புடன் நிமிர்ந்து அவன் கண்களைச் சந்தித்தாள்.

அன்று அவனது கோப விழிகளால் மிரண்ட அவளது பார்வை.., இன்று அவனது வசீகரப் பார்வையில் பிரம்மித்து அவன் விழிகளை விட்டு அகல மறுத்தது. அவள் பார்வையைத் தாங்கியவன் அவளருகில் வந்து "எதற்காக இந்த பயம் ஸ்வேதா..? எப்போதும் என்னைக் கண்டு மிரண்டு விழித்தால் எப்படி..? நீ என்னிடம் பயம் கொள்ள வேண்டிய அவசியமில்லை..." என்று மெலிதான குரலில் கூறி விட்டுச் சென்றான்.

ஸ்வேதாவிற்கு மூச்சுக் காற்று சீராக வர மறுத்தது. இவனுக்கு மெஸ்மெரிசம் தெரியுமோ..? பார்வையால் மட்டுமா ஈர்க்கிறான்.. என்றவளின் விழிகளில் தூரத்தில் யாருடனோ நின்று கொண்டு சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டிருந்த கார்த்திக் தெரிந்தான்.

அந்தக் கூரான நாசியும், வசீகர முறுவலும், கன்னத்துக் குழியும் கூடத் தான் ஈர்க்கிறது என்று எண்ணமிட்டவள் தலையைச் சிலுப்பி "நான்..? நானா..? கார்த்திக்கை இப்படிப் பார்க்கிறேன்.. அவன் நிழல் இருக்கும் பக்கம் கூட திரும்பாமல் வெறுப்பை உமிழும் எனக்கா கார்த்திக்கின் மீது ஈர்ப்பு..? ச்ச.. என்றவளின் கண்களில் டேபிளின் மீதிருந்த அவனது செல்போன் பட்டது.

என்ன இது ?இங்கே வைத்து விட்டுச்சென்று விட்டான்.. என்றபடி அதை எடுத்துக் கொண்டு அவன் புறம் நோக்கி நடந்தாள்.

பேசிக் கொண்டிருந்தவரிடமிருந்து விடைபெற்று

நகர்ந்து கொண்டிருந்தவன் ''கார்த்திக் சார்..' என ஸ்வேதாவின் அழைப்பைக் கேட்டுத் திரும்பினா ''உங்கள் செல்போன்' என்று அவன் போனை அவனி நீட்டினாள்.

''ஓ! தேங்க் யூ 'என்றவன் நடந்தபடியே 'என நேரமாயிற்று ஸ்வேதா.. இந்தக் கூட்டத்தில் சா மேடமைத் தேடிக் கொண்டிருக்க முடியாது.. நீ சொல் விடுகிறாயா..?' என்றான்.

''ம் ஓகே சார்.. சொல்லி விடுகிறேன்.. நீங்க கிளம்புங்கள்...' என வழி அனுப்பியவளிடம்....

''வாய் நிறைய வரவேற்பார்கள் என்று கேள் பட்டிருக்கிறேன்.. நீ என்னடாவென்றால் வரவேற்பி விழித்துவிட்டு வாய் நிறைய வழி அனுப்பி வைக்கிறாய். இது தான் நீ பயின்ற விருந்தோம்பலா.....?' எனக் கூ அவளின் அசடு வழிந்த முகத்தை ரசனையுட பார்த்துவிட்டு ''மீண்டும் சந்திப்போம்'' எனக்கூ அவனுக்கே உரிய புன்னகையுடன் விடைபெற்றான்.

அவனது புன்னகை மனதில் ஏதோ மாயத்தை புரிய, அதை பிரதிபலித்தபடி உள்ளே நுழைந்தவனை எதிர்கொண்டனர் ரம்யாவும் சத்யாவும்.

''என்னடி! என்னவோ அவரைப் பார்த்தால் பயந்து நடுங்குவதைப் போல் அவ்வளவு என்னடி 'சீன் காட்டினாய்? அவர் உள்ளே நுழைந்த போது முழித்த முழி என்ன? இப்போது டாட்டா காட்டாத குறையாக அனுப்பி வைக்கிறாய்.... அதென்னடி அப்படி ஒரு சிரிப்பு உன் முகத்தில்? என அதட்டியவர்களிடம் பேய் முழி முழித்துவிட்டு 'அது வந்து.... பிரியா அம்மாதான்



அவரை கவனித்துக்கொள்ளச் சொல்லி என்னை அனுப்பினார்..' என முகச் சிவப்பை மறைக்க வெகுவாக போராடியபடிக் கூறி விட்டு உள்ளே ஓடி மறைந்தாள்.

# 4

**உன்னைக் காணாத போது...**

**உனக்காக ஏங்கித் தவித்த மனது...**

**உன்னைக் கண்டபின் ஏனோ...**

**ஊமையாகி விடுகிறது...!**

**ஏன் என்ற காரணத்தை நீயேனும் அறிவாயா...?**

அடுத்து வந்த நாட்களில் ஊரில் விஷேசமென்றும் கட்டாயம் வந்து செல்லவேண்டுமென்றும் ஸ்வேதாவின் தாயார் வற்புறுத்தியதால் தோழிகளுடன் இருமுறை மதுரை சென்று திரும்பினாள். வாழ்க்கை வழக்கம் போல் தெளிந்த நீரோடையாக பயணித்துக் கொண்டிருக்க மற்றதை மறந்து சந்தோசமாகக் காணப்பட்டாள். அதற்கு முக்கியக் காரணம் கார்த்திக்.

வாழ்நாளில் இதுவரை கண்டிராத அவனது வித்தியாசமான சந்தோசத்தை பார்வையும், தணிந்த குரலும், அவன் கன்னத்துக் குழியும் கற்றுத் தந்தது.

ஒரு நாளில் ஆயிரம் முறையேனும் வந்து செல்லும் புன்னகை நிறைந்த அவன்முகம் ஸ்வேதாவின் மனதில் புது விதமான மகிழ்ச்சியைத் தோற்றுவித்தது. முகத்தில் புது சோபையையும், புன்னகையில் புது களையையும்,

இதயம் முழுக்க உற்சாகமுமாய்... மாற்றத்தை ஏற்படுத்தியது.

ப்ரியாவின் திருமணத்திற்குப் பிறகு ஸ்வேதாவிற்கு கார்த்திக்கைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. அவள் புதுவிதமான கார்த்திக்கை விரைவிலேயே சந்திக்க நேரிட்டது.

வழக்கம் போல் உற்சாக மனநிலையுடன் அலுவலகத்திற்குச் சென்ற ஸ்வேதா..., பதினோரு மணி அளவில் வங்கிக்குச் சென்று வேலையை முடித்து விட்டு ஸ்கூட்டியில் அலுவலகம் நோக்கிப் புறப்பட்டவள் வழியில் சிக்னலில் காத்திருக்க நேரிட்டது.

சிக்னலைத் தாண்டி சாலையில் வண்டியை செலுத்திய ஸ்வேதா அங்கே கூட்டம் கூடியிருப்பதைக் கண்டு வண்டியை நிறுத்திவிட்டு அருகில் சென்றாள். "இந்தத் தம்பி வேகத்தைக் குறைக்காமல் வளைந்தது தான் தவறு..., சிறுவனுடன் வரும் போது கூடுதல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று தெரிய வேண்டாம்..?" என்றெல்லாம் கூட்டத்தில் உள்ளோர் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு அது ஒரு விபத்து எனத் தீர்மானித்துக் கூட்டத்தை விலக்கி வேகமாக அருகில் சென்றவள் திகைத்தாள். ஏனெனில் அங்கே பதற்றத்துடன் நின்று கொண்டிருந்தவன் கார்த்திக்.

அப்படி ஒரு சூழ்நிலையில் அவனை சற்றும் எதிர்பாராததால் ஸ்வேதாவின் மனம் பதறி விட்டது. வேகமாக அவனருகில் சென்று "கா..கார்த்திக் சார்..... உங்களுக்கு எதும் ஆகவில்லையே" என்றவளைக் கண்டு...



"ஸ்வேதா.... நீயே தானா..? எனக்கு முன் சென்ற கார் இவர்களை அடித்துப் போட்டு விட்டு நிற்காமல் சென்று விட்டது. போலீஸ், ஆம்புலன்ஸ் என்று வரும் வரை காத்திருக்க முடியாது. சிறுவன் வலியால் துடிக்கிறான் பார்.. இங்கே நிற்பவர்கள் வேடிக்கை பார்க்கிறார்களே தவிர.. உதவி செய்வதாகத் தெரியவில்லை... அந்தச் சிறுவனைத் தூக்கு ஸ்வேதா.. சீக்கிரம்.. சீக்கிரம்.." என்றபடி அடிபட்டிருந்த சிறுவனின் தந்தையைத் தூக்கிக் கொண்டு காரை நோக்கி ஓடினான்.

வலியில் முனகிக் கொண்டிருந்த சிறுவனைத் தூக்கிக் கொண்டவள் காருக்கு விரைந்தாள். அடுத்த பதினைந்து நிமிடத்தில் இருவரும் நகரின் மிகப் பெரிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் சென்றதும் கவலை நிறைந்த முகத்துடன் நின்றிருந்த கார்த்திக்கைப் பார்க்க அவளுக்கு பாவமாக இருந்தது.

மெதுவாக அவனை "சார்" என்று அழைத்தாள். அவள்புறம் திரும்பியவனிடம் "உங்களுக்கு தெரிந்தவர்களா சார்?" என்று வினவியவளை பார்த்தவனின் பார்வை கோபமாக இருந்தது.

"தெரிந்தவர்களாக இருந்தால் மட்டும் தான் கவலைப்பட வேண்டுமா...? யாராக இருந்தாலும் உயிர் உயிர் தானே...?" என்றவனின் குரலில் தெரிந்த வலி நிச்சயம் இதற்கு முன் ஏதோ ஒரு பெரிய சம்பவம் அவனைப் பாதித்திருக்கிறது என்பதை பறைசாற்றியது.

மேலே எதுவும் கூறாமல் அமைதி காத்தவள் கார்த்திக்கின் இந்த மனநிலையைப் பற்றி யோசிக்கத்

துவங்கினாள். டாக்டரின் வருகைக்காக காத்திருந்தவ அவர் வந்ததும் விரைந்து அவரருகில் சென்றான்.

“டாக்டர்... டாக்டர்... இப்போது எப் இருக்கிறார்கள்? ஆபத்து ஒன்றுமில்லையே” எ வினவியவனிடம்

“ஆபத்தில்லை கார்த்திக். லேசான அடி தா சரியான நேரத்தில் கொண்டு வந்து சேர்த்தத பிழைத்தார்கள்..., பிரச்சனை ஒன்றுமில்லை...,” எ நிறுத்தியவர் அவன் முகம் நோக்கி... அவன் கைகளை பற்றி “ரிலாக்ஸ் கார்த்திக்.. இப்படிப் பதட்டப்படா என்று எத்தனை முறை கூறியிருக்கிறேன்...” என கடிந் விட்டுச் சென்றார்.

அவர் சென்ற பின்பும் கூட கார்த்திக்கின் மு உணர்ச்சியற்று இறுகிப் போய் இருந்தது. பார்க்க பயமாக இருந்தாலும் வேறு வழியின்றி அவனருகி சென்றாள். “சார்....” என அழைத்து.. “பிரச்சனை ஏதுமில்லை என்று டாக்டர் கூறி விட்டாரே.... இ ஆக்ஸிடென்ட் கேஸ் சார்.. போலீஸிற்குத் தெரிவித் விட்டால் மேலே வரும் பிரச்சனைகளைச் சுலபமா சமாளிக்கலாம்.., அப்படியே அவர் குடும்பத்தாருக்கு விவரத்தைத் தெரிவிக்கலாமே...” என்றவளிடம் ‘ஆமா நான் ஏ.சி.பி அங்கிளுக்கு போன் செய்து விட் வருகிறேன்’’ எனக் கூறி நகர்ந்தான்.

இவன் என்ன மாதிரி மனிதன்...? இன்னு இவனுக்கு எத்தனை முகங்கள் இருக்கின்றன...?ஆனா ஒன்று மட்டும் உறுதி அவன் இரக்க குணம் நிறைந்தவ



அந்த நடுராத்திரியில் அந்தக் கயவர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிய போதும் சரி, இன்று ரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்த இருவரை காப்பாற்றப் போராடியதும் சரி! தான் நினைத்து வைத்ததைப் போல் இவன் கெட்டவனில்லை.. பல நற்குணங்களை உள்ளடக்கியவன்...!

தன்போக்கில் யோசனையில் ஆழ்ந்தவள் ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அடிபட்டவரின் மனைவியாக இருக்க வேண்டும்.. வேகமாக அவரருகில் சென்று “மேடம்.. அழாதீர்கள்.. அவர்கள் இருவரும் ஆபத்தானக் கட்டத்தை தாண்டி விட்டார்கள்.. பயப்படும்படியாக ஏதுமில்லை.. ஒரு மணி நேரத்தில் நீங்கள் அவர்களைப் பார்க்கலாம்..” எனக் கூறிச் சமாதானம் செய்தாள்.

அதற்குள் போலீஸ் ஒருவருடன் கார்த்திக்கும் வந்து சேர்ந்தான். அடுத்த ஒரு மணி நேரத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து சாதாரண வார்டிற்கு மாற்றப்பட்ட இருவரையும் பார்த்து விட்டு அவர் மனைவிக்கு ஆறுதல் கூறி விட்டு வெளியேறினர் இருவரும்.

இன்னும் தெளிவடையாமல் இறுகிப் போயிருந்த அவன் முகத்தைக்காண கஷ்டமாக இருந்தாலும் அவன் புறம் திரும்பி “நான் கிளம்புகிறேன் சார்..” என்றவளுக்கு, “ம்...” என்ற பதில் மட்டுமே கிடைத்தது.

அவன் காரில் ஏறி அமரும் வரை காத்திருந்தவள் அவன் பக்கமாக குனிந்தாள்.

“அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசுவதாக எண்ண வேண்டாம். எது உங்கள் கவலையை அதிகரிக்கிறது

என்பதை என்னால் யூகிக்க முடியவில்லை.. ஆனால் கார்த்திக் சார்.. எல்லாவற்றிற்கும் மறு வழி உண்டு. அனைத்து ஜன்னல்களையும் கடவுள் ஒரே நேரத்தில் மூடுவதில்லை.. ஒரு வாசல் மூடினால்.. மறு வாசல் நிச்சயம் திறக்கும்... நடப்பது எல்லாம் நன்மைக்கு மட்டும் தான்.. எதற்காகவும் வருந்தாதீர்கள்'' எனக் கூறியவளை திகைப்புடன் பார்த்தபடி அமர்ந்திருந்தவனிடம் லேசாக முறுவலித்து, ''வருகிறேன் சார்..'' என்று விடைபெற்றாள் ஸ்வேதா.

அவள் சென்ற பின்பும் வெகு நேரம் அசையாமல் அமர்ந்திருந்த கார்த்திக் அவள் சென்ற திசையை நோக்கி ''தேங்க்ஸ் ஸ்வேதா....'' எனக் கூறியது அவளின் செவிகளுக்கு எட்டியிருக்க வாய்ப்பில்லை.

அடுத்த இரு தினங்கள் அலுவலுகம் முடிந்து வரும் வழியில் தவறாமல் சென்று அடிபட்ட இருவரையும் பார்த்து வந்தாள். ஆனால் எதை எதிர்பார்த்து அவள் வந்து சென்றாளோ கடைசி வரை அது மட்டும் நிறைவேற வில்லை. ஏனெனில் ''சார் வந்தாரா...?'' என்ற அவளது கேள்விக்கு ''காலையிலேயே வந்து பார்த்துவிட்டுச் சென்றார் மேடம்..'' என்றாள் அந்த பெண்மணி.

அன்று அலுவலகம் முடிந்து பார்க் செய்திருந்த ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து கொண்டிருந்தவளை செல்போன் அழைத்தது. ''ஹலோ ஸ்வேதா.. நான் ரம்யா..., எங்கே இருக்கிறாய்..? கிளம்பியாச்சா....?'' என்றவளிடம் ''ம், ஆமாம் டி.. வண்டி ஸ்டார்ட் செய்து கொண்டிருக்கிறேன்.. ஏன்? வழியில் எதாவது வாங்க வேண்டுமா..?'' என்றாள்.



“இல்லை ஸ்வேத் ... எனக்குப் பயங்கர பசி..., சிக்கன் ரோல் சாப்பிட வேண்டும் போல் உள்ளது. நாம் ஹோட்டல் டெலிஷியஸ்-க்குச் செல்லலாமா?” என்றவளிடம், சிரித்த படியே “நீ என் மனதைப் படித்த தோழிடி.. நானும் பயங்கர பசியில் இருக்கிறேன்.. பக்கத்தில் எங்கேனும் சாப்பிட்டு விட்டுச் செல்லலாம் என்று இருந்தேன்... சரி, சீக்கிரம் வந்து விடு...”

ஹோட்டலுக்குச் சென்று இடம் தேடி அமர்ந்தவள் ஆர்டர் எடுக்க வந்த வெய்ட்டரிடம் “பத்து நிமிடமாகும்” என்றாள். அவன் ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு நகர்ந்தான். அடேங்கப்பா! பார்வையைப் பார்! என்று பொருமியவளின் செல் மறுபடியும் அழைத்தது. “ஸ்வேதா நான் தான் டி... சாரி டி.. அவசர வேலை வந்து விட்டது..., வெரி சாரி டி.. நீ சாப்பிட்டு விட்டுச் செல்லடி” என்று கூறினாள் ரம்யா.

வந்ததே ஆத்திரம் ஸ்வேதாவிற்கு, “ஏய்.. என்ன விளையாடுகிறாயா..? இந்நேரம் ஆபீஸ் அருகிலேயே சாப்பிட்டுவிட்டு ஹாஸ்டலுக்குச் சென்றிருப்பேன். தேவையில்லாமல் இவ்வளவு தூரம் வர வைத்து.. ஏன்டி இப்படி படுத்துகிறாய்...?”என பெருங்குரலெடுத்து கத்தத் துவங்கினாள். எதிர்முனை என்ன கூறியதோ.. “நீ...கட் பண்ணுடி.. உன்னை அப்புறம் கவனித்துக் கொள்கிறேன்...” என்று எரிச்சலுடன் திரும்பியவள் அதிர்ந்தாள்.

ஏனெனில் எதிர் இருக்கையில் இரு கைகளையும் நாடியில் வைத்து அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான் கார்த்திக். “பேசி

முடித்தாயிற்றா..? செல்போன் உன் கையில் தாே இருக்கிறது..? நீ ஏன் நான்கு டேபிள் தள்ளி செல்போனை வைத்துக் கொண்டு இங்கிருந்து உன்னிடம் பேசு என கூறியது போல் பக்கத்துத் தெருவிற்கு கேட்குமளவிற் கத்திக் கொண்டிருக்கிறாய்...?'' என்றான்.

''சாரி சார்... எல்லாம் இந்தச் சதிகாரி ரம்யாவினா தான் சார்.. எப்போதும் இவளால் எனக்குத் துன்பம் தான் நானே பயங்கர பசியில் இருக்கிறேன்.. இவள் என்ன வென்றால்..'' என வரிந்து கட்டிக் கொண்டு மீண்டு கத்தத் துவங்கியவளை....''ஐயோ ஸ்வேதா ஸ்டாப்.....! பேசியதை ஏற்கனவே கேட்டு விட்டேன். இப்போ என்ன..? உனக்குக் கம்பெனி கொடுக்க ஆள் இல்லை. அது தானே? நான் உன்னுடன் சாப்பிடுகிறேன்...'' என கூறி வெய்ட்டரை அழைத்து அவளிடம் கேட்காமலே ஆர்டர் செய்யத் துவங்கினான்.

முடித்து விட்டு அவள் புறம் திரும்பியவன் '' இப்போதிருக்கும் பசியில் எதைக் கொடுத்தாலு சாப்பிடுவாய் தானே?'' எனச் சிரித்தான்.

நீண்ட நாளைக்குப் பிறகு அவனது புன்னகை முகத்தை கண்டவளுக்குள் உற்சாகம் தொற்றிக் கொள் பதிலுக்குச் சிரித்து விட்டு, ''நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் சார்....? அன்று மிகவும் டல்லாகத் தெரிந்தீர்களே!'' என கூறி நாக்கை கடித்துக் கொண்டாள். அவன் மறந்தவை நினைவுபடுத்தி விட்டோமே என்று!

அவன் அதற்கும் முறுவலித்து விட்டு ''அன்று ஒ கன்னிப்பெண் தெய்வவாக்கு கூறி விட்டுச் சென்றதி ருந்து மிகமிக நன்றாக இருக்கிறேன்'' என்று சிரித்த படியே



கூறியவனிடம் ''ஐயோ... அதிகமா பேசிவிட்டேனா சார்...? ஏதோ அன்று கூற வேண்டுமென்று தோன்றியது அவ்வளவு தான்..., மற்றபடி தெய்வவாக்கு கூறுமளவிற்கு இந்தச் சிறுமிக்கு அனுபவம் இல்லை சார்...'' என அவனைப் போலவே பேசிக் காட்டியவளிடம் மேலும் நகைத்து விட்டு ''சாப்பிடு...'' என்றான்.

சாப்பிட்டு முடித்ததும் பணம் கொடுக்கச் சென்றவனை ''வேண்டாம் சார்...'' என்று தடுத்தாள்.

''ஏன்...?'', என்றவனிடம் ''அந்த வெய்ட்டர் வரும் போதே என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான். உங்களுடன் சேர்ந்து அமர்ந்து சாப்பிட்டதை நிச்சயம் தவறாகத் தான் யூகித்திருப்பான். இது நான் அடிக்கடி வரும் ஹோட்டல் சார்.., எதற்கு வம்பு...? நீங்கள் உங்களுக்கு கொடுங்கள், நான் எனக்குக் கொடுத்துக் கொள்கிறேன்..'' என்று எழுந்து சென்றாள்.

பணம் கொடுத்து விட்டு வெளியே வந்தவளிடம் ''ரொம்ப உஷாராகத் தான் இருக்கிறாய்...'' என கேலி செய்தான்.

''வருகிறேன் சார்...'' என விடை பெற்றவளிடம், ''விரைவிலேயே சந்திப்போம்..'' என்ற அவனது ட்ரேட் மார்க் புன்னகையையும் வாங்கிக் கொண்டு விடை பெற்றாள்.

விடுதிக்கு வந்து ரம்யாவைக் கண்டவுடன் தலையணையைத் தூக்கி சாத்தத் தொடங்கிய ஸ்வேதாவை சத்யா தடுத்து நிறுத்திக் கொண்டிருக்க ''ரம்யா.. இடியட்.. இன்னொரு முறை இப்படிச் செய்து பார்.. மவளே.. உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்..''

என்று ஸ்வேதா கூற..."ஏய்.. ஸ்வேத்... நீ என்னை கட்டையால் அடிப்பாய் என்று நினைத்துக் கட்டை ஒளித்துக் கூட வைத்தேன் டி... நீ என்ன தலையணையா அடிக்கிறாய்...? சரியில்லையே... கோபத்தின் அளவு கூட கம்மியாக இருக்கிறதே..." என நாடியைத் தடவியவ "ஏன் கூற மாட்டாய்... உன்னை..." எனப் பாய்ந்தாள்.

அறையைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தவர்களை பிடித்து நிறுத்தி "என்னடி ஸ்வேதா நடந்தது.." எ வினவினாள் சத்யா. "கார்த்திக் சாரை பார்த்தேன் டி..." என்று அவள் கூறியதும் "ஓஹோ..." போட்டன இருவரும்."என்ன ஓஹோ...? ம் எதேச்சையாக நடந் சந்திப்பு தான்..." என வாதாடியவளிடம்..

"ஸ்வேதா.. இப்போதெல்லாம் கார்த்திக் சா அடிக்கடி பார்க்கிறாயே ...! இதற்கு என்ன காரணம்...?" என்றவர்களிடம் "ம்... என்ன பெரிய காரணம்...? இருவருக்கும் பார்வை நன்றாக உள்ளது அதனால் தா அடிக்கடி பார்த்துக் கொள்கிறோம்..." என மிடுக்காகக் கூறி தோழிகளின் கடுப்புப் பார்வையை வாங்கிக் கொண்டாள்.

# 5

மறந்தும் கூட உன் நினைவை...
தவிர்க்க மாட்டேன் என்கிறது...
நீ விரும்பாமல் போனால் கூட..
உன்னையே விரும்பத் தயாராய் இருக்கும்..
என் செல்ல மனது...!



அழகழகான சிவப்பு ரோஜாக்களால் வடிவமைக்கப் பட்டிருந்த அந்த ஈ-கார்டைத் தன் கணினியில் பார்த்துக் கொண்டிருந்த ஸ்வேதா "இந்த ரோஜா தான் எவ்வளவு அழகு. இல்லை அஞ்சலா...? எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் சலிப்பே தட்டாது எனக்கு..." என்றவளிடம்.. "சரி தான், நீ இந்தக் கார்டை அனுப்புவதற்குள் உன் தோழியின் திருமண நாளே முடிந்து விடும் போலவே! சிவப்பு ரோஜா மீது உனக்கிருக்கும் மோகம் எப்போது தான் தீருமோ!!" என்று சலித்துக் கொண்டாள் அஞ்சலா.

பொறுமையாக ரசித்துக் கொண்டிருந்தவளை பாஸ் அழைக்க வேகமாகத் தன் தோழியின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்துவிட்டு அவரின் அறைக்குச் சென்றாள்.

அமரச் சொன்னவர், "ஸ்வேதா நீ ஒரு வேலை செய்தாக வேண்டும். நமது கம்பெனியின் பத்தாமாண்டு நிறைவு விழாவை நாம் பெரிதாகக் கொண்டாடத் திட்டமிட்டிருப்பது பற்றி உனக்குத் தெரியும் தானே?" என்றவரிடம் ஆமாம் என தலை ஆட்டினாள் ஸ்வேதா.

"அந்த விழாவிற்கு தலைமை தாங்கவிருக்கும் விருந்தினர்களின் பெயர் பட்டியலில் கார்த்திக்கின் பெயரும் இருக்கிறது, அவரிடம் அழைப்பிதழைக் கொடுக்கும் பொறுப்பை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்.. அவரிடம் நான் ஏற்கனவே தெரிவித்தாயிற்று. நீ அழைப்பிதழை மட்டும் இன்றே சென்று அவரிடம் நேரில் கொடுத்து விடுகிறாயா...?" என்று அவர் கேட்டதும் ஸ்வேதாவிற்கு எழுந்து டான்ஸ் ஆடாத குறையாக

சந்தோசம் எட்டிப் பார்த்தது.

"கட்டாயம் செல்கிறேன் சார்.." என அழைப்பிதழை எடுத்துக் கொண்டு விடைபெற்றாள்.

அந்த பிரம்மாண்ட கட்டிடத்தின் முன்பு வண்டியை நிறுத்தி விட்டு நிமிர்ந்தாள். ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை அவன் வீட்டையே அவ்வளவு ஆர்ப்பாட்டமாக கட்டியிருக்கிறான். இது அலுவலகம்! சொல்ல வேண்டுமா....?

ஆனால் ஸ்வேதா! நீ நின்று கொண்டிருப்பது கார்த்திக் க்ரூப் ஆஃப் கம்பெனீஸின் ஒரு கட்டிடத்தின் முன்பு தான், இதைப் போல அவனுக்கு எத்தனை உள்ளதோ என்று பிரமித்தபடி உள்ளே நுழைந்தாள்.

வரவேற்பில் அமர்ந்திருந்த பெண்ணிடம் எம்.டி.யை சந்திக்க வந்திருப்பதாகக் கூறிவிட்டு அங்கேயிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். சிறிது நேரத்தில் உள்ளே செல்ல அழைப்பு கிடைக்க மேனேஜிங் டைரக்டர் எனப் பெயர்ப் பலகையிட்ட அந்த அறையை நோக்கிச் சென்றாள்.

கதவைத் தட்டி விட்டு உள்ளே நுழைந்தவளை, "வெல்கம் ஸ்வேதா" என்று எழுந்து நின்று வரவேற்றவன் அவள் முன்பு வந்து நின்று "இந்த அடியேனின் சிறிய நிறுவனம் இந்த மகாராணியின் கால்பட கொடுத்து வைத்திருக்க வேண்டும்... வெல்கம், வெல்கம்" என்றான். "சிறிய நிறுவனமா சார்...?" என அவனைப் போலவே கூறி முறுவலித்தாள்.



"பின்னே... உன்னைப் போன்ற அழகியின் முன்பு இந்த நிறுவனமெல்லாம் தூசு தானே..." என உற்சாகமாக பேசிக் கொண்டே சென்றவனை அவசரமாகத் தடுத்தி நிறுத்தி "சார்..சார்.. நான் வந்த காரணத்தை முதலில் கூறி விடுகிறேன் ப்ளீஸ்..." என்றவளைத் தடுத்து...

"ம்.., நீ முதன்முதலாக என் அலுவலகத்திற்கு வந்திருக்கிறாய். கண்டிப்பாக ஏதேனும் சாப்பிட்டாக வேண்டும்.." என்றவன் அவள் பதிலுக்கு காத்திராமல் காபி கொண்டு வருமாறு பணித்தான்.

ஏன் இவனிடம் இவ்வளவு பரபரப்பு.

ஒரு வேளை அவனைக் கண்டதும் அவளுள் எழும் மகிழ்ச்சியைப் போல் அவனுக்குள்ளும் எழுகிறதோ... என நினைத்த படியே அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளைக் கண்டு "ஷ்....." என்றான்.

"ஆரம்பித்து விட்டாயா..? என்னை ஆசை தீர பார்த்துக் கொண்டே இருக்க வேண்டிய காலம் வரும்.. அப்போது பார்த்துக் கொள்ளலாம்.., இப்போது இந்தக் காபியைக் குடி..," என்றான்.

குடித்து முடித்ததும் "என்ன விஷயம்...?" என்றவனிடம் பத்திரிக்கையை நீட்டி "சார் இது எங்கள் நிறுவனத்தின் பத்தாமாண்டு நிறைவு விழா அழைப்பிதழ்.., எங்கள் எம்.டி உங்களிடம் ஏற்கனவே இதைப் பற்றி பேசியிருப்பதாகக் கூறினார். நீங்கள் கண்டிப்பாக வருகை தந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை.."

பத்திரிக்கையை பார்வையிட்டபடி.... "ம் ம்.. மறு... முடியாத அழைப்பு.., என் மனம் கவர்ந்தவளின் அழை... வேறு.., கண்டிப்பாக வருகிறேன்.." என்று புன்ன... மாறாமல் கூறியவனை முறைத்து விட்டுப் பின்... கலகலவெனச் சிரித்து "தேங்க் யூ சார்' என்றாள்.

புன்னகைத்தபடியே தலையசைத்து அவ... நன்றியை ஏற்றுக் கொண்டவன் "ம் விஷயம் அவ்வள... தானா ஸ்வேதா...?" என்றான் தணிந்த குரலில்.

அவன் குரல் உள்ளுக்குள் சிலிர்ப்பை ஏற்படுத்... "வேறு என்ன இருக்க வேண்டும்..?" என்றாள் தரையை... பார்த்தபடி...

இருக்கையில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்தபடி, "ஒ... வேளை...என்னைக் காணும் ஆவலில் வந்தாயோ என்று..." என இழுத்தவனின் பேச்சே அவளைத் துரத்த.... "நா... வருகிறேன் சார்..." எனக் கூறி ஓட்டம் பிடித்தாள்.

அதற்கும் அவன் நன்றாகச் சிரித்தபடி..."பி.டி.உ... இஸ் பேக் .. ஓட்டம்,ஓட்டம் எப்போதும் ஓட்டம் தான்.." என்றபடியே விடை கொடுத்தான்.

அறையை விட்டு வெளியே வந்த பிறகும் கூட... அவனது குரல் அவளைத் துரத்துவதாகவே உணர்ந்தாள். இது என்ன இன்பமான அவஸ்தை? அவனது பேச்சும் சிரிப்பும் மனதில் மறுபடி மறுபடி தோன்றி இம்சித்துக் கொண்டிருக்கிறதே...! இதை அவனும் உணர்வானா...? என்ன வகையான உணர்விது...? என குழம்பிப் போனாள்.

விழா அன்று காலை.... நன்றாக உறங்கிக் கொண்டிருந்த ரம்யாவையும், சத்யாவையும் தட்டி எழுப்பினாள்.



"என்ன ஸ்வேதா... நீயா? அதற்குள் திருப்பள்ளியெழுச்சி பாடி விட்டாய்..? விடுமுறை தானே இன்று? என்ன அவசரம்..?" என்றவர்களை.... "இன்று அலுவலகத்தி விழா என்றேனே..." என்றாள்.

"அதற்கென்ன...? ஓ...! டாட்டா காட்ட எழுப்பினாயா..? டாட்டா.." என்றபடி போர்வையை இழுத்து மூடியவளைத் தடுத்து "எந்த சல்வார் போட்டுக் கொள்ள? இந்த பிங்க் புடவை ஓகே வா...?" என்று பரபரத்தவளை எழுந்து அமர்ந்து நோக்கி "என் கண் முன்னே நிற்பது ஸ்வேதா தானா?" என்றாள் சத்யா.

"ஏய்.. ஜோக் அடிக்க நேரம், காலம் இல்லையா? சீக்கிரம் சொல்லுடி.. டைம் ஆயிற்று..." என்றவளை மேலும் நிதானமாக நோக்கி.."ரம்யா குருவே இவளின் மாற்றத்திற்கு காரணம் என்ன?" என பவ்யமாக வினவினாள்.

ரம்யாவும் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு "சிஷ்யா... இன்று விழாவிற்கு வருகை தரவிருப்பது தி கிரேட் கார்த்திக்... இது தான் இவளது பரபரப்பிற்குக் காரணம்..." எனக் கூறினாள்.

"உங்களிடம் பேசியதில் பத்து நிமிடம் வீணாகி விட்டது.. எப்படியோ தொலையுங்கள்..." எனக் கூறி விட்டு பிங்க் நிறப் புடவையை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

சில நிமிடங்களில் வெளியே வந்த ஸ்வேதாவைக் கண்டு விழி விரித்தனர் இருவரும், "மிக மிக அழகாக இருக்கிறாய் ஸ்வேதா.., கார்த்திக் மயங்கி விழப் போவது உறுதி" என வாக்களித்தபடி தோழியை வழியனுப்பி

வைத்தனர் இருவரும்.

நகரின் ஒரு பெரிய ஹோட்டலில் விழ நடைபெற்றுக் கொண்டிருந்தது. விழா தொடங்குவதற் அரை மணி நேரம் முன்பே வந்து சேர்ந்த ஸ்வேத அலங்காரங்களைப் பார்வையிட்டபடியும், தோழிகளுட உரையாடியபடியும் நேரத்தைக் கடத்தினாலும் நொடி கொருதரம் அவள் விழிகள் வாசலை நோக்கிச் சென் கொண்டிருந்தது.

அவளின் காத்திருப்பிற்குப் பலனாய் அவள எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்தபடி அந்த வாசலில் அத்தனை அலங்காரங்களையும் தன் கம்பீரமா தோற்றத்தால் பொய்யாக்கியபடி உள்ளே நுழைந்தான்.

பிங்க் நிறப் புடவையில் பிங்க் நிற ரோஜாவாகவே தெரிந்த ஸ்வேதாவைக் கண்டதும் விழிகள் ஒரு நொடி மலர்ந்தாலும் லேசான புன்னகையுடன் கூடிய தலையசைப்பைத் தெரிவித்து விட்டு மேடைக்கு சென்றான்.

அஞ்சலா கேட்ட எந்தக் கேள்விக்குமே பதில் கூறாமல் அவனையே பார்த்த வண்ணம் நின்றிருந் ஸ்வேதாவை அவன் மறந்தும் கூட திரும்பிப் பார்க்க வில்லை. வந்த சிறிது நேரத்திலேயே ஒரு போன் கால் வர அவசர வேலை இருப்பதாகக் கூறி விரைவிலேயே விடைபெற்றுச் சென்றும் விட்டான்.

என்னவாயிற்று இவனுக்கு? ஏனிந்த பாராமுகம்? ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மாதிரி நடந் கொள்வதே இவன் வேலையாய் போயிற்று! மன கவர்ந்தவளின் அழைப்பு... மறுக்க முடியாத அழைப்



என்றெல்லாம் கூறி விட்டு... இன்று இவள் இருக்கும் பக்கம் கூட பார்வையைச் செலுத்தவில்லை. ஒவ்வொரு சந்திப்பிலும் ஒவ்வொரு கார்த்திக்! இதில் எந்த முகம் அவனுக்குச் சொந்தம்?

கூட்டத்தில் நின்று கொண்டிருப்பது மேலும் அவஸ்தையைத் தர, தனிமை வேண்டுமென மனம் கூற... தலைவலிப்பதாகக் கூறி விட்டு விடுதிக்கு வந்து சேர்ந்தாள். வாசலிலேயே எதிர்கொண்ட தோழிகளையும் தவிர்த்து விட்டு அறைக்குச் சென்று உடை மாற்றி விட்டு கட்டிலில் சாய்ந்தாள்.

கடந்த சிலநாட்களாக ஸ்வேதா உற்சாகத்துடனும் சிரித்த முகத்துடனும் வலம் வரக் காரணமே கார்த்திக் என்கிற ஒருவன் தான்! ஒவ்வொரு முறை சந்திக்கும் போதும் ஐம்பது வார்த்தைகளை அவன் உதடுகள் உச்சரித்தாலும், அதைத் தாண்டி ஐநூறு வார்த்தைகளை அவன் விழிகள் பேசும். அந்தச் சிரிப்பும் பார்வையும் ஸ்வேதாவின் அத்தியாவசியத் தேவையாகிவிட இப்போது போய் அவன் பாரா முகம் காட்டினால் எப்படி...?

தைரியத்தையும், துணிவையும், தான் அவனைக் கண்ட பொழுதே அவனிடம் அடகு வைத்தாயிற்றே! இனி எப்படி இந்த ஏமாற்றத்தைத் துணிவுடன் எதிர் கொள்ள முடியும்? தான் கொண்ட நேசத்தின் பிரதிபலிப்பு அவனிடம் இல்லையென்கையில் ஏமாற்றத்தை அனுபவித்துத்தானே ஆக வேண்டும்? நேசம்...! நேசமா...! ஸ்வேதா கார்த்திக்கை நேசிக்கத் தொடங்கி விட்டாளா..? விலுக்கென்று கட்டிலை விட்டு எழுந்து அமர்ந்தாள்.

இது என்ன முட்டாள்தனம்..? அவனுக்கும் தனக்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்யாசம்! அவன்

அழகென்ன,..? பணமென்ன..? வசதியென்ன...
ஸ்வேதவா இந்த அறிவீனமான காரியத்தைச் செய்
கொண்டிருப்பது...! இது எங்கே எப்போது ஆரம்பித்தது?

முதல் சந்திப்பு கசப்பில் முடிந்தாலும்... அடுத்தடுத்த
சம்பவங்கள் அவனை மிகவும் நல்லவனாகக் காட்டியது.
இயல்பிலேயே அழகனான அவனின் உயரத்திலும்
கம்பீரத்திலும், சிரிப்பிலும்,பேச்சிலும் மயங்கி விட்டது
இந்த மூட மனது!

இந்த உண்மை தெரியாமலேயே அவனை பார்க்கு
போதெல்லாம் உற்சாகம் கொண்டு.. அவன் சிரிக்கு
போதெல்லாம் அந்தக் கன்னக்குழியை ரசித்து...
முட்டாள்தனமான காரியத்தில் இறங்கியிருக்கிறது...
அவனைக் காணச் செல்கையில் துள்ளிக் குதித்த போதே...
எதிர்பாராமல் சந்திக்க நேர்கையில் குதூகலித்தபோதே...
அவன் மௌனம் கொள்கையில் தவித்த போதே.... அவ
பாராமுகம் தன்னைக் கொல்லும்போதே... இந்த
உணர்வுகளனைத்தும் காதலால் வந்த விளைவு தான்
என்பதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டாமா..?

புரிந்து விலகியிருக்கலாமே! இந்தச் சித்ரவதை
வாழ்நாள் முழுமைக்கும் அனுபவிக்க முடியுமா..?
கார்த்திக்குடன் சேர்ந்து வாழ வேண்டுமென்கிற இந்த
மனோரதம் என்றேனும் நிறைவேறுமா..? நிச்சயம்
நடக்காது! எட்டாப் பழத்திற்கு கொட்டாவி விட்ட
கதையாகத் தான் முடியும்! இந்த உணர்வை மறந்து
மறைத்து வாழ்வது எப்படி...?

அவனால் விளைந்த உற்சாகத்தையும்
மகிழ்ச்சியையும் இனி வாழ்கையில் எந்த விஷயமேனும்
திருப்பித் தருமா..? அவன் சிரிப்...



ஆயிரம் முறை நினைத்துப் பார்க்கும் இந்த மனது ஒரு முறையேனும் அவனை நினைப்பதைத் தவிர்க்குமா..?

சங்ககால இலக்கியங்களில் வருவது போல் பசலை நோயால் சாகப் போகிறாளா..? ஆத்திரத்துடன் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தெறிந்தாள். மனதின் எண்ணங்களை இப்போது புரிந்து கொண்டாயிற்று...! மேலும் மேலும் அவனைச் சந்தித்தாலோ, நட்பு பாராட்டினாலோ அவதிப்படப்போவது நான் தான்! இந்தக் காதலை மறைத்து அவனிடம் உறவை வளர்ப்பதும் கடினமான காரியமே! எப்போது அவன் முன்பு உடைந்து போவோமென்கிற அவஸ்தையுடன் காலம் தள்ள முடியாது.

எந்தக் காரணத்திற்காக கடவுள் மீண்டும் மீண்டும் சந்திப்பை ஏற்படுத்தினாரென்று தெரியாது. ஆனால் இனி நடக்கப் போகும் சந்திப்புகளை தவிர்த்தால் மட்டுமே மேலும் பாதிக்கப்படாமல் தப்பிக்க முடியும்... இனி அவனை சந்திக்கவே கூடாதென்று முடிவெடுத்து, அழுத படியே உறங்கிப் போனாள். ஆனால் அந்த உறுதிமொழி விரைவிலேயே தகர்க்கப்படப்போகிறது என்பதை யறியாமல்.

பற்பல எண்ணங்களுடனே நாள் முழுதும் வலம் வந்து கொண்டிருந்தவளைத் தோழிகள் இருவரும் கண்டும் காணாமல் இருந்து விட்டனர்.

அன்றுஅலுவலகத்திலிருந்து விரைவிலேயே புறப்பட்டு,களையிழந்த முகத்துடன் எங்கோ பார்வையை பதித்துக்கொண்டு, தன்னிலையறியாமல் சிக்னலில் நின்று கொண்டிருந்தவள் "எக்ஸ்க்யூஸ் மீ.." என்று அருகில்

நின்றுகொண்டிருந்த பெண்ணின் குரல் கேட்டு திரும்பினாள்.

"அந்த காரிலிருப்பவர் உங்களைக் கூப்பிடுகிறார் பாருங்கள்.." என்று அந்தப் பெண் கூற யாரென்று திரும்பிப் பார்த்தவள் அது கார்த்திக் என்பதைக் கண்டு வேகவேகமாக எழுந்த மூச்சுக்களோடும், தடதடக்கும் இதயத்தோடும், கலங்கிய கண்களோடும் செய்வதறியாது விழிக்க, சிக்னல் மாறி விட்டதைக் கண்டு வேகமாய் வண்டியை எடுத்துக் கொண்டு சிட்டாகப் பறந்து விட்டாள்.

விடுதிக்கு வந்து கதவைச் சாத்தி ஆசுவாச மூச்செடுத்தவள்.., கடவுள் ஏன் இப்படி ஒரு கொடுமையை தனக்கு மட்டும் புரிகிறார்? அவனை பார்க்க கூடாதென்று முடிவெடுத்து முழுதாக இருபத்து நான்கு மணி நேரம் கூட முடியவில்லை அதற்குள்ளாகவா....? ச்சே... கிருஷ்ணா... என் பக்கம் இரு... ப்ளீஸ்.. என்று கை கூப்பி வேண்டிக் கொண்டாள்.

சிறிது நேரத்திலேயே செல்லில் அழைப்பு வர, புது நம்பராக இருக்கிறதே என்றபடி "ஹலோ.." என்றவளுக்கு எதிர் முனையின் பேச்சைக் கேட்டதும் மூச்சடைத்தது.

எதிர் முனையில் பேசிய கார்த்திக் "ஸ்வேதா... நான் கார்த்திக்..." என்றான்.

திகைப்புற்றிருந்த ஸ்வேதாவிற்கு பதில் பேச எழவில்லை. இவளிடமிருந்து பதில் வராததைக் கண்டு அவன் கோபத்துடன் "ஹலோ... ஸ்வேதா.. லைனில்



இருக்கிறாய் தானே..?" என்றான். தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு "ம்.." என்றாள்.

"ஏதாவது பேசு.. அமைதியாக இருந்தால் என்ன அர்த்தம்..? ஓ, வழக்கம் போல் இவனுக்கு எப்படி போன் நம்பர் கிடைத்தது என்று உன் களிமண்ணை சாரி மூளையை உபயோகிக்காமல் திகைத்துக் கொண்டிருக்கிறாயாக்கும்...?" எனக் கூறிச் சிரித்தான் கார்த்திக். அவன் சிரிப்பு மேலும் திகிலை ஏற்படுத்த எங்கே மனம் மறுபடியும் அவன் பால் ஈர்க்கப்பட்டு விடுமோ எனப் பயந்து...

"ஆபீஸில் வாங்கியிருப்பீர்கள் சார்... நான் நேற்றிலிருந்து மூளையை உபயோகிக்கத் தொடங்கி விட்டேன்.." என்றாள்.

"ம்,ம், ஐயோ.. அது எனக்கு ஆபத்தாயிற்றே" எனச் சிரித்தவன்..."சிக்னலில் நிற்கையில் ஏன் கூப்பிடக் கூப்பிட ஓடி விட்டாய்..? சரி பரவாயில்லை, உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்... ஹோட்டல் டெலிஷியஸிற்கு வந்து விடு.. பாய்.." என அவள் பதிலை எதிர்பார்க்காமல் வைத்தும் விட்டான்.

எதற்காக அழைக்கிறான்...? ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு முகத்தை காட்டுபவன், இன்று எந்த முகத்தைக் காண்பிக்கப் போகிறான்? செல்வது சரியா...? அவனின் குரலிலிருந்த ஏதோ ஒன்று அவள் மனதில் தடுமாற்றத்தை ஏற்படுத்த செல்லலாம் என முடிவெடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அவனைக் கண்டதும் தடுமாறுவதோ.... அலைபாய்வதோ கூடாது என்று மனதிற்கு பற்பல

கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டு ஹோட்டலி வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தாள். அங்கு அவளுக்கு முன்பே வந்து அமர்ந்திருந்தான் கார்த்தி. அவளைக் கண்டதும் முறுவலுடன் அவ வரவேற்றாலும், அவன் ஏதோ யோசனையில் இருப்பது கவே ஸ்வேதாவிற்கு தோன்றியது.

அவள் அமர்ந்ததும் "என்ன சாப்பிடுகிறாய்..." என்றவனிடம் ஏற்கனவே மனப்பாடம் செய்து வைத்திருந்ததை அவன் முகம் பாராமல் ஒப்பித்தாள். "இல்லை சார்.. நான் சாப்பிட்டு விட்டுத் தான் வந்தேன். நீங்கள் விஷயத்தைக் கூறினால் நன்றாக இருக்கும். எனக்கு அவசர வேலை உள்ளது..." என்றவளின் குரலில் தெரிந்த அந்நியத் தன்மை அவனைச் சுட.....

"ஆமாம், வேலை இல்லாமல் வெட்டியாகத் திரியும் எனக்கு, உன் அவசர வேலையைக் கெடுப்பது தான் நோக்கம் பார்" என்றான் கோபமாக.

சரி தான். இந்தக் குட்டு அவசியம் தான். அவ்வள நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்துபவனுக்கில்லாத வேலையா தனக்கு? அதிகப் பிரசங்கித்தனமாக பேசி விட்டதாகப் பட எதுவும் கூறாமல் அமைதியாக அமர்ந்திருந்தவளை நோக்கியவன்...

"உன்னுடன் வாதம் செய்யும் மனநிலையில் நான் இல்லை. உன் அவசர வேலையைக் கெடுக்கும் நோக்கமும் இல்லை, நான் நேராகவே விஷயத்திற்கு வருகிறேன்..." என அவசர வேலையை அழுத்தி சொன்னவன் ஒரு இடைவெளி விட்டு பெருமூச்சுடன் தொடங்கினான்...



"நீ இப்போது பார்த்துக் கொண்டிருக்கும் வேலை பற்றிய விவரங்களை எனக்குக் கூற முடியுமா..? அத்தோடு.. அந்த வேலை உனக்குப் பிடித்தமானதாய் இருக்கிறதா என்பதையும்.." என்றவனை 'என்ன திடீரென்று இப்படி ஒரு கேள்வி' என்ற எண்ணம் மனதில் எழுந்தாலும் மேலும் பேச்சை வளர்க்க மனமின்றி வேலை பற்றிய விவரங்களைக் கூறி விட்டு 'இப்போது கொடுக்கும் சம்பளம் அதிகமானதாய் இல்லையென்றாலும் அதுவே எனக்கு போதுமென்பதாலும் அது ஒரு பிரச்சனையில்லை. மற்றபடி... வேலை எனக்கு பிடித்துத்தான் இருக்கிறது" என்று முடித்தவளின் முகத்தில் ஏன் இதையெல்லாம் கேட்கிறான் என்ற எண்ணமே அதிகம் இருந்தது.

அவளின் எண்ணங்களுக்கு பதில் அளிப்பது போல் "இதை விட அதிக சம்பளமுள்ள வேலை கிடைத்தால் இந்த வேலையை விட்டு விட உனக்குச் சம்மதம் தானா?" என்று நிறுத்தியவன் தொடர்ந்து, "அதுவும்... என்னிடம் பார்க்கும் வேலை என்றால்...?" என்று அவன் முடிக்கும் முன்பே சட்டென இருக்கையை விட்டு எழுந்தாள்.

இவன் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்? இவனிடம் யார் வந்து வேலை வேண்டுமென்று கெஞ்சியது...? ஊரில் எத்தனை பேர் வேலையில்லாமல் திரிகிறார்கள்? அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டியது தானே. இவனைப் பார்க்கவே கூடாது என்று முடிவெடுத்திருக்கும் தன்னிடமா இவன் இதை கூறித் தொலைக்க வேண்டும் என்றெண்ணியவள்...

முடிந்தவரை முகத்தில் உணர்ச்சிகளை வெளிக் காட்டாமல், "அவசியமில்லை சார். எனக்கு வேறு வேலை

தேடும் எண்ணமிருக்கும் போது கட்டாயம் உங்கள் உதவியைக் கோருகிறேன் வருகிறேன்'' என எழுந்தவளின் கரத்தை அழுத்தமாகப் பற்றி, ''உட்கார் ஸ்வேதா'' என்றான்.

அவனின் குரலிலும், கைகளிலும் தெரிந்த அழுத்தம் மனதில் கலவரத்தை ஏற்படுத்த அவன் கைப்பட்டதில் கன்றிச் சிவந்திருந்த கரத்தைப் பார்த்து கோபத்துடன் நிமிர்ந்தாள்.

''பாதி பேச்சில் எழுந்து சென்றால் என்ன அர்த்தம் ஸ்வேதா...? நான் இன்னும் முழுதாகக் கூட என் பேச்சை முடிக்கவில்லை'' என்றான்.

இவனை யார் பேச வேண்டாம் என்றது? தனியாக அமர்ந்து நாள் முழுக்க பேசிக் கொண்டிருக்க வேண்டியது தானே. என் உயிரை ஏன் வாங்குகிறான்? எரிச்சலுடன் அமர்ந்திருந்தாள்.

''உன்னை கோபப்படுத்த வேண்டுமென்பது என் எண்ணம் இல்லை. நீ ஏன் அதை புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாய்..? இந்த வேலைக்கு நீ அவசியம்... நீ எவ்வளவு சம்பளம் கேட்டாலும் தருகிறேன்...'' என்றவனை இடைமறித்து 'உங்கள் சம்பளம் யாருக்கு வேண்டும்...'' என்று எரிச்சலுடன் கூறினாள்.

அவளின் பதிலில் நகைத்தவன் ''இந்தக் குணத்திற்காகத் தான் இந்த வேலைக்கு நீ வேண்டுமென்கிறேன்.. நாளை மாலை என் இல்லத்தில் சந்திக்கலாம்..., தயவு செய்து மறுக்காதே உன்னை எதிர் பார்த்துக் கொண்டிருப்பேன்..! பாய்..'' எனக் கூறி எழுந்து சென்றான்.

மழையடித்து ஓய்ந்தது போலிருந்தது ஸ்வேதாவிற்கு.. அயர்ச்சியாய்... ஆயாமாய்.. உணர்ந்தாள்.



இந்த விடாது கருப்பு ஏன் இப்படித் தொடர்கிறான்..? இப்போது என்ன சொல்லித் தொலைக்க வேண்டும்..? அப்படியென்ன வேலை.. ? என்னால் மட்டுமே முடிந்த வேலை..? அதட்டி, மிரட்டியே காரியத்தைச் சாதித்துக் கொள்கிறான். திமிர் பிடித்தவன்! புலம்பியபடியே வீடு வந்து சேர்ந்த ஸ்வேதா தோழிகளிடம் விவரத்தைக் கூறினாள்.

''நீ ஏன் மறுக்கிறாயென்று எனக்கு புரியவில்லை, அவர் தான் நல்ல சம்பளம் தருவதாகக் கூறுகிறாரே! நீ ஏன் ஒரேடியாக பிடிவாதம் பிடிக்கிறாய்? முதலில் அவரைப் பார்த்து நடுங்கினாய், பின்பு மிக இயல்பாய் பழகினாய், இப்போது அவரைக் கண்டாலே ஒதுங்குகிறாய் நீ என்னடி 'அந்நியன்' பட விக்ரம் போல் மாறி விட்டாய்..?'' என்ற சத்யாவை அடக்கி விட்டு...

''ஏய் ஸ்வேத்.. அவர் இன்னும் உன்னிடம் வேலை பற்றிய விவரங்களைக் கூறவில்லை. அவர் சொன்னதைப் போல் நாளை அவர் வீட்டிற்குச் சென்று வேலை பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்.. உனக்கு பிடித்திருந்தால் தொடரலாம்.. இல்லையென்றால் வேண்டாம் சார் எனக் கூறி விட்டு வந்து சேர், யாரும் உன்னைக் கட்டாயப் படுத்தப்போவதில்லை. என்ன வேலை என்பதை தெரிந்து கொள்ளாமலே நீ நோ சொன்னாயென்றால் யாராயிருந்தாலும் எரிச்சல் வரத்தான் செய்யும். எதுவாக இருந்தாலும் நாளை முடிவு செய்து கொள்ளலாம்.. ரிலாக்ஸ்டி...'' என்றாள் ரம்யா. தோழிகள் எப்படியோ சமாதானம் செய்ய இரவு உணவை முடித்துக் கொண்டு உறங்கச் சென்றாள்.

***

மறுநாள் முழுதும் அலுவலகத்தில் வேலை ஓடவில்லை. அவ்வளவு பெரிய நிறுவனம் வைத்து நடத்துபவன்.., எதற்காகத் தேடி வந்து வேலை கொடுக்க வேண்டும்..? வேலை விஷயமாக என்பவன் கம்பெனிக்கு அழைக்காமல் ஏன் வீட்டிற்கு அழைக்கிறான்? என்று பல கேள்விகள் மனதில் எழுந்தன.

"என்ன வேலையாக இருக்கும்.." என்று வாய் விட்டே புலம்பியவளை பக்கத்து இருக்கையில் இருப்பவர்கள் வித்யாசமாய் நோக்க வாய் மூடி அடங்கினாள். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்! அது எப்பேர்ப்பட்ட வேலையாக இருந்தாலும்...! அவன் கோடி சம்பளம் கொடுக்கத் தயாராக இருந்தாலும் நிச்சயம் அந்த வேலையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை..!

அவன் அருகாமையை நாடி மீண்டும் ஒரு முறை விஷப்பரீட்சை செய்து கொள்ள அவள் தயாராக இல்லை! கார்த்திகை மறந்தாக வேண்டும் என உறுதி பூண்டாள்.

காலையிலிருந்து தொடர்ந்த பரபரப்பு மாலை அதிகமானது. வண்டியில் அவன் இல்லத்தை அடைந்தவளுக்கு பழைய நிகழ்வுகள் மனதில் எழுந்தன. அனாவசியச் சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காதே மூட மதியே! என்று தன்னைத் தானே கடிந்து கொண்டு உள்ளே சென்றாள்.

உள்ளே யாருமில்லாததால் ஒரு நிமிடம் விழித்த ஸ்வேதாவை பணியாள் ஒருவன் வந்து "அய்யா உங்களை மாடிக்கு வரச் சொன்னாரம்மா" எனக் கூறி படியைக் காட்டி விட்டுச் சென்றான்.



ஏதோ ஒரு அசம்பாவிதத்தைச் சந்திக்கப் போவது போல் ஸ்வேதாவின் மனதில் தேவையில்லாத எண்ணங்கள் எழுந்து இதயத்தைப் பிசைந்தது. என்னவாயிற்று எனக்கு? வேலையைப் பற்றித் தானே பேசப் போகிறான்? பின் மனம் ஏன் இப்படித் தவிக்கிறது? என பலவாறு யோசனை செய்த படி மாடிக்குச் சென்ற ஸ்வேதாவின் நெஞ்சுக்கூடு காலியானது. இதயம் ஒரு நொடி நின்று.. பின் அதிவேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

ஏனெனில் மடியில் ஐந்து வயது சிறுவனுடன் விளையாடியபடி, அவளின் முகத்தில் பிரதிபலித்த அத்தனை உணர்ச்சிகளையும் கவனித்துக் கொண்டு அவளையே அசைவற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் கார்த்திக்.

# 6

எப்படி முடிகிறது உன்னால்....?
உன் சிரிப்பினாலும்...... உன் பேச்சினாலும்...
உன் நினைவுகளாலும்.... உன் அன்பினாலும்..
என்னை அழகாய் உருமாற்றி விடுகிறாய்....!

**கை**யில் குழந்தையுடன் அமர்ந்திருந்த கார்த்திக்கைக் கண்டு ஸ்வேதா ஆடிப்போனாள். இது

என்ன புதுத் திருப்பம்..? இவன் திருமணமானவனா..? அப்படியென்றால் இவன் மனைவி எங்கே? அன்றொரு நாள் இங்கே வந்த போது இந்தச் சிறுவன் இல்லையே! என்னை எதற்காக இங்கே வரவழைத்தான்??

புரியாத எதையேனும் செய்து வைத்து என்னை அலைக்கழிப்பதே இவன் வேலையா? என்ன கூறப் போகிறான்...? என தன்னைத் தானே கேட்டுக் கொண்டு யோசனையுடன் நின்றிருந்தாள்.

புதிதாக ஒரு பெண் வந்து நின்றிருப்பதைக் கண்ட சிறுவன் "டாடி ..." என விளித்து அவளைக் கை நீட்டிக் காண்பித்தான்.

இதோ! விடை கிடைத்தாயிற்று! டாடி என்று அழைக்கிறானே ! அப்படியென்றால் இவன் நிச்சயம் கார்த்திக்கின் மகனாகத் தான் இருக்க வேண்டும்... ஆனால் தனக்குத் திருமணமான விஷயத்தை கார்த்திக் ஏன் அவளிடம் வெளிப்படுத்தவில்லை? மறந்து விட்டானா..? அல்லது மறைத்து விட்டானா...?

தன் சிந்தனைகளுடனே புரண்டவள் மெல்ல நிமிர்ந்து அந்தச் சிறுவனை நோக்கினாள். கார்த்திக்கின் சாயல் சிறிது கூட அவனிடம் தென்படவில்லை. அன்னையைக் கொண்டு பிறந்திருப்பானாய் இருக்கும் என்று முடிவு செய்து கொண்டாள்.

இதென்ன சோகம் அவன் முகத்தில்...? கவலை மறந்து பறந்து திரியும் குழந்தைப் பருவமல்லவா இது....? பெரிய அந்தக் கருவிழிகளில்... குழந்தைகளுக்கே இயல்பாகத் தெரியும் அறியாமையும், கள்ளம் கபடமற்றத் தன்மையும் இவனிடம் இல்லையே...! அவனை



அளவெடுக்கும் நோக்கத்துடன் சந்தேகமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் அந்தச் சிறுவன்.

ஓடித் திரிந்து கொண்டும்.. துள்ளிக் குதித்துக் கொண்டும்... மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டியவன்... தந்தையின் மடியில்... ஒரு கையில் தந்தையின் விரல்களை இறுகப் பற்றிக் கொண்டும் மறு கையில் ஒரு விளையாட்டுப் பந்துடனும்... அவளையே உற்று நோக்கிய படி அமர்ந்திருந்தான்.

அவன் செய்கையும், உணர்ச்சிகளும் முரண்பாடாகப் பட... அவன் மீது பதித்திருந்த பார்வையை நிமிர்த்தி அவன் தந்தையின் மீது செலுத்தினாள்.

மகனுக்கு குறைந்தவன் இல்லை என்பது போல் அவனும் ஸ்வேதாவின் முகத்தை ஆராயும் நோக்குடனே பார்த்துக் கொண்டிருந்தான். சட்டென முகத்தை மாற்றி இயல்புக்குக் கொண்டு வந்தாள்.

"ஹரிஷ் நீ கீழே போய் விளையாடு... நான் பத்து நிமிடத்தில் வருகிறேன்.. டாடிக்கு முக்கியமான வேலை இருக்கிறதடா.." என்றான்.

தந்தையின் கட்டளைக்குக் கீழ் படிந்து எழுந்தவன் ஸ்வேதாவை நோக்கி ஒரு பார்வையை வீசி விட்டுச் சென்றான். அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தவள், "க்கும்" என்று தொண்டையைச் செருமியவனின் பக்கம் திரும்பினாள்.

"உட்கார் ஸ்வேதா.." என்று ஒரு இருக்கையைக் காட்டிய கார்த்திக்கின் முகம் இறுகியிருந்தது. சில நொடி நேர அமைதிக்குப் பின் பேசத் துவங்கினான். "ஸ்வேதா.. எனக்கு எப்படி ஆரம்பிப்பதென்று தெரியவில்லை. உன்

மனம் நோகாமல்.. நீ தவறாக எடுத்துக் கொள்ளா வண்ணம் எப்படி உனக்குப் புரிய வைப்பதென்று யோசனையாக உள்ளது...'' என்றவனின் மீது கேலிப் பார்வையை செலுத்தினாள்.

இவனுக்குப் பேசத் தெரியாதாம்! இதை நான் நம்ப வேண்டுமாம்! உலக மகா நடிப்புடா சாமி!

''பேசுவதற்கு இவன் யோசிக்கின்றானா... என்று நீ நினைப்பது எனக்குப் புரிகிறது ஆனால்....'' என நிறுத்தியவன் தொடர்ந்து, ''என்ன வேலை என்பதை யூகித்தாயா...?'' என்றவனை எரிச்சலுடன் பார்த்தாள்.

''சார்.. என்னை நீங்கள் எதற்காக இங்கே வரவழைத்தீர்கள் என்பது நிஜமாகவே எனக்குப் புரியவில்லை..'' என்றாள் பொறுமையிழந்து.

மெதுவாக எழுந்து நடந்து சென்று அங்கே பெரிதாய் மாட்டப் பட்டிருந்த ஹரிஷின் புகைப்படத்தின் முன்பு நின்று கொண்டு, ''ஸ்வேதா.... வேலை என்று நான் கூறியிருந்தது அலுவக வேலையைப் பற்றி அல்ல...,''

''பின்னே'' என்றபடி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

புகைப்படத்தில் தெரிந்த ஹரிஷின் முகத்தை வருடியபடியே ''தாயின்றித் தவிக்கும் என் மகனின் ஏக்கத்தைப் போக்க அவன் தனிமைத் துயரை, பிரிவுத் துயரை நீக்க அவனை மீண்டும் பழையபடி சிரித்து விளையாடுபவனாக மாற்ற, அவன் இழந்த அனைத்தையும் மீட்டுக் கொடுக்க, அவன் வாழ்வில் நம்பிக்கையையும் பிடிப்பையும் ஏற்படுத்த உன்னால் உதவி புரிய முடியுமா?'' எனக் கண்களில் வலியைக்



தேக்கி கேட்டவனிடம்.. அவளின் மனது, அறிவு, இதயம் என சகலமும் சரணடைந்ததில் ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை. ஆனால் இவன் தாய் என்னவானாள்...? கார்த்திக் இந்த அளவிற்கு அவதிப்படக் காரணம் என்ன...? இவ்வளவு துன்பங்களையும் மனதில் அடக்கி கொண்டு வலம் வருபவனா கார்த்திக்....?

''ஆனால்.. சார்.. ஹரிஷின் தாய் இப்போது எங்கே? அவருக்கு என்னவாயிற்று...?'' என ஆர்வ மிகுதியில் கேட்டே விட்டாள்.

சட்டெனக் கடினமான முகத்துடன் ''அவர்கள் இப்போது உயிருடன் இல்லை..'' என முடித்து விட்டான். அவன் பதிலால் திகைத்துப் போனாள். கார்த்திக்கின் மனைவி இறந்து விட்டார்களா...? கார்த்திக் மனைவியை இழந்தவனா...?

அர்த்தமற்ற வட்டத்துக்குள் சிக்கிக் கொண்டதைப் போல் உணர்ந்தாள். எதற்காக கார்த்திக்கின் அறிமுகம் வாழ்கையில் கிட்டியது....? இவனைக் காணும் முன்பு வரை இலகுவாக இருந்த வாழ்க்கை... இவனைக் கண்ட நொடியிலிருந்து புதிராக மாறி விட்டது. எத்தனை ஆச்சர்யங்கள்...! எத்தனை அதிர்ச்சிகள்...! எப்போதும் மனம் முழுக்க சிந்தனையுடனும், கேள்விகளுடனும் வலம் வந்து கொண்டு.. ச்சை.. என் வாழ்க்கையையே மாற்றி விட்டான் படு பாவி! கொடுத்த அதிர்ச்சிகளும், துன்பங்களும் போதாதென்று இது வேறு! ஐயோ! விரைவிலேயே பைத்தியம் பிடித்து செத்து விடுவேன் போலிருக்கிறதே!

வெகு நேரமாக அவளிடம் பதிலே வராததை கண்டு அவள் அருகில் வந்து அவள் கைகளைப் பற்றி கொண்டு... "ஸ்வேதா... அவன்,.. அவன்.. மிகவும் பாவம் அவன் மனதிலிருப்பதை புரிந்து கொள்ளாமல்.. நா அவனை விடுதியில் வேறு சேர்த்து விட்டு... மேலு அவனுக்குத் தீங்கு விளைவித்து விட்டேன்..., உனக் ஞாபகம் இருக்கிறதா உன் அலுவலக விழா அன்று நா வேகமாக வெளியேறியது...?"

"அடமடையா! அந்த நாளை என்னால் மறக் முடியுமா... கூடை நிறைய நெருப்பை அள்ளி நீ தலையி கொட்டிய நாள் எப்படியடா மறந்து போகும்..? எ மூடத்தனத்தை... முட்டாள்தனத்தை... அறிந்து கொண் நாள் ‹அது தானே!" என்று சிந்தித்தவள் மனதை அடக் அவன் பேச்சைக் கவனித்தாள்.

"அன்று அவன் விடுதியில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது.. ஹரிஷிற்கு உடம்பு ச இல்லையென்று.., சென்று பார்த்தபின்பு நான் அடைந் அதிர்ச்சிக்கு அளவே இல்லை. கிழிந்த நாராய்.. ஜீவனற்று படுக்கையில் அவன் இருந்த காட்சி.. நெஞ்சைப் பிளந்த விட்டது..., அங்கே ஆசிரியர்கள் கூறிய செய்தி அதை விட பெரிய அதிர்ச்சிக்குள்ளாக்கியது..." என நிறுத்தியவன் தன்னைச் சமாளித்துக் கொள்ள பெரிய பெரிய மூச்சுகளை எடுத்துக் கொண்டான்.

"இயல்பிலேயே அவன் தாயை அண்டி வாழ்ந்தவன்.. உண்ணும் போதும்.. உறங்கும் போதும்.. அன்னையை அதிகம் தேடுபவன்.. இப்படிப்பட்டவனை அருகிலிருந்து அரவணைக்காமல் விடுதியில் சேர்த்தது



என் தவறு. நான் அவனைக் காணச் செல்லும் போதெல்லாம் எந்த உணர்ச்சியையும் வெளிக் காட்டாதவன், நான் சென்ற பின்பு.. அறைக்குள் முடங்குவதும், விட்டத்தை வெறிப்பதுமாக இருந்திருக்கிறான்., வகுப்பிலும் கவனம் செலுத்தாமல் எப்போதும் எங்கோ பார்வைப் பதித்திருப்பவனை ஆசிரியர்கள் கண்டித்திருக்கிறார்கள்.., என்னிடமும் தெரிவித்தார்கள்.., நானும் அவனைக் காணச் செல்கையில் கண்டித்து படிப்பில் கவனம் செலுத்துமாறு கூறினேன்.."

"நான் அவனைக் கண்டித்ததும் கடுமையாகப் பேசியதும் பாதித்ததோ என்னவோ..., கண்களில் வழிந்த நீருடன் கோபமாகச் சென்று விட்டான். சரியாகி விடுவான் என நம்பி நானும் வந்து விட்டேன்.., ஆனால்... ஆனால் அவன்.., மறுநாளே பள்ளிக் கட்டிடத்தின் மீது ஏறி குதிக்க முயன்றிருக்கிறான்..," என்றவனின் கண்கள் கலங்கிப் போயிருந்தது...

இரக்கமும்... அழுகையும்.. ஒரு சேர அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தொண்டையில் அடைத்ததைச் சரிப்படுத்திக் கொண்டு, "அவன் படிப்பு எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்கிற ஒரே காரணத்தினால் தான் அவனை நான் விடுதியில் சேர்த்தது. ஆனால் அது அவனுக்குள் வேறு விதமான பாதிப்புகளை ஏற்படுத்துமென்று நான் கனவிலும் கூட நினைத்ததில்லை ஸ்வேதா. அவன் ஒருவனுக்காகவே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் நான்.., தற்கொலை என்றால் என்னவென்று தெரியாத வயதில் இந்த அளவுக்கு துணிந்திருக்கிறான் என்றால் எவ்வளவு மனக் கஷ்டங்களுக்கும் பாதிப்புக்கும் உள்ளாகியிருப்பான்?"

"அவனுடைய இந்த நிலைமைக்கு நான் தான் காரணமென்பதை நினைக்கையில் என் மனசாட்சியே என்னைக் கொல்கிறது ஸ்வேதா.., இனி அவனை என் அருகிலேயே வைத்து பார்த்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து விட்டேன்.., ஆனால் அலுவலகத்தைக் கவனிக்கும் கூடுதல் பொறுப்பும் இருப்பதால் எங்கே அவனை மறுபடியும் துன்பத்துக்கு ஆளாக்கி விடுவோமோ என்று பயமாக உள்ளது..."

"உன்னால்... உன்னால்... நிச்சயம் அவன் இழந்த அனைத்தையும் திருப்பிக் கொடுக்க முடியும். உன் குணமும், இரக்கமும், உன் பேச்சும், சிரிப்பும் என்னை மாற்றியது போல்... நிச்சயம் அவனையும் மாற்றி விடும்... தயவு செய்து மறுத்து விடாதே ஸ்வேதா..., நீ எவ்வளவு சம்பளம் கேட்டாலும் தருகிறேன்... அவனை இந்தச் சிறையிலிருந்து மீட்டு அவனுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும்."

"அவன் எதிர்பார்ப்பது அன்பு, அன்பு, .அன்பு மட்டுமே! உன்னுள் அது நிறைந்திருக்கிறது... அவனது எதிர்பார்ப்பை நிச்சயம் உன்னால் பூர்த்தி செய்ய முடியும்... மறுத்து விடாதே..." என்று தன் இயல்புக்கு மாறாக அவள் கைகளைப் பிடித்துக் கெஞ்சிக் கொண்டிருந்தவனைக் கண்டு முழுக் குழப்பத்துடனும் பிரமிப்புடனும் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

ஐந்து வயதுக் குழந்தையின் சிந்தனை இப்படியும் கூட இருக்குமா..,? பொம்மை வேண்டுமென்று தாயிடம் அழுது அடம் பிடித்து வாங்கியதும், அன்னைக்குத் தெரியாமல் தந்தையுடன் சென்று



தின்ற தன் குழந்தைப் பருவம் ஸ்வேதாவிற்கு நினைவிற்கு வந்தது. அமைதியுடன், ஒரு நிமிடமேனும் அமர்ந்திருப்பாளா? விடுதி, அமைதி, அழுத்தம், தற்கொலை என்றெல்லாம் அவன் கூறியது அந்நிய மொழியில் பேசுவதைப் போலிருந்தது. ஒரு சிறுவன்! பொம்மை வைத்து விளையாடும் சிறுவனுக்கு இப்படியொரு எண்ணமா? அந்த அளவிற்கா அவனுக்கு அன்னையின் மீது ஈடுபாடு...?

குழந்தைப் பருவத்தில் அன்னை என்பவள் எவ்வளவு முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறாள்! ஒரு சிறுவனின் வாழ்வையே அந்த அன்பு பிரட்டிப் போட்டு விட்டதே! அவன் மனம் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கும் என எண்ணிய ஸ்வேதாவின் பெண்மைக்குள் தன்னாலே இரக்கம் சுரந்தது.

மற்றதையெல்லாம் மறந்து சட்டென நிமிர்ந்து, "நான் இந்த வேலையை முழு சம்மதத்துடன் ஏற்றுக் கொள்கிறேன் சார்..." என மனதார அறிவித்தாள்.

"நி....நிஜமாகவே உனக்குச் சம்மதம் தானே ஸ்வேதா...?," என்றவனின் குரலில் இருந்த சந்தோசம் கலந்த பதற்றம் ஸ்வேதாவினுள் உறுதியை ஏற்படுத்த "எனக்கு பரிபூர்ண சம்மதம் சார்.." எனக் கூறி முறுவலித்தாள்.

"தேங்க் யூ.. தேங்க் யூ சோ மச் ஸ்வேதா...," என்று அவள் கையைப் பற்றியவன் அவள் உள்ளங்கையில் முத்தமிட்டுத் தன் நன்றியை வெளிப்படுத்தினான். தயக்கத்துடன் கைகளை உறுவிக் கொண்டாள்.

அவன் முகத்தில் தெரிந்த மகிழ் அவளுக்குள்ளும் பிரதிபலித்தது. இந்த சந்தோசத் நிலைக்கச் செய்ய வேண்டுமென்ற உறுதியும் மனது எழுந்தது. கார்த்திக் அவளை எந்த நோக்கு பார்க்கிறானோ தெரியாது.. ஆனால் ஸ்வேதாவின் உடல் பொருள்.., ஆவி.., என சகலத்திலும் நிறைந்திருப்பவ கார்த்திக்... கார்த்திக் மட்டுமே...!

அவன் விரும்பினாலும் சரி..! விரும்பாம போனாலும் சரி...! கார்த்திக்கின் சந்தோசம் இன்றை நிலையில் அவளின் மனதிற்கு முக்கியமான ஒன்றா பட்டது. அவன் முகம் வாடுவதைக் காண்கையில் மன பதறிப் போய் விடும் போது. எப்படி அவனை இந் நிலையில் விட்டுவிட்டுச் செல்ல முடியும்?

குற்ற உணர்வில் துடிதுடித்து செத் கொண்டிருப்பவனை மேலும் மனம் வருந்தச் செய் ஸ்வேதாவினால் நிச்சயம் முடியாது.. என்ன ஆனாலும் ச ஹரிஷை பழைய நிலைக்கு மாற்றிவிட்டுத் தான் இந் வீட்டை விட்டுச் செல்ல வேண்டுமென்று உறு பூண்டாள்.

"ஸ்வேதா உனக்கு எவ்வளவு சம்ப வேண்டுமென்பதை நீயே கூறு. மற்றபடி உனக்கு உண தங்குமிடம் அனைத்தும் இங்கே தான்., எனக்கு ப நம்பிக்கை வந்து விட்டது ஸ்வேதா.., ஹரிஷ் மா விடுவான்., அவன் மிஸ் செய்கிற விஷயங்களை தயங்காமல் நீ அவனுக்குக் கொடுக்க வேண்டு இத்தனை நாட்களாக அவன் மனதை வாட் கொண்டிருக்கும் துன்பம் நீக்கப்பட வேண்டும்.. எனக் நீ அதைச் செய்ய வேண்டும் ஸ்வேதா..." என்ற



கெஞ்சலுடன்.

"எனக்கு எப்படி சொல்வதென்று புரியவில்லை சார்..,நீங்கள் கூறிய அனைத்தையும் கேட்ட பிறகு யாராயிருந்தாலும் ஹரிஷின் மீது இரக்கம் தோன்றி விடும்... நிச்சயம் அவனை நன்றாகப் பார்த்துக் கொள்கிறேன் சார்.. கூடிய விரைவிலேயே நீங்கள் மனம் மகிழும்படி ஹரிஷ் மாறிவிடுவான்..." என்றவளின் குரலில் தெரிந்த தீவிரமே கார்த்திக்கைத் திருப்திபடுத்த பாரம் நீங்கி புன்னகை புரிந்தான்.

எல்லாம் சரி! அவனது மகிழ்ச்சி நிறைந்த முகத்தைப் பார்க்க ஸ்வேதாவிற்கு தெவிட்டவே இல்லை என்பது வரையில் சரி! இடையில் அவன் கூறிய விஷயம் ஸ்வேதாவை நெருடியது...உணவு, தங்குமிடம் இங்கேயே என்கிறானே! இவன் முகத்திலேயே விழித்து இவன் முகத்தைப் பார்த்த பின் உறங்கி... இது நடக்கிற காரியமா..?

ஏற்கனவே இவனைக் கண்டால் அலைபாயத் தொடங்கி விடுகிறது மனம்! இதில் நானாவது இவனுடன் தங்குவதாவது ! வேறு. வினையே வேண்டாம்... அவன் திருமணமானவன் என்பதை மறக்காதே ஸ்வேதா! அவன் ஐந்து வயது சிறுவனின் தகப்பன்! அவன் மீது ஆசை கொண்டிருப்பது வடிகட்டின முட்டாள்தனம்! இவனுடன் தங்கி மேலும் இழுத்துக் கொள்ளக் கூடாது என முடிவெடுத்து "சார்... சின்ன சந்தேகம்.." என்றாள்.

"சொல் ஸ்வேதா' என்றவனிடம் "அ..அது வந்து... இங்கே தங்கியாக வேண்டிய அவசியமென்ன..? விடுதியிலேயே தங்கிக் கொள்கிறேனே!" என்றாள்.

அவள் மனதிலிருப்பதை நொடியில் அனுமானித்தவன் அவளை நேராக நோக்கி.. "ஏன்..? உனக்கு என்னுடன் தங்குவதில் பிரச்சனையா..?" என்று நேரடியாகவே வினவினான்.

ஆஹா! இவன் இவ்வளவு நேரம் சோகத்துடன் அழுது கொண்டிருந்த கார்த்திக் அல்ல! திமிர்பிடித்த கார்த்திக் வந்து விட்டான். இன்னும் இங்கேயே நின்று கொண்டிருந்தால் இவனிடம் குட்டு படப் போவது உறுதி என நொடியில் முடிவு செய்து... வேகமாக அங்கிருந்து நடந்து "நாளைக் காலை அறையை காலி செய்து விட்டு வேலையில் சேர்ந்து கொள்கிறேன் சார்...." என்று படிகளில் இறங்கிக் கொண்டே அவன் முகம் பாராமல் பதில் கூறி விட்டு "வருகிறேன் சார்..." என ஓடி மறைந்தாள்.

மாடி அறையின் பால்கனி வழியாக அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திக்கிற்கு சிரிப்பு வந்தது.."நாட்டி கேர்ள்" என்று அவன் உதடுகள் முணுமுணுத்தது. இந்தப் பெண் வந்த பின் வாழ்க்கை எவ்வளவு அழகாக மாறி விட்டது! சூன்யமாய்ச் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில் வசந்தத்தைப் பரப்புகிறாள்! காற்றில்லாமல் மூச்சுக்குத் தவித்துக் கொண்டிருந்த வேளையில் இதமான தென்றலை வீசுகிறாள்!

இருளில் தத்தளித்துக் கொண்டிருந்தவனை ஒளி வெள்ளத்தில் நீராட அழைக்கிறாள்! அவளின் சுகந்தம் என்னுள் மரத்துப் போய் விட்டதாய் நினைத்துக் கொண்டிருந்த அத்தனை உணர்வுகளையும் ஒரு நொடியில் எழுப்பி விட்டனவே! இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?



அவளைச் சீண்டும் போது மனதிற்குக் கிடைக்கும் சந்தோசம்..! அவளைக் கோபப்படுத்தும் போது உள்ளே எழும் உல்லாசம்! அவளின் அருகாமையில் கிடைக்கும் நிம்மதி..! அவளின் சிரிப்பில் தொலைந்து போகும் மனது! அவள் விழிகளின் ஆழத்தில் தலைகுப்புற விழும் என் இதயம்! ஸ்வேதா..., என் வாழ்வில் நீ வர ஏன் இவ்வளவு நாட்களாயிற்று..?

விஷயத்தைக் கேள்விப்பட்ட ரம்யாவும்,சத்யாவும் கோபத்தில் கத்தத் துவங்கினர். "என்னடி இதெல்லாம்..? அந்த ஆள் தான் அறிவில்லாமல் பேசுகிறானென்று பார்த்தால் நீ அதை விட லூசாக இருக்கிறாய்.., ஆயா வேலை பார்க்கத் தான் எம்.சி.ஏ படித்தாயா...? முட்டாள்தனம்!" சமாதானமாக "அந்த ஹரிஷைப் பார்க்கப் பாவமாக இருந்ததடி.."

"பாவம் பார்க்க மட்டும் தான் நம்மால் முடியும்.., அவன் பிள்ளை, அவன் பாடு! நீ எத்தனை நாட்களுக்கு அவனைப் பார்த்துக் கொள்வாய்..? உனக்கென்று ஒரு வாழ்க்கை இருக்கிறது தெரியுமா..? அதைப் பார்க்க வேண்டாமா..? நீ ஏனடி கார்த்திக்கே சரணம் என்று மாறி விட்டாய்..?" என்று ரம்யா பொறியத் தொடங்கினாள்.

"என் வாழ்க்கை...! அதை இன்னும் ஒரு முடிவுக்குக் கொண்டு வர என்னாலேயே முடியவில்லையே! ரம்யா, எனக்கு... எனக்கு.. கார்த்திக்கின் சந்தோசம் மற்றதை விட பெரிதாகத் தெரிகிறதடி..., நான் என்ன செய்யட்டும்..?" என்று மூக்கு விடைக்க இதோ வந்து விடுவேன் என்ற கண்ணீரை அடக்கியபடி அவள் பேசுவதைக் கேட்ட தோழிகள் இருவருக்கும் அவள் நிலையைக் கண்டுப் பாவமாக இருந்தது.

"எது நடந்தாலும்.. நான் செல்வது உறுதி.. ஹரிஷை மாற்றி.. கார்த்திக்கின் சந்தோசத்தை மீட்டுத் தரப் போகிறேன்..." எனக் கூறி எழுந்து சென்றவளை தடுக்கத் தோன்றாமல், அமைதியாக வீற்றிருந்தனர் இருவரும்.

அன்னை, தந்தையிடம் இந்த வேலை மாற்றத்தைக் கூற எண்ணி வீட்டிற்கு போன் செய்தாள். நிச்சயம் அன்னை இதை ஏற்கப் போவதில்லை. படிப்பு, வேலை என்று வீட்டை விட்டு தனித்திருப்பதற்கே அவர் ஒப்புக் கொள்ளவில்லை. இப்போது ஒரு சிறுவனைப் பார்த்துக்கொள்ளும் இந்த வேலையைப் பற்றிக் கூறினால் அவர் நிச்சயம் அனுமதிக்கப் போவதில்லை. படித்த படிப்பென்ன...? பார்க்கப் போகும் வேலை என்ன...? ரம்யாவிடம் வாங்கியதை விடச் சற்று அதிகமான கடின வார்த்தைகளை அன்னையிடமிருந்து பெற்றுக் கொள்ள நேரிடும்.. ஆனால் இதற்காகவெல்லாம் எடுத்த உறுதியை கை விடுவதும் சுலபமல்லவே.

கார்த்திக்கின் நிம்மதி நிறைந்த முகமும்.. ஹரிஷின் ஆராய்ச்சி பார்வையும் நினைவிற்கு வர.. எப்படியாயினும் அன்னையை இதற்கு சம்மதிக்க வைக்க வேண்டும் என்றெண்ணியபடி காத்திருந்தாள். "குட்டி மா.." என்று அன்னையின் பாசம் நிறைந்த குரல் அவளை கலங்கச் செய்தது.. "ஸ்வேதா.. என்ன நேற்றிலிருந்து போன் செய்யவில்லையே..? அலுவலக விழா என்றாயே.. நல்ல படியாக முடிந்ததா?"

"ம்ம்.." என்றவள் "அம்மா.. நான் இந்த வேலையை விடப் போகிறேன்.. வேறு.. வேறு வேலை கிடைத்து விட்டது.." என்று திக்கியபடி கூறினாள். மறுபுறம் அவர்



நகைக்கும் ஒலி கேட்டது.. "ஏன் பாப்பா.. ரம்யா தானே வருடத்திற்கொரு முறை கம்பெனி மாறுவாள்..?, அவளுடன் சேர்ந்து இப்போது அவளது பழக்கம் உனக்கும் ஒட்டிக் கொண்டதா.." என்றவர் "என்ன வேலை ஸ்வேதா.. எந்த கம்பெனி?" என்று வினவினார்.

"அது.. அது.. வந்து.. அம்மா.. இது அலுவலக வேலை அல்ல.. ஒரு.. ஒரு சிறுவனை கவனித்துக் கொள்ளும் வேலை.." என்று அவள் முடிப்பதற்குள் "உளறாதே.." என்று கடுமை நிறைந்த குரலில் அவள் பேச்சைத் தடுத்தார் பார்வதி அம்மாள். 'நீ வேலை பார்ப்பதே.. அவசியமில்லாத ஒன்று என நான் கூறிக் கொண்டிருக்கிறேன்.. நம் வீட்டில் செல்வத்துக்குக் குறைவா..? ஒரே பெண்ணான உன்னை உனது விருப்படியே வளர்த்து.. விரும்பியதை படிக்க வைத்து.. நீ வேலைக்குச் செல்வதாக கூறியதற்கும் மறுப்பு தெரிவிக்காமல். உன் விருப்பத்திற்குத் தடை சொல்லாமல் இருக்கிறேன் என்பதற்காக நீ என்ன செய்தாலும் ஏற்றுக் கொள்வேன் என்று அர்த்தமா..?"

"படித்த படிப்புக்கு சம்பந்தமே இல்லாமல் யாரோ ஒரு சிறுவனைப் பார்த்துக் கொள்ளும் வேலை... என்ன இது ஸ்வேதா..?" என்றவரை இடை மறித்து "யாரோ ஒருவர் இல்லை அம்மா.. எனக்கு மிகவும் தெரிந்தவர் தான்.. அந்தச் சிறுவன் சிறிது சிறிதாக தன்னை இழந்து கொண்டிருக்கிறான் அம்மா.. கொஞ்ச நாட்கள்.. கொஞ்ச நாட்களுக்கு நான் அவனைப் பார்த்துக் கொண்டால்.. அவன் மாறி விடுவான்.. அதன்பின் நான் அந்த வேலையை தொடரப் போவதில்லை.." என்று கூறி முடித்தாள்.

"இந்த வேலையை நீ தான் பார்த்தா வேண்டுமென்று என்ன இருக்கிறது? இதென் முட்டாள்தனம்..? உலகத்தில் உன்னைத் தவிர வே யாரும் இந்த வேலையை ஏற்றுக் கொள்ள மாட்டார்க என்ன..?" என்றவரின் குரல் உயரத் துவங்க அவரிடமிருந்து போனைப் பறித்து "ஸ்வேதா குட்டி.." என்றார் சிவநேசன்.

தந்தையின் குரலைக் கேட்டதும் சிறி ஆறுதலடைந்தவள்... "அப்பா..." என்றழைக்க..

"ஸ்வேதா குட்டி.. என்னடா.. என்னவாயிற்று..?" என்று வினவ.. கார்த்திக்கைச் சந்தித்ததிலிருந் ஆரம்பித்து ஹரிஷைப் பற்றி அவன் கூறி அனைத்தையும் தந்தையிடம் ஒப்பித்தாள். "ஸ்வேத கண்ணா.. இப்போது உனக்குள் இருக்கும் வேகம் ஹரிஷைப் பற்றி தெரிந்து கொண்டதால்.. அவன் மீ ஏற்பட்ட இரக்கத்தால் விளைந்தது.. இந்த உணர்ச்சி வேக அடங்கிய பின் தேவை இல்லாத.. விஷயத்தில் மாட்டி கொண்டிருப்பதாய் நீயே உணர்வாய்... அதனால் மீண்டு ஒரு முறை யோசிமா.., கட்டாயம் நீ இதை ஏற்று கொண்டு தான் ஆக வேண்டுமா..." என்று கேட்டார்.

ஐயோ! அப்பா! இது அந்தச் சிறுவனுக்காக மட்டு ஏற்றுக் கொள்ளப் போகிற வேலை அல்லவே.. என் உயிரில் கலந்து விட்ட.. என் சுவாசமாய் மாறி விட்ட கார்த்திக்கிற்காகவும் தான் என்பதை உங்களுக்கு எப்படி புரிய வைக்க? நெற்றியை அழுத்தித் தேய்த்தவ "அப்பா.. நான் இந்த வேலையை ஏற்றுக் கொள்ள முடி செய்து விட்டேன்.. நான்.. நான்.. சென்றாக வேண்டு



உண்மைக் காரணத்தை இன்றில்லா விடினும் ஒரு நாள்.. நிச்சயம் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.. எனக்கு அனுமதி கொடுங்கள் ப்ளீஸ்" என்று அழுகை கலந்த குரலில் கேட்க..

மறுபுறம் யோசனையில் ஆழ்ந்தார் சிவநேசன். ஸ்வேதா இயல்பில் மிகவும் துடிப்பானவள். எப்போதும் துருதுருவென்று திரிந்து கொண்டு சுற்றி இருப்போரை மகிழ்வித்துக் கொண்டிருப்பவள். கவலை,கஷ்டம் என்ற வார்த்தைகளுக்கெல்லாம் அர்த்தம் தெரியாமல் வளர்ந்தவளுக்கு.. இப்போது அழுகை வருமளவிற்கு என்ன சோகம்..?

அந்தச் சிறுவனைக் கண்டதாலா.. இரக்க குணம் நிறைந்த அவளது அன்பு உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த உணர்ச்சியைக் கண்டு ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை... ஆனால்.. பார்த்துக் கொண்டிருக்கும் வேலையை விட்டு விட்டு இந்த குழந்தை கவனிப்பை முழுநேரப் பணியாக ஏற்கிறாள் என்றால்.. நிச்சயம் ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தவர். மேலும் அவளை வருத்தப்பட விடாமல், "ஸ்வேதா குட்டி.. அப்பாவிற்கு உன் மேல்,உன் செய்கையின் மேல் என்றும் அளவு கடந்த நம்பிக்கை உண்டு.. காரணமில்லாமல் நீ எந்த ஒரு விஷயத்திற்கும் பிடிவாதம் பிடிக்க மாட்டாய்.. என்னிடம் பகிர்ந்து கொள்ள விடாமல்.. உன்னை வருத்தப்படுத்திக் கொண்டிருக்கும் அந்த விஷயத்தை.. என்னவென்று தெரிந்துகொள்ள நான் விருப்பப்படவில்லை அம்மா.. நீ மேலும் வருத்திக் கொள்ளக் கூடாது கண்ணா.. எல்லா பிரச்சனைக்கும் தீர்வு உண்டு.. எங்களது உலகம் நீ மட்டும் தானே டா ..?"

"உன்னுடைய பாதுகாப்பிற்கு பங்கம் வராத.. கண்ணியமான வேலை எதைச் செய்யவும் நீ தயங்க வேண்டிய அவசியமில்லை ஸ்வேதா.. உன் விருப்பத்தை நான் முழுதாக ஆதரிப்பேன் எந்தச் சூழ்நிலையிலும்... உன் மேல் எனக்கு பரிபூரணமான நம்பிக்கை இருக்கிறது.. அப்பா இருக்கிறேன் உனக்கென்று எப்போதும்.. சரியா கண்ணா..? நீ கண்ணீர் சிந்த வேண்டிய அவசியமே இல்லை.. உன் விருப்ப படி அந்த வேலைக்குச் செல்.. எனக்கு சம்மதம் டா ஸ்வேதா குட்டி.." எனக் கூற..

விழிகளில் வழிந்தோடிய நீரைத் துடைத்த படி "தேங்க்ஸ்ப்பா.." என்றவள் நிறுத்தி "அம்மா.." என்று இழுக்க.. "அவளை நான் பார்த்துக் கொள்கிறேன்.. நீ உன்னைக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் சரியா.. நான் கூடிய விரைவில் உன்னை சென்னையில் சந்திக்கிறேன்.. அம்மாவின் கோபம் குறைந்த பின் அவளிடமும் பேசு.., பை டா கண்ணா.." என்று செல்-ஐ அணைத்தார்.

அப்பா! எப்படி ஒருவரால், பெற்ற பெண்ணின் மீது இவ்வளவு.. நம்பிக்கையையும், பாசத்தையும் காட்ட முடியும்.. ஐ மிஸ் யூ டாடி .. உங்கள் நம்பிக்கையை நிச்சயம் கடைசி வரை காப்பாற்றுவேன்.. என்றெண்ணிக் கொண்டு அன்னையின் கோபத்தை நினைத்தபடி உறங்கிப் போனாள்.

மறுநாள் அறையைக் காலி செய்து விட்டு தன் உடைமைகளுடன் கார்த்திக்கின் வீட்டிற்குச் சென்றவளை வரவேற்றவன் அவளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறையைக் காண்பித்தான்.



"ஸ்வேதா.. இது உன் அறை... நீ சென்று ரெஃப்ரெஷ் செய்து கொள்.. நான் உன்னை அரை மணி நேரத்தில் சந்திக்கிறேன்.." எனக் கூறி நகர்ந்தான்.

அறை மிகவும் ஆடம்பரமாக சகலவசதிகளுடன் இருந்தது. அடுத்த அரை மணி நேரத்தில் கார்த்திக் வந்து அவளை அழைத்துச் சென்றான்.

"ஸ்வேதா.. இப்போது நாம் சந்திக்கப் போவது ஹரிஷை.., ம்... ஹரிஷ் இயல்பில் கலகலப்பானவன் தான் ஆனால் அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகளின் பாதிப்பால் அவன் நத்தைக் கூட்டுக்குள் ஒளிந்து கொள்வது போல் தனக்குள் அடைந்து கொள்கிறான், எதையும் வெளிப்படுத்துவதில்லை.,"

"பொதுவாக இந்த வயதில் குழந்தைகள் ஆசைப்படும் பொம்மை, கார் போன்ற சமாச்சாரங்களைக் கூட அவன் தேடுவதில்லை.., இங்கே உட்கார் என்றால் உட்காருகிறான், சாப்பிட, தூங்க என்று அனைத்தும் நாம் கூறுவதை அப்படியே செய்கிறான்.. இதில் பிரச்சனை என்னவென்றால்.. அவன் என் ஒருவனின் பேச்சை மட்டுமே கேட்கிறான்.., வேலைக்காரர்களையோ. தெரிந்தவர்களையோ யாரையும் அவன் அருகில் அனுமதிப்பதில்லை... இந்த சூழ்நிலையில் உன்னை அவனிடம் அனுப்புவது எனக்குத் தயக்கமாகத்தான் இருக்கிறது..." என்றான்.

"நீங்கள் தான் கூறி விட்டீர்களே சார்... அவன் இயல்பில் கலகலப்பானவனென்று, இது இப்போது இடையில் ஏற்பட்ட குணங்கள் தானே..? நான் பார்த்துகொள்கிறேன்" என்றாள்.

சிறுவன் தானே....! சுலபமாக சமாளித்து விடலாம் என்று நினைத்து ஸ்வேதா வாக்குறுதி கொடுக்க... ஆனால் அவனோ அவள் எதிர்பார்ப்புகளை எல்லாம் சுலபமாகத் தகர்த்தெறியும் அசகாய சூரனாக இருந்தான்!

# 7

ஆறுதலாய் தலை கோத...

அன்பாய் முகம் வருட....

செல்லமாய்க் கோபப்பட...

அதிகமாய் நம்பிக்கையூட்ட...

உன்னைத் தான் அதிகம் தேடுகிறதடா மனம்...

மொத்தத்தில்...

என் கண்ணீரைத் துடைக்க...

உன் கண்கள் தான் சிறந்த கைக்குட்டை...!

இது தான் ஹரிஷின் அறை..., "நான் உங்கள் இருவருக்குமிடையில் குறுக்கிடப் போவதில்லை. ஏதாவது உதவி தேவையென்றால் கீழே வேலைக்காரர்கள் இருப்பார்கள், அவர்களை அழைத்துக் கொள். வருகிறேன்.." எனக் கூறிச் சென்று விட்டான்.

அவன் காட்டி விட்டுச் சென்ற அறையினுள் நுழைந்த ஸ்வேதா திகைத்தாள். ஓடி விளையாட



வேண்டிய வயதில்.. கட்டிலில் படுத்துக் கொண்டு... எங்கோ பார்வையைப் பதித்திருந்தவனைக் கண்டுப் பாவமாகக் கூட இருந்தது. அருகே சென்று "ஹரிஷ்...." என்றழைத்தாள்.

அவளைக் கண்டதும் எழுந்தமர்ந்தவன் சந்தேகத்துடன் ஒரு பார்வை பார்த்தான். "என்ன ஹரிஷ் அப்படிப் பார்க்கிறாய்..? ஓ! நான் யார் என்று உனக்குத் தெரியாதல்லவா..?" என்றபடி அவனருகில் அமர்ந்தாள்.

"தெரியும், அன்று உங்களை டாடியுடன் பார்த்தேனே!" என்றவன் சிறிது இடைவெளி விட்டு... "இனிமேல் நீங்கள் தான் என்னைப் பார்த்துக் கொள்ளப் போகிறீர்களாமே!, என்னை ஸ்கூலுக்கெல்லாம் கூட அனுப்பி வைக்கப் போகிறீர்களாம்!" எனத் தன் பெரிய கண்களை உருட்டி வெறுப்புடன் கூறினான். அதைக்கேட்டு முறுவலித்தவள், "ஆமாம்..., ஹரிஷ் ரொம்ப ரொம்ப நல்ல பையனாம்..! சொன்ன பேச்சு கேட்பானாம்..! சமத்துப் பையன் என்றெல்லாம் உன் டாடி கூறினாரே! குட் பாய் என்றால் கண்டிப்பாக ஸ்கூல் போய்த் தானே ஆக வேண்டும்...? ம்?" என்று அவள் கூறவும் சட்டெனக் கட்டிலை விட்டு இறங்கி அவள் அமர்ந்திருந்த இடத்திலிருந்து தூரமாகச் சென்று நின்று கொண்டான்.

"நீங்கள் அதெல்லாம் ஒன்றும் செய்ய வேண்டாம்., நான்... நான்.., ஸ்கூலுக்கெல்லாம் போக மாட்டேன்...., நீங்கள்.... நீங்கள் என் டாடியிடம் சொல்லி விட்டு இங்கிருந்து போய் விடுங்கள்..." என்றான்.

அவன் பதிலைக் கேட்டு ஆச்சர்யத்தின் உச்சிக் சென்று விட்டாள். இவன் என்ன பெரிய மனுஷனை போல் பேசுகிறான்! "அப்படியெல்லாம் சொல்லக் கூடா கண்ணா..' என்றபடி அவனை அருகே இழுக்க முயன்றா

அவள் கைகளை கோபத்துடன் உதறி விட் அவ்விடத்தை விட்டு ஓடிச் சென்று விட்டா அச்சிறுவன்.

அப்பனுக்குத் தப்பாத பிள்ளையாக இருக்கிறானே பிடிவாதம்,பிடிவாதம்! இவனைச் சமாளிப்பது கடினமா காரியம் தான் போலும்! ஆனால் இவனை இப்படியே விட்டு விட்டால் வந்த வேலை என்னாவது? அதனா மனதில் கஜனி முகமதுவை நினைத்துக் கொண் மீண்டும் படையெடுத்தாள்.

அவனை தேடிச் சென்று அவன் அருகில் அமர்ந்து "ஹரிஷ்...." என மெதுவாக அழைத்தாள். வெடுக்கென்று முகம் திருப்பிக் கொண்டவனைக் கண்டு கலங்கினாலும் சமாளித்து "உனக்கு என்ன பிடிக்கும் ஹரிஷ்...?" என்று வினவினாள்.

பொறுமையிழந்து அமர்ந்திருந்த இடத்தை விட்டு இறங்கியவன்.., "எனக்கு எதுவுமே பிடிக்காது..... உங்களைச் சுத்தமாக பிடிக்காது.. முதலில் வெளியே போங்கள்.... எனக்கு உங்களைப் பார்க்கவே பிடிக்கவில்லை..." எனக் கண்ணீரும் கோபமுமாகக் கத்தினான்.

அடக் குட்டிப் பிசாசே! ஸ்வேதாவுக்குள்ளும் கோபம் எழுந்தாலும் அடக்கிக் கொண்டு அமைதியாக வெளியே வந்து விட்டாள். இவன் தான் நினைத்தது போல் அல்லாமல் எமகாதகனாக இருக்கின்றானே! இவனை



எப்படி நெருங்குவது? பெரிதாக கார்த்திக்கிடம் வாக்களித்து விட்டாயிற்று! இப்போது இவனை எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறாள். தலையில் கை வைத்து அமர்ந்தவளுக்கு தன் நிலையைக் கண்டு அவளுக்கே பாவமாக இருந்தது.

காலை கண் விழித்தவள் இன்று ஹரிஷிடம் எப்படியாவது நெருங்கிவிட வேண்டுமென்று முடிவெடுத்துவிட்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

"வாங்கம்மா.. இதோ சமையல் தயாராகி விட்டது.., ஐந்து நிமிடம்.." என்ற பெண்மணி தன் பெயர் தேவகி என அறிமுகப்படுத்திக் கொண்டாள். ஸ்வேதாவும் தன்னை அறிமுகபடுத்திக் கொண்டு "ஹரிஷ் சாப்பிட்டு விட்டானா...?" என்று வினவினாள்.

"இல்லம்மா.. எப்பவும் தம்பி தான் அவனுக்குச் சாப்பாடு கொடுக்கும், இன்று ஏதோ அவசர வேலையென்று வெளியே சென்று விட்டார், நீங்கள் அவனைப் பார்த்துக்கொள்வீர்கள் என்றும் கூறினார்" என்றாள் தேவகியம்மா.

சரி தான்! என்ன ஒரு நம்பிக்கை! நான் கொடுத்ததும் உண்டு விட்டுத் தான் மறுவேலை பார்ப்பான்! மகனைப் பற்றி தெரிந்துமா.., இப்படிக் கூறி விட்டுச் சென்றிருக்கிறான்? மீண்டும் கஜனி முகமதுவை மனதில் நினைத்துக் கொண்டு தேவகி நீட்டிய தட்டையும் பெற்றுக் கொண்டு அவன் அறையை நோக்கிப் படியேறினாள்.

கதவை லேசாகத் தட்டி விட்டு உள்ளே நுழைந்தவள், வழக்கம் போல் படுக்கையில் சோர்ந்திருந்த

ஹரிஷைப் பார்த்து விட்டு தட்டை அங்கிருந்த டேபிளின் மீது வைத்தவள், "ஹரிஷ் கண்ணா... உனக்கு இட்லி என்றால் மிகவும் பிடிக்குமாமே! எனக்கும் தான்.. வட்ட வட்டமாக.. வெள்ளை நிறத்துடன்.. ஆவி பறக்கும் இட்லிகளைத் தின்பது எனக்கும் பிடிக்கும் தெரியுமா..? சாப்பிட வருகிறாயா ராஜா..?" என்று அவள் அழைக்க..

அவனோ! நீ என்ன தான் கண்ணா என்றாலும்! ராஜா போட்டாலும்! உன் மீதுள்ள வெறுப்பு மாறாது என்பது போல் அவளை நோக்கி... "எனக்கு சாப்பாடு வேண்டாம். நீங்கள் என் அருகில் வராதீர்கள்" என்று கூறியபடியே கட்டிலை விட்டு எழுந்தான்..,

"ம்ஹ்ம்.. வளரும் குழந்தைகள் சாப்பிடாமல் இருக்கக் கூடாது... ஒரே ஒரு வாய்.., ம் நான் உனக்கு யானை கதை, முயல் கதை.. எல்லாம் சொல்லித் தருவேனாம் சரியா.., சாப்பிடு டா செல்லம்.., ஆ.. காட்டு.." என்று அவன் வாயருகில் இட்லியைக் கொண்டு செல்ல..

கோபத்தோடு அவள் கைகளைத் தட்டி விட்டவன்.., அவளின் மறுகையில் இருந்த சாப்பாட்டுத் தட்டையும் தட்டி விட்டான். தட்டிலிருந்த இட்லியும், சட்னியும் சிதறி நாலாபுறமும் தெறிக்க பெரும் சத்தத்துடன் தட்டு உருண்டு விழுந்தது. அன்னத்தை தெய்வமாக மதிக்கும் ஸ்வேதா அவனின் இந்தச் செயலால் குழந்தை என்றும் பாராமல் கோபமாக அவன் புறம் திரும்பினாள்.

"என்ன.. என்ன காரியம் செய்திருக்கிறாய் தெரியுமா நீ..?, சாப்பாடு தெய்வத்துக்குச் சமம்.. அதை இப்படித் தட்டிவிட்டு அவமரியாதை செய்கிறாயே...!"



அவள் அதட்டியத்தில் பயந்து போன சிறுவன் கை,கால்களை உதைத்துக் கொண்டு தரையில் உருண்டு பெருங்குரலெடுத்து கத்தி அழுதான். சாப்பாட்டுத் தட்டு கீழே விழுந்து உடையும் பொழுதே கார்த்திக் வீட்டிற்குத் திரும்பியிருந்தான். சிறுவனின் செயலையும், ஸ்வேதாவின் பதிலையும் கேட்டவன் வேகமாக உள்ளே நுழைந்து அவனைத் தூக்கிக் கொண்டான்.

"ஹரிஷ் இங்கே பார்..." டாடி வந்துட்டேன். அழாதே டா.. உனக்கு என்ன வாங்கிகொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா?" என தாஜா செய்தபடியே கீழே தூக்கிச் சென்றான்.

வாழ்க்கையே வெறுத்து விட்டது போலிருந்தது அவளுக்கு. இதென்ன தலைவலி? அப்பனுக்கும், மகனுக்கும் என்னைக் காயப்படுத்துவது தான் முழு நேரப் பணியா...? இப்போது கார்த்திக்கிடம் என்ன சொல்லி சமாளிப்பது?

அவன் தான் சிறுவன்! கத்தி அடம் பிடிக்கிறான் என்றால் இவளும் பதிலுக்குச் சண்டையிட்டு ஏற்கனவே முறைத்துக் கொண்டிருப்பவனின் எரிச்சலை மேலும் அதிகப்படுத்திக் கொண்டாள். கிருஷ்ணா! அடுத்தடுத்து சோதனைகளைச் சந்திக்க வைக்கிறாயே..! எப்போது இந்தச் சிக்கலில் இருந்து நான் விடுபடுவேன்!

சற்று நேரம் கழித்து கீழே வந்தவளை அழைத்தான் கார்த்திக், "ஸ்வேதா என்ன இது..?, சிறுவர்களிடம் நாம் பொறுமையாகத் தான் நடந்து கொள்ள வேண்டும். நீ கோபமாகக் கத்தி.. அதட்டி மிரட்டினால்.. அவன் என்ன செய்வான்? பின்பு எப்படி உன்னிடம் பாசமாகப் பழகுவான்?" என்று வினவினான்.

இவனுக்கென்ன! இவனுடைய அன்பு மகனி... தினமும் பிராணனை விட்டுக் கொண்டிருப்பது ந... தானே! எது நடந்தாலும் மகனுக்கு சாதகமாகத் தா... பேசுவான். என்னைப் பற்றி இவன் ஏன் கவலைப்பட... போகிறான்? என்றெண்ணிக் கொண்டு "நான் அன்பா... தான் சார் நடந்து கொள்கிறேன். ஆனால் அவன் ஒ... வெறுப்புடனே என்னை நடத்துகிறான் சார்.." என்றாள்.

"ஸ்வேதா நான் தான் கூறினேனே! அவ... அவ்வளவு சீக்கிரம் யாரையும் அருகி... அனுமதிப்பதில்லை! போராடித் தான் நீ அவனை உ... வழிக்கு கொண்டு வர முடியும். எனக்காக ஸ்வேதா ப்ளீஸ்... எனக்காக பொறுமையாக இரு..." என அவள் கைகளை பற்றி அழுத்தி விட்டுச் சென்றான்.

ஆமாம்! இது ஒன்றைக் கூறிவிடுகிறான்! எனக்கா... ஸ்வேதா.. எனக்காக.. என்று! இவனுக்காகத் தானே இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்... றாள். அதை என்றேனும் அவன் புரிந்து கொள்வானா... மகனுக்காக உருகும் அவன் என்றாவது என்னை... எண்ணி...எனக்காக உருகுவானா? ஹ்ம்ம்.. கனவிலு... நடக்காத ஒன்று! சலிப்பும், வெறுப்பும் சேர்ந்து கொள்... தன்னிரக்கத்தில் அன்று முழுதும் அழுது தீர்த்தாள்.

மறுநாள் காலை ஹரிஷைத் தேடி மாடிக்கு... சென்றாள். அவன் அறை வாசலில் நின்று.. கைகளை... கட்டிக் கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தா... அவனும் விடாமல் அவளையே நோக்கினான். "சே... உனக்கு என்னைப் பிடிக்கவில்லை...? அப்படித் தானே.. என்றவளிடம் 'ஆமாம்' என்பது போல் தலையசைத்த... அந்தப் பொடியன்.



"சரி, ஓகே... என்னை உனக்குப் பிடிக்க வேண்டாம்., அதற்காக நீ சாப்பிடாமல் இருப்பதில் எந்தப் பிரயோஜனமுமில்லை.., நீ என்னை வெறுக்கிறாய் என்பதற்காக நான் சாப்பிடாமலா இருந்தேன்..? இல்லையே! நான்கு தோசை! திருப்தியாக விழுங்கினேன்! நீ தான் என் மீதிருக்கும் கோபத்தில்... சாப்பிடாமல் இருந்து கொண்டு.. உன் உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்! என்னைப் பார், நான் நன்றாக இருக்கிறேன்!" என்று மிடுக்காகக் கூறி அவனை வம்புக்கிழுக்கத்தாள்.

அவனும் ரோஷத்துடன் எழுந்து சென்று தட்டை எடுத்து வேகவேகமாக சாப்பிட்டான்.. பரவாயில்லையே! இந்த டெக்னிக் ஒர்க் அவுட் ஆகிறது என்று மனதுக்குள் புன்னகைத்துக் கொண்ட ஸ்வேதா அவனை விட்டு நகர்ந்து சென்று தூரத்தில் நின்று அவன் சாப்பிட்டு முடித்ததைப் பார்த்து விட்டே தன் அறைக்குச் சென்றாள்.

சிலமணி நேர இடைவெளிக்குப் பின் மீண்டும் ஹரிஷ் இருந்த அறைப் பக்கம் தலையைக் காட்டினாள். கையில் ஏதோ ஒரு கண்ணாடிப் பொருளை ஆராய்ந்தபடி அமர்ந்திருந்தான்.

"கண்ணாடிப் பொருளை வைத்து விளையாடக் கூடாது ஹரிஷ்.., உடைந்து அடிபட்டால் ஆபத்து.. சொன்னால் கேள். அதைக் கீழே வைத்து விடு.." என்றாள்.

"நீங்கள் ஏன் என்னைத் தொந்தரவு செய்து கொண்டே இருக்கிறீர்கள்..?,இது என் டாடி வீடு.. எந்தப் பொருளை வேண்டுமானாலும் நான் எடுப்பேன்.. உடைப்பேன்.. உங்களுக்கென்ன..?" என்றவன் கையில் இருந்த பொருளை 'திடீரென்று' கீழே போட்டான்.

சிதறிச் சில்லாக உடைந்தது அந்தப் பொருள். ஐயோ என்ற படி அவனருகே சென்ற ஸ்வேதாவின் பிடியில் சிக்காமல் அவன் ஓடிச் சென்றான். கையிலும் நெற்றியிலும் சிறிதாகக் காயம் கூட ஏற்பட்டுவிட்டது அவனுக்கு.

என்ன செய்வதென்று புரியாமல் வேலைக் காரர்களை அழைத்து அறையைச் சுத்தம் செய்யச் சொன்னவள் அவனைத் தேடி ஓடினாள். பக்கத்து அறையில்.. இங்கே நடந்த எதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல்... அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தான் ஹரிஷ்.

திஸ் இஸ் இட் ! இன்னும் ஒரு நாள்.. ஒரு பொழுது அவனுடன் தங்கினால்.. இருவரில் ஒருவருக்கு பைத்தியம் பிடிக்கப் போவது உறுதி! இரவெல்லாம் யோசித்துவிட்டு மறுநாள் காலையில் கார்த்திக் அலுவலகம் செல்லும் முன்பே அவனைச் சந்தித்தாள். என்ன என்பது போல் பார்த்தவனிடம் "உங்களிடம் சற்று பேச வேண்டும்.." என்றாள்.

"மாலையில் பேசிக் கொள்ளலாம்..,நான் அவசரமாகச் செல்கிறேன்.." என கழுத்து டையை மாட்டிக் கொண்டிருந்தவனிடம் "இல்லை சார்.. நான் இப்பொழுதே பேசியாக வேண்டும்.." என்றாள் பிடிவாதமாக.

"அப்படி என்ன தலை போகிற விஷயம்..? சரி சொல்.." என்றான்.

ஒரு பெருமூச்செறிந்து விட்டு... "நான்... நான்.. இந்த வேலையை விட்டுவிடலாம் என்றிருக்கிறேன்.. நீங்கள் வேறு யாரையேனும் இந்தப் பணிக்கு நியமித்துக்



கொள்ளுங்கள்" என்று அவனது தலைகுனிந்து கூறியவளின் அருகில் கோபமாக வந்து அவள் தோளைப் பற்றி உலுக்கினான்.

"என்ன உளறுகிறாய்.. இடியட்..." எனக் கேட்டவனைத் தடுத்து,

"உங்கள் பையனுக்கு என்னைப் பிடிக்கவில்லை சார்.. இந்தப் போராட்டம் வெற்றி பெறப் போவதில்லை.." என்று பொறுமையற்றுப் பேசியவளிடம்...

"போதும் ஸ்வேதா.. ப்ளீஸ்... நிறுத்தி விடு.. போதும்... அறிமுகமாகி நான்கே நாட்களான ஒரு பெண்ணின் அன்பை, இயல்பாக அவன் ஏற்றுக் கொள்ள நாம் அவகாசம் தர வேண்டாமா..? அதற்குள் அவன் உன்னிடம் ஒன்றி விடுவான் என்று எப்படி எதிர்பார்க்கிறாய்..? அவன் மற்ற சிறுவர்களைப் போல அல்ல.. பாதிப்புக்குள்ளாகி இருப்பவன்! நீ அவனிடம் உண்மையான பாசத்துடன் பழகு... அவனும் சீக்கிரமே உன்னிடம் ஒன்றுவான்" என்று கோபத்துடன் கூறிவிட்டு மறுபுறம் திரும்பிக் கொண்டவனை ஆத்திரத்துடன் நோக்கி...

"நான்...நான்.. பாசத்துடன் பழகவில்லையா..? உங்கள் அருமை மகன் என்னைக் கண்டாலே கத்துகிறான்.., கையிலிருப்பதைப் போட்டு உடைக்கிறான்.., அசம்பாவிதமாக ஏதேனும் நடந்து விட்டால் யார் பொறுப்பு..? எந்த நேரத்தில் என்ன செய்வானோ என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு திரிய என்னால் முடியாது..." என்று திட்ட வட்டமாகக் கூறியவளை கோபத்துடன் நோக்கினான்.

"இதற்கு மேல் நீ எதுவும் பேச வேண்டாம்.., சென்று விடு... உன் இஷ்டப்படியே... எங்கேனும் என் கண் படாத இடத்திற்குச் சென்று விடு... என் முகத்தில் விழிக்காதே.." எனக் கத்திவிட்டுச் சென்று விட்டான்.

கோபத்துடன் அவன் சென்றதைக் கண்டு ஸ்வேதாவிற்கு அழுகை ஊற்றாகக் கிளம்பியது. வெகு நேரம் அழுதபடியே அமர்ந்திருந்தவள் தன்னை சமாளித்துக் கொண்டு எழுந்தாள்.

தவறெல்லாம் என் மீதே இருப்பது போல் பேசி விட்டானே! என் நிலைமையை கொஞ்சமேனும் யோசித்துப் பார்த்தானா? யார் எப்படிப் போனாலும் சரி, அவன் பிள்ளை மட்டும் நன்றாக இருக்க வேண்டும்! ஆனால் அவன் கூறியதில் தவறொன்றுமில்லை! ஹரிஷிற்காகத் தானே அவன் இவ்வளவும் செய்கிறான்! அவனுக்காகத் தானே அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

அவனை அனுசரித்து... பொறுமையாக நடந்து கொள்... விட்டுப் பிடி என்று படித்துப் படித்துக் கூறினானே! அவசரப்பட்டது அவளுடைய தவறு தான்! அவன் ஆத்திரம் கொண்டதில் தவறே இல்லை என்றெண்ணியவள், மெல்ல நிமிர்ந்து ஹரிஷின் அறையை நோக்கினாள்.

பயமாக இருந்தாலும் சமாளித்துக் கொண்டு அவன் அறைக்குச் சென்றாள். ஒரு பொடியனுக்கு பயப்படும் நிலைமைக்கு ஆளாகி விட்டோமே! ஒரு சிறுவன் தன் வாழ்வில் பூச்சாண்டி காட்டுவான் என்று ஜோதிடத்தில் கூடக் கூறவில்லையே என்றெண்ணி வெளியே இருந்த படியே அவன் அறைக்குள் எட்டிப் பார்த்தாள் ஸ்வேதா.



அவள் பயந்தது போல் படுக்கையில் அமர்ந்து கொண்டு கையில் தீப்பெட்டியை வைத்துக் கொண்டு உரசி உரசி.. அதிலிருந்து பொங்கும் நெருப்பை ஊதி விளையாடிக்கொண்டிருந்தான்! அட குட்டிப் பேயே! விளையாட்டில் கூட விபரீதமானதைத் தான் தேர்ந்தெடுப்பாயா..? இந்த கார், பஸ், பார்பி இதெல்லாம் எதற்கடா உள்ளது என்றெண்ணியவள் அவனிடம் இப்போது தீப்பெட்டியை வாங்குவது எப்படி..? என்று யோசித்தாள்.

எந்நேரம் நெருப்பு படுக்கையில் படுமோ என்று பதறியவள் வேகமாக அவன் அறைக்குள் நுழைந்து "ஹரிஷ்.. அது நெருப்பு.. அதனுடனெல்லாம் விளையாடக் கூடாது.. உனக்கு யார் இதைக் கொடுத்தது..? அதை என்னிடம் கொடு.." என்றாள்.

அவன் தான் பெரிய வேதாளமாயிற்றே! உடனே முருங்கை மரத்தில் ஏறி விட்டான்!

"வந்து விட்டீர்களா மறுபடியும்..? வெளியே போங்கள்.." என்று கத்தத் தொடங்க "சரி,சரி நான் செல்கிறேன்.. நீ தயவு செய்து அதை உரசாதே ப்ளீஸ்.." என்று கெஞ்சி விட்டுத் திரும்பியவளைக் கோபத்துடன் நோக்கியவள் மென்மேலும் வேகத்துடன் தீக் குச்சிகளை உரசி உரசிக் கீழே எறிந்தான்.. அதில் ஒரு தீக்குச்சி படுக்கையில் விழ.. மெத்தையில் தீப் பற்றத் துவங்கியது.

எது நடக்கக் கூடாது என்று ஸ்வேதா பயந்தாளோ அந்த அசம்பாவிதம் நடந்தேறி விட "ஹரிஷ்...." என்ற கூவலுடன் ஓடிச் சென்று அவனை படுக்கையிலிருந்து விலக்கி பற்றத் துவங்கியிருந்த நெருப்பை செய்வதறியாமல் கைகளால் கட்டுப்படுத்த முயன்று..

பின்.. அருகில் இருந்த கம்பளியை எடுத்துப் போட் தீயை அணைத்தாள்.

அனைத்தையும் பார்த்து மிரண்டு,பயந்து போ நடுங்கிக் கொண்டு நின்றிருந்தான் சிறுவன். தீப்பட்ட தகிக்கத் தொடங்க வலியால் துடித்தாள். அவ துடிப்பதைக் கண்டு ஹரிஷ் வேகமாக ஓடிச் சென் வேலைக்கார முனியனை அழைத்து வந்தா ஸ்வேதாவின் கதறலைக் கண்டு அனைவரும் கூட மிரட்சியுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தா ஹரிஷ்.

அதற்குள் முனியன் டாக்டருக்கு போன் செய் விவரத்தைத் தெரிவிக்க அடுத்த பத்து நிமிடத்தி வந்தவர், ஸ்வேதாவின் கைக் காயத்திற்கு மருந் தடவினார். அழுதபடியே நின்று கொண்டிருந்த ஹரி அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வலி உயிரை எடுத்தது ஸ்வேதாவிற்கு. பல்லை கடித்துக் கொண்டு வலியைச் சமாளித்தவள் டாக்டரி மாத்திரையின் உதவியால் உறங்கியும் போனாள். இரவானதும்.. கார்த்திக் வரும் வேளையில்.. அவனை பார்க்க விரும்பாமல்.. மொட்டை மாடிக்குச் சென்றாள்.

வானத்தில் தெரிந்த முழுநிலவை அண்ணாந் பார்த்தவள் மெல்ல இமை மூடினாள். மூடி விழிகளுக்குள் கார்த்திக்கின் கோப முகம் தென்பட காலையில் அவன் வார்த்தைகளால் மனதில் ஏற்பட்ட காயமும்.. தீச் சுட்டதால் கையில் ஏற்பட்ட காயமு பெரும் வலியை ஏற்படுத்த... கன்னங்களில் வழிந் கண்ணீருடன்.. நின்றிருந்தவளுக்கு அந்த முழு நிலவின்



ஒளி ஆறுதல் தர.. அந்த வெளிச்சத்தை முழுதாக அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் யாரோ வரும் அரவம் கேட்டது.. கார்த்திக் தான் என்று மனம் கூறியது.. ஆனாலும் அசைய மனமின்றி கண்மூடிய படியே நின்றிருந்தாள். அவன் காலடி ஓசை மிக அருகில் நெருங்கியதும் கண்களை இறுக மூடினாள். அவன் மூச்சுக் காற்று பின்னங்கழுத்தில் சூடாக வருடினாலும் இறுகியபடியே நின்றிருந்த ஸ்வேதாவின் காயமுற்ற கைகளை பின்னால் நின்றபடியே பற்றினான்.

அவளது கையைத் தூக்கிக் காயத்தை ஆராய்ந்தவன்... காயத்தின் மீது போடப் பட்டிருந்த வெண்ணிற கட்டின் மீது லேசாக முத்தமிட்டான். பட்ட கஷ்டங்கள் அனைத்தும் படமாய்க் கண் முன்னே விரிய.... ஆறுதல் தேடி திரிந்த காயம் பட்ட நெஞ்சம்... அவனது ஒரு தீண்டலில்... முழுதாக அவனிடம் சரணடைந்து விட... அடக்கி வைத்திருந்த அழுகை முழுதும் வெள்ளமாய் கண்களில் பொழிய... தன்னை மறந்து நின்ற நிலையிலேயே அவன் மார்பில் தலை சாய்த்தாள்.

இவனுக்காகத் தானே! இவன் ஒருவனுக்காகத் தானே.., வேலையை விட்டு, நட்பை விட்டு.., இங்கே வந்து அந்தச் சிறுவனின் லீலைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள்..., இந்தக் காயங்களும்..., கஷ்டங்களும்..., இவன் ஒருவனுக்காக மட்டும் தானே! என்றெண்ணியவளின் விழிகளில் கண்ணீர் வற்றாத நதியாய் வந்து கொண்டேயிருக்க... அவள் முகம் பார்க்க முடியா விட்டாலும்... அவளின் குலுங்கலில் அவள் அழுகையை உணர்ந்தான்.

அவள் உச்சந்தலையில் கன்னம் பதித்து "ஐ ஆம் சாரி.. ஐ ஆம் சோ சாரி கண்ணம்மா..., நீ இவ்வளவு அவதிப்படுவாய்.., கஷ்டப்படுவாய் என்று நான் உணரவில்லை... ரியலி சாரிடா" எனக் கூறி உச்சியில் அழுந்த முத்தமிட்டான்.

அவனிடமிருந்து மெல்ல விலகி நின்று இடது கையால் கண்ணீரைத் துடைத்தவளின் அருகே நெருங்கி... முகத்தை ஒற்றை விரலால் நிமிர்த்தி.. "ஐ ஆம் சாரி ஸ்வேதா.. எனக்கு.. எனக்கு.. இப்போது நன்றி சொல்வதா... மன்னிப்புக் கேட்பதா என்றே புரியவில்லை.. அவனிடம் நீ உண்மையான பாசத்துடன் நடந்து கொள்ளவில்லையென்று நான் உன்னிடம் கடுமையாக நடந்து கொண்டேன்... ஆனால் அப்படிக் கூறியது எவ்வளவு பெரிய தவறு என்பதை இந்த நொடியில் உணர்கிறேன்...., என் மகனையும்.. தீயிலிருந்து காப்பாற்றி விட்டாய்.. மி..மிகவும் நன்றி ஸ்வேதா" என தடுமாற்றத்துடன் கூறினான்.

அவன் தடுமாற்றத்தைப் பொறுத்துக் கொள்ளவும் முடியாமல்.. அவன் நன்றியை ஏற்றுக் கொள்ளவும் மனமின்றி, "உங்களது மன்னிப்பும், நன்றியும் அவசியமில்லை சார்... நான்.. நான் என் கடமையைத் தான் செய்தேன்..." என மெலிதான குரலில் கூறி விட்டு அதற்கு மேல் நிற்க மாட்டாமல் படியிறங்கி கீழே சென்றாள். அவள் சென்ற பின்பும் வெகு நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்த கார்த்திக்கை அவளது கண்ணீர் நிறைந்த முகம் நோகச் செய்தது.....

ஸ்வேதா.... என் ஸ்வேதா... நான் உன்னை தேவையில்லாத துன்பத்தில் சிக்க வைத்து விட்டேனா..?



நான் ஒன்றை நினைத்துச் செய்ய... வேறொன்று நடந்து கொண்டிருக்கிறதே... விரைவிலேயே உன்னை இந்தத் துன்பத்திலிருந்து விடுவிக்கிறேன்... என்னால் நீ காயப்பட வேண்டாம்.. போதும்... வேண்டாம் ஸ்வேதா... என மருகியவனுக்கு பாசத்தை மீறி கோபம் எழ ஹரிஷின் அறைக்குச் சென்றான்.

"ஹரிஷ்...." என்றபடி அவனறைக்குள் நுழைந்தவன் திகைத்தான். அவனோ அறையின் ஒரு மூலையில் கையில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தான். மற்றதை மறந்து மனம் பாகாய் உருக, "ஹரிஷ்....' என்றழைத்தான்.

தந்தையைக் கண்டதும் "டாடி..." எனக் கதறிய படி வேகமாக ஓடிச் சென்று அவன் கால்களைக் கட்டிக் கொண்டு அழுதான்.

"ஹரிஷ்... ஹரிஷ்.. என்னடா கண்ணா.. என்னாயிற்று...?" என்றவனிடம் தேம்பிக் கொண்டே "ஸ்வேதா... ஸ்வேதாமாக்கு என்னால் தான் டாடி அடி பட்டுடுச்சு..., ஐ ஆம் சாரி டாடி..., அவங்க கையெல்லாம் ரத்தம் டாடி... அவங்க அழுதாங்க டாடி.. என்னால தான் டாடி..." என மீண்டும் அழத் தொடங்கினான்.

அவனது ஸ்வேதாமாவிலேயே கார்த்திக் திருப்தியாகி விட அவனை அணைத்துத் தோளைத் தட்டி... "ஹரிஷ்.. இங்கே பார்... ஸ்வேதாம்மாவிற்கு ஒன்றுமாகவில்லை. அவள் நன்றாக இருக்கிறாள்..., நீ அவளிடம் சாரி கேட்டால்.. அவளுடைய காயம் முழுதாக ஆறி விடும்... கேட்பாயா கண்ணா...?" என்று நயமாக அவன் வினவ.. வேகமாகத் தலையை உருட்டியது அந்தக் குட்டிப் பிசாசு.

அவனை அழைத்துக் கொண்டு போய் ஸ்வேதாவின் அறையின் அருகே விட்டவன் "உள்ளே போ.." என்று சைகை காட்டி விட்டு எதிர் பால்கனியை நோக்கிச் சென்றான்.

ஏதேதோ யோசனைகளுடன் கட்டிலில் படுத்திருந்த ஸ்வேதா கதவு திறக்கும் சத்தம் கேட்டு எழுந்தமர்ந்தாள். கஷ்டப்பட்டு கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான் ஹரிஷ். இவன் இன்னும் என்ன செய்ய உள்ளே வருகிறான் என்று சோர்வுடன் அவனை நோக்கினாள்.

ஆனால் அவளது எண்ணங்களைப் பொய்யாக்குவது போல் அச்சிறுவன் அவளருகே வந்து அவளது கைக் காயத்தைத் தொட்டுப் பார்த்து...

"ரொம்ப வலிக்கிறதா...?" என்று அழுகையுடன் வினவ, ஆச்சர்யத்துடன் இல்லையென தலை அசைத்தாள்.

"சா...சாரி ஸ்வேதாமா... என்னால் தானே அடி பட்டுடுச்சு... சாரி...." என்று அவன் கூற.... சட்டென மனம் முழுதும் பொங்கிய மலர்ச்சியுடன் அவனை அருகே இழுத்து கண்ணீரைத் துடைத்து "ஹரிஷ்.... ஸ்வேதாமாக்கு காயம் சீக்கிரம் சரியாகி விடும்.., நீ அழாமல் இருக்க வேண்டும் சரியா..?" என அவன் கண்களைத் துடைத்து புன்னகை புரிந்தாள்.

சிவந்த நிறத்துடனும், பெரிய விழிகளுடனும்... அழகாக அமர்ந்திருக்கும் இந்தச் சின்ன உருவத்திற்குள் கண்ட.. காண்கின்ற.. மாற்றத்தை எண்ணிப் பிரம்மித்து.. அவன் முகம் பற்றி அழுந்த முத்தமிட்டாள் ஸ்வேதா. பதிலுக்கு அவனும் அவளை முத்தமிட... பாசத்துடன் அவனை அணைத்துக் கொண்டாள்.



இதற்காகத் தானே ஸ்வேதாவும், கார்த்திக்கும் போராடினார்கள்! அவன் செய்கையால் மனம் நிறைந்து.. முகம் முழுக்க புன்னகையுடன் அமர்ந்திருந்தவளிடம்... "எனக்கு... டாடி கூட கண்ணாமூச்சி விளையாட.. ரிமோட் கார் வைத்து விளையாட... நிறைய கதை கேட்க ரொம்ப பிடிக்கும் ஸ்வேதாம்மா' என அவள் என்ன பிடிக்குமென்று அன்று கேட்ட கேள்வியை ஞாபகம் வைத்து இன்று பதில் கூறிக் கொண்டிருந்தான் சிறுவன்.

சிரிப்புடன் அவனை இடது கையால் தூக்கிக் கொண்டு "அப்படியா..? வேற என்னவெல்லாம் பிடிக்கும் ஹர்ஷுக்கு.."

மேலும் குதூகலமாகி "மிக்கி மௌஸ், டொனால்ட் டக் இதெல்லாம் ரொம்ப பிடிக்கும்... அப்புறம்..." என நாடியில் கை வைத்து யோசித்து யோசித்து சொல்லிக் கொண்டிருந்தவனை பார்த்தபடியே வெளியே வந்த ஸ்வேதாவை லேசான புன்னகையுடன் வரவேற்றான் கார்த்திக்.

"கார்த்திக் சார் பார்த்தீர்களா...?, நானும் ஹர்ஷுவும் இப்போது ராசியாகி விட்டோம்.. இனி நாங்கள் ஃப்ரண்ட்ஸ்.. என்னடா ஹர்ஷு..?" என்று அவள் கேட்க "ஆமாம் டாடி.. நானும் ஸ்வேதாமாவும் இனிமே ப்ரண்ட்ஸ்.." என்றபடி அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்டவனை.....ஆச்சர்யமாக நோக்கினான்.

குழந்தை மனம் என்பது எவ்வளவு உண்மை! பிடிக்கவில்லையென்று அவன் காட்டிய ஆத்திரமென்ன....! வலியில் கதறிய ஸ்வேதாவைக் கண்டு மாறிப் போனதென்ன?

"சாப்பிட்டாயிற்றா சார்..." என்றாள். இல்லையென்று அவன் தலையசைக்கையிலேயே "நான் போய் முனியன்னாவிடம் இட்லி கேட்கப் போகிறேன்..." என்று ஸ்வேதாவின் கையிலிருந்து நெளிந்து கீழே இறங்கி ஓடினான் ஹரிஷ்.

சிரிப்புடன் அவன் சென்ற திசையைப் பார்த்து விட்டு "ஒரே நாளில் எவ்வளவு மாற்றம் பார்த்தீர்களா சார்....?" என்றவள் அவன் முகம் தெளிவற்றிருப்பதைக் கண்டு.... "சார்... என்ன இது..? சந்தோசமாக இருப்பீர்களென்று பார்த்தால்... ஏன் முகத்தை இப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்..? இப்போது தான் அவன் மாறினான். இப்போது என்ன உங்கள் ஆட்டமா..?" என்றாள்.

"அப்படியெல்லாம் இல்லை சாப்பிடப் போகலாமா..?" என்றபடி அவள் முகம் பார்ப்பதை தவிர்த்து விட்டு கீழே இறங்கினான்.

என்னவாயிற்று இவனுக்கு? நியாயமாகப் பார்த்தால் இவன் தானே மகிழ்ச்சியில் திளைக்க வேண்டும்... மகன் மாற வேண்டும்... நன்றாக மாற வேண்டுமென்று ஜபம் செய்தவன்... இன்று மகன் மாறிய பின்பும் ஏன் இப்படி நடந்து கொள்கிறான்..?

இவனுக்கு காரணமே இல்லாமல் கோபப்படவும்... தேவையில்லாத நேரங்களில் சிரிக்கவும் மட்டும் தான் தெரியும் போலும்! விடை தெரியாத புதிர் உலகத்தில் மிஸ்டர்.கார்த்திக் மட்டும் தான்! என்றபடி அவனைத் தொடர்ந்து கீழே சென்றாள்.



# 8

நீ பேசும் போதெல்லாம் அமைதியாக..
உன் வார்த்தைகள் அனைத்தையும்..
உள் மனதில் பத்திரமாக...
சேகரித்துக் கொள்ளும் நான்..
உனது ரசிகை...!
உன்னை நீயே நினைக்காத..
தருணங்களில் கூட..
உன்னைப் பற்றியே...
நினைத்துக் கொண்டிருக்கும் நான்..
உனது நலம் விரும்பி..!

"ஹரிஷ் கண்ணா..., இன்றைக்கு என்ன சாப்பாடு தெரியுமா...?, ஃப்ரூட் ஜாம் சப்பாத்தி.. நீ குட் பாய் தானே...? சமத்தாக சாப்பிடுவியாம்...," என்றபடி அவன் கையில் ரோல் செய்யப்பட்ட சப்பாத்தியை நீட்டினாள்.

அவனும் துள்ளிக் குதித்தபடியே ஓடி வந்து அவள் கையிலிருந்ததை வாங்கிக் கொண்டு "நான் ஊஞ்சல்-ல உட்கார்ந்து சாப்பிட்றேன் ஸ்வேதாம்மா.." என்றான்.

"சரி செல்லம்.." என்று அவனைத் தூக்கி ஊஞ்சலில் அமர வைத்து ஆட்டினாள். சந்தோசம் நிறைந்த முகத்துடன் சிரித்துக் கொண்டே உண்பவனைக் கண்ட ஸ்வேதாவிற்கு மனம் நெகிழ்ந்தது.

இருவரையும் தேடி பால்கனி அருகே வந்த கார்த்தி இந்த ரம்யமான காட்சியைக் கண்டு மனம் நிறைந் மகிழ்ச்சியுடன் நின்றான். ஊஞ்சலை ஆட்டியபடியே கண்களை உருட்டிக் கதை சொல்லிக் கொண்டிருந் ஸ்வேதாவையும் அதற்கு குலுங்கிச் சிரித்துக் கொண்டிருந்த மகனையும் பார்த்துக் கொண்டே நின்றிருந்தவனின் கண்கள் திடீரென சோர்ந்தது.

உண்டு முடித்ததும் ஓடிச் சென்றவனிடம் “ஹர்ஷ் சாப்பிட்டதும் இப்படி ஓடக் கூடாது டா...” என்றபடி தன்னைக் கடந்து சென்றவளை, “ஒரு நிமிடம் ஸ்வேதா” என்று நிறுத்தினான் கார்த்திக்.

என்ன என்பது போல் பார்த்தவளிடம் ஒரு கவரை நீட்டினான். “என்ன சார் இது..., என் சம்பளமா..? நான் வந்து ஒரு மாதமாயிற்றா..? ஓ! பதினைந்து நாளுக்குண்டான சம்பளமா..?” என்றபடி கவரைப் பிரித்தவளின் கண்கள் ஒரு கணம் வியப்பில் ஆழ்ந்தன.

கண்களில் வெறுப்பைத் தேக்கி அவன் மீது ஒரு பார்வையைச் செலுத்தியவள், “ஹ்ம்ம், என் மாத சம்பளம் ஆயிரங்களில் இருப்பதாக எனக்கு நியாபகம், ஆயிரம் திடீரென்று லட்சங்களாகி விட்டதா? ஆஃப்டர் ஆல் என்னைப் போன்ற ஒரு வேலையாளிற்கு பத்து லட்சம் சம்பளமா சார்..? இப்படித்தான் உங்களிடம் வேலை பார்க்கும் அனைவருக்கும் சம்பளம் தருகிறீர்களா..? இந்த நிலை தொடர்ந்தால், நீங்கள் தலையில் துண்டுடனும், நெற்றியில் நாமத்துடனும் அலைய நேரிடுமே! என்ன சார் செய்வீர்கள்..?” எனப் பரிதாபப்படுவது போல் நடித்தாள்.



சிரிப்பும் பெருமையும் எழ “ராட்சசி” என்று மனதுக்குள் திட்டியவன் மெல்ல நிமிர்ந்து, “ஸ்வேதா.. அது வந்து.. இந்தப் பத்து லட்சம் பணம்... நீ எனக்காக செய்த உதவிக்கு சின்ன கைம்மாறு. மென்மேலும் உன்னைக் கஷ்டப்படுத்த.. துன்பத்தில் ஆழ்த்த எனக்கு உரிமையும் இல்லை. தகுதியுமில்லை. நீ அன்று கூறியது போல் இந்த வேலையை விட்டுச் சென்று விடு.., உன் பாடிபிற்கேற்ற வேறு ஒரு நல்ல வேலையைப் பார்த்துக் கொண்டு உன் வாழ்வைத் தொடரு. நான்.. நான் ஹரிஷிற்கு வேறு யாரையேனும் நியமித்துக் கொள்கிறேன்” என எங்கோ பார்த்தபடி கூறி முடித்தான்.

யாரிடம் பேசுகிறான்? ம்...? அதோ! அந்தச் சுவரில் இருக்கும் பல்லியுடனா..? என் முகத்தைப் பார்த்துக் கூட இதைச் சொல்லத் துப்பில்லை! இவனெல்லாம் பேச வந்து விட்டான், பத்து லட்சம் பணத்தையும் ஏந்திக் கொண்டு..! வெறுப்பும், கோபமும், அழுகையும் ஒரு சேர அவனை நோக்கியவள்,“சோ... பத்து லட்சம் பணத்தைக் கொடுத்து இவளை ஒரேடியாகத் துரத்தி அடித்து விடலாம் என்றெண்ணி விட்டீர்கள்..? அப்படித் தானே? நானும் பணத்தை வாங்கிக் கொண்டு சென்று விடுவேன் என்று நினைத்திருக்கிறீர்கள்” என்று ஆத்திரத்துடன் கொட்டினாள்.

“ஸ்வேதா... அப்படிச் சொல்லாதே.. நீ பணத்தைப் பெரிதாக நினைப்பவளல்ல என்று எனக்கு நன்றாகத் தெரியும்” என்றவனிடம் “பின்னே.., இதற்கு என்ன அர்த்தம்?” என்று கையில் இருந்த செக்கை டேபிளின் மீது வீசி எறிந்தாள்....

"பணத்தைக் காட்டியதும் இவள் பல்லிளித்து கொண்டு சென்று விடுவாள் என்று தானே நினைத்திருக்கிறீர்கள்..? என்னை நீங்கள் புரிந்து கொண்டது இவ்வளவு தானா சார்..? என்றவளை "ஸ்வேதா.. ப்ளீஸ்.." என்று அவன் தடுத்தாலும் பொருட்படுத்தாமல்..

"உங்களுக்கு வேண்டுமானால் தகுதியும் உரிமையும் இல்லாமல் இருக்கலாம்! ஆனால் எனக்கு பாசமும், அன்பும் நிறைந்திருக்கிறது.. இப்போது தான் ம... ஆரம்பித்திருக்கும் ஹரிஷை விட்டுவிட்டு என்னால் செல்ல முடியாது.. தொடங்கியதை இடையிலேயே விட்டுச் செல்வது உங்களுக்கு வேண்டுமானால் பழக்கமானதாக இருக்கலாம்.. ஆனால் எனக்கு அப்படியில்லை.., என்னால் இங்கிருந்து செல்ல முடியாது.." என்று கோபத்துடன் கூறி விட்டு அழுகையுடன் அறைக்குச் சென்று கதவைச் சாத்தினாள்.

கீழே விழுந்து கிடந்த 'செக்'கை நோக்கியவனின் விழிகளில் சந்தோசமும்.. மனதில் திருப்தியும் நிறைய ஸ்வேதா.. இடியட்.. உன்னைப் பிரிந்திருக்க என்னால் மட்டும் முடியுமா? என மனதுக்குள் செல்லமாக வைதபடி புன்னகையுடன் பால்கனிக்குச் சென்றான்.

ஆத்திரமும், கோபமுமாக அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தவள்.... கதவு தட்டும் ஒலி கேட்டு நின்றாள். கதவின் ஓசையைத் தொடர்ந்து "ஸ்வேதா.. கதவைத் திற..." என்ற கார்த்திக்கின் குரலும் ஒலித்தது. வந்து விட்டான்! இருக்கும் ஜீவனையும் கரைத்துக் குடிப்பதற்கு! தாழ்ப்பாளை திறந்து விட்டு அவனுக்கு முகம் காட்டாமல் திரும்பி நின்று கொண்டாள்



அவளது செய்கை சிரிப்பை வரவழைக்க.., முறுவலை அடக்க முயன்றபடி "உன்னை டாக்டர் இன்று கிளினிக்கிற்கு வரச் சொன்னார் அல்லவா...? பத்து நிமிடத்தில் தயாராய் இரு.., நானே அழைத்துச் செல்கிறேன்.." என்று அவன் முடிப்பதற்கு முன் முந்திக் கொண்டு "வேண்டாம்.. நானே சென்று விடுவேன்.." என வெடுக்கென்று கூறியவளிடம் நன்றாக முறுவலித்து...

"ஸ்வேதா... உன்னை விட ஹரிஷே தேவலாம் போலிருக்கிறதே! இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாய்..?" என்றவனின் குரலிலிருந்த இலகுத் தன்மை அவளை சமாதானப் படுத்த...

"என்னை சமாதானப்படுத்துவதற்காக ஒன்றும் அழைத்துச் செல்ல வேண்டாம்...." என்று கைக் காயத்தைப் பார்த்துக் கொண்டு சிணுங்கியபடியே கூறினாள்.

அழகாய்ச் சிணுங்கியவளைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் பார்வை மாற மெல்ல அவளருகில் சென்று முகத்தை நிமிர்த்தினான். "உன்னைக் காயப் படுத்த வேண்டுமென்று நான் எதையும் செய்வதில்லை கண்ணம்மா... அது உனக்குப் புரிகிறது தானே?" என்று அவள் விழிகளைச் சந்தித்து.. பட்டுக் கன்னத்தை வருடியபடி.. அவன் கேட்க...

ஸ்வேதா பூலோகத்தில் இருந்தால் தானே பதில் சொல்வதற்கு! அவன் கை பட்டதால் சிவந்த கன்னத்தையும், சொருகும் விழிகளையும் மறைக்க முயன்று தலை குனிந்த படி "நா....நான் கிளம்பட்டுமா....?" என்றாள்.

ஒரு பெருமூச்சுடன் கைகளை விலக்கிக் கொண் "சரி..." என்றபடி அவன் நகர்ந்து சென்றான். அ சென்றபின் தான் அடக்கி வைத்திருந்த மூச் வெளிவிட்டாள். அவனிடம் ஆத்திரப்பட்டு கோபப்பட்டும் பதில் அளிக்க முடிந்தவளுக்கு அவ ஆழ்ந்த குரலுக்கு ஏனோ பதில் அளிக்க முடியவில்லை

சற்று நேரத்தில் புறப்பட்டு வெளியே வ ஸ்வேதாவை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக் கிளம்பினான். சாலையின் மீது பதிந்திருந்த பார்வை திருப்பி அமைதியாக அமர்ந்து கொண்டிருந்தவ நோக்கினான். ஜன்னல் புறம் திரும்பி ஏதோ ரசனையான இயற்கைக் காட்சியை காண்பது போ சென்னை டிராபிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்

அவளைக் கண்டதும் வழக்கமான புன்னகை அமைதியாக அமர்ந்திருந்தவளை வம்புக்கிழுத்தா "இப்போதெல்லாம் உனக்கு கோபம் அதிகமாக வருகிற முனியனிடம் சொல்லி சாப்பாட்டில் காரத்தை குறைத்துக் கொள்.." என்றான்.

வெடுக்கென்று திரும்பி "என்னைச் சொல்கிறீர்க சார்..., நீங்கள் பிறந்ததிலிருந்தே மிளகாய்ப்பொடியை தான் ஸ்னாக்ஸாக சாப்பிடுகிறீர்கள் போல..." என்றாள்.

அவள் பதிலைக் கேட்டவனுக்குச் சிரிப்பு வந்தது அடக்கிக் கொண்டு "நல்லதிற்கு காலமே இல்ல ஸ்வேதா! நல்லது நினைத்தாலும் நடப்பதில்லை! நல்ல செய்தாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை!" என் வேண்டுமென்றே பெரு மூச்சுவிட்டவனை முறைத் விட்டு "நல்லதாம்! நல்லது!" என்று முணுமுணுத்தா



"ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் சார்.. உங்களிடம் வேலை பார்க்க வேண்டுமென்றால். காரத்தை மட்டுமல்ல.. உப்பையும் கூட குறைத்துக் கொள்ள வேண்டும்" என்று அவள் கூற அதற்கு மேல் அடக்க முடியாமல் வாய் சிரிக்கத் தொடங்கினான்.

மருத்துவனையும் வந்து விடவிட்டு சிரித்தபடியே இருவரும் உள்ளே சென்றனர். காயத்தைப் பார்த்து, மருந்திட்ட மருத்துவரிடம், "டாக்டர்.. இவள் பேச்சைக் குறைக்க ஏதேனும் மருந்திருந்தால் அதையும் கொடுத்து விடுங்கள் அளவில்லாமல் சென்று கொண்டிருக்கிறது.." என்று சிரித்தவனை முறைத்தாள்.

"அப்படி ஒரு மருந்திருந்தால் அதை உனக்குத் தான் முதலில் கொடுத்திருப்பேன் கார்த்திக்" என்று டாக்டர் கூறவும் கை தட்ட வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

"என்ன டாக்டர்.. இப்படி வாரி விட்டீர்களே!" என்றவனைப் பார்த்து அழகு காட்டி விட்டு திரும்பிக் கொண்டவளை மருத்துவமனையிலிருந்து வீட்டில் இறக்கி விட்டு அலுவலகம் நோக்கிப் புறப்பட்டான்.

"ஹர்ஷு..." என்றழைத்தபடி வீட்டிற்குள் நுழைந்தவளை, "ஸ்வேதாம்மா..." என்றபடி ஓடி வந்து தாவி ஏறிக் கொண்டான் ஹரிஷ்.

"ஹாஸ்பிடல் போயிட்டு வந்துட்டீங்களா? இப்போ காயம் சரியா போச்சா" என்றபடி அவள் கையைத் தூக்கி முத்தமிட்டான்.

அவன் செய்கை கார்த்திக் அன்று முத்தமிட்டதை நினைவு படுத்த... நொடியில் ஸ்வேதாவின் முகம் ரோஜா நிறம் கொண்டது...

"ஸ்வேதாம்மா... என்ன உங்க முகம் சிகப்பா இருக்கு..? என்னாச்சு ஸ்வேதாம்மா.." என்றபடி தன் பிஞ்சுக் கைகளால் ஸ்வேதாவின் முகம் வருட... ஐயோ இவனுக்கு என்ன பதில் சொல்வது எனச் சிந்தித்தவள் சட்டென்று.. "வெளியே.. வெயில் அதிகமா அடிக்கிறதல்லவா ஹர்ஷு அதனால் தான்டா..." என உளறி சமாளித்து வைத்தாள்.

அப்போதைக்கு "ம்" என தலை ஆட்டி வைத்தவன்..., இரவு உணவின் போது தந்தையிடம் அப்படியே ஒப்பித்தான். தோசையைப் பிய்த்து வாயில் அடைத்தபடியே "டாடி... இன்னைக்கு ஸ்வேதாமாவோட முகம் சிகப்பா இருந்தது டாடி.., வெயில்ல போனா சிகப்பாகும்னு சொன்னாங்க டாடி.., நிஜமாவா...?" என்று தன் பெரிய கண்களை மேலும் விரித்தபடி அவன் கேட்க..

ஐயோ! இவன் என்ன என் மானத்தை இப்படி வாங்குகிறான்? அடேய்! சும்மா இரேன் டா! இவனை அடக்கியாக வேண்டுமே என்று அவன அருகில் இருந்த டம்ளரில் தண்ணீரை ஊற்றிக் கொண்டே "ஹரிஷ் சாப்பிடும் போது பேசக் கூடாது என்றேனல்லவா.." என்றாள்.

அவளின் முயற்சியைக் கண்டுகொண்டவன் விஷயம் வேறு ஏதோ போலிருக்கிறதே, என்றெண்ணிக் கொண்டு மகனிடம் மேலும் கேள்விகளைத் தொடுத்தான். "ஏன்டா ஹரி... ஏசி காரில் வெளியே சென்று திரும்பியிருக்கிறாள்.., அவளை வெயில் எங்கே அடித்ததாம்..? எப்போது முகம் சிகப்பானது உன் ஸ்வேதாம்மாவிற்கு?" என்று அவனைப் போலவே வினவினான்.



தந்தையின் செய்கையால் சிரித்தவன் "நான் ஸ்வேதாம்மாவோட காயம் சரி ஆயிடுச்சானு பார்த்து கிஸ் பண்ணேனா.. அப்போ தான் சிகப்பு கலர் ஆயிடுச்சு டாடி.." என்று அவன் கூறி முடிக்கும் முன்பே விஷயம் புரிந்து விட்டது அவனுக்கு. கை நகத்தைப் பார்த்தபடி தலை குனிந்து நின்றிருந்தவளை அவன் காதலுடன் நோக்க... அவன் பார்வை தன் மீது பதிந்திருப்பதை உணர்ந்த ஸ்வேதா மேலும் நெளிந்த படி "த..தண்ணீர் எடுத்து வருகிறேன்.." என ஓடிச் சென்று விட்டாள்.

கார்த்திக்கின் மாளிகை வாசம் ஸ்வேதாவிற்கு நன்றாகவே பழகி விட்டிருந்தது! வேலையில் சேர்ந்து ஒரு மாதத்திற்கும் மேலாகி விட்டதைக் கண்டு ஸ்வேதாவிற்கே ஆச்சரியமாக இருந்தது. இங்கே தங்கியிருந்த இத்தனை நாட்களில் தாய், தந்தையைப் பற்றியோ.., தோழிகளைப் பற்றியோ யோசித்துப் பார்த்திருப்பாளா? எண்ணம், செயல் என்று அனைத்திலும் நிறைந்திருப்பது கார்த்திக், ஹரிஷ் மட்டுமே!

வாரத்திற்கிருமுறை அனைவரிடமும் பேசுவதோடு சரி, ரம்யா கூட கோபப்பட்டாள். "பெரிய கலெக்டர் வேலை பார்க்கிறாய் பார், நேரமில்லாமல் போவதற்கு, இப்போதும் சொல்கிறேன்... கார்த்திக்கே சரணம் என பாடுவதை நிப்பாட்டி விட்டு விட்டு வந்து சேர்..!" எனக் கோபமாக கூறியவளை சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது!

மற்றவை எதையும் நுழைய விடாமல் கார்த்திக்கின் நினைவை மட்டும் முழுதாக அடைத்து வைத்திருக்கும் இந்த மனம் எப்படி அவனை விட்டு விலகும்? அத்தோடு

நில்லாமல் இப்போது அவன் மகனும் அவள் மனதில் சிம்மாசனமிட்டு விட்டான்! இந்த நிலையில் இவர்களை விட்டாவது... பிரிவதாவது...

சோபாவில் அமர்ந்த நிலையில் எங்கோ வெறித்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தவள் அருகில் யாரோ அமரும் அரவம் உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"ரிலாக்ஸ் ஸ்வேதா.. நான் தான்.." என்றவன்.. "என்ன ஸ்வேதா..? அப்படி ஒரு பெருமூச்சு..?" என்றான். "அது.. அது வந்து.. அப்பா,அம்மாவைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன் சார்..." என்று அவசரமாகக் கூறினாள்.

"அப்படியா...? நீ சொன்னால் நம்பி விட வேண்டியது தான்" என்றவன் முகத்தைத் தீவிரமாக்கி "ஸ்வேதா.. உன்னிடம் முக்கியமான விஷயம் பேசுவதற்காகத் தான் வந்தேன்.., இது வரை நாம் எதிர்பார்த்த படி ஹரிஷ் மாறி வருகிறான் என்றாலும், முக்கியமான விஷயத்தை நாம் மனதில் வைக்க வேண்டும். அது அவன் இன்னும் பள்ளிக்குச் செல்ல சம்மதிக்கவில்லை என்பது தான்!, ஸ்வேதா.. இது நாம் சந்திக்கப் போகும் அடுத்த இக்கட்டு.., எவ்வளவோ முறை நான் கெஞ்சிப் பார்த்தும் அவன் சம்மதிக்கவில்லை" என்றான்.

"நானும் இதைப் பற்றி யோசித்திருக்கிறேன் சார்.., ஆரம்பத்தில் அவன் என்னை வெறுத்ததே எங்கே நான் அவனை ஸ்கூலுக்கு அனுப்பிவிடுவேனோ என்ற பயம் தான். அவனுக்கு ஏன் அவ்வளவு வெறுப்பு என்றே புரியவில்லை. ஆனால் இதை இப்படியே விட்டுவிட முடியாதே; அவன் மனநிலையை அறிந்து கொண்டு அதற்கேற்ப திட்டம் தீட்ட வேண்டும்... அவனிடம்



நிச்சயமாக இன்று நான் இதைப் பற்றிப் பேச முயல்கிறேன் சார்.." என்றாள். "சரி ஸ்வேதா.., இதில் அவனைச் சம்மதிக்க வைத்து விட்டால் என் பாரம் முழுதாக நீங்கி விடும்" என்றவனிடம் முறுவலித்து வழியனுப்பி வைத்து விட்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

ஒரு முடிவுடன் மதியச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு அவன் அறைக்குள் நுழைந்தாள். ரிமோட் காரை வைத்து விளையாடிக் கொண்டிருந்தவன் "ஸ்வேதாம்மா.." என்றபடி திரும்பினான்.

இப்போதெல்லாம் தீப்பெட்டி, கண்ணாடி போன்ற வில்லங்கமான விளையாட்டுப் பொருட்களின் பக்கம் செல்வதேயில்லை

"ஹர்ஷு கண்ணா... சாப்பிடலாம் வா...வா.." என்றபடி அவன் முன்பு டேபிளைப் போட்டு அமர வைத்து அவனிடம் ஸ்பூனை நீட்டினாள்.

சாப்பாட்டை அள்ளி சாப்பிடத் தொடங்கியவனிடம் மெல்ல பேச்சுக் கொடுத்தாள். "ஹர்ஷு உனக்கு வீட்டில் இப்படி விளையாடிக் கொண்டே இருப்பது போர் அடிக்கவில்லையாடா..?."

"நீங்களும் தான் வீட்டில் இருக்கிறீர்கள்.., உங்களுக்கு போர் அடிக்கவில்லையா ஸ்வேதாம்மா..?" என்று பதில் கேள்வி கேட்டான்.

ஆஹா! இவன் அப்பனைக் கொண்டு பிறந்திருக்கும் எமகாதகன் ஆயிற்றே! இவன் வழியிலேயே செல்ல வேண்டியது தான்! "இல்லடா ஹர்ஷு... ஸ்வேதாம்மா பெரிய பிள்ளையல்லவா? அதனால் போர் அடிக்காது.. ஆனால் உன்னைப் போல் சிறு பிள்ளையாக இருந்த போது

வீட்டிலிருந்தால் போர் அடிக்குமென்று ஸ்கூலுக்குப் போவேன்.. அதனால் தான்.. உன்னையும் கேட்கிறேன்... உனக்கு போர் அடிப்பதாயிருந்தால் நாம் ஸ்கூல் போகலாமா கண்ணா..?'' என நயமாக வினவ... திடுக்கிட்டு நேர்வெறித்த கண்களுடன் தட்டில் ஸ்பூனை போட்டு விட்டு எழுந்து சென்று விட்டான்.

நொடியில் அவனிடம் வேறுபாட்டை உணர்ந்த ஸ்வேதா.. இன்று இதற்கான காரணத்தை அறிந்து கொண்டே ஆக வேண்டுமென முடிவெடுத்து... ''ஹரிஷ் நில்...'' என அவன் கையை பற்றினாள். அதற்குள் மூக்கு விடைத்து அழத் தொடங்கியிருந்தவனை ஆறுதலாய் அணைத்து.. தலை கோதி..., ''ஹர்ஷு... ஸ்வேதாம்மா உனக்கு கெடுதல் செய்வேனா? ம்..? உனக்கு ஏன் ஸ்கூல் என்றாலே பிடிப்பதில்லை..? என்னிடம் சொல்.., நீ ஸ்கூலுக்குப் போய் நன்றாகப் படித்து.. பெரியாளாகி.. நிறைய சம்பாதித்தால் தானே டாடி மாதிரி ஆக முடியும்..? இங்கேயே உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தால் எப்படி பெரியாளாக முடியும்? சொல்லு.., என்னடா கண்ணா.., இங்கே பார்...'' என்று அவன் முகத்தை நிமிர்த்தி கண்ணீரைத் துடைத்தாள்.

ஓரளவு சமாதானமாகி தேம்பலுடன் நின்று கொண்டிருந்தவனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள். ''ஸ்கூலில் என்ன நடந்தது? என்னிடம் சொல்.., சொல் கண்ணா..'' எனவும்.. அவன் விசும்பிய படியே.. ''எனக்கு ஸ்கூல் என்றாலே பிடிக்கவில்லை ஸ்வேதாம்மா.., அந்த சுரேஷ், அவனோட ப்ரண்ட்ஸ்.., எங்க மிஸ் யாரையுமே பிடிக்கவில்லை ஸ்வேதாம்மா..'' என்றான்.



''சுரேஷ் யாரு..?,உன் ஃப்ரண்டா?''

''இல்லை.. எதிரி'' என்றான் அவன்.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்றாள்.

''அந்த சுரேஷ் இருக்கான்ல ஸ்வேதாம்மா.. ஒரு நாள் என் ஸ்கெட்ச் பென்சில் கேட்டான்.., நான் தர மாட்டேனு சொன்னேனா.. அதற்கு அவன் மறு நாள் பேரண்ட்ஸ் மீட்டிங் அன்னைக்கு டாடி மட்டும் வந்திருந்ததைப் பார்த்து விட்டு.., உனக்கு மம்மி இல்லையா..? எனக்கு மம்மி, டாடி இரண்டு பேரும் இருக்காங்கன்னு சொல்லி சொல்லி கிண்டல் பண்றான் ஸ்வேதாம்மா.''

''அப்புறம் அவனோட ஹாஸ்டல் ஃப்ரண்ட்ஸ் என்னோட ஸ்கெட்ச் பென்சில்ஸ் எல்லாத்தையும் கொண்டு போய் குப்பைத் தொட்டியில் போட்டுட்டாங்க. நான் அழுதுகிட்டே அன்னிக்கு ஹோம் ஒர்க் செய்யாம போய்ட்டேனா அதையும் மிஸ் கிட்ட சொல்லிக் குடுத்துட்டாங்க., மிஸ் அதுக்கு என்ன சொன்னாங்க தெரியுமா..? உங்கப்பா பெரிய பணக்காரர்னு திமிரா உனக்கு? படிக்காமல் வருகிறாய்ன்னு சொல்லி அடிச்சாங்க ஸ்வேதாம் மா..! பணக்காரர்னா.. என்ன ஸ்வேதாம்மா?'' என்று அவன் வினவ.. அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை..

இப்படி ஒரு பொறுமை இல்லாத முட்டாள் பெண் ஆசிரியையா..? ஐந்து வயது குழந்தையிடமா இப்படி நடந்து கொள்வாள்..? நிர்மூடம் என்றெண்ணிய ஸ்வேதாவிற்கு அந்த பெண்ணின் மீது ஆத்திரமாக வந்தது. அவளின் பதிலை எதிர் பாராமல் மீண்டும் தொடர்ந்தான்.

"அதற்கப்புறம் டெய்லி அவனோட ஃப்ரண்ட்ஸ் ஹாஸ்டலில் என்னைத் தொந்தரவு பண்ணிகிட்டே இருப்பாங்க என் தலையணைக்குள்ளே எறும்பைப் போட்டு விட்டாங்க.., என் டிரஸ் எல்லாம் கிழிச்சாங்க.., சாப்பிடும் போது தட்டைத் தள்ளி விட்டாங்க.., ஹோம் ஒர்க் கூட பண்ண விட மாட்டாங்க, அந்த மிஸ் நான் சொல்ற எதையுமே கேட்க மாட்டாங்க.. திமிர், திமிர் மட்டும் தான் சொல்லுவாங்க.. அப்பறம் ஒரு நாள் டாடி கிட்டேயும் சொல்லிட்டாங்க.. நான் ஹோம் ஒர்க் பண்ண மாட்டேன்கிறேன்னு டாடியும் என்கிட்ட எதுவுமே கேட்காம திட்டிட்டாங்களா.. எனக்கு அழுகையா வந்துச்சா.. அதான் நான்.. நான்.. மாடில இருந்து கீழ குதிக்கப் பார்த்தேன்.. அப்புறம் என்னை அங்கே வேலைபார்க்கிற ராமு அண்ணா இழுத்துட்டு போயிட்டாங்க..." என்று அவன் முடிக்கையில்...

அந்த ராமு அண்ணா மட்டும் சரியான நேரத்தில் வந்திருக்கா விட்டால் இன்று ஹரிஷை உயிருடன் பார்த்திருக்க முடியுமா..? தன் நெஞ்சோடு அவனை இறுக அணைத்தாள்.

"நீ ஏன் ஹரிஷ் இதையெல்லாம் டாடியிடம் முன்பே சொல்லவில்லை?"

"டாடி சண்டே மட்டும் தான் என்னைப் பார்க்க வருவார் ஸ்வேதாம்மா.. அப்போ என் மிஸ் கூடவே இருப்பாங்களா.. என்னால எதையுமே சொல்ல முடியல.." என்று அவன் சோகமாகக் கூற...வருத்தமும், இரக்கமும் பொங்கியது ஸ்வேதாவிற்கு!



கார்த்திக்கின் மீது மெலிதாகக் கோபம் கூட எழுந்தது! இந்தச் சிறு வயது குழந்தையை ஹாஸ்டலில் சேர்க்கலாமா? என்ன தெரியும் அவனுக்கு?,

உற்றார், உறவினரற்ற தனிமை அவனை பாதிக்காதா? பள்ளி முடிந்ததும் வீட்டிற்கு ஆவலுடன் ஓடி வரும் எத்தனை குழந்தைகளைப் பார்த்திருக்கிறாள்? ஏன்? அவளே தந்தையை எதிர்பார்த்து பள்ளிக்கூட வாசலில் காத்திருந்து அவருடன் வண்டியில் ஏறிக்கொண்டு வளவளத்தபடி தானே இல்லம் செல்வாள்! வீட்டில் அன்னை கொடுக்கும் சிற்றுண்டியைத் தின்று கொண்டே அன்று பள்ளியில் நடந்த அனைத்தையும் ஒப்பிப்பதும், அன்னை அதை ரசித்தபடி.. பாராட்டுவதும்.. கண்டிப்பதும்.. இதெல்லாம் இல்லாமல்... இதற்கெல்லாம் ஏங்காமல்.. எப்படி ஒரு சிறுவனால் இருக்க முடியும்?

ஹரிஷ் எப்போதும் எதையும் அவ்வளவு சீக்கிரம் வெளிப்படுத்துபவன் அல்ல.. தானாகச் சென்று பேசிப் பழகும் அளவிற்கு கலகலப்பானவனும் அல்ல.. இலகுவாக பேச காலம் எடுத்துக் கொள்ளக் கூடியவன். அதனால் வகுப்பில் அவனுக்கு தோழர்கள் இல்லாமல் போனதில் ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை!

ஆனால் அந்த சுரேஷும் அவன் நண்பர்களும்! ஆண்டவா! வக்ரகுணம் மனிதனுக்கு பால்யத்திலிருந்தே வந்து விடுகிறதா..? திரைப்படங்களில் நாம் பார்க்கும் சம்பவங்களை இவன் நேரிலேயே அனுபவித்திருக்கிறானே! இப்படியும் கூட ராட்சச குணமுடைய குழந்தைகள் இருப்பார்களா..?

அந்த ஆசிரியை.. அவளுக்கு ஏன் பணக்காரர்களின் மீது கோபம்? பணக்காரன் என்ற வார்த்தைக்கு விளக்கமே தெரியாத இந்தச் சிறு வயது குழந்தையிடம் இவ்வளவு கடினமாக நடந்துகொண்டு! ச்ச! இவளெல்லாம் எதற்காகப் புனிதமான ஆசிரியர் பணிக்கு வருகிறாள்! கேள்விக் குறியாகிவிடும்! உடனே அவளை நேரில் சென்று பளார் பளாரென்று அறைய வேண்டும் போல் வேகம் எழுந்தது.

வகுப்பில் ஆசிரியரிடமும் ஆதரவு கிடைக்காமல்.. விடுதியில் அவர்கள் செய்யும் அட்டகாசத்தையும் தாங்கிக் கொண்டு.. படிப்பில் கவனம் செலுத்த முடியாமல்.. தந்தையிடமும் கூற வழியில்லாமல் அவன் பட்டிருக்கும் வேதனையையும், வலியையும் உணர்ந்த ஸ்வேதாவிற்கு நெஞ்சம் எரிந்தது. ஆத்திரமாக வந்தது. பிஞ்சுக் குழந்தை இவ்வளவு கொடுமைக்கு ஆளாகி இருக்கிறதே.

யாரைச் சொல்லி என்ன பயன்? பெற்றவனுக்கு புத்தி இல்லை, மற்றவர்களிடம் கோபம் கொண்டு என்ன பயன்? ஒரு ஐந்து வயது சிறுவனின் மனநிலையை யூகிக்கத் தெரியாத அளவுக்கு முட்டாளா கார்த்திக்..? அந்த வயதில் அவனுக்கு என்னவெல்லாம் எதிர்பார்ப்புகளும், ஆசைகளும் இருக்குமென்பதை புரிந்து கொள்ள முடியவில்லையா அவனால்..? நன்மை செய்வதாக எண்ணிக் கொண்டு படு குழியில் தள்ளியிருக்கிறான்.

பள்ளியில் சேர்த்ததோடு சரி, விடுதியில் யாருமற்ற தனிமையில் தங்கியிருப்பவனின் மனநிலையை தெரிந்து கொள்ள வேணும் முயற்சித்திருக்கிறானா? அதுவுமில்லை. தந்தை வருந்துவான் என்பதற்காகவே



எதையும் வெளிக் காட்டிக் கொள்ளாத அந்தச் சிறுவனின் பக்குவம் கூட இவனுக்கு இல்லையே! என்ன பெரிதாக நல்லது நினைத்து விட்டான்! நல்லது செய்ய நினைத்தேன், நல்லது செய்ய நினைத்தேன் என்று திரும்ப திரும்பக் கூறிக் கொண்டு!

அவன் வாழ்வை நாசமாக்கி.. இப்படி ஒரு மனப்பான்மையையும் ஏற்படுத்தி விட்ட பெருமையைத் தவிர என்ன நன்மையை செய்து விட்டான்! பெற்றால் மட்டும் போதுமா? பிள்ளைகளின் மனதைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டாம்? இவனெல்லாம் என்ன தந்தை! சுரேஷ், அவனது நண்பர்கள், ஆசிரியை என்று ஆரம்பித்த ஸ்வேதாவின் கோபம் கடைசியில் மொத்தமாக கார்த்திக்கின் புறம் திரும்பியது!

ஆசிரியர், உடன் பயிலும் மாணவர்கள், விடுதி, பள்ளி என்றாலே ஹரிஷிற்கு சோகமும், வெறுப்பும் கலந்த ஒரு ஒவ்வாமை ஏற்பட்டு விட்டதைக் கண்டு மனம் வெம்பியது! அவன் மனநிலையை யூகிக்க முடிந்தது. "ஸ்கூல் போக மாட்டேன் ஸ்வேதாம்மா.." என்று அவன் கடைசி வரை அடம்பிடிப்பதும்.. முகம் வாடுவதும்.. கடவுளே! கிருஷ்ணா !இந்தப் பிஞ்சுக் குழந்தைக்கு வேறு வழியே இல்லையா..?, விரைவில் அவன் மனநிலையை மாற்று என்று கண்களில் நீர் மல்க இமை மூடி வேண்டிக் கொண்டவள்... ஹரிஷை சுற்றும், முற்றும் தேடினாள்.

அறையின் மூலையில் அமர்ந்து கொண்டு சோர்ந்த முகத்துடன் ரிமோட்டை இயக்கியபடி அமர்ந்திருந்தான். அவன் நிலை கண்டு ஸ்வேதாவின் மனம் குமுறியது. எவ்வளவு அழகான குழந்தை! தனக்கே நெஞ்சு

வெடிக்கும் அளவிற்கு வலிக்கிறதே! இவனைப் பெற்றவள் உயிரோடு இருந்திருந்தால்.. இதைக் கண்டு எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாள்?

இந்த சில நாட்களாக புன்னகை முகத்துடனே சுற்றித் திரிந்து கொண்டிருந்தவன் இப்போது சோர்வுடன் காணப்படுவதை உணர்ந்து.. இதை தொடர விடக் கூடாது என்றபடி.. "ஹர்ஷு...." என்றழைத்தவள் முகத்திலும், குரலிலும் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு 'நான் ஸ்விம்மிங் பூலில் விளையாடப் போகிறேன்... நீ வருகிறாயா கண்ணா.." என்று வினவ.. அவள் எதிர்பார்த்தபடி அவனும் மலர்ச்சியுடன் எழுந்து வந்து "நிஜமாவா ஸ்வேதாம்மா..?" என்றவன் உடனே முகத்தை சுருக்கிக் கொண்டு.. "தண்ணீரில் ஆடினால் சளி பிடிக்கும் என்பீர்களே" என்று வினவினான்.

அவனின் பதிலில்..சிரிப்புடன் அவனைத் தூக்கி "அறிவாளி டா ஹர்ஷு நீ.. இன்றைக்கு ஒரு நாள் மட்டும் விளையாடலாம்.. சளி பிடித்தால்.. நம் டாக்டர் அங்கிளிடம் மருந்து வாங்கிக் கொள்ளலாம், சரியா..?" என்றவள் அவனைத் தூக்கியபடியே நீச்சல் குளத்திற்குச் சென்றாள்.

போதும் போதுமென்ற வரை தண்ணீரில் ஆடியும், குதித்தும், கும்மாளமிட்டவனை பிடித்திழுத்துக் கொண்டு அவன் ஆடைகளைக் களைந்து தலையைத் துவட்டியபடியே வீட்டிற்குள் நுழைந்தாள். இவர்கள் இருவருக்காகவே காத்திருந்தவன் போல் வேகமாக எழுந்து அருகில் வந்தான் கார்த்திக். தண்ணீரில் ஆடிய மகிழ்ச்சியில் இருந்த ஹரிஷ் "டாடி..." என்றபடி ஸ்வேதாவிடமிருந்து தந்தையிடம் தாவினான்.



இவ்வளவு சந்தோசமாக இருக்கின்றானே! அப்படியானால் இவனைப் பள்ளிக்குச் செல்ல ஸ்வேதா சம்மதிக்க வைத்து விட்டாளா..? என்றபடி அவள் முகத்தை நோக்க.. அவளோ முழுக் கோபத்துடன் அவனை முறைத்த வண்ணம் நின்றிருந்தாள்.

"ஹரிஷ் உடை மாற்ற வேண்டும் வா..." என்ற அவனை அழைத்துக் கொண்டு படியேறியவளை ஏன் கோபமாக இருக்கிறாள் என்று குழப்பத்துடன் பின் தொடர்ந்தான்.

# 9

வார்த்தைகளற்று தவித்துக்
கொண்டிருக்கிறது நெஞ்சம்..!
உன் ஒரு விரல் தீண்டலிலேயே...
துடித்துப் போகும் இதயம்..
இன்று..
உன் முழுதான ஸ்பரிசத்தில்...
துடிப்பதை நிறுத்தி..
செயல் இழந்தே போய்விட்டது...!

ஹரிஷின் அறைக்குச் சென்று அவனுக்கு வேண்டிய மாற்றுத் துணிகளை எடுத்துக் கொடுத்து விட்டு வெளியேறியவளை "ஸ்வேதா.. நில்.." என்ற கார்த்திக் அவள் முன்னே வந்து நின்று "என்ன நடந்தது ஸ்வேதா..?

ஹரிஷ் பள்ளிக்குச் செல்ல ஒப்புக் கொண்டானா..?" ஆர்வத்துடன் வினவினான். அவனது ஆர்வம் மேலும் வெறுப்பேற்ற... நிமிர்ந்து அவனை நேராகப் பார்த்து "எப்படி....? எப்படி ஒப்புக்கொள்வான் என்று எதிர்பார்க்கிறீர்கள் சார்..? பச்சிளங்குழந்தையை விடுதியில் தள்ளி கொடுமைக்கு ஆளாக்கிவிட்டு... உங்களால் எப்படி என்னிடம் இதைக் கேட்க முடிகிறது..? பெற்ற தகப்பனே பிள்ளைக்கு இப்படியொரு பாவம் செய்வதை இங்கு தான் காண்கிறேன்..., சாதாரணக் குழந்தைகளே ஓராயிரம் மனக் குறைகளுடன் வளரும் போது.. அன்னையற்ற.. அன்னையின் அன்புக்காக ஏங்கும் அந்தப் பாலகன்.. என்ன செய்வான்..?"

"எப்படி உங்களால் இதைச் செய்ய முடிந்தது சார்...?, பள்ளி என்ற சொல்லைக் கேட்டாலே மிரள்கிறான்.., நிறைந்த சந்தோசத்துடன் துள்ளித் திரிந்தவன். நான் இதைப் பற்றிப் பேசியதும்.. நொடியில் சோர்ந்து. கவலையுடன் அமர்ந்து விட்டான்.., என்னால் அதைக் காண சகிக்க முடியவில்லை சார்.. நெஞ்சம் துடித்துப் போய் விடுகிறது.. அவன் இவ்வளவு பாதிப்புக்குள்ளாகியது உங்களால் தானே?, வெற்றிகரமாக தொழில் நடத்தி வருவதாக பெருமைப்பட்டுக் கொள்கிறீர்களே! அந்த சிறுவனின் மனநிலையை அறிந்து கொள்ள முடியாத முட்டாளாக இருந்திருக்கிறீர்கள்?"

"நகரிலேயே பெரிய பள்ளியில் நிறைய பணம் கொடுத்து சேர்த்து விட்டதுடன் உங்கள் கடமை முடிந்து விட்டதா..?, ஒரு முறை.. ஒரு முறையேனும்.. அவனுக்கு அந்தப் பள்ளியும், விடுதியும் பிடித்திருக்கிறதா என்று



விசாரித்திருக்கிறீர்களா..? அவ்வளவு ஏன்?,அவனுக்கு வகுப்பில் நண்பர்களே இல்லையென்பது உங்களுக்குத் தெரியுமா...?, விடுதியிலும், ஆசிரியையாலும் அவன் பாதிக்கப் பட்டிருப்பது உங்களுக்கு தெரியுமா..?"

"மகனைப் பற்றி ஒரு விவரமும் தெரியாது..,ஆனால் மகன் நன்றாக இருப்பதற்கு பாடுபடுவதாக மார்தட்டிக் கொள்கிறீர்கள்! இப்படி ஒரு பொறுப்பற்ற தந்தையை என் வாழ்நாளில் பார்த்தயிதேல்லை.., இப்போது பார்க்க நேரிட்டதற்காகவும் வருத்தப்படுகிறேன்.., அவன் நினைவில் வைத்துக் கூறிய விஷயங்களை கேட்டதற்கே எனக்கு நெஞ்சு பதறுகிறதே! சொல்லாமல் விட்ட எத்தனைக் கொடுமைகளுக்கு அவன் ஆளாகி இருப்பானோ..? ஆசிரியர் கூறியதை மட்டும் கேட்டு விட்டு அவனை கண்டித்திருக்கிறீர்களே? அவன் பக்கத்து நியாயத்தை கேட்க முயன்றீர்களா..? காரணமின்றி அவன் எதையும் செய்ய மாட்டான் என்று உங்களுக்குத் தெரியாதா..? உங்கள் மகனைப் பற்றி உங்களுக்கே தெரியாத நிலையில்.. அடுத்தவர்களைக் குறை கூறி என்ன பிரயோஜனம்..?"

"மாடியிலிருந்து குதிக்கப் பார்த்திருக்கிறான் சார்...! அவ்வளவு தூரம் அவனுக்கு அந்தச் சூழ்நிலை வெறுக்கச் செய்திருக்கிறது! அவனின் விருப்பமின்மையை கண்டறியக் கூட உங்களால் முடியவில்லையே! அறிந்து கொள்ள நீங்கள் முயற்சிக்க கூட இல்லையே..! ஏன் சார்...? ஏன் இப்படி ஒரு பாவச் செயலைப் புரிந்தீர்கள்..?" என்றவளிடம் முகம் சுருங்க, சிவந்த கண்களில் வலியைத் தேக்கித் தோற்று விட்ட பார்வையைச் செலுத்தி விட்டு விறு விறுவென படிகளில் இறங்கி மறைந்தான்.

ஸ்வேதாவிற்கு அவன் பதிலே கூறாமல் இறங்கிச் சென்றது உறுத்தலை ஏற்படுத்தியது.. ஆனாலும் வீம்புடன்... போகட்டுமே! ஆறடி வளர்ந்திருக்கிறானே ஒழிய புத்தி இல்லை? பால் மணம் மாறாத பச்சிளங்குழந்தையை பாதிப்புக்குள்ளாக்கி விட்டு பெரிதாக கேள்வி கேட்க வந்துவிட்டான்! படு பாவி!

அன்று முழுவதும் கோபத்தில் அவனைத் திட்டித் தீர்த்த ஸ்வேதா இரவு உணவின் போது அவன் வீடு வந்து சேராததைக் கண்டு வருத்தமுற்றாள். அவசரப்பட்டு வார்த்தைகளை விட்டுவிட்டோமோ! உலகத்திலேயே அவன் அதிகமாக நேசிப்பது ஹரிஷ் ஒருவனைத் தான்! அதை மகனும் உணர்ந்தே இருந்தான்..! நேரம் ஒதுக்க முடியாவிட்டாலும்.. அவ்வப்போது ஹரிஷை பார்க்கும் நேரமெல்லாம் பாசத்தைப் பொழிபவன்! அதனால் தான் 'டாடி' என்றாலே உயிரை விடுவான் ஹரிஷ்.

இப்படியிருக்கையில் கார்த்திக்கிற்கு ஹரிஷின் மீது பாசமே இல்லை என்பது போல் பேசியது... வடிகட்டின முட்டாள்தனம்.. கடினமான வார்த்தைகளை உபயோகப்படுத்தி அவன் சந்தோசம் முக்கியம் என்று எப்போதும் கூறும் நானே இன்று அவனை வருத்தமடையச் செய்து விட்டேனே!

வார்த்தைகளைக் கொட்டி விட்டால் அள்ள முடியாது. நாவினால் சுட்ட புண் ஆறாது என்று எவ்வளவோ பழமொழிகளிலும், குறளிலும் சொல்லி வைத்திருந்தும் நாவடக்கம் காக்காமல் அவனிடம் வாயை விட்டாயிற்று! எப்போதும் பதிலுக்கு பதில் கூறி மூக்கை அறுப்பவன் இன்று எதுவுமே கூறாமல் சென்றம் ஸ்வேதாவின் நெஞ்சைப் பதறச் செய்தது...



ஹரிஷை உறங்க வைத்து விட்டு ஹாலிலேயே ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்தவள் அக்கடி வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வெகு நேரம் கழித்தே வீடு திரும்பியவன் ஹாலில் அமர்ந்திருந்தவளை கண்டுகொள்ளாமல் உள்ளே நடந்தான். அவன் கார் வந்து நின்றதுமே வேகமாக எழுந்தவள், அவன் தன்னை கண்டு கொள்ளாமல் செல்வதையும்.., அவன் நடையில் வித்தியாசத்தையும் உணர்ந்து வேகமாக அருகில் சென்றாள்.

"சார்....." என்று அவள் அழைத்ததையும் பொருட்படுத்தாமல் முன்னேறியவனின் முன்னே வந்து நின்று அவனை வியப்புடன் நோக்கி "கு..குடித்திருக்கிறீர்களா சார்...? உங்களுக்கு இந்த பழக்கம் கூட உண்டா..?" என அதிர்ச்சியுடன் கேட்டாள்.

"ஏன்..? பெற்ற பிள்ளையைப் பாரமாக எண்ணி விடுதியில் தள்ளும் என்னைப் போன்ற கொடுமைக்காரனுக்கு குடிப்பழக்கம் இருப்பதில் ஆச்சரியமென்ன?" என்று விரக்தியுடன் வினவியனைக் கண்டு மனம் பதறினாள்.

"சார்.. நா.. நான் அப்படிப் பேசியதற்கு மன்னித்து விடுங்கள் சார்.. அறிவில்லாமல் பேசி விட்டேன்..." என்று அவள் முடிப்பதற்குள், "எப்படி அவ்வாறு பேச முடிந்தது உன்னால்? என் மகனின் இந்த நிலையைக் கண்டு தினம் தினம் புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கும் என்னைப் பார்த்து.. எப்படி ஸ்வேதா பேச முடிந்தது..? என்னை அவன் ஆவலுடன் எதிர்பார்க்கும் வேளைகளில்.. என்னால் நேரம் ஒதுக்க முடியாமல் போய்.. அவனை

ஏமாற்றத்திற்கு உள்ளாக்க நேரிடுமோ என்று தான் அவனை விடுதியில் சேர்த்தேன்.., உடன் பயிலும் மாணவர்களுடன் கலந்து விளையாடும் போது.. மற்றதை மறந்து.. அவன் மகிழ்ச்சியாக இருப்பான் என்று முழுதாக நம்பினேன்..."

"ஆனால் இப்படி ஒரு பாதிப்புக்கு ஆளாவான் என்று நான் கனவிலும் கருதியதில்லை.. நான் அவனைப் புரிந்து கொள்ளவில்லை.., அவனிடம் மனம் விட்டுப் பேசியதில்லை என்று நினைத்தாயா..? ஒவ்வொரு செயலிலும் அவன் நன்மையை கருத்தில் கொண்டே அடி எடுத்து வைக்கும் நான்... அவனுடைய விருப்பத்தை அறிந்து கொள்ளாமல் இருப்பேனா..? நான்.. நான்.. அவனை கொடுமைப் படுத்துவதாக கூறி விட்டாயே..?"

"வாழவேண்டுமென்ற நம்பிக்கையை எனக்கு ஏற்படுத்துவதே என் மகன் மட்டும் தான்.. அவனுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் நான் கொடுமைக்காரனா...? அவன் உண்டானா... உறங்கினானா? என்று ஒவ்வொரு நொடியும் அவனைப் பற்றிய நினைவுகளை மட்டுமே சுமந்து கொண்டிருக்கிறேன்."

"அவன் எதிர்கால வாழ்வை வளமாக்கி விட வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கிறேன். இரவு பகல் பாராமல் உழைத்து இவ்வளவு சொத்து, சுகம் சேர்த்ததில் என்ன பயன்...? ஒரு நாள்.. ஒரு நாளேனும்.. நிம்மதியான உறக்கம் கிட்டியிருக்கிறதா...? பேசாமல் அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டு... என் மகனுடன் எங்கேனும்.. கண்காணாத இடத்திற்குச் சென்று விடலாமா என்று கூட யோசித்திருக்கிறேன்.., அந்த அளவிற்கு



வெறுப்பும், கவலையும், சோகமும் நிறைந்த பாலைவனமாக இருக்கிறது என் வாழ்க்கை" என்று கலங்கிய விழிகளுடன் அவன் கூறியதைக் கேட்ட ஸ்வேதாவிற்கு இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது போல் இருந்தது.

சிவந்த விழிகளுடனும்,கலைந்த தலையுடனும் சிறுபிள்ளை போல் கண்ணீர் விட்டவனின் அருகில் வேகமாய்ச் சென்று இரு கைகளாலும் அவன் தோளைப் பற்றி "கார்த்திக்.. கார்த்திக்.. ஐ ஆம் சாரி கார்த்திக்... முட்டாள்தனமாக நான் பேசியதைப் பெரிதுபடுத்திக் கொண்டு நீ.. நீங்கள் கதறுவதைக் காணச் சகிக்கவில்லை.. நீங்கள் ஹரிஷின் மீது உயிரையே வைத்திருப்பது எனக்கு இப்போது நன்றாகவே புரிந்து விட்டது... விட்டு விடுங்கள்.. வேண்டாம் கார்த்திக்.. ப்ளீஸ்..." என்றபடி அவன் விழிகளில் வழிந்த கண்ணீரைத் துடைக்க... நடுங்கிய அவள் கைகளைப் பற்றி அழுந்த முத்தமிட்டவன்.. பற்றிய கரங்களால் அவளை இழுத்து இறுக அணைத்து.. அவள் கூந்தலில் முகம் புதைத்தான்.

"ஸ்வேதா... நீ.. நீ.. என் வாழ்வை மாற்றியவள்..., வசந்தத்தைப் பரப்பியவள்.. வலியில் துடிக்கும் என் மனதை மயிலிறகால் வருடுபவள்.. உன் பேச்சிலும்.. செயலிலும் நான் மட்டும் அறிந்து கொள்ளக் கூடிய ஆயிரமாயிரம் அர்த்தங்கள் பதிந்திருக்கின்றன.. உன் வார்த்தைகள் ஒவ்வொன்றும் எந்த அளவிற்கு என் மனதை அமைதியுறச் செய்கிறதோ... அதே அளவிற்கு வலிக்கவும் செய்கிறது.... என்னையும்.. என் மனதையும் முழுதாகப் புரிந்து வைத்திருக்கும் நீ.. என்னை நோகடிப்பதை

என்னால் தாங்க முடியவில்லை கண்ணம்மா...." என்று மேலும் அவளை இறுக்கித் தன்னுடன் இணைத்து கரகரத்த குரலில் கூறியவனைக் கண்டு....கண்களில் ஆறாகப் பொங்கி வழியும் கண்ணீருடன் நின்று கொண்டிருந்த ஸ்வேதா.. வார்த்தைகளற்று மெல்ல தலையசைத்தாள்.

சற்று நேரத்திலேயே அவளை விட்டு விலகியவன், " ஐ ஆம் சாரி ஸ்வேதா.." எனக் கூறி விட்டு விரைந்து படியேறி அறைக்குச் சென்று விட்டான். அவன் செல்வதையே பார்த்துக் கொண்டு சிலையென நின்றிருந்தாள்.

மறுநாள் காலை குளித்து விட்டு தலை முடியைக் காய வைத்தபடி தோட்டத்தில் அமர்ந்திருந்தவளின் மனம் முழுவதும் கார்த்திக்கும், இரவு அவன் பேசிய வார்த்தைகளும் மட்டுமே நிறைந்திருந்தன. ஓடிச் சென்று அவனை மார்போடு இறுக அணைத்துத் தலை கோதி ஆறுதல் கூற வேண்டுமென்று மனதில் எழுந்த உணர்வை அடக்க பெரும்பாடுபட வேண்டியிருந்தது அவளுக்கு.

அவன் புன்னகை முகத்தைப் பார்த்தே பழகி விட்டிருந்தவளுக்கு கண்கள் கலங்கி அவன் கதறிய காட்சி உள்ளத்தை வதைத்து. அவன் அப்படி நோகும் அளவிற்கு வார்த்தைகளை உபயோகித்ததற்காகத் தன் மீதே கோபம் வந்தது!

கார்த்திக்.... என் உயிரை விட உங்களை நான் அதிகமாக நேசிக்கிறேன்... நேற்று நான் கூறிய எந்த வார்த்தையும் மனதாரக் கூறியவை அல்ல.. அப்போதைய



கோபத்தில் யோசிக்காமல் பேசி விட்டேன்! மன்னித்து விடுங்கள் கார்த்திக்...! என்றபடி மானசீகமாக அவனுடன் உரையாடிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் இரு பிஞ்சுக் கைகள் ஸ்வேதாவின் கண்களை மூடின. இதழ்களில் முறுவல் படர "ஹர்ஷு..." என்று அவன் கைகளை முன்னே இழுத்து தன் மடியில் அமர வைத்தவள் "அடடே குட்டிப் பையா.., நீயாகவே குளித்துத் தயாராகி விட்டாயா..?" என்று வினவ "ஆமாம் ஸ்வேதாம்மா.. காலையில் எழுந்து பல் தேய்த்து.. குளித்து.. சாப்பிட்டால் தான் குட் பாய் என்று நீங்கள் தானே சொன்னீர்கள்? அதான் நான் சீக்கிரம் குளித்து விட்டேன்.." என்று சிரித்தவனைப் பற்றி முத்தமிட்டாள்.

"ஸ்வேதாம்மா... நாம் கண்ணாமூச்சி விளையாடுவோமா..?" என்றபடி கையில் வைத்திருந்தத் துணியை நீட்டினான். "நீங்கள் தான் முதலில் கண்ணைக் கட்டிக் கொள்ள வேண்டும்.." என்றவனிடம் அவள் தலையாட்ட அவள் கண்களைக் கட்டினான்.

"ஸ்வேதாம்மா ரெடி...." என்று சொல்லி விட்டு அவன் ஓடி மறைய... "ஹர்ஷு.... எங்கே இருக்கிறாய்" என ஒவ்வொரு மரத்திற்குப் பின்னேயும் தேடிக் கொண்டே நடந்து வந்தவள் எதிரே வந்த கார்த்திக்கின் மீது மோதினாள்.

தன் மீது மோதித் தடுமாறியவளைப் பற்றி நிறுத்தியவன் "ஸ்வேதா... என்ன இது...?" என்றபடி அவள் கண்ணில் கட்டியிருந்த துணியை விலக்கினான். எப்போதும் போல் அல்லாமல் அன்று அவனோடு பேசுவதில் தயக்கம் உண்டானது அவளுக்கு. எது

தடுக்கிறது என்று யோசனையில் இறங்க முயன்றவள் உடனேயே தோற்றாள். மூளை என்ற ஒன்று, இயங்க மாட்டேன் என்று சத்யாகிரகம் செய்து கொண்டிருக்கையில் எங்கே யோசிப்பது!

தயக்கத்துடன் நிமிர்ந்து "அ..அது வந்து.. ஹரீஷு வுடன் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்தேன்.." என்றவள் நிறுத்தி "துணியைக் கொடுங்கள் சார்..., நான் அவனைத் தேட வேண்டும்..." என்று அவனிடமிருந்து துணியைப் பறித்து கண்ணைக் கட்டிக் கொண்டாள்.

அவன் ஒளிந்து கொண்டிருந்த மரத்தின் பின்புறம் மெதுவாகச் சென்று அவனைப் பிடித்து "அவுட்.. அவுட் !" என்று குதித்துக் கத்த... ஹரீஷும் அவளுடன் இணைந்து குதித்தான்.

அதற்குள் இவர்கள் விளையாடுவதை பார்த்துக் கொண்டிருந்த கார்த்திக் அருகில் வர "டாடி... கண்ணாமூச்சி டாடி.., நீங்களும் வாங்க டாடி... ப்ளீஸ்.. ப்ளீஸ்.." என்றான்.

மகன் கெஞ்சுவதைக் கண்டுச் சிரித்து.. "கண்ணா.. நான் உன்னுடன் விளையாடிக் கொண்டிருந்தால் யார் அலுவலகம் செல்வது..? நீ உன் ஸ்வேதாம்மாவுடன் ஆடு... சரியா.." என்றவனிடம் மேலும் ஹரிஷ் கெஞ்சத் துவங்க..

உடனே ஸ்வேதா அவனைப் பார்த்து "சார்.. உங்கள் மகனுக்காக இது கூட செய்ய மாட்டீர்களா..? எவ்வளவு ஆசையுடன் அழைக்கிறான்.., வாங்க சார்..' எனவும் "சரி டா.. உன் ஸ்வேதாம்மாவே சொல்லி விட்டாள்.



வருகிறேன்.. ஆனால் ஒரே ஒரு ஆட்டம் மட்டும் தான்.., சரியா..?" என்றான்.

மகிழ்ச்சியில் துள்ளிய ஹரிஷ் "டாடி.. இப்போ நான் தான் அவுட்., எனக்கு கண் கட்டி விடுங்கள்.." என்றான், அவன் கண்ணைக் கட்டி முடித்ததும் இருவரும் ஆளுக்கொரு புறம் ஓடி ஒளிந்து கொண்டனர்.

"ஸ்வேதாம்மா... டாடி...." என்றபடி அவன் தேடிக் கொண்டிருக்க.. அங்கேயிருந்த மரத்திற்குப் பின்னே நீல நிறப் புடவையில் இடை வரை நீண்ட தலை முடியுடன் பம்மிப் பம்மி வெளி வந்து கொண்டிருந்த ஸ்வேதாவைக் கண்டதும்.. இதயம் ஒரு நொடி நின்று பின் வேகமாகத் துடித்தது கார்த்திக்கிற்கு..

பின்னலிடாமல் பறந்த கூந்தல் காற்றிலாடிக் கொண்டு கவிதை பாட.. எப்போதும் சிரிக்கும் அந்தப் பெரிய கரு விழிகளுக்கும்... ரோஜாவின் இதழ்களின் மென்மையைக் கொண்டிருக்கும் அந்த உதடுகளுக்கும் தீவிர ரசிகனான கார்த்திக்.. அந்த காலை நேரத்தில் அன்று மலர்ந்த மலரைப் போல் மலர்ந்திருந்த... ஒப்பனையில்லாத அந்தப் பேரழகில் மயங்கிப் போனான்.

அதற்குள் அரவம் உணர்ந்து திரும்பிய ஸ்வேதா கார்த்திக்கைக் கண்டதும்... ஹரீஷ் அங்கே என்று ஜாடை காட்டி விட்டுக் கண்களால் சிரிக்க... முழுதாக சொக்கிப் போனான். அவன் பார்வையில் மாற்றமுணர்ந்த ஸ்வேதா புரியாமல் பார்த்தாள்.

எட்டி அவள் கைகளைப் பற்றி அருகிலிழுத்து மரத்தின் மீது சாய்த்தான். அவன் பார்வையிலும்,

செய்கையிலும் ஸ்வேதா தன்னைத் தொலைக்க ஆரம்பித்திருக்க காற்றில் அலைந்து கொண்டிருந்த அவள் கூந்தலைக் காதோரத்தில் ஒதுக்கியவன் மெல்ல குனிந்து "ஸ்வேதா... இன்று நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் என்று உனக்குத் தெரியுமா...?" என்று செவியோரத்தில் முணுமுணுத்தான்.

அவன் இதழ்கள் உரசியதில் முகம் சூடாக.. தோளில் பதிந்திருந்த அவன் கைகள் மெல்ல முன்னேறி கழுத்தை வருடியதில்... உடல் முழுக்க செந்நிறம் கொண்டது. அவள் முகத்தைத் தன் புறம் திருப்பியவன் "ஸ்வேதாம்மா... ஏன் உங்கள் முகம் சிகப்பா இருக்கு...? வெயில் பட்டதாலா...?" என்று ஹரிஷைப் போல் வினவ மேலும் சிவந்தாள் அழகு ஸ்வேதா.

வேகத்துடன் அவள் முகத்தை அருகே இழுத்து சிவந்த கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான். அவன் பார்வையிலேயே முழுதாய்த் தொலைந்து விடும் ஸ்வேதா.. இன்று அவனது முத்தத்தில் தொய்ந்து அவன் மேலேயே சாய்ந்து விட்டாள். அதற்கு மேல் என்ன நடந்திருக்குமோ.. ஆனால் அதற்கு இடம் கொடாமல் ஹரிஷ் வந்து.. ஸ்வேதாவையும், கார்த்திக்கையும் பற்றி "ஸ்வேதாம்மா அவுட்.., டாடி அவுட்" என்று கூவ.. சுற்றுப்புறம் உணர்ந்து அவசரமாக விலகினர் இருவரும்.

அவனது முகம் பார்க்க வெட்கி வேறு புறம் திரும்பிய ஸ்வேதா ஒன்றும் பேசாமல் உள்ளே ஓட.. "ஸ்வேதாம்மா... ஸ்வேதாம்மா.." என்றழைத்த ஹரிஷ் அவள் நில்லாமல் ஓடிச் சென்றதைக் கண்டு.. "டாடி.. என்ன ஸ்வேதாம்மா ஓடிட்டாங்க..?" என்றான்.



"அது வந்து கண்ணா.. நீ இன்னும் சாப்பிடவில்லையல்லவா...? அதனால் உனக்குச் சாப்பாடு எடுத்து வைக்க ஓடுகிறாள்.." எனக் கூறிச் சமாளித்து வைத்தான்.

வீட்டிற்குள் நுழைந்த ஹரிஷும் ஸ்வேதா சாப்பாடு எடுத்து வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு "இதற்காகத் தான் ஓடி வந்தீர்களா ஸ்வேதா ம்மா..?" என்று வினவ என்ன கூறுவதென்று புரியாமல் விழித்தவள் "ஆமாம் டா கண்ணா.." என்று தடுமாறியபடியே கூறினாள்.

பின் இருவரும் சாப்பிட அமர.. ஹரிஷைச் சாப்பிட வைத்துக் கொண்டிருந்தவளிடம்.. "ஸ்வேதாம்மா.., நான் டாடி மாதிரி உயரமா வளர என்ன சாப்பிட வேண்டும்...?" என்று வினவினான்.

"உன் டாடி மாதிரி வளர வேண்டுமென்றால்.. இந்த இட்லிகளை சாப்பிட்டு விட்டு.. இந்தப் பாலையும் குடிக்க வேண்டும்.." என்று அவள் கூற... "பால் குடிக்க வேண்டுமா...?" என்றபடி அவன் முகம் அஷ்டகோணலாக மாறியது. பின் தந்தையின் புறம் திரும்பியவன் "டாடி.. ஸ்வேதாம்மா மாதிரி அழகாக சிரிக்க என்ன சாப்பிடணும்..?" என்று வினவ.. கார்த்திக் ஸ்வேதாவைப் பார்த்தான்.

இன்னும் நிறம் மாறாமல்.. சிவந்திருந்த கன்னங்களை ரசனையுடன் நோக்கியவன்.. அவள் அமைதியாக இருப்பதைக் கண்டு அவளை சாதரணமாக்க எண்ணி "ஸ்வேதாம்மா... அழகாக சிரிக்கிறாளா..? அவள் சிரிப்பு டெலிபோன் மணி அடிப்பது போலல்லவா

இருக்கும்'' என்றவன் "டெலிபோன் மணி போல் சிரிப்பவள் இவளா..'' என்று பாடத் துவங்க..

ஸ்வேதாவும் கலகலவென சிரித்து "எங்கள் ஆண்டனி கூட இப்படித்தான் கூறுவார் சார்..'' என்றவளிடம் "ஆண்டனியா..? யார் அது..?'' என்று வினவினான். "உங்களுக்குத் தெரியாதா..?'' என்று கேட்டவள் அவன் புறம் நன்றாகத் திரும்பி அமர்ந்து கொண்டு "என் எம்.டி செந்தில் சாரை உங்களுக்கு தெரியும் தானே..?, அவர் பேசுவது பாட்ஷா படத்தில் ரகுவரன் பேசுவதைப் போல் இல்லை..? அதனால் தான் இந்த பெயர்'' என்று அவள் கூறியதற்கு சத்தமாக சிரித்தான்.

கூடச் சேர்ந்து சிரித்து விட்டு "நான் எல்லாரையும் பட்டப் பெயர் வைத்துத் தான் அழைப்பேன் சார்..., என் ஹாஸ்டல் வார்டனுக்கு டுமீல் என்று பெயர் வைத்தேன்.. அவர் எப்போதும் ஸ்வேதா டிஷ்யூம்.. ரம்யா டிஷ்யூம்.. என்பதைப் போல் பேசுவாரா.. அதனால் தான்'' என்று இடையிடையே சிரித்த படி கூறியவள் "உங்களுக்கு கூட ஒரு பெயர் வைத்திருக்கிறேன் சார்..'' என்று பேச்சு வாக்கில் கூறி விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.. உளறி விட்டாயே ஸ்வேதா! சொல்லாவிட்டால் இவன் விட மாட்டானே!

வியப்புடன் "அப்படியா?'' என்றவன் "என்ன பெயர் ஸ்வேதா?'' என்று ஆர்வமாக வினவினான். சரி ஆவது ஆகட்டும்! கூறி விட வேண்டியது தான்! "அது வந்து சார்...'' என இழுத்தவள்.. தொண்டையைச் சரி செய்து கொண்டு..அடிக்குரலில் "விடாது கருப்பு...'' என்று



திகிலாகக் கூற.. ஹரிஷ் சிரிக்கத் துவங்கி விட்டான். ஸ்வேதாவும் அவனுடன் இணைந்து நகைக்க.. கார்த்திக்கிடம் இருந்து சத்தம் வராததைக் கண்டு அவனை நோக்கினாள்.

அவன் உணர்ச்சியற்று அவளைப் பார்த்து "இந்தப் பெயரை ஏன் வைத்தாய்..?'' என்றான்.

அவனது குரலும் முகமும் பயத்தைத் தர.. "அ.. அது...'' என்றவள் தலை குனிந்து "நம் முதல் சந்திப்பு கசப்பில் முடிந்ததால் உங்களை இனி வாழ்க்கையில் பார்க்கவேகூடாது என்று எண்ணியிருந்தேன்.. அதன் பின் கிஃப்ட் ஷோரூமில் உங்களைச் சந்திக்க நேர்ந்து விட்டதால் இந்த பெயர் வைத்தேன்..'' என்று அவள் கூறி முடிக்க "இங்கே வா..'' என்றழைத்தான்.

அவன் அருகில் சென்று நின்றவளை "ம்,'' என்று சைகை காண்பித்து அவளை குனியச் சொன்னான். என்ன ரகசியம் கூறப் போகிறானா என்றபடி அவனை நோக்கி அவளும், குனிய வேகமாக அவள் காதைப் பற்றியவன் அது வரை அடக்கி வைத்திருந்த சிரிப்பை வெளியிட்டு "ஸ்வேதா... யூ.. இடியட் .. உன்னை.. ஷாருக்கான், சல்மான்கான் என்று பெயர் வைப்பாய் என்று பார்த்தால் விடாது கருப்பு என்றா அழைக்கிறாய்..?.., உன்னை என்ன செய்கிறேன் பார்..'' என்று அவள் செல்லமாக காதை திருககினான்.

"ஐயோ.. வலிக்கிறது.. ப்ளீஸ் விட்டு விடுங்கள்.. ஷாருக்கான், சல்மான்கானை விட நீங்கள் ஸ்மார்ட் ஆயிற்றே பாஸ்! அந்தப் பெயரெல்லாம் உங்களுக்கு

"எதற்கு,...?" என்றதற்கும் அவன் மீண்டும் அவளது காதைத் திருக "ஆ! அம்மா... வலிக்கிறது.." எனக் கத்திக் கொண்டிருந்த ஸ்வேதாவைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தான் ஹரிஷ்.

# 10

**உன் விரல்களின் அழுத்தத்தில்...**
**உள்ளங்கையில் உருவான வெப்பம்**
**உடம் முழுதும் பரவி விட...**
**மறைத்து வைத்திருந்த உணர்வுகளனைத்தும்...**
**திரை விலக்கி வெளியே**
**வரத் துவங்கி விட்டன...!**

"இன்னும் கொஞ்சம்மா இன்னும் கொஞ்சம் முனியண்ணா..." என்றபடி முனியனின் முதுகில் ஏறி அந்தச் செடியிலிருந்த பூவை பறிக்க முயன்று கொண்டிருந்தான் ஹரிஷ்.

"ஹர்ஷு .. பார்த்து டா..." என்று பால்கனி வழியாக எச்சரித்துக் கொண்டிருந்த ஸ்வேதா அருகில் கார்த்திக் வரும் அரவம் உணர்ந்து அவனைப் பார்த்து முறுவலித்து "குட் மார்னிங் சார்" என்றாள்.

ஒரு தலையசைப்புடன் அவளது வாழ்த்தை ஏற்றுக் கொண்டவன் ஹரிஷ் விளையாடுவதையே பார்த்துக்



கொண்டு சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தான். ஸ்வேதாவின் புறம் திரும்பி "வேறு வழியே இல்லையா ஸ்வேதா...?" என்று வினவினான்.

"ம்" என்றபடி அவன் புறம் பார்வையை செலுத்திய ஸ்வேதா பின் ஹரிஷைப் பார்த்துக் கொண்டே "ஒரு வழி இருக்கிறது.. ஆனால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களோ என்னவோ என்று எனக்கு சந்தேகமாக உள்ளது" என்று கூற.... "ஸ்வேதா இப்போது நீ கூறுவது முட்டாள்தனமாக இருக்கிறது... நீ முடிவு செய்து விட்டால் நான் அதை மறுபரிசீலனை செய்வேன் என்று நினைக்கிறாயா..?" என்று வினவினான்.

ஹரிஷ் பள்ளிக்குச் செல்வதைப் பற்றித் தான்! அவனுடைய பயத்தைப் போக்கி.. மனதை மாற்றி.. மீண்டும் அவன் பள்ளிக்குச் செல்ல தயாராக வேண்டுமென்றால்.. சில அடிப்படையான விஷயங்

களில் அவனுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்!

ஒன்று.. அவன் உடன் பயிலும் மாணவர்களை.. எதிரியாக.. சந்தேகக் கண்ணுடன் நோக்குவதை நிறுத்தி.. சிரித்து மகிழ்ந்து.. கலந்து விளையாடும் ஆர்வத்தைத் தூண்டி விட வேண்டும்.. இரண்டு.. பரிவும்,அன்பும் காட்டி சிரித்த முகத்துடன் பக்குவமாக அவனை வழி நடத்திச் செல்லும் ஆசிரியையின் அறிமுகம் அவனுக்குக் கிட்ட வேண்டும்.. மூன்று.. இப்போது அவன் இருப்பது விடுதியில் அல்ல.. அவனது அன்புத் தந்தையும், அவனது செல்ல ஸ்வேதாம்மாவும் வசிக்கும் அவனுடைய அழகான வீடு..

இந்த மூன்றையும் அவனுக்குப் புரிய வைத்து விட்டால் விஷயம் முழு வெற்றி தான் என்று எண்ணி வைத்திருந்த ஸ்வேதா அதற்கான வழியையும் கண்டு பிடித்து விட்டிருந்தாள். ஆனால் அதை கார்த்திக் ஏற்று கொள்வானோ.. மாட்டானோ..என்கிற சந்தேகமும் வலுப் பெற்றிருந்தது! அதனால் தயங்கிபடியே அவனிடம் விஷயத்தைக் கூறினாள்.

''எனக்குத் தெரிந்த ஒருவர் ஸ்கூல் வைத்து நடத்துகிறார். நீங்கள் எதிர்பார்க்குமளவு மிகப்பெரிய பள்ளி இல்லை. ஆனால் தரமான.. நிறைந்த கல்வியை அவர்கள் மாணவர்களுக்கு அளிப்பார்கள். அன்பும், பண்பும் நிறைந்த அருமையான ஆசிரியர்கள் அவர்களிடம் உள்ளனர்.

அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியையை நான் சந்தித்திருக்கிறேன்.. அவர் அநாதை ஆஷ்ரமம் ஒன்றையும் நடத்தி வருகிறார். அந்த ஆஷ்ரமத்தில் வளர்ந்த பெண்கள் தான் அந்தப் பள்ளியில் ஆசிரியர்களாக உள்ளனர். புது பள்ளி எப்படி இருக்குமோ என்று நீங்கள் பயப்பட வேண்டாம். அவர்கள் பத்து வருடமாக இந்தக் கல்விச் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

சார்.. நீங்கள் அந்த தலைமை ஆசிரியையைப் பார்த்தால் உங்களுக்கு மிகவும் பிடித்து விடும்.. கருணையும்,அன்பும் ததும்பும் அவர்கள் முகத்தை ஒரு முறை கண்டு விட்டீர்களானால் நீங்களும் இதை ஆமோதிப்பீர்கள். நானே அங்கே வேலை பார்க்கும் அனைவரையும் சந்தித்திருக்கிறேன்.. ரம்யாவின் தோழி ஒருத்தி அங்கே பணி புரிகிறாள்.. அவளால் தான் அந்தப் பள்ளியின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது''



''சார்.. பெரிய பள்ளியில் பணத்தைக் கொட்டுவதைக் காட்டிலும் இந்த பள்ளியில் அவனைச் சேர்ப்பது எவ்வளவோ நன்மைகளைத் தேடித் தரும்.. நிச்சயம் ஹரிஷின் பயம் முழுவதுமாக நீங்கி விடும்.. நாம் ஒரு முறை சென்று பார்க்கலாம் நீங்கள் விரும்பினால்'' என்று நீண்ட பேச்சை உதிர்த்தவளைப் பெருமையுடன் நோக்கி...

''ஸ்வேதா உனக்கு ஞாபகம் இருக்கிறதா..? நீ என் காரை வழி மறித்த அன்று உன்னைக் காப்பாற்றியதற்கு என்னை ஆபத்பாந்தவனாக, அனாதரட்சகனாக நினைத்துக் கொண்டாயா என்று வினவினேன்.., ஆனால் உண்மையில் அனாதரட்சகனாக நடந்து கொண்டிருப்பது நீ தான்.., என்னை ஒவ்வொரு இக்கட்டிலிருந்தும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாய்..,'' என்று சிரித்தவன் தொடர்ந்து,

''இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வர இயலாமல் தவித்துக் கொண்டிருந்தேன்.. சுலபமாக நீ என்னைத் தவிப்பிலிருந்து மீட்டு விட்டாய் நீ கூறியபடியே செய்கிறேன் மிகவும் நன்றி'' என்று அவள் கையைப் பற்றி அழுத்தி விட்டுச் சென்றான்.

மறுநாள் காலை ஸ்வேதாவைத் தேடி அவள் அறைக்குச் சென்றான் கார்த்திக். ''ஸ்வேதா இன்று ஹரிஷை சேர்க்க பள்ளிக்குச் செல்லலாம் என்று கூறினாயே.. அரை மணி நேரத்தில் தயாராய் இரு.. நான் வந்து அழைத்துக் கொள்கிறேன்..'' என்றவனிடம் ''சார்... ஹரிஷையும் அழைத்துச் செல்லலாமா..?'' என்று வினவினாள்.

குழப்பத்துடன் அவளை நோக்கிய கார்த்திக் ''ஸ்வேதா.. நீ புரிந்து தான் பேசுகிறாயா..? இப்போது அவனிடம் நாம் பள்ளிக்குச் செல்லப் போகிறோம் என்று கூறினால் கண்டிப்பாக கோபப்பட்டு கத்தி ஊரைக் கூட்டி விடுவான்..''

''சார்... நீங்கள் தான் புரியாமல் பேசுகிறீர்கள் ,எப்படியும் ஒரு நாள் நாம் இதை எதிர்

நோக்கத் தான் வேண்டும்.. பள்ளிக்கு அழைத்து செல்வதாகக் கூற வேண்டாம்.. அதை நான் பார்த்து கொள்கிறேன்.. ஆனால் அவன் இன்று நம்முடன் நிச்சயம் வர வேண்டும்..'' என்று ஸ்வேதா நிச்சயமாகக் கூறினாள். ''சரி தான்'' என்றபடி அவனும் சென்று விட்டான்.

வெளியில் செல்லப் போவதாகக் கூறி ஹரிஷையும் அழைத்துக் கொண்டு அடுத்த அரைமணி நேரத்தில் பள்ளியை நோக்கி இருவரும் காரில் பிரயாணமானார்கள்.

ஜன்னல் வழியே வெளியே பார்த்த படி அமர்ந்திருந்த ஹரிஷ் ''எங்கே போகிறோம் ஸ்வேதாம்மா..?'' என்று வினவினான். ஸ்வேதா என்ன பதில் கூறப் போகிறாள் என்றபடி கார்த்திக் ஸ்வேதாவை நோக்கினான்.

ஹரிஷைத் தூக்கி மடியில் அமர்த்திக் கொண்ட ஸ்வேதா ''அதுவா கண்ணா... நாம் இப்போது.. என்னுடைய ஃப்ரண்டைப் பார்ப்பதற்காக அவள் வேலை பார்க்கும் பள்ளிக்குச் செல்கிறோம்..'' என்று கூற ''ஸ்கூலா...?'' என்று திகைத்தவன் மீதிப் பயணம் முழுதும்



அமைதியுடனே அமர்ந்திருந்தான்.. அவனில் தெரிந்த மாற்றத்தைக் கண்டு கார்த்திக்கும் ஸ்வேதாவும் ஒருவரையொருவர் பார்வையைப் பரிமாறிக் கொண்டனர்.

அந்தப் பள்ளியின் முன் காரை நிறுத்தி கதவை திறந்து விட்டான். அமைதியாக அமர்ந்திருந்த ஹரிஷைத் தூக்கிக் கொண்டு இறங்கினாள் ஸ்வேதா. பள்ளியின் பெயர்ப் பலகையும், வாசலில் வரவேற்ற பச்சை மரங்களும் திருப்தியைத் தர உள்ளே நடந்தான் கார்த்திக்.

காரை விட்டு இறங்கியதும் நிமிர்ந்து பார்த்த ஹரிஷ் அது தான் படித்த பள்ளி அல்ல என்பதை அறிந்து கொண்டு.. ஸ்வேதாவின் கைகளைப் பற்றினான்.

இதற்காகவே காத்துக் கொண்டிருந்த ஸ்வேதா தன் கையைப் பற்றியவனைத் தூக்கி ''என்ன ஹர்ஷு.. என்ன பார்க்கிறாய்..?'' என்று வினவ ''அந்த மரம் நம்ம வீட்ல இருக்கிறதல்லவா ஸ்வேதாம்மா..?'' என்று வினவ.. கார்த்திக் ஆச்சர்யமாக ஸ்வேதாவை நோக்கினான்.

அவன் பார்வையைக் கண்டு கொள்ளாமல் சிறுவனுக்கு பதில் கூறத் தொடங்கினாள் ஸ்வேதா. ''ஆமாம்டா கண்ணா.. இந்தச் செடி கூட நம் வீட்டில் இருக்கிறது தானே?'' எனக் கூறி செடி பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி விட்டாள். ஏற்கனவே தெரிவித்திருந்த படியால் ரம்யாவின் தோழி அர்ச்சனா அவர்களை வாசலிலேயே வரவேற்றாள். ''மேடமைப் பார்க்கப் போகலாமா..?'' என்று வினவிக் கொண்டிருந்தபோதே அந்தத் தலைமைஆசிரியை அறையை விட்டு வெளியே வந்தார்.

அவரைப் பார்த்ததும் ஹரிஷை இறக்கி விட்டு விட்டு ''வணக்கம் மேடம்... என்னை நினைவிருக்கிறதா?'' என்று வினவ, ''உன்னை எப்படிமா மறக்க முடியும்? மாதம்தவறாமல் இல்லத்திற்கு வருகை தருபவளாயிற்றே'' என்றவர், ''நீங்கள் மிஸ்டர்.கார்த்திக் தானே..? உங்களைப்பற்றி புத்தகத்தில் படித்திருக்கிறேன்'' என்று கூறவும், சிரித்தபடி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''அந்த மரத்தடிக்குச் சென்று பேசுவோமா..?'' என்றவர் இருவரையும் அழைத்துக் கொண்டு அங்கே இருந்த மர பெஞ்சில் அமர்ந்தார்.

''மேடம்.. ஹரிஷை இந்த ஸ்கூலில் சேர்க்க வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம்.. நான் அர்ச்சனாவிடம் நேற்றே விஷயத்தை உங்களிடம் சொல்லச் சொல்லியிருந்தேனே!'' என்று வினவினாள்.

''கூறினாள் அம்மா..'' என்று தலையசைத்தவர் அமைதியாக தலைகுனிந்து அமர்ந்திருந்த கார்த்திக்கை நோக்கி ''மிஸ்டர்.கார்த்திக் இதில் நீங்கள் வருத்தப்படுவதற்கோ, தலைகுனிவதற்கோ,குற்றம் செய்துவிட்டதைப்போல் உணர்வதற்கோ அவசியமே இல்லை. ஒரு பொறுப்பான அப்பாவிற்குரிய அனைத்து தகுதிகளும் உங்களுக்கிருக்கிறது.... அது ஹரிஷைப் பார்க்கும்போதே தெரிகிறது..''

''பொதுவாக யார் மனதையும் யூகிப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.. அது குழந்தைக்கும் பொருந்தும் தான்.. எதை எப்படி எடுத்துக் கொள்வார்கள் என்பதை யாராலும் தீர்மானிக்க முடியாது. சில குழந்தைகள் அழுது



அடம்பிடித்து வேண்டியதைச் சாதிப்பார்கள்.. சில குழந்தைகள் எதையும் வாய்விட்டு கூறாமல் அமைதியாக இருந்தே பழகிவிடுவார்கள். அந்த வயதில் மனதில் உண்டாகும் அழுத்தம் கடைசிவரை நிலைத்திருக்கும் ஒன்று..''

''எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணிற்கு இருபத்தியேழு வயதில் இந்தக் காரணத்திற்காகவே மனநிலை சரியில்லாமல் போனது... எதையும் அவ்வளவு சீக்கிரம் வெளிப்படுத்துவதில்லை.. தன்னைப் பெற்றவர்களாக இருந்தால் கூட, வெளிப்படுத்துவதில் தயக்கம்...பயம். சிறு வயதில் சாக்ஸ் வேண்டுமென்று தந்தையிடம் கேட்க நினைத்ததை அந்தப்பெண் இப்போது...மனநிலை சரியில்லாத இந்தநேரத்தில் கேட்டிருக்கிறாள்.

அடக்கி அடக்கி.. மனதில் வைத்திருந்த அத்தனை அழுத்தமும்.. இப்போது தான் அவளுக்கு வெளி வந்திருக்கிறது. அதனால் இதைப் போன்ற மன அழுத்தங்களை முளையிலேயே கிள்ளி விடுவதுதான் நல்லது.. குழந்தைகளை நாம் தான் ஊக்கப்படுத்த வேண்டும். அனைத்திற்கும் சாய்ஸ் கொடுக்க வேண்டும்.. அதிலிருந்து அவனுக்குப் பிடித்ததை அவனே தேர்ந்தெடுக்க வைக்க வேண்டும்.

அவனே எனக்கு இது வேண்டும் டாடி என்று சொல்லுமளவிற்கு நாம் தான் அவனை மாற்ற வேண்டும்.. ஹரிஷைப் பொறுத்த வரை.. அமைதியாக அத்தனையையும் பொறுத்துக் கொண்டிருந்ததுதான் ஆபத்தாக முடிந்து விட்டது.

அவன் தன்னிடம் வம்புசெய்த மாணவர்களை எதிர்த்து சண்டை போடவுமில்லை.. ஆசிரியைப் பற்றியும் தந்தையிடம் கூறவுமில்லை.. பத்து நிமிடத்திற்கு மேல் பேசாமல் அவன் அமைதியாக இருந்தால் நீங்களே பேச்சுக் கொடுங்கள். அவனின் விருப்பமின்மையை வாய்விட்டுத் தெரிவிக்க நீங்களே அவனுக்கு வாய்ப்பளியுங்கள்.

அவனுடைய மாற்றத்துக்கு உண்டான முழுப் பொறுப்பும் உங்கள் இருவரிடமும் தான் உள்ளது'' என்று அவர் முடிக்கையில் கார்த்திக்கின் மனதில் உண்டான திருப்திக்கும் மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை.

அவர் பேசி முடித்ததும் ''நிச்சயமாக மேடம்'' என்று நெகிழ்ந்த குரலில் கூறிக் கொண்டிருந்தவனை நோக்கிய ஸ்வேதாவின் பார்வை அவனையும் தாண்டிச் சென்று, தூரத்தில் யாருடனோ விளையாடிக் கொண்டிருந்த ஹரிஷின் மீது வியப்புடன் படிந்தது.

இவ்வளவு நேரமாக இவனை கவனிக்கவில்லையே! என்றபடி அவனைப் பார்க்க... ஸ்வேதாவின் பார்வை எங்கோ பதிந்திருப்பதைக் கண்டவன்,அவள் பார்வை சென்ற இடத்தை நோக்கியவுடன் அதிசயப்பட்டான்.

பத்து நிமிடத்திற்கு முன் என்ன நடந்தது என்னவென்று, அவர்களுக்கு எப்படித் தெரியும்?

ஸ்வேதா இறக்கி விட்டதும் சற்றுநேரம் நின்று அவர்களைக் கவனித்த ஹரிஷ் புதிதாக வந்த பெண்மணியுடன் இருவரும் லயித்து விட்டதைக் கண்டு பார்வையைத் திருப்பினான். அவன் வீட்டிலிருப்பதைப் போன்ற பூச்செடி ஒன்று கண்ணில் பட.. இவர்களின்



பேச்சைக் கேட்பதற்கு செடியின் பக்கம் செல்லலாம் என்று முடிவெடுத்து ஓடிப் போனான்.

அந்தச் செடியின் மீது அழகான பட்டாம்பூச்சி அமர்ந்திருப்பதைக் கண்டவன் மெல்ல நடந்து சென்று அதைப் பிடிக்க முயன்றான்.

அது கையில் சிக்காமல் பறந்துவிட அதைத்தொடர்ந்து ஓடினான். கடைசியில் அது இன்னொரு செடியின் மீது அமர, மெதுவாக உட்கார்ந்த நிலையிலெயே மெல்லமெல்ல அருகில் சென்றவன் அதைப் பிடிக்கமுயன்ற அதேவேளையில்.. இன்னொரு பிஞ்சுக்கரமும் பட்டாம்பூச்சியை பிடிக்க முயன்றது.

அது மீண்டும் பறந்து விட்டதைக் கண்டு அருகில் திரும்பியவன், ''ஐயோ.. இப்போதும் பறந்து விட்டது..'' என்ற அந்தச் சிறுமி அவன் கைகளைப் பற்றி உதட்டில் கை வைத்து ''ஷ்...'' என்றவள் இன்னொரு செடியின்மீது அமர்ந்திருந்த வண்ணத்துப்பூச்சியைக் காண்பித்தாள்.

மறுபடியும் அது கண்ணில் பட்டு விட்டதைக் கண்டு இருவரும் மெல்ல நடந்து அருகில் சென்ற போது ''ஸ்ரீ... இங்கே என்ன செய்கிறாய்?'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பிய சிறுமி அவன் கைகளை விடாமலே அவன் காதுக்குள் ''பி.டி மிஸ்'' என்று முணுமுணுத்தாள்.

மிஸ்-ஆ என்று அரண்டு போய் மிரண்டு விழித்துக் கொண்டிருந்தவனின் அருகில் குனிந்து மண்டியிட்ட அந்தப் பெண்ணோ ''ரொம்ப அழகாக இருக்கிறீங்க குட்டி நீங்க. இங்கே படிக்கிறீர்களா?'' என்று வினவினாள். ஆச்சரியத்துடன் 'இல்லை' என தலையசைத்து

மறுத்தவன் ''என் ஸ்வேதாம்மாவும் டாடி-யும் வந்திருக்கிறாங்க'' எனக்கூறி தூரத்தில் பேசிக் கொண்டிருந்தவர்களைக் கை காட்டினான்.

திரும்பிப் பார்த்து ''அப்படியா..?'' என்றவள் ''நீங்க இங்கே என்ன செய்றீங்க?'' என்று சிரித்தபடியே கேட்டாள்.

அவன் பதில் கூறுவதற்குள் ஸ்ரீ என்றழைக்கப்பட்ட சிறுமி ''பட்டாம்பூச்சி பிடிக்கிறோம் மிஸ்'' என்று கூற ''அப்படியா'' என்றவள் ''வாங்க.. நானும் உங்களோட சேர்ந்து பிடிக்கிறேன்..'' என்றாள். பின் மூவரும் சேர்ந்து விளையாடியபடி உட்கார்ந்தும் பறந்தும் ஆட்டம் காட்டிக் கொண்டிருந்த பட்டாம்பூச்சியைப் பிடிக்க முயன்று தோற்று கொண்டிருந்தனர்.

விளையாடுகையிலேயே, தன் பெயரைக் கூறி அறிமுகப்படுத்திக் கொண்டவன் சிறிது நேரத்திலேயே அவர்களுடன் கலகலவென சிரித்தபடி ஓடி விளையாடிக் கொண்டிருந்தான் ஹரிஷ்.

தலைமை ஆசிரியையிடம் நன்றி கூறி விட்டு விரைந்து வந்த இருவரும் ஹரிஷின் அருகில் சென்றனர். கல கல சிரிப்புடன் அந்தச் சிறுமியின் கையைப் பற்றி ஓடிக் கொண்டிருந்தவன் இவர்களிருவரையும் கண்டு ''ஸ்வேதாம்மா..'' என்று ஓடி வந்தான்.

அதற்குள் அந்தப் பெண்ணும் இவர்களை நோக்கிப் புன்னகைத்தாள். ''மிஸ்.. இது தான் என் டாடி.. இது என் ஸ்வேதா மா..'' என்ற சிறுவனிடம் முறுவலித்தவள் ஸ்வேதாவிடம் ''நீங்கள் அர்ச்சனாவின் தோழி தானே? நான் உங்களைப் பார்த்திருக்கிறேன்..'' என்றாள்.



''ஆமாம்..'' என்று வாய் பதில் கூறினாலும், ஸ்வேதாவின் கண்கள் ஹரிஷிடமே நிலைத்திருந்தன. அந்தச் சிறுமியுடன் வியர்வை வழிய ஓடி விளையாடிக் கொண்டிருந்தான் ஹரிஷ். கார்த்திக்கும் அதிசயத்தைக் காண்பவன் போல் மகனைப் பார்த்துக் கொண்டிருந்தவன்... அந்த மிஸ்,ஸ்வேதாவிடம் ஏதோ கேட்பதையும்... அவள் அதற்கு பதில் கூறாமலிருப்பதையும் கண்டு, ஸ்வேதாவின் கையை அழுத்தினான்.

சட்டென அவள் பக்கமாகத் திரும்பி ''சாரி'' என்றவள்.. ''இவனை இங்கே சேர்ப்பதற்காகத் தான் வந்திருக்கிறோம்'' என்று கூறினாள்.

சற்று நேரத்தில் அந்தப் பெண் ஸ்ரீயை அழைத்துக் கொண்டுச் சென்று விட வியர்வை வழிய தன் முன்னே நின்றவனை முந்தானையால் ஸ்வேதா துடைத்து விட்டுக் கொண்டிருந்தாள்.

''ஸ்வேதாம்மா... ஸ்ரீயுடன் விளையாட என்னை நாளையும் அழைத்து வருகிறீர்களா?'' என்று வினவினான். பதில் கூறாமல் அவனை அணைத்துக் கொண்டவளின் விழிகள் கலங்கி இருந்ததைக் கண்டு, கார்த்திக் நெகிழ்ந்து போனான்.

''ஸ்வேதா,... நீ எவ்வளவு அன்பானவள்...! இவனுக்கும் உனக்கும் ரத்த பந்தம் இருக்கிறதா? இல்லை... இரண்டு மாதத்திற்கு முன்பு வரை ஹரிஷ் என்பவனைப் பற்றி நீ நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டாய்! எனக்காக... என் ஒருவனுக்காகவே... அவனுடன் போராடி... ஜெயித்து... ஸ்வேதா...

இதற்கெல்லாம் நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

அன்பும்,கனிவும் நிறைந்த உன் குணம் தான் எவ்வளவு உன்னதமானது! நீ என்னவள்.. எனக்கே எனக்கானவள்... உன் வாழ்வு முழுமைக்கும் உனக்காக சேவை செய்து என் நன்றியைத் தீர்த்துக் கொள்வேன்... என மனதுக்குள் உரையாடியபடி நெகிழ்ந்து நின்ற கார்த்திக்கைக் கண்டு 'என்ன' என்று புருவம் உயர்த்தினாள்.

'ஒன்றுமில்லை' என்பது போல் தலையசைத்தவன் ஹரிஷைத் தூக்கிக் கொண்டு ஸ்வேதாவின் கைகளையும் பற்றிக் கொண்டு காரை நோக்கி நடந்தான். வீட்டிற்கு வந்தபின் மறுபடியும் அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டவன் அவளை நேராகத் தன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

பற்றியிருந்த அவள் கரத்தை தன் நெஞ்சில் வைத்து அழுத்தியவன் ''ஸ்வேதா... ஸ்வேதா... இந்த நொடி... நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றேன் என்பதை வார்த்தைகளால் கூற முடியாது... இதோ... இந்த அறையில் எத்தனையோ இரவுகளைத் தூக்கமில்லாமல் கழித்தவன் நான். இன்று நீ வந்த பின்பு, ஒவ்வொரு நாளும் நிறைவுடன்... நிம்மதியுடன் கழிகிறது. அறியாத வயதில் வாழ்வை முடித்துக்கொள்ளும் அளவிற்கு பாதிக்கப்பட்டிருந்த என் மகனை.. அவன் வாழ்வை அடியோடு மாற்றியமைத்து... நீ சாதித்திருக்கிறாய்!

நான்... நான்... இந்த உலகத்திலேயே மிக மிக மகிழ்ச்சியானவன் இந்த நொடி நான் தான் தெரியுமா



ஸ்வேதா..., ஸ்வேதா.. உனக்கு என்ன வேண்டும் கூறு... நீ என்ன கேட்டாலும் தரத் தயாராய் இருக்கிறேன்..., என் சந்தோசத்தை மீட்டுக் கொடுத்து விட்டாய்! உனக்கு என்ன வேண்டும் சொல்.. சொல் ஸ்வேதா..'' என்று அவன் மகிழ்ச்சியின் உச்சத்தில் திளைத்த படி.. உணர்ச்சி நிறைந்த குரலில் வினவ...என்ன கூறுவதென்று புரியாமல் திகைத்தாள்.

கார்த்திக்கின் மகிழ்ச்சி முக்கியம்.. அவன் சந்தோசத்தை மீட்டுக் கொடுப்பேன் என்றெல்லாம் கூறியவள்.. இன்று தான் எண்ணியது நிறைவேறி முழு மகிழ்ச்சியுடன் காணப்படும் கார்த்திக்கைக் கண்டு அளவில்லாத மகிழ்ச்சியும் உவகையும் கொண்டாள். ''ம்ஹ்ம். கார்த்திக் சார், இதே சந்தோசத்துடன் நீங்கள் எப்போதும் இருக்க வேண்டும்.. இந்த மகிழ்ச்சி உங்கள் வாழ்க்கை முழுவதும் தொடர வேண்டும்.அது மட்டும் தான் எனக்கு வேண்டும்'' என்று மனதாரக் கூற, வார்த்தைகளற்று அவளையே நோக்கினான் கார்த்திக்.

அவன் பார்வையைக் கண்டு முறுவலித்தவள் ''ஷ்... ஆரம்பித்து விட்டாரடா.. என்னை ஆசை தீர பார்த்துக் கொண்டிருக்கும் நாள் வரும்.. அப்போது பார்த்துக் கொள்ளலாம்.. இப்போது.. இந்தக் காபியைக் குடியுங்கள்..!'' என்று அன்றொரு நாள் அவனுடைய அலுவலகம் சென்ற போது அவன் கூறிய வார்த்தைகளை இன்று அவள் கூறினாள்.

அவள் கையைப் பற்றி அருகிலிழுத்து அவள் இடையில் கரம் பதித்து, ''ஏய்.. வாயாடி... அன்று நான் அதை எந்த அர்த்தத்தில் கூறினேனென்று தெரியுமா..?''

எனக் கேட்டு அவள் நெற்றியில் முட்டினான்.

''என்ன அர்த்தத்திலாம்...?'' என்று நிமிர்ந்து நோக்கி கண்களை விரித்து அவள் கேட்க... அவள் விழிகளுடன் தன் விழிகளைக் கலந்தவன், ''ஸ்வேதா..... இந்தக் கண்கள் என்னை முழுதாக சிறைப்படுத்துவதை நீ அறிவாயா...?, என் உடலின் ஒவ்வொரு அணுவும்... இந்தக் கண்களின் ஒரு பார்வைக்காக ஏங்குவதை... நீ உணர்வாயா...?, இந்தக் கண்களுக்குள் புகுந்து... புதைந்து விடக்கூட, இந்த ஆறடி உயரம் தயாராக இருக்கிறது... என்னைப் பித்தனாக அலையுறச் செய்யும் இந்த வசீகர சக்தி இந்தக் கண்களுக்கு எப்படி கிடைத்தது...?'' என்றபடி அவளது இரண்டு கண்களிலும் மாறி மாறி முத்தமிட்டான்.

''ஸ்வேதா உனக்குள் தொலைந்து போகும் என்னை.. நீ முழுதாகக் காணப் போகும் நாள் தொலைவில் இல்லை... அன்று கூறுகிறேன்.. என் மனதின் எண்ணங்களையும்... ஆசைகளையும்...'' என்றவன் அவளை இறுக அணைத்து நெற்றியில் இதழ் பதித்து விட்டு விலகினான்.

அவன் வார்த்தைகளிலும்... செயலிலும்... மனதில் ஆயிரமாயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடிக்கத் தொடங்க.. துள்ளலுடன் வெளியே வந்த ஸ்வேதா.. ஹரிஷைத் தேடி கீழே சென்றாள்.

டிவியில் கார்ட்டூன் பார்த்தபடி உணவருந்திக் கொண்டிருந்தவனின் அருகில் சென்றமர்ந்து, ''ஹரிஷ் குட்டிப் பையா... நீயே சாப்பிடுகிறாயா? ஏன் என்னை அழைக்கயில்லை?'' என்றாள் வியப்புடன்.



அவளைப் பார்த்துச் சிரித்தவன் ''நீங்கள் ரொம்ப நேரமா வரவில்லையா..? எனக்கு பசித்ததா...அதனால் தான் உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று, நானே முனியன் அண்ணாவிடம் சென்று சாப்பாடு வாங்கிக் கொண்டேன்'' என்றான்.

''என் தங்கம்.. செல்லம்...'' என்று கொஞ்சியவள் சிறிது இடைவெளி விட்டு ''ஹர்ஷு... இன்றைக்கு நாம் சென்றோமே அந்த ஸ்கூல் உனக்கு பிடித்திருந்ததாடா...?'' என்று வினவ..

வாயிலிருந்ததை விழுங்கிவிட்டு ''ரொம்பப் பிடிச்சுருக்கு ஸ்வேதாம்மா... அங்க மிஸ் திட்டவே மாட்டேன்கிறாங்க.. அப்பறம் ஸ்ரீ என் கூட விளையாடுறா..., எனக்கு இதெல்லாம் ரொம்ப பிடிச்சுருக்கு ஸ்வேதாம்மா'' என்று கூறினான்.

''அப்படியென்றால் நீ அந்த ஸ்கூலில் படிக்கிறாயா கண்ணா? அங்கே மிஸ் திட்டவே மாட்டாங்க.. எல்லாரும் உன் கூட விளையாடுவாங்க. மிஸ் திட்டினா கூட நீ உடனே ஸ்வேதாம்மா கிட்ட சொல்லிடணும்... சரியா? நீ காலைல ஸ்கூல் போகும்போதும்.. திரும்பி வரும்போதும் நானும், டாடி-யும் உன் கூடவே வருவோம்'' என்று அவள் கூறிக் கொண்டிருக்கையில் ''நான் ஸ்கூல் விட்டு வரும் போது எனக்கு பிடிச்ச மில்க் ஷேக் செய்து தருவீர்களா ஸ்வேதாமா..?'' என்று அவனது ஒப்புதலை ஒரே கேள்வியில் தெரிவித்தான்.

அவனைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொஞ்சிய ஸ்வேதா.. ''மில்க் ஷேக் மட்டுமில்லை ஹர்ஷு... உனக்குப் பிடிச்ச அவல் உப்புமா, கேசரி எல்லாம்

செய்து தருவேன்'' என்ற போது, சோபாவில் அவளருகில் வந்தமர்ந்தான் கார்த்திக்.

''ஏன் ஹரி.. உன்னை ஸ்கூல் அனுப்புவதற்கும், உப்புமா செய்து கொடுப்பதற்கும் உனக்கு உன் ஸ்வேதாம்மா மட்டும் போதுமா... டாடி வேண்டாமா?'' என்று கேட்க அதற்கு அவன் சிரிப்புடன், ''நீங்களும் தான் ஸ்வேதாம்மா கூட வரணும் டாடி'' என்று கொஞ்சினான். ''நான் தேவகி ஆன்ட்டி கிட்ட சிப்ஸ் வாங்கி வரட்டுமா?'' எனக் கூறிக்கொண்டே உள்ளே ஓடினான்.

''அந்தத் தலைமை ஆசிரியையிடம் பேசி நாளையே ஹரிஷை பள்ளியில் சேர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும் சார்'' எனக் கூறியபடி தன் கைபேசியில் எண்களை அழுத்தத் தொடங்கினாள்...

பரபரப்பாக அவள் செயல்படுவதைக் கண்டு வியப்புடன் அவளை நோக்கியவன் குனிந்து அவள் தோளில் தலைசாய்த்து ''ஸ்வேதா...'' என்றழைத்தான். அவன் தலைமுடி கழுத்தில் உரசியதால் கூசியவள், சிவந்த முகத்தை மறைத்து எண்களை அழுத்துவது போல் மேலும் குனிந்தவளிடமிருந்து, கைபேசியை பறித்து அருகிலிருந்த மேஜையின் மீது வைத்தவன் மறுபடியும் ''ஸ்வேதா'' என்று கிசுகிசுப்பான குரலில் அழைத்தான்.

அந்தக் குரலால் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கியிருந்த ஸ்வேதா ''ம்ம்..'' என்றாள்.

''உன் மடியில் படுத்துக் கொள்ளட்டுமா?'' என்று வினவியவனுக்கு பதிலேதும் கூறாமல், சட்டென்று திரும்பி கண்களை அகல விரித்து அவனை நோக்கினாள்.



அவள் தோளிலிருந்து விலகியவன், மடி மீது தலை சாய்த்தான்.

தன்னியல்பாய் அவளது கரங்கள் அவனது தலை முடியைக் கோத.. இமை மூடி மோன நிலையில் ஆழ்ந்தான் கார்த்திக். தன் தலை முடியுடன் உறவாடிக் கொண்டிருந்த அவள் கைகளைப் பற்றியவன் முத்தமிட்டு, தன் கன்னத்தில் பதித்துக் கொண்டான். எவ்வளவு நேரம் இந்த நிலை நீடித்ததோ... கடிகாரம் கொடுத்த ஓசையில்.. கலைந்தவன், எழுந்து ஸ்வேதாவின் கன்னத்தில் முத்தமிட்டு ''தேங்க்ஸ் ஸ்வேதாம்மா'' எனக் கூறியபடி சென்றுவிட்டான்.

அவன் முத்தமிட்ட கன்னத்தை தடவியவள் மனதுக்குள் சந்தோஷ வண்டு ரீங்காரமிடுவதைக் கேட்டபடி தனக்குள்ளே சிவந்து... வெகு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாள்.

# 11

உலகத்திலேயே வசீகரமானது...

என்று நான் கருதுவது...

உறங்கும் குழந்தையையும்...

உனது சிரிப்பையும் தான்!

அன்று ஹரிஷை பள்ளியில் சேர்க்கும் நா
விடிந்ததிலிருந்து பரபரப்புடன் சுற்றிக் கொண்டிரு
ஸ்வேதாவும்,கார்த்திக்கும் ஹரிஷின் அறையி
கூடியிருந்தனர்.

''ஸ்வேதா.. இந்த பிங்க் அண்ட் வயட் டி-ஷ
நன்றாக இருக்கிறது பார்..'' என்று கார்த்திக் கூ
''சார்.அதை விட இந்த ப்ரௌன் ஷர்ட் நன்றா
இருக்கிறது'' என்றபடி வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்த
இருவரும்.

பதினைந்து நிமிடத்திற்கும் மேலாக வெறு
துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு நின்ற ஹரி
இருவரையும் முறைத்து, ''டாடி.... ஸ்வேதாம்மா... நீங்க
எனக்கு ஷர்ட் செலக்ட் செய்ய வேண்டாம், நானே
எடுத்துக் கொள்கிறேன்'' என்றபடி இருவரையும் விலக்
வேறு ஒரு சட்டையை எடுத்துக் காட்டினான்.

அவனது தேர்வில் இருவரும் திருப்தியாகி வி
அடுத்த அரைமணி நேரத்தில் மூவரும் பள்ளியின் முன்
நின்று கொண்டிருந்தனர்.

அட்மிஷன் முடிந்து ஹரிஷை அவன
வகுப்பறைக்கு அழைத்துச் சென்ற இருவரும், சற்
பதட்டமான மனநிலையிலேயே... பற்றியிரு
ஸ்வேதாவின் கையை விட்டுவிட்டு உள்ளே நுழைந்தவ
அங்கே அமர்ந்திருந்த அனைவரையும் சற்
மிரட்சியுடனே நோக்கினான்.

இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்த
இவனைப் பார்த்துக் கையசைத்து இங்கே வா என்று



அவளது அருகிலிருக்கும் இருக்கையைக் காட்ட அவன் மலர்ந்த முகத்துடன் ஸ்வேதாவைப் பார்த்து ''ஸ்வேதாம்மா. ஸ்ரீ என்னோட கிளாஸ் தான்...''என்றபடி அவளருகே சென்றான்.

அந்த வகுப்பறையில் இருந்த பெண் ஆசிரியை இவனை அறிமுகப்படுத்தி வைக்க அனைவரும் கை தட்டி இவனை வரவேற்றனர். அவனது முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி ஸ்வேதாவையும்,கார்த்திக்கையும் நிம்மதியுறச் செய்தது. அறிமுகம் முடிந்ததும் அவன் சென்று ஸ்ரீயின் அருகில் அமர்ந்து கொள்ள, இருவரும் வகுப்பறையை விட்டு வெளியே வந்தனர்.

''இன்னும் இரண்டு மணி நேரத்தில் பள்ளி முடிந்து விடுமே கார்த்திக் சார்.. நான் காத்திருந்து அவனை அழைத்துக் கொண்டே வருகிறேன்..'' என்று ஸ்வேதா கூறி விட...''சரி நான் சென்று உனக்குக் காரை அனுப்புகிறேன்.. வரட்டுமா..?'' என்று கிளம்பிச் சென்றான்.

பள்ளியும், பள்ளி மாணவர்களும் ஹரிஷிற்கு நன்றாகப் பழகிவிட.. அடுத்த ஒரு வாரத்தில் புதிதாகத் தைக்கப்பட்ட பள்ளிச்சீருடை, பை, காலணி சகிதம் உற்சாகமான மாணவனாக மாறிவிட்டான். சிறுவனாதலால் எளிதில் அனைத்தையும் மறந்து சிரிப்புடன் வலம் வர முடிந்தது அவனால்.

அவன் கிளம்பிச் செல்லும் காலை நேரம் பரபரப்புடனே செல்லும்.. மகனுக்காக கார்த்திக்கும், ஸ்வேதாவும் பார்த்து பார்த்து ஒவ்வொன்றும் செய்தனர்.

அன்றும் அப்படித்தான். வேக வேகமாக இட்லிகளை உள்ளே அடைத்துக் கொண்டிருந்த ஹரிஷிடம், ''மெல்ல

மெல்ல.. ஹரிஷ். உன் டைரியில் மிஸ் குறிப்பிட்டிருந்த எல்லாவற்றையும் உன் பையில் எடுத்து வைத்து விட்டேன்டா'' என்றாள்.

''ஸ்வேதாம்மா, இன்னைக்கு ட்ராயிங் புக் கொண்டு வரச் சொன்னாங்க மிஸ்.''

''இதோ எடுத்து வைக்கிறேன்'' என்றபடி இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தாள்.

சட்டை பட்டனை மாட்டிக் கொண்டே கீழே வந்த கார்த்திக், ''இன்னும் என்ன ஓடிக் கொண்டிருக்கிறாய் ஸ்வேதா..., எனக்கு முக்கியமான வேலையிருக்கிறது.. உங்கள் இருவரையும் பள்ளியில் விட்டுவிட்டு நான் அலுவலகம் செல்ல வேண்டும்'' என்றான்..

அதற்குள் ஹரிஷின் பை, மதிய உணவுப் பை சகிதம் அவனை அழைத்துக் கொண்டு வந்த ஸ்வேதா, ''எங்களை விட அப்படியென்ன உன் டாடிக்கு முக்கியமான வேலையென்று கேளடா?'' என்று ஹரிஷைத் தூண்டினாள்.

தந்தையின் பக்கமாகத் திரும்பி ''எங்களை விட முக்கியமான வேலை என்ன டாடி?'' என்றான் ஹரிஷ்.

அதற்கு முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு ''இப்போதெல்லாம் நீ டாடி-க்கு சப்போர்ட் செய்வதேயில்லை.. எப்போதும் அவள் பக்கமே பேசுகிறாய்'' என்று சிணுங்கிக் கொள்ள, கலகலவென சிரித்த படி தந்தையிடம் தாவியவன் அவனது கன்னத்தில் முத்தமிட்டு ''உங்களுக்கும் தான் டாடி சப்போர்ட் பண்ணுவேன்''என்று கூற ''என் தங்கம்'' என கொஞ்சியவன் பதிலுக்கு முத்தமிட்டான்.



தந்தை, மகன் பாசத்தை நெகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தவளை நோக்கியவன், ''ஹரிஷ் நீ எனக்கு மட்டும் கொடுத்ததில் உன் ஸ்வேதாம்மா பொறாமைப்படுகிறாள். பாவம். போனால் போகுது...அவளுக்கும் ஒன்று கொடுத்து விடு'' என்று வேண்டுமென்றே அவளை உசுப்பேற்றினான்.

'நான் பொறமைப்படுகிறேனா' என்று முகம் திருப்பிய ஸ்வேதாவை இழுத்து முத்தமிட்ட ஹரிஷ் கார்திக்கிடமிருந்து கார் சாவியை பிடுங்கிக் கொண்டு ஓடி விட்டான்.

அவனைத் தொடர்ந்து நடந்த கார்த்திக் ''ஸ்வேதா... உன்னுடைய பொறாமை நான் ஹரிஷை முத்தமிட்டதாலா... அல்லது ஹரிஷ் என்னை முத்தமிட்டதாலா..?'' என்று கேட்க, அதைக் கேளாதவள் போல் வேகமாக ''ஹரிஷ்...'' என்றபடி ஓடினாள் அவள்.

அவர்கள் இருவரும் சென்றதும் வீட்டுக்குள் நுழைந்த ஸ்வேதாவை செல்ஃபோன் அழைக்க, எடுத்து ''ஹலோ'' என்றவள் மறுபுறம் பேசியது தந்தை என்றறிந்ததும் ''அப்பா'' என்றழைத்தாள்.

''ஸ்வேதா குட்டி... எப்படியிருக்கிறாய் கண்ணே?''

''நன்றாக இருக்கிறேன்பா. அம்மா எப்படி இருக்கிறார்கள்? இன்னும் என்னிடம் கோபமாகத்தான் பேசுகிறார்கள்'' என்றாள் வருத்தத்துடன்.

''அவள் உன்னிடம் முறைத்துக் கொண்டாலும் அவளது நினைப்பு முழுதும் உன்னைச் சுற்றி தான்.. உன்னைப் பற்றியே அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறாள்.

நீயும் ஒரு முறை வீட்டுக்கு வந்து போயேன் கண்ணா..''

''ஹரிஷை இப்போது தான் டாடி பள்ளியில் சேர்த்திருக்கிறோம்'' என்று ஆரம்பித்தவள்,அவனது பிரச்சனைகள் அனைத்தையும் கூறினாள்.

முழுவதையும் குறுக்கிடாமல் கேட்டு முடித்தவர் ''சாதித்து விட்டாய் கண்ணா.., உன்னால் ஒரு சிறுவன் மறுவாழ்வு பெற்றான் என்றால் எனக்கு மகிழ்ச்சி தான்.. உன் அம்மா இதைக் கேட்டதும் சந்தோசப்படுவாள். ஒரு முக்கியமான விஷயத்தை சொல்லவே உனக்கு ஃபோன் செய்தேன். நான் வேலை விஷயமாக இன்று சென்னை வந்திருக்கிறேன். நேற்றே உன்னிடம் கூற வேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால் நேரம் கிடைக்கவில்லை.வேலை முடிந்ததும் உன்னைப் பார்க்க வருகிறேன். நீ உன் முகவரியை சொல்'' என்றபடி முகவரியைக் குறித்துக் கொண்டார்.

மதுரையில் உள்ள ஒரு பிரபல டெக்ஸ்டைல் நிறுவனத்தில் மேனேஜராகப் பணிபுரியும் சிவனேசன், இங்கு ஒரு கான்பரன்ஸக்காக தன் முதலாளியுடன் வந்திருந்தார்.

தென்னிந்திய டெக்ஸ்டைல் நிறுவனங்களுக்கான கான்பரன்ஸ் அது. அதில் கார்த்திக்கும் பங்கு பெற்றிருந்தான். அவனது பேச்சையும் தொழில் திறமையையும் கண்டு வியந்து, முதலாளியிடம் அவனைப் பற்றி மேலும் விசாரித்து அறிந்து கொண்டார். ''இவன் தான் கார்த்திக் குரூப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டியா..? இவனிடம் வேலை பார்ப்பதாகத் தானே ஸ்வேதா கூறினாள்?'' என்றெண்ணியவர் அந்த



கருத்தரங்கம் முடிந்ததும் அவனைச் சந்தித்தார்.

''என் பெயர் சிவனேசன். மதுரையிலிருந்து வருகிறேன். என் மகள் ஸ்வேதா உங்களிடம் பணிபுரிவதாகக் கூறினாள்'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்..

கார்த்திக் விரிந்த சிரிப்புடன் ''அங்கிள். உங்களை இங்கே எதிர்பார்க்கவே இல்லை.. ஸ்வேதா கூட என்னிடம் எதுவும் கூறவில்லையே.. எப்படி இருக்கிறீர்கள்?'' என்ற அவனது இலகுவான பேச்சைக் கண்டு திகைத்தார் சிவனேசன்.

தன் பெயரையும், ஊரையும் சொன்னபோது எந்தவித உணர்ச்சிகளையும் முகத்தில் காட்டாமல் ஒரு புன்னகையுடன் கேட்டுக் கொண்டிருந்தவன், ஸ்வேதா என்கிற பெயரைக் கேட்டதும் உற்சாகமாக மாறியதை ,அவர் மனதிற்குள் குறித்துக் கொண்டார்.

''என்ன அங்கிள் அப்படிப் பார்க்கிறீர்கள்..? ஸ்வேதா என்ற பெயரைக் கேட்டதும் நான் மாறிய விதத்தைக் கண்டா...? ஸ்வேதாவைப் போன்ற ஒரு அருமையான பெண்ணை பெற்ற தந்தைக்கு, உரிய மரியாதையை நான் செலுத்த வேண்டாமா..? அதைப் பற்றி பிறகு பேசிக்கொள்ளலாம்... உங்களை இங்கே பார்த்த பின்பும் வீட்டிற்கு அழைத்துச் செல்லவில்லையென்றால் ஸ்வேதா என்னிடம் கோபம் கொள்வாள். வாருங்கள் அங்கிள், வீட்டிற்குச் செல்லலாம்.''

''நான் வருவதாக ஸ்வேதாவிடம் கூறியிருந்தேன் தம்பி. உங்களுக்கெதற்கு வீண் சிரமம்.. உங்களுக்கும் வேலை இருக்குமே. முகவரி என்னிடம் இருக்கிறது.

நானே சென்று பார்த்துக் கொள்கிறேன்.'' என்று மறுத்தார்.

அன்புடன் அவரை நோக்கியவன் ''ஸ்வேதாவிடம் இருக்கும் அதே குணம் உங்களுக்கும் இருக்கிறது உங்களது பேச்சும், சிரிப்பும் கூட அவளைப் போலவே இருக்கிறது. நீங்கள் மிகவும் பணிவுடன் பேசுகிறீர்கள். ஆனால் உங்கள் பெண்ணோ பணிவென்றால் கிலோ என்ன விலை என்று கேட்பாள்?'' எனக் கூறிச் சிரித்தான்.

அசடு வழிய அவனுடன் சேர்ந்து நகைத்தவர், ''அவள் அப்படியே வளர்ந்து விட்டாள் தம்பி. வீட்டிற்கு ஒரே பெண்.. அவளைக் கண்டிப்பதற்கு வீட்டில் யாருக்கும் மனமில்லை.. தன் இஷ்டப்படியே நடந்துக் கொள்வாள்.. அதனால் பணிவு என்பதையெல்லாம் அதிகம் எதிர்பார்க்க முடியாது'' என்றார்.

''அவள் பணிந்து நடக்க வேண்டிய அவசியமே இல்லை அங்கிள். தனது அன்பினாலேயே அனைவரையும் பணிய வைத்து விடுகிறாள். இதை விட நல்ல குணம் வேறென்ன வேண்டும்? வாருங்கள் செல்லலாம்...'' என்றழைத்தான்.

தனது முதலாளியிடம் இரண்டு மணி நேரத்தில் திரும்பி வருவதாகக் கூறியவர், கார்த்திக்குடன் கிளம்பினார்.

காரில் செல்லும் போதே ஹரிஷைப் பற்றி விசாரிக்க, ''இப்போது நன்றாக இருக்கிறான் அவனை மாற்றிய பெருமையனைத்தும் ஸ்வேதாவையே சேரும். எவ்வளவு அருமையான,பாசம் நிறைந்த, கருணையுள்ளமும் கொண்ட பெண்ணைப் பெற்றிருக்கிறீர்கள். உங்களுக்கும், ஸ்வேதாவின் அன்னைக்கும் தான் எனது



முதல் நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.''

''அவள் வந்த பின்பு எனது வாழ்க்கை மாறிய விதத்தை நீங்கள் அறிந்து கொண்டாக வேண்டும் அங்கிள்..'' என்று ஸ்வேதா கூறியதையே கார்த்திக்கும் சொன்னானாலும்.. அவனது வார்த்தைகளில் இருந்த வலியையும் ஸ்வேதாவைபற்றி பேசும்போது அவன் கண்களில் தெரியும் ஒளியையும் கண்டு யோசனையில் ஆழ்ந்தார் சிவனேசன்.

தன் போக்கில் பேசிக்கொண்டிருந்த கார்த்திக் ''அங்கிள்..., ஸ்வேதாவின் அம்மாவிற்கு அவள் இங்கே வேலை பார்ப்பதில் இஷ்டமில்லையென்று ஸ்வேதா என்னிடம் கூறியிருக்கிறாள். யாராக இருந்தாலும் படித்த பெண்ணை இப்படி ஆயா வேலை பார்ப்பதற்கு விரும்ப மாட்டார்கள் தான். ஆனால்... அவரது எதிர்ப்பையும் மீறி வந்து ஸ்வேதா எனக்கு செய்த உதவி அளவில்லாதது... வார்த்தைகளில் சொல்ல முடியாதது..''

''எதைப் பற்றிய சிந்தனையுமில்லாமல்.. என் மகனைப் பற்றி மட்டுமே முழு நேரமும் யோசித்து.. அவனை இந்த அளவிற்கு மாற்றியிருக்கிறாள். என் வாழ்வில் மிகமிக முக்கியமானவள். உங்களிடமிருந்து உங்கள் பெண்ணைப் பறிக்க நினைப்பதாக தயவு செய்து எண்ணாதீர்கள். படித்த படிப்பிற்கான வேலையை விட்டு விட்டு ஸ்வேதா இப்படி ஒரு பணியைத் தொடர்வதற்கான முழுக் காரணம் நான் தான். அதனால் திட்டுவதாக,சண்டை போடுவதாக இருந்தால் என்னிடம் போடுங்கள் பாவம் அவள்.''

''என் மகளுக்காக என்னிடமே வக்காலத்து

வாங்குகிறீர்களா?'' என்று சிரித்தவர், ''ஹரிஷின் நினைவுகளை மட்டுமே அவள் சுமந்திருப்பதாகக் கூறினீரகளே.. ஆனால் உண்மையில் அப்படியில்லையே தம்பி... ஹரிஷுடன் சேர்த்து உங்களது நினைவுகளையும் அவள் சுமப்பதாக எனக்குத் தோன்றுகிறதே'' என சாதரணமாகக் கூறியவரை அவன் வியப்புடன் நோக்கினான்.

அவர் யோசனையுடன் ''என் மகளைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் தம்பி. அவள் பேசியதிலிருந்து நான் கண்ட உண்மையிது. இப்போது... நீங்களும் அதே உணர்ச்சிகளுடன் பேசுவதாகவே தெரிகிறது..'' என்று நிறுத்தியவர் தொடர்ந்து..''ஆனால்.. எனக்கு நிறைய உண்மைகள் தெரிந்தாக வேண்டுமே தம்பி...'' என வினவவும், அதுவரை ஆச்சரியமாக அவரை நோக்கிக் கொண்டிருந்தவன்,ஒரு நிமிடம் கண்மூடி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

''சொல்கிறேன் அங்கிள்...'' என ஆரம்பித்து தன்னைப் பற்றி ஆதியிலிருந்து அந்தம் வரை அனைத்தையும் வரிசையாக சொல்லி முடித்தான்.

அவன் கூறிய அனைத்தையும் கேட்ட சிவனேசனுக்கு இரக்கமும், துயரமும் ஒரு சேர எழுந்தது.

''இவை அனைத்தும் ஸ்வேதாவிற்கு தெரியுமா..?'' 'இல்லை' என்பது போல் தலையசைத்தான்.

''சொல்லப் போவதில்லையா..?'' என மீண்டும் வினவினார்.

''அவளுக்குத் தெரிந்தாக வேண்டும். ஆனால்



அதற்கான நாள் அமைந்ததும் நிச்சயம் கூறுகிறேன்'' எனக் கூறவும் அவனது கைகளைப் பற்றி அழுத்தியவர் ''மறக்க முயற்சி செய் தம்பி'' என்றார்.

அதற்குள் வீடு வந்துவிட முகத்தைத் துடைத்து தன்னை நிலைப்படுத்திக் கொண்டு இறங்கினான். வாசலில் கார் சத்தம் கேட்க 'அதற்குள் வந்து விட்டானா?' என வாசலுக்கு விரைந்தவள் காரில் கார்த்திக்குடன் தந்தையும் இறங்குவதைக் கண்டு, ''அப்பா...'' என்று ஓடிச் சென்று அணைத்துக் கொண்டாள்.

''இப்போது ஓடி வருகிறாயே...?, உன் தந்தையும் இந்த கான்பரன்ஸிற்கு வருகிறார் என்று ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லை...?'' என்று வினவினான்.

''அப்பா இன்று வருவதாக காலையில்தான் தெரிவித்தார்.தவிர, நீங்கள் இருவரும் எந்த கான்பரன்ஸிற்கு செல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாதே?'' என்றாள்.

''உள்ளே அழைத்து வா ஸ்வேதா..'',என்ற படி அவன் உள்ளே செல்ல.. ''வாருங்கள் அப்பா...'' என்று கைப் பற்றியவள் ''ஏன் அப்பா இந்த கான்பரன்ஸிற்காக வெல்லாம் சென்னை வருகிறீர்கள்.. ஆனால் மகளைப் பார்க்க வர யோசிக்கிறீர்கள்..'' என கோபித்துக் கொள்ள..

''நீ ஏன் குட்டிமா ஊர்ப் பக்கம் வருவதில்லை...?'' என வினவினார். '' ஹரிஷைப் பார்த்துக் கொள்வதற்கே நேரம் சரியாக இருக்கிறது.. அவனையும் அழைத்துக் கொண்டு ஒரு நாள் வர வேண்டும்... ஆனால் உங்களை மிகவும் மிஸ் பண்றேன்ப்பா'' எனக் கூற..

''கார்த்திக்கை மிஸ் செய்வதை விடவா..?'' என்று அவர் பட்டென்று கேட்டுவிட ''அப்பா....'' என்று திகைத்து விழித்தவளைக் கண்டு கொள்ளாது கார்த்திக்கிடம் திரும்பி பேச ஆரம்பித்தார் சிவனேசன்.

விழித்துக் கொண்டு நின்ற ஸ்வேதாவைக் கண்டவன் '' என்ன விழிக்கிறாய்? சாப்பிட ஏதேனும் கொண்டு வா...'' என்று விரட்ட ''இதோ'' என்றபடி உள்ளே ஓடினாள். அதன்பின் மிச்சமிருந்த நேரம் முழுதும் அவர் கார்த்திக்கிடம் உரையாடியபடி கழிக்க.. பொறுமியபடியே நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னைப் பார்க்க வந்ததாகக் கூறிவிட்டு அவனிடம் கதையடிப்பதைப் பார்..'' என்று புலம்ப இருவரும் ஒருவரையொருவர் நோக்கி நமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டனர்.

அதன்பின் வேலையிருப்பதாகக் கூறி அவர் விடை பெற ''அப்பா.. இன்று ஒரு நாளேனும் இங்கே தங்குங்கள் ப்ளீஸ்ப்பா'' என்று ஸ்வேதா கெஞ்சத் துவங்க.

''உங்கள் அன்பு மகள் கெஞ்சுகிறாளே.. தங்கலாமே அங்கிள்.'' என்று கார்த்திக்கும் வற்புறுத்தினான்.

''இல்லை தம்பி.. இவ்ள் அம்மா.. அங்கே தனியாக இருப்பார்கள்.. தவிர இன்னும் சில வேலைகளை முடித்து விட்டு நான் என் முதலாளியுடன் ஊர் திரும்பியாக வேண்டும்.. நீங்கள் ஸ்வேதாவை அழைத்துக் கொண்டு கட்டாயம் மதுரைக்கு வாருங்கள்.. குட்டிப்பையனைத் தான் இன்று பார்க்க முடியவில்லை.. அதனால் அவனையும் அழைத்து வாருங்கள்'' எனக் கூறி விடைபெற்று ஸ்வேதாவின் புறம் திரும்பினார்.



அவளைப் பார்த்து முறுவலித்து ''மனம் போல் மாங்கல்யம் கிடைக்கட்டும்'' என்று தலை கோத.. அப்பா ஏன் இப்படிக் கூறுகிறார் என்று மேலும் விழித்தவளின் தலையில் தட்டி ''பாய் டா குட்டி..'' என்று விடை பெற்றார்.

தன் காரிலேயே அவரை வழி அனுப்பி வைத்த கார்த்திக் புரியாமல் விழித்துக் கொண்டிருந்த ஸ்வேதாவின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு ''இன்று நான் மிக மிக சந்தோசமாக இருக்கிறேன் ஸ்வேதா மா...'' என்றான்.

அதிர்ச்சியையும்,குழப்பங்களையும் மட்டுமே அளித்துக் கொண்டிருந்த வாழ்கை... இப்போது மகிழ்ச்சியையும், சந்தோசத்தையும் அள்ளி அள்ளித் தருகிறது என்பதை நினைக்கையில் ஸ்வேதாவிற்கு வானில் பறப்பதைப் போலிருந்தது. கார்த்திக்கின் நேசம், அவனது அருகாமை இது வரை வாழ்வில் கண்டிராத அந்தப் புது வகையான உணர்வு தன்னுள் புகுத்திய மாற்றத்தை எண்ணி அவளுக்கு வியப்பாக இருந்தது.

காதல்! உலகத்தின் ஒட்டு மொத்த சந்தோசத்தையும் அள்ளித் தரக் கூடிய உன்னதமான உணர்வு!

பார்க்கும் இடங்களெல்லாம் நந்த லாலா..

நின்றன் பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா..!

தீக்குள் விரலை விட்டால் நந்த லாலா...

நின்னைத் தீண்டுமின்பம் தோன்றுதையேநந்தலாலா..!

எவ்வளவு அப்பட்டமான உண்மையை கூறியிருக்கிறான் பாரதி? வலியும், துன்பமும், கவலையும்

மனம் முழுக்க அப்பிக் கிடந்தாலும்.. அவனைக் கண்ட மாத்திரத்தில்... அனைத்தும் மறைந்து... அவனது உருவமும் புன்னகையும்... மனம் முழுதையும் நிறைத்து விடுகின்றனவே!

தனக்குள் கோடி மாற்றத்தை உண்டாக்கும் அவனது கண்களும்.. புன்னகையும்... குரலும்... தீண்டலும்... சுகமான இம்சையாக நீடித்துக் கொண்டிருக்க.. அதை முழுதாக அனுபவித்த படி... மகிழ்ச்சியாக சென்று கொண்டிருந்தது அவளது வாழ்க்கை...

அவளுடைய நீண்டநாளைய குழப்பமான கார்த்திக்கின் குடும்ப வாழ்க்கையைப் பற்றிய உண்மையை தெரிந்து கொள்ள அவளுக்கு வாய்ப்பு கிட்டியது.

ஆனால் அவள் தெரிந்து கொண்ட உண்மை அவளது குழப்பத்தை தீர்க்காமல் மேலும் அதிகரிக்கத் தான் செய்தது.

ஹரிஷ் பள்ளிக்குச் சென்ற பின்.. கார்த்திக்கும் அலுவலகம் சென்று விட.. புத்தகம், தொலைக்காட்சி என்று தன்னை மூழ்கடித்துக் கொண்ட ஸ்வேதா.. சிறிது நேரத்தில் அதுவும் போரடித்துப் போக இனி என்ன செய்வது என்று அலுத்துக் கொண்டே கீழே இறங்கினாள்.

இப்படி வேலை எதுவுமில்லாமல் உட்கார்ந்திருப்பதை விட ஸ்வேதாவிற்குத் தன் பேச்சுத் துணைக்கு யாருமில்லாதது தான் பெரும் அவஸ்தையாய் பட சமையலறைக்குச் சென்றாள்.

மதிய உணவில் ஈடுபட்டிருந்த தேவகி, ''என்னமா.., ஏதேனும் வேண்டுமா..?'' என்று கேட்க



''ரொம்பவும் போர் அடித்தது... அதனால் தான்...'' என்றவளுக்கு சட்டென கார்த்திக் காலையில் இன்று மதியம் வீட்டிற்கு வருவேன் என்று கூறியது நினைவிற்கு வந்தது. உடனே இன்று தானே சமைத்தால் என்ன? மதியம் வீட்டிற்கு வரும் கார்த்திக் நிச்சயம் சாப்பிட்டு விட்டுத் தானே செல்வான் என்று நினைத்ததும் மனது குதூகலமாகி விட,

''தேவகிம்மா.. இன்று நானே சமைக்கட்டுமா..? எனக்கும் பொழுது போனது போல் இருக்கும்... உங்களுக்கும் ஒரு நாள் ரெஸ்ட் கிடைத்தது போல் இருக்கும்..'' என்று கூற தேவகி பதறிப் போனாள்.

''ஐயோ.. கார்த்திக் தம்பிக்கு தெரிந்தால்... நிச்சயமாக திட்டுவாரம்மா.. வேண்டாம்..''என்று கூறியவரை ''அதெல்லாம் ஒன்றும் கூற மாட்டார். நான் சமாளித்துக் கொள்கிறேன்..'' என்று கூறி விட்டு சமையலில் இறங்கி விட்டாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் சாதம், சாம்பார், கூட்டு, கறி, இனிப்பு என்று விருந்து சமைத்து முடித்தவள் கார்த்திக் வரும் நேரம் ஆனதும் தேவகியிடம் ''நான் சமைத்ததாக கூற வேண்டாம்.. அவராகக் கேட்டால் மட்டும் சொல்லுங்கள்'' எனக் கூறி விட்டு ஹாலில் எதுவுமே நடவாததைப் போல் ஒரு புத்தகத்துடன் அமர்ந்து விட்டாள்.

அவசரமாக உள்ளே நுழைந்தவன் அவளைப் பார்த்து முறுவலித்து விட்டு நேராக அலுவலக அறைக்குச் சென்று சில வேலைகளை முடித்து விட்டு சாப்பிட அமர்ந்தான்.

ஸ்வேதா சமைத்த விருந்து உணவை பரிமாற ஆரம்பித்தார் தேவகி. ''ஸ்வேதா சாப்பிட்டாயிற்றா...?'' என்று வினவிய படியே சாதத்தை பிசைந்து சாப்பிட ஆரம்பித்தவன் சிறிது நேரத்தில் ஏதோ வித்தியாசத்தை உணர்ந்து ''தேவகிம்மா.. இன்று சாப்பாட்டில் ஏதோ வித்தியாசம் தெரிகிறதே.., என்ன..?'' என்று வினவ ஏற்கனவே பயந்து கொண்டிருந்த தேவகி அம்மாள், ''நான் சொல்லச் சொல்ல கேட்காமல் ஸ்வேதாம்மா தான் தம்பி சமைத்தது?''

மெல்ல எழுந்து வந்து தேவகியின் அருகில் நின்றாள். ''ஓ... நீ சமைத்ததா...'' என்று இழுத்தவன் உடனே முகத்தை மாற்றி ''அதனால் தான் சாப்பாடு இவ்வளவு கேவலமாக இருக்கிறது... சாதத்தில் உப்பில்லை. கத்தரிக்காய் வதங்கவே இல்லை. உருளைக் கிழங்கு வேகவே இல்லை...'' என்று அவன் குறை மேல் குறையாக அடுக்க... கோபத்துடன் அவனை இடை மறித்து...

''சார்... வேண்டுமென்று பொய் சொல்லாதீர்கள்...'' என பொரியத் துவங்கியவளை சிரிப்புடன் நோக்கி விட்டு ''தேவகிம்மா.. முனியன் தோட்டத்தில் இருக்கிறான்.. அவனை அழைத்து வருகிறீர்களா..?'' என்றான். அவர் நகர்ந்ததும் ஸ்வேதாவை நோக்கி ''பொய் கூறவில்லை ஸ்வேதா.. நிஜம்... நீ சமைத்த சாப்பாடு சகிக்கவே இல்லை..'' என்று முகத்தை அஷ்ட கோணலாக வைத்துக் கொண்டு.

''இல்லை... நீங்கள் வேண்டுமென்றே என்னிடம் வம்பு செய்யத் தான் இப்படிக் கூறுகிறீர்கள்...'' என்று



சிணுங்கத் தொடங்கியவளை.. ''உண்மை ஸ்வேதா.. வேண்டுமானால் நீயே வந்து சாப்பிட்டுப் பார்..'' எனக் கூற அவளும் வேகமாக அவனருகில் வந்து அவன் தட்டிலிருப்பதை அள்ளி சாப்பிட்டு விட்டு ''எல்லாம் நன்றாகத் தானே உள்ளது, ஏன் நீங்கள்..'' என்று குழம்பிய படி பார்க்க அவன் முறுவலை அடக்க முயன்று தோற்று நன்றாக சிரித்துக் கொண்டிருந்தான்.

பிறகு தான் அவன் தட்டிலிருந்து எடுத்துச் சாப்பிட்டுப் பார்த்தத் தன் புத்திசாலித்தனத்தை எண்ணி அசடு வழிய நின்றிருந்தவளின் கைகளைப் பற்றி முத்தமிட்டவன் ''நீ இவ்வளவு நன்றாக சமைப்பாயா எனக்கு மிகவும் பிடித்திருக்கிறதடா..'' என்று கூற ஸ்வேதா வானில் பறந்தாள்.

''தேங்க்ஸ்..'' என்றபடி அவனிடமிருந்து கைகளை விலக்கியவள் அதன் பின் தானே அவனுக்குப் பரிமாறினாள்.

வழக்கத்திற்குச் சற்று அதிகமாக சாப்பிட்டவனை, திருப்தியுடன் நோக்கியவளின் கன்னத்தில் தட்டி ''தேங்க்ஸ்...'' என்றவன் அலுவலகத்திற்கு செல்லத் தயாரானான்.

''என்ன சாப்பிட்ட உடன் கிளம்புகிறீர்கள்.., கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கலாமே!'' என்றவளிடம் 'ரெஸ்ட் எடுத்துக் கொண்டிருந்தால் என் வேலையை யார் பார்ப்பது..?''

''நீங்களும் சென்று விடுகிறீர்கள்.. உங்கள் மகனும் சென்று விடுகிறான்.. வீட்டில் எனக்கு எவ்வளவு போர் தெரியுமா...?'' என்று ஆதங்கத்துடன் கூறிக்

கொண்டிருந்தவளிடம் முறுவலித்து... ''உனக்காக எங்கள் இருவரையும் வீட்டில் இருக்கச் சொல்கிறாயா..? அதெல்லாம் சாத்தியப்படுமா ஸ்வேதா? உங்கள் அருமை ஹர்ஷு பெரிய ஆள் ஆக வேண்டாமா..?'' என்று கூறினான்.

அவளும் சிரித்துக் கொண்டே ''ஹர்ஷு தான் பெரிய ஆள் ஆக வேண்டும்.. நீங்கள் தான் ஏற்கனவே பெரிய்ய ஆள் ஆகி விட்டீர்களே! உங்களுக்கென்னவாம்?'' என்றாள்.

''உன்னையும், உன் அருமை ஹர்ஷுவையும் நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டுமானால் நான் வேலை பார்த்துத் தானே ஆக வேண்டும்?'' என்ற அவன் பதிலில் உள்ளம் குளிர்ந்து முகம் சிவந்தாலும் காட்டிக் கொள்ளாமல் திரும்பியவளின் தோளைப் பற்றித் தன் புறம் திருப்பி அவள் கண்களை நோக்கி ''இன்னும் எத்தனை நாட்கள் இப்படி முகம் திருப்புவாய் என்று பார்க்கிறேன்''எனக் கூறி விட்டு விலகிச் சென்றான்.

அவன் வார்த்தைகளிலிருந்த உண்மை புரிந்து அவள் மனம் பட படவென்று சிறகடிக்கத் துவங்க சிரித்த படியே அமர்ந்தவள் அவன் அலுவலகம் எடுத்துச் செல்ல வேண்டிய ஃபைல் டேபிளின் மீது இருக்கவே ''கார்த்திக் சார்...'' என்றழைக்கவும்.. சோபாவில் அமர்ந்து ஷூவைச் சரி செய்து கொண்டிருந்தவன் நிமிர்ந்து ''என்னவென்று அழைத்தாய்..?'' என்று வினவினான்.

''கார்த்திக் சார் என்று..'' என்றவளை முறைத்து ''ஸ்வேதா.. இனி சார் என்று கூப்பிடாதே.. கால் மீ கார்த்திக்..'' என்றான்.



''அது வந்து சார்...'' என்று மீண்டும் அவள் இழுக்க ''ஏய்.. கார்த்திக் என்று இப்போது சொல்லப் போகிறாயா.. இல்லையா..'' என்று அவன் அழுத்தமாகக் கூறவும் வேறு வழியின்றி ''கா.. கார்த்திக்..'' என்றவளிடம் ''கா.. கார்த்திக் ஆ..? எனது இனிஷியல் கா அல்ல.. வி'' என்று அவன் முடிப்பதற்குள்,

''தெரியுமே... வி.கார்த்திக் என்று.. உங்கள் அலுவலகத்தில் பார்த்தேனே.., கார்த்திக் விஸ்வநாதன் தானே..? விஸ்வநாதன் சாரிடம் நிச்சயம் கேட்க வேண்டும்.. இந்தப் பெயரை உங்கள் பையனுக்கு ஏன் வைத்தீர்கள் என்று..'' எனக் கூறிச் சிரித்தவள்..

காலடிச் சத்தம் உணர்ந்து சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். முகம் இறுக விறு விறுவென நடந்து வெளியே சென்றுக் கொண்டிருந்தான். என்னவாயிற்று இவனுக்கு? இவ்வளவு நேரமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவன் ஏன் இப்படிக் கோபமாகப் போகிறான்..?

அவன் தானே பெயர் சொல்லி அழைக்கச் சொன்னான்? அப்படியானால் நிச்சயம் கோபம் அதற்காக இருக்காது, பின் எதற்காக..? அவன் தந்தையைப் பற்றிக் கூறியதில் வந்த கோபமா..? ஆனால் எதற்காகக் கோபப் பட வேண்டும்.. அவன் முகத்தில் தெரிந்தது... கோபமா... இல்லை வருத்தமா... தனக்குள்ளே குழம்பிய படி நின்றிருந்தாள் ஸ்வேதா.

மாலை ஹரிஷிற்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த வேளையில்... அலுவலகத்திலிருந்து வந்து சேர்ந்தான். சோபாவில் அமர்ந்திருந்தவளின் அருகே வந்தமர்ந்து அவளின் மடியில் தலை சாய்த்துக்

கொண்டான். இது இப்போது வாடிக்கையான ஒன்றாகி விட்டது அவனுக்கு! ஸ்வேதா அந்த சோபாவில் அமர்ந்திருந்தால்.. அவள் மடியில் தலை சாய்த்துக் கொள்வது....

ஆனால் அவளுக்குத் தெரியாது... அவளது பல செயல்களில் கார்த்திக் தன் அன்னையை உணர்கிறான் என்ற உண்மை! ஆம்! தன் அன்னை இங்கே அமரும் போதெல்லாம் கார்த்திக் இதே போல்.. அவள் மடியில் தலை சாய்த்துக் கொள்வான்! சமையல் நன்றாக இருக்கிறது என்று ஒரு வார்த்தை கூறி விட்டால் முகம் முழுதும் பூரிப்புடன் தானே வந்து அன்புடன் பரிமாறும் அன்னையை போல் ஸ்வேதா அன்று பரிமாறிய போதும்.. அவன் இதை உணர்ந்தான்..

ஹரிஷ் தந்தையின் புறம் திரும்பி, ''டாடி.. இன்று ஏன் என்னை அழைக்க நீங்கள் வரவில்லை..?'' என்று வினவினான்.

''டாடி-க்கு முக்கியமான வேலை இருந்ததடா..'' என்றபடி கண்களைக் கசக்கியவனைக் கண்டு மனம் நெகிழ ''காபி கொண்டு வரட்டுமா சார்..?'' என்றாள்.

''ஒரு ஐந்து நிமிடம் ஸ்வேதா..'' என்றபடி கண் மூடிக் கொண்டான். சில நிமிடங்களில் எழுந்தவன் அறைக்குச் சென்று முகம் கழுவி விட்டு ''ஸ்வேதா.. காபி..'' என்றபடி மீண்டும் வந்தமர்ந்தான். ''ஸ்வேதா.. காபி..'' என்று அவன் கூறியதைப் போலே தானும் கூறித் தந்தையின் அருகில் அமர்ந்தான் ஹரிஷ்.

''அடி....'' எனக் கூறி அவனைத் தூக்கி தன் மடியில் அமர வைத்துக் கொண்டவன், ''என்னடா... உன்



ஸ்வேதாம்மா எல்லா விஷயத்திலும் ஸ்லோ பிக் அப் ஆக இருக்கிறாள்., பார்.., காபி கேட்டு பத்து நிமிடமாயிற்று.., இன்னும் காணவில்லை..'' என்று அவன் கூறிக் கொண்டிருக்கையில் காபியுடன் வந்த ஸ்வேதா.. கோப்பையை அவனிடம் நீட்டினாள்.

''ஸ்வேதாம்மா.. டாடி உங்களை ஸ்லோ பிக் அப் என்கிறார்..'' என்று ஹரிஷ் போட்டுக் கொடுத்தான்.

ஸ்வேதா ரோஷத்துடன் ''நானா..? எங்கள் வகுப்பில் நான் தான் டாப்பர் தெரியுமா..?'' என்று கூற ''சேட்டை பண்ணுவதில் தானே..?'' என்று தந்தையும் மகனும் ஒரு சேரக் கூறி ஹை-ஃபை கொடுத்துக் கொண்டனர்.

முகத்தை திருப்பிக் கொண்டு எழுந்தவள் ''இருவரும் ஒன்று சேர்ந்து விட்டீர்களா..? என்னை கலாட்டா செய்வீர்கள்.., நான் போகிறேன்'' எனக் கூறி எழுந்து நடக்க..

ஹரிஷும், கார்த்திக்கும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு ''ஸ்வேதாம்மா...'' என்று அழைத்தனர்.

''என்ன..?'' என்று முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு கைகளை கட்டிக் கொண்டு நின்றிருந்தவளின் ஒரு புறம் கார்த்திக்கும் மறுபுறம் நாற்காலியின் மீது ஹரிஷும் நின்று கொண்டனர். ''ஸ்வேதாம்மா... சாரி...'' என்று இருவரும் கூற.. ''ஹ்ம்ம்.. ஒன்றும் தேவை இல்லை..''என்று மீண்டும் அவள் எங்கோ பார்த்தாள்

இருவரும் நமுட்டுச் சிரிப்புடன் பார்த்து விட்டு, ''சாரி ஸ்வேதாம்மா..'' என்று அவள் இடது கன்னத்தில் ஹரிஷும், அவள் வலது கன்னத்தில் கார்த்திக்கும் ஒரு சேர

முத்தமிட்டு விட்டு ஓடினர். அதற்கு மேல் கோபத்தை இழுத்து வைத்துக் கொள்ள முடியாமல் இருவரையும் கண்டு சந்தோசத்துடன் சிரித்தாள் ஸ்வேதா.

அன்று விடுமுறை நாள் என்பதால் எழுந்ததும் விளையாட ஓடிச் சென்ற ஹரிஷை ஒரு வழியாகப் பிடித்திழுத்து குளிக்க வைத்த ஸ்வேதா.. அவனது அலமாரியில் அவன் அணிவதற்கான உடையை எடுத்துக் கொண்டிருந்தாள்.

அலமாரியின் மேல் தட்டின் அடிப் பகுதியில் லேமினேஷன் செய்யப் பட்ட போட்டோ ஒன்று தென்பட, என்னவென்று எடுத்துப் பார்த்த ஸ்வேதா அதிர்ந்தாள்.

அந்த போட்டோவில் முகம் முழுக்க புன்னகையுடன் கார்த்திக்கும், அவன் தோளில் கை போட்டபடி அவனது ஜாடையில் அவனது உயரத்தில் ஒருவனும், வயதான தம்பதியர் இருவரும் அமர்ந்திருந்தனர்.

யார் இவர்கள்...? இவர்கள் தான் கார்த்திக்கைப் பெற்றவர்களா..? அப்படியானால் இவர்கள் இப்போது எங்கேயிருக்கிறார்கள்? இவ்வளவு பெரிய வீட்டில் இவர்களின் புகைப்படத்தையோ.. இவர்கள் வாழ்ந்ததற்கான அறிகுறியையோ.. ஸ்வேதா கண்டதில்லை..

கார்த்திக் சொல்ல வேண்டுமென்று நினைத்து அவளிடம் பகிர்ந்து கொண்ட விஷயங்கள் ஏராளம்.. அவன் அலுவலகத்தைப் பற்றி.. நண்பர்களைப் பற்றி.. ஹரிஷைப் பற்றி.. எவ்வளவோ கூறியிருக்கிறான் தான்..



ஆனால் அவனுடைய குடும்பத்தைப் பற்றி இது வரை அவன் ஒரு வார்த்தை கூட உச்சரித்ததில்லை..

அவளாக கேட்க முயற்சித்ததுமில்லை.. ஆனால் அன்று கார்த்திக் விஸ்வநாதன் என்று கூறியதற்கு முகம் இறுக வெளியேறிவனைக் கண்டு குழம்பியிருந்தவள் இன்று இந்த புகைப்படத்தைக் கண்டு வெகுவாகக் குழம்பிப் போனாள். அங்கிருந்த வயதானவர்களின் ஜாடையில் அவன் முகம் தெரிந்தது. அப்படியானால் இவர்கள் நிச்சயம் அவன் பெற்றோர்களாகத் தான் இருப்பார்கள்.

ஏன் கூற மறுக்கிறான்..? இவர்கள் மூவரும் எங்கே இருக்கிறார்கள் இப்போது..? அன்பான மகனையும்.. அழகான பேரனையும் பார்க்காமல் எப்படி இருக்கிறார்கள்..? கார்த்திக்கின் மீது கோபமா..?

ஒரு வேலை கார்த்திக் பெற்றோரை எதிர்த்து காதல் திருமணம் புரிந்தவனாய் இருக்குமோ? அதனால் தான் மனைவியைப் பிரிந்து பெரும் கஷ்டத்திற்கு உள்ளான போதும் கூட அவன் பெற்றவர்களின் உதவியை நாடவில்லையோ?

ஆனால் அவர்களால் எப்படி இவனை இந்த நிலையில் பார்த்த பின்பும் விலகி இருக்க முடிகிறது...? புன்னகை நிறைந்து கருணை ததும்பும் இந்த அன்னையின் முகமா.. கார்த்திக்கை விட்டுப் பிரிந்திருக்கிறது...? நிச்சயமாக இருக்காது... கடவுளே...! இந்தக் குழப்பங்களை யார் தீர்ப்பார்கள்..?

இப்போதே சென்று கேட்டு விடலாம் தான்.. ஆனால் அவன் நினைத்திருந்தால் விஸ்வநாதன் என்று

அவன் தந்தை பெயரை அவள் உச்சரித்த அன்றே அனைத்தையும் கூறியிருக்கலாம். ஆனால் அவன் எதையும் வெளிப்படுத்தவில்லை.. எதை மறக்க நினைக்கின்றான்..? பெற்றவர்களை மறந்து வாழ முடியுமா..? ஒன்று மட்டும் நிச்சயம்! ஹரிஷைத் தாண்டி கார்த்திக்கிற்கு வேறு ஏதோ பெரிய பிரச்சனை இருக்கிறது..

துன்பத்திலும்,கவலையிலும் பாலைவனமாக அவன் வாழ்க்கை சென்று கொண்டிருந்ததாகக் கூறினானே! அப்படியானால் வேறு ஏதோ ஒரு மனக் கஷ்டத்தை அவன் வாழ்கையில் அவன் சந்தித்திருக்க வேண்டும்.. அது அவனது உறக்கத்தைத் தொலைக்கச் செய்திருக்கிறது.. நிம்மதியை இழக்கச் செய்திருக்கிறது.. அவனை நடை பிணமாக மாற்றியிருக்கிறது..... என்னவாக இருக்கும்..? என்று யோசித்துக் கொண்டிருந்தவளின் அருகில் வந்த ஹரிஷ் உற்சாகமாகி ''போட்டோ பார்க்கிறீர்களா ஸ்வேதா மா..? இதை நான் டாடி ரூமிலிருந்து நேற்று எடுத்து வந்தேன்.., இதிலிருப்பது யாரென்று உங்களுக்குத் தெரியாதா..?'' என்றான்.

அவளருகே வந்து போட்டோவில் கை வைத்து '' இது லக்ஷ்மி பாட்டி... இது விசு தாத்தா.. இது டாடி.. இது..'' என்றவன் நிறுத்தி கண்ணில் விழுந்த தூசியை சரிசெய்து ஸ்வேதாவின் பொறுமையை மேலும் சோதித்து விட்டு ''இது அப்பா...'' என்றான்.

ஒரு நிமிடம் உலகமே நின்று விட்டதைப் போல் உணர்ந்து கையில் புகைப்படத்துடன் ஸ்தம்பித்து நின்றாள்.



# 12

**கசப்பான அனுபவம்..**

**இனிப்பான எதிர்காலத்தை.**

**அமைத்துத் தருமாம்..**

**உன்னுடம் எனக்கு ஏற்பட்டதும்..**

**கசப்பான அனுபவம் தான்!**

கார்த்திக்... என் கார்த்திக்.. திருமணமாகாதவனா..?, ஸ்வேதாவின் உடல் முழுதும் பரவசத்தில் திளைத்தது.. வானில் பறந்தது... நிலவில் அவன் முகம் கண்டது.. மேகத்தில் அவன் காலடி தேடியது...

கார்த்திக்! உங்களுக்கு மணமாகவில்லையா..? உங்கள் தோழியாய், காதலியாய்.. உங்கள் மனம் ஏற்றுக் கொண்டது என்னைத் தானா..? ஜிவ்வென்று உச்சி முதல் உள்ளங்கால் வரை ரத்தம் சூடேறி.. உண்டாக்கிய மகிழ்ச்சியில் ஸ்வேதாவின் கண்கள் பனித்தன.

முட்டாள் ஸ்வேதா! என் மனைவி என்று ஒருத்தி இருந்தாள் என்பதை வார்த்தையால் கார்த்திக் என்றேனும் கூறியிருப்பானா..? ஹரிஷின் தாய் இறந்து விட்டதாகக் கூறினானே தவிர.. தன் மனைவி என்று அவன் கூறவில்லை!

அவன் பார்வையிலும், அவன் வார்த்தைகளிலும்,

அவன் முத்தங்களிலும், தீண்டலிலும் ஸ்வேதா புரிந்து கொண்டிருக்க வேண்டாமா..? அவன் செய்கைகள் அனைத்தும் தன் வாழ்வை மாற்றி எழுத வந்த முதல் காதலின் மீது, காதலியின் மீது காட்டும் அன்பென்பதை அறிந்து கொள்ளத் தெரியாமல் முட்டாளைப் போல் அவன் மணமானவன் என்றெண்ணிக் கொண்டு தன்னையே வதைத்துக் கொண்டு முட்டாள் பெண்ணே!

கார்த்திக்கிற்கு மணமாகவில்லை.. அவன் என்னவன்... எனக்கே எனக்கானவன்... கண்டதும் விலகி.. பழகிய பின் இணைந்து நெருங்கிய பின்.. காதல் கொண்டு.. இன்று அவனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் தன்னைப் போல் அவனும் அவள் மீது உண்மையான நேசம் கொண்டிருக்கிறான்.. கார்த்திக்,கார்த்திக் என்று மனம் பதற அவனை இப்போதே சந்தித்து அவன் மார்பில் முகம் புதைத்து அழ வேண்டுமென்று வெறியே பிறந்தது.

அவனைக் கண்ட நொடியிலிருந்து நிம்மதியின்றி தவித்து.. அவன் மகிழ்ச்சியில் தன் மகிழ்ச்சியைத் தேடி.. உறவுகளை விட்டு விட்டு தன் வாழ்வையே அவனுக்காக அர்ப்பணிக்கத் தயாராக இருந்தவளின் மனது இன்று அவனுடைய நேசம் முழுதும் தனக்கே என்கிற பெருமையில் கர்வம் கொண்டது.

போட்டோவை கையில் வைத்துக் கொண்டு திகைப்புடன் கண்களில் வழிந்த நீருடன் நின்றிருந்தவளை உலுக்கினான் ஹரிஷ்.

சட்டென நடப்பிற்கு வந்தவளைக் கண்டு முறுவலித்தவனைப் பார்த்தவள் மேலும் குழம்பினாள். அப்படியானால் இந்தச் சிறுவன் கார்த்திக்கின்



சகோதரனுடையவனா..? மனைவி இறந்த பின் அவன் என்னவானான்?

அவனது குழந்தையைக் கார்த்திக் ஏன் வளர்க்கிறான்..? அதுவும் தன் மகன் என்று கூறிக் கொண்டு.. அவிழ்க்கப்படாத இந்த மர்ம முடிச்சுகளை எண்ணி குழம்பியபடியே ஹரிஷின் அறையை விட்டு வெளியே வந்து தன் அறைக்குச் சென்றாள்.

ஹரிஷின் அன்னை உயிரோடு இல்லை என்று கார்த்திக் தன் வாயாலே கூறி விட்டான். அப்படியானால் ஹரிஷின் தந்தை எங்கே? மகனை இவனிடம் விட்டு விட்டு அவர் என்னவானார்? கார்த்திக்கின் பெற்றோர்கள் என்னவானார்கள்? தன்னிடம் அனைத்தையும் பகிர்ந்து கொள்ளும் கார்த்திக்,இதை மட்டும் ஏன் கூற மறுக்கிறான்..? அப்படி என்ன மர்மம் ஒளிந்திருக்கிறது..?

கார்த்திக் காரணமில்லாமல் எதையும் செய்பவன் அல்ல..! அவன் தன் மகனாகவே ஹரிஷை வளர்க்கிறான் என்றால் நிச்சயம் அது ஹரிஷின் நன்மையைக் கருதியே! இப்படியிருக்கையில் அவளாகச் சென்று ஏதேனும் அவனிடம் உளறி வைத்து வாங்கிக் கட்டிக் கொள்ள கூடாது. உண்மை என்னவென்று அவன் கூறினாலும் சரி ,கூறாமல் போனாலும் சரி! ஹரிஷின் மீது ஸ்வேதா வைத்திருக்கும் பாசம் எள்ளளவும் குறையப் போவதில்லை.

எப்படி..?என்ன காரணத்திற்காக.. ஹரிஷ் அவனை ஸ்வேதாம்மா என்று அழைக்கின்றானோ தெரியாது.. அவனுள் அப்படி ஒரு பாசத்தை.. நேசத்தை.. உணர்ந்து

கொண்டிருந்த ஸ்வேதாவினால்.. அவனது அன்பைத் தவிர்த்து வாழ இயலுமா..?

வாழ் நாள் முழுமைக்கும் அவனது அன்னையாகவே சேவை செய்ய தயாராக இருப்பதாகவே உணர்ந்தாள்! கார்த்திக்கின் நேசமும், ஹரிஷின் அன்பும் போதுமே! வேறு என்ன தேவை இருக்க முடியும் என் வாழ்விற்கு!

ஏதேதோ யோசித்த படி தோட்டத்தில் நடை பயின்று கொண்டிருந்த ஸ்வேதா எதிரே வந்து கொண்டிருந்த கார்த்திக்கை கவனிக்காமல் அவன் மீது மோதினாள்.

''ஏய்.. ஸ்வேதா..'' என்றபடி பற்றி நிறுத்தியவனை நிமிர்ந்து நோக்கியவளின் பார்வையில் சொல்லொணா சந்தோசமும்.. கட்டுக் கடங்காத காதலும் கரை புரண்டோடியது..

அவள் பார்வையில் அது நாள் வரை அறியாத வித்தியாசத்தை நோக்கிய கார்த்திக்கின் இதழ்கள் புன்னகையில் விரிந்தது. ஏனெனில் இது வரை ஸ்வேதா அவளது காதலை வெளிப்படுத்தியதே இல்லை.. ஏக்கத்தோடு அவன் முகம் பார்ப்பதும்.. அவன் பார்க்கும் வேளையில் முகம் கவிழ்ந்து கொள்வதும்.. அவன் தீண்டலில் சிவக்கும் முகத்தை மறைக்க முயற்சிப்பது மாய்... இருப்பவள்.. இன்று முதன் முறையாக தன் விழிகளைக் காதலுடன் நோக்குவதைக் கண்டவனுக்கு சிரிப்பும்,சந்தோசமும் ஒருங்கே எழுந்தன.

ஆனால் அவள் பார்வையைக் கண்டு



கொள்ளாதவன் போல், ''என்ன ஸ்வேதா... இங்கே நின்று கொண்டிருக்கிறாய்...? உன்னை வீடு முழுக்க தேடினேனே...'' என்று வினவ.. அவள் எரிச்சலுடன் ''ஆமாம்... களை எடுக்க வந்தேன்...'' என்று கூறினாள்.

''ஓஹோ...'' என்று யோசித்தவன் ''ஆனால் ஸ்வேதா.. வயல்களில் அல்லவா களை எடுப்பார்கள்.. நீ தோட்டத்தில் கூட எடுப்பாயா...?'' என்று வேண்டுமென்றே ஆர்வமாகக் கூறியவனை முறைத்து விட்டு...''என்ன விஷயமாக என்னைத் தேடினீர்கள்..?'' என்று வினவினாள்.

அவள் முறைப்பில் சிரித்து விட்டு ''ஸ்வேதா அடுத்த வாரம் புதன் கிழமை ஹரிஷின் பிறந்த நாள் என்று கூறியிருந்தேனே.. ஞாபகம் இருக்கிறதா..?'' என்று கேட்டவனிடம் உற்சாகமாக ''எப்படி மறப்பேன்..? பெரிய அளவில் கொண்டாட வேண்டும் நம் வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாமா..? அனைத்து ஏற்பாடுகளையும் நானே பார்த்துக் கொள்கிறேன்..'' என்றவளை இடை மறித்து ''ஸ்வேதா... ஸ்வேதா.. ஸ்டாப்... ஸ்டாப்..., உன் விருப்பபடியே நீ என்ன செய்ய நினைக்கிறாயோ.. அப்படியே செய்யலாம்...'' எனக் கூறி முறுவலித்தான்.

அவன் பதிலில் மேலும் உற்சாகமாகி நன்றாக முறுவலித்து ''கண்டிப்பாக...'' என்றவளின் கன்னத்தை தட்டி விட்டு உள்ளே சென்று மறைந்தான்.

ஹரிஷின் பிறந்த நாளிற்கான ஏற்பாடுகளை எண்ணிக் கொண்டே... அன்று புதிதாய் மனதில் எழுந்த மகிழ்ச்சியைக் கொண்டாடியபடி தோட்டத்திலேயே வெகு

நேரம் அமர்ந்திருந்தவளுக்கு லேசான குளிர் உறைத்த பின்பு தான் தன் அறைக்கே சென்றாள்.

நெடு நேரம் தோட்டத்திலேயே அமர்ந்திருந்ததும்.. இரவு வெகு நேரம் தூக்கமில்லாமல் புரண்டதும் காய்ச்சலை வரவழைக்க... விடிந்த பின்பும் படுக்கையை விட்டு எழ முயன்று, தோற்று மீண்டும் கண்ணயர்ந்தாள்.

தானே குளித்து, உடை மாற்றித் தன் புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்த ஹரிஷைக் கண்ட கார்த்திக், ''ஹரி.. என்னடா... ஸ்வேதாம்மா எங்கே..?'' என்று வினவ, ''தூங்கிட்டு இருக்காங்க டாடி..., அதனால தான் நானே குளிச்சு கிளம்பிட்டேன்...'' என்றபடி புத்தகங்களை பையினுள் எடுத்து வைத்தான்.

''என்னவாயிற்று அவளுக்கு.., இவ்வளவு நேரம் தூங்க மாட்டாளே..'' என்றபடி ஸ்வேதாவின் அறைக்குள் நுழைந்தான். உறங்கிக் கொண்டிருந்தவளின் அருகில் சென்று ''ஸ்வேதா...'' என்றழைத்து நெற்றியில் கை வைத்தான். சூடாக இருந்ததைக் கண்டு பதறி ''ஸ்வேதா.. ஸ்வேதா..'' என்றபடி எழுப்ப முயல.. அவள் ''ம்,ம்'' என்றபடி புரண்டு மீண்டும் இமைகளை மூடிக் கொண்டாள்.

ஹரிஷை டிரைவர் உடன் பள்ளிக்கு அனுப்பி வைத்து விட்டு டாக்டர்-க்கு போன் செய்தான், டாக்டர் வந்து அவளை பரிசோதித்து விட்டு மருந்து கொடுத்து விட்டுச் சென்றதும்.. விழித்த ஸ்வேதாவை கைகளில் ஏந்தி ''ஸ்வீட்டி உனக்கு என்ன டா செய்கிறது...?'' என்றான்.

''ஒன்றுமில்லை லேசான காய்ச்சல் தான்.. சரியாகி



விடும்., ஹரிஷ் பள்ளிக்குச் சென்று விட்டானா..? நீங்கள் ஏன் இன்னும் அலுவலகம் செல்லாமல் இருக்கிறீர்கள்..?'' என்றவளை முறைத்து, ''உன்னை இப்படியே விட்டு விட்டு என்னை அலுவலகம் செல்லச் சொல்கிறாயா..?'' என்றான் கோபமாக. பின் ''எழுந்திரு ஸ்வேதா.. பல் தேய்த்து விட்டு வா..சாப்பிடலாம்..'' எனக் கூறி அவளைக் குளியலறை அருகே சென்று விட்டு விட்டு கீழே சென்று தேவகியிடம் கூறி சாப்பாட்டு தட்டுடன் மேலே வந்தான்.

சோர்வுடன் கட்டிலில் அமர்ந்திருந்தவளை நிமிர்த்தி ''சாப்பிடு..'' என்றபடி ஸ்பூனை அவள் வாயில் வைத்தான். ''நானே..'' என்றவளை இடை மறித்து ''இரவில் அவ்வளவு நேரம் உன்னை யார் தோட்டத்தில் அமரச் சொன்னது...? சின்னக் குழந்தையா நீ..?'' என்று அவளைப் பேச விடாமல் கடிந்த படியே ஊட்டியவனைக் கண்டு பெருமையும், காதலும் பொங்க சிரிப்புடன் அவனை நோக்கினாள்.

அவன் அதற்கும் கோபப்பட்டு ''என்ன சிரிப்பு..'' என்று கூறி உணவை ஊட்டி முடித்தான். படுக்கையில் சாயப் போனவளைத் தடுத்து ''மாத்திரை சாப்பிட வேண்டும்'' என்று அவள் முன்னே தண்ணீரையும், மாத்திரையையும் நீட்டினான். அதையும் உண்டு முடித்தவளைத் தன் மார்பில் சாய்த்து ''சாப்பிட்டதும் படுக்க வேண்டாம்..'' எனக் கூற..அவன் அன்பில் நெகிழ்ந்த ஸ்வேதா.., சோர்வும், மகிழ்ச்சியும் ஒரு சேர அவன் மார்பிலேயே ஆழப் புதைந்தாள்.

அவளின் ஸ்பரிசத்தில் மாற்றத்தை உணர்ந்த

கார்த்திக், ''ஸ்வேதா..'' என்றழைத்தும் அவள் நிமிராமல் போகவே... புன்னகையுடன் அவளை அணைத்து ''என்ன ஸ்வேதா மேடம்.. உங்களுக்கு என் மீது கூட பாசம் இருக்கிறதா...? எப்போதும் உங்கள் ஹர்ஷுவிடம் தானே பொழிவீர்கள்.. இன்று என்ன திடீரென்று என் மேல் கருணை...? ம்?'' என்று அவள் உச்சியில் முத்தமிட்டான்.

அவன் அணைப்பிலும்,பேச்சிலும் மயங்கிய படி அவன் மார்பில் புதைந்திருந்தவள்.. மென்மையாக தலை கோதிய அவன் விரல்களின் ஸ்பரிசத்தில் உறங்கியே போனாள். மெல்ல அவளை விட்டு விலகி கட்டிலில் கிடத்தியவன் அவள் நெற்றியில் முத்தமிட்டு விட்டு பெருமூச்சுடன் அறையை விட்டு வெளியே சென்றான்.

மாலை பள்ளி முடிந்ததும் நேராக ஸ்வேதாவின் அறைக்கு வந்த ஹரிஷ் அவள் கன்னத்தைத் தொட்டு பார்த்து ''ஸ்வேதா மா.. உங்களுக்கு காய்ச்சலா..?'' என்று வினவ ''ஆமாம் கண்ணா.., இப்போது சரியாகி விட்டது'' என்று அவள் கூற, அவன் பின்னோடு உள்ளே நுழைந்த கார்த்திக், ''ஸ்வேதாம்மா அப்படித் தான் சொல்லுவாள் ஹரி.., அவளுக்கு இன்னும் காய்ச்சல் குணமாகவில்லை, நீ அவளைத் தொந்தரவு செய்யக் கூடாது'' என்று கூறி விடவும் வேகமாக தலை ஆட்டினான் ஹரிஷ்.

''நான் டிஸ்டர்ப் பண்ண மாட்டேன் ஸ்வேதாம்மா.., இன்று ஸ்கூலில்'' என்று ஆரம்பித்து பள்ளிக் கதைகளை கூறுபவனைக் கேட்டு சிரித்துக் கொண்டே அமர்ந்திருந்த ஸ்வேதாவைப் பார்த்து திருப்தியுடனே வெளியேறினான். இரவு உணவை நான் தான் ஊட்டுவேன் என்று அடம் பிடித்துத் தானே அவளை உணவருந்தச் செய்தான் ஹரிஷ்.



ஹரிஷையும் உணவருந்தச் செய்து உறங்க வைத்த பின் அவளின் அறைக்கு வந்த கார்த்திக் அவள் நெற்றியில் கை வைத்து காய்ச்சல் குறைந்து விட்டதா என்று பரிசோதித்தான். எப்போதும் உடல் நிலை சரி இல்லாமல் போனால் அவள் அதிகம் தேடுவது அவள் அன்னையைத் தான்... பெரும்பான்மையான பெண்களைப் போல..! உணவளிப்பதிலிருந்து.. உறங்கிய பின் போர்வையை சரி செய்வது வரை.. அன்னைக்கு நிகர் அன்னை தான்!

அதனால் அன்னையை நினைத்துக் கொண்டே உறங்கிய ஸ்வேதா.. நெற்றியில் பதிந்த கார்த்திக்கின் ஸ்பரிசத்தை அன்னையென உணர்ந்து ''அம்மா..'' என்றழைக்க கார்த்திக் வியந்து விட்டான்.

இது நாள் வரை தன் குடும்பத்தைக் காண வேண்டுமென்று ஒரு முறையேனும் வாய் விட்டுக் கூறியிருப்பாளா..? விடுதியில் இருந்த வரை மாதத்திற்கொரு முறை மதுரை சென்று வருபவள் இங்கே வந்த பின் தன்னுடனும், ஹரிஷுடனும் போராடிக் கொண்டிருக்கிறாளே தவிர ஒரு முறை கூட தன் ஆசையை வெளிப் படுத்தியதில்லை.

தன் மீதே கோபம் எழுந்தது. எவ்வளவோ நன்மைகளை எவ்வித எதிர்பார்ப்புமின்றி.. தன்னலமற்று செய்தவளின் ஒரு சின்ன விருப்பத்தைக் கூட நிறைவேற்றி வைக்காமல் எவ்வளவு சுயநலமாக நடந்து கொண்டிருக்கிறான்.

இந்த லட்சணத்தில்... ஸ்வேதாவை வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சபதம் வேறு எடுத்துக் கொண்டான்.

நிச்சயம் அவளது ஏக்கத்தைப் போக்கியாக வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு அவளின் தலை கோதிய படியே வெகு நேரம் அமர்ந்திருந்தான்.

மறுநாள் காலை அவளின் உடல் நிலை வெகுவாகத் தேறி விட்டதால் ஹரிஷைப் பள்ளிக்கு அனுப்புவதற்காக அவன் அறைக்கு வந்தாள். அவன் அறையில் இல்லாததைக் கண்டு கீழே சென்றாள். தோட்டத்தில் மரத்தடி ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தவனைக் கண்டு ''ஹரிஷ்... ஸ்கூலுக்குச் செல்ல நேரமாகி விட்டதே.. இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்...''

அவனோ மேலும் ஆடிய படி ''ஸ்வேதாம்மா.. டாடி இன்று என்னை லீவ் போட சொல்லி விட்டார். அதனால் நான் இன்று லீவ்..'' என்றவனைப் பார்த்து ''எதற்காக லீவ் போட சொன்னார்..?'' என்று வினவ..

''நம் வீட்டிற்கு யாரோ முக்கியமான கெஸ்ட் வருகிறார்களாம் ஸ்வேதாம்மா..'' என்று கூறி விட்டு ஊஞ்சலில் இறங்கி ஓடிச் செடிகளுக்குள் மறைந்தான்.

யார் அந்த முக்கியமான விருந்தாளி என்று யோசித்தவள் சரி யாரேனும் அவனது தொழில் முறை நண்பர்களாக இருக்கும் என்று நினைத்தபடி சமையலறைக்குச் சென்றாள். அங்கே தடபுடலாக விருந்து தயாராவதைக் கண்டு விட்டு.. அடேங்கப்பா! பில்ட் -அப் பலமாக இருக்கிறதே.. யாராயிருக்கும்...? யாராயினும் அறிமுகப்படுத்தும் போது தெரிந்து கொள்ள வேண்டியது தான்.

ஹரிஷுடன் சேர்ந்து மதிய உணவை உண்டு விட்டு



அவனது அறையிலேயே உறங்கிப் போன ஸ்வேதா.. சற்று நேரத்தில் யாரோ தன் கன்னத்தை தொடுவதை உணர்ந்து திடுக்கிட்டு விழித்துப் பார்த்தாள்.

எதிரே நின்று கொண்டிருந்த உருவத்தைக் கண்டு சிரிப்பில் விரிந்த இதழ்களுடன் ''அம்மா...'' என்று கூவிய படி தாவி வந்து அன்னையை அணைத்துக் கொண்டாள்.

''ஏன் மா.. இரண்டு மாதத்திற்கு மேல் நான் ஊருக்கு வராமல் போனால்.. நீங்களே என்னைப் பார்க்க வருவீர்களே! இப்பொழுதெல்லாம் வருவதே இல்லை.. என் மீது பாசம் குறைந்து விட்டது உங்களுக்கு..'' என்று சிணுங்கியவளைக் கண்டு பின்னால் நின்று கொண்டிருந்த ஹரிஷும், கார்த்திக்கும் முறுவலித்தனர்.

அவர்களிருவரும் அங்கிருப்பதைக் கண்டு வெட்கி அன்னையை விட்டு விலகியவள் மீண்டும் அவர்களை முறைத்த படியே ''போடா...'' எனக் கூறி விட்டு அன்னையின் தோளில் சாய்ந்து கொண்டாள். அவளைக் கண்டு மேலும் சிரித்துக் கொண்டிருந்த ஹரிஷைத் தூக்கிய கார்த்திக், ''நீ உன் ஸ்வேதாம்மாவைப் பார்த்து செல்லம் கொஞ்சுகிறாயல்லவா... அதைப் போல் ஸ்வேதாம்மா.. அவளுடைய அம்மாவிடம் செல்லம் கொஞ்சுகிறாள்..'' எனக் கூறிச் சிரித்தான்.

இருவரையும் பார்த்துச் சிரித்த பார்வதி அம்மாள் கார்த்திக்கிடம், ''ரொம்ப நன்றி தம்பி.. ஸ்வேதா என்னை பார்க்க விரும்பினாள் என்பதற்காக, இரவோடு இரவாக கார் அனுப்பி என்னை அழைத்து வரச் செய்ததற்கு. அவளுடைய அப்பாவிற்கும் உடன் வர ஆசை தான்.. ஆனால் அங்கே போட்டது போட்ட படி வர

முடியாதல்லவா.. அதனால் தான் அவர் வரவில்லை.. '' என்று ஸ்வேதாவின் தலையை வருடிய படியே கூற.. ஸ்வேதா வியப்புடன் அவனை நோக்கினாள்.

கார்த்திக் அவரிடம் முறுவலித்து ''பரவாயில்லை.. ஆன்ட்டி இரண்டு நாள் காய்ச்சலில் உங்களைத் தான் அவள் அதிகம் தேடினாள். அதனால் தான் அழைத்து வர ஏற்பாடு செய்தேன்.. அடுத்த முறை கண்டிப்பாக அங்கிளையும் நீங்கள் அழைத்து வர வேண்டும்..'' என்ற கோரிக்கையுடன் விடை பெற்றவன் ஸ்வேதாவிடம் ஒரு தலையசைப்புடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

வியப்பு நீங்காதவளாக அன்னையின் புறம் திரும்பி ''அம்மா.. கார்த்திக்கா கார் அனுப்பி வைத்தார்...? நீங்க எப்படி வரச் சம்மதித்தீங்க..? உங்களுக்குத்தான் இந்த வீடும், என் வேலையும் பிடிக்காதே..'என்று வினவினாள்.

''இப்போதும் பிடிக்காது தான்.. ஆனால் நீ என்னை பார்க்க விரும்புவதாகவும்,உனக்கு காய்ச்சல் என்றதாலும் தான் நான் புறப்பட்டு வந்து விட்டேன்.., கார்த்திக் தம்பி நல்லவராகத் தான் தெரிகிறார்.. நல்ல குணம்.. உன் தந்தை இங்கே வந்து திரும்பியதிலிருந்து இந்தத் தம்பியைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கிறார்.. இந்தக் குட்டி பையனைப் பார்த்தாலும் பாவமாகத் தான் இருக்கிறது.. அன்னையற்ற சிறுவன்.. பாவம்...'' எனக் கூறி அவர் ஹரிஷை முத்தமிட.. அவனும் ''பாட்டி... உங்களுக்கு என்னோட பெயிண்டிங்ஸ் காட்டவா..?'' என்று இயல்பாகப் பேசி அவருடன் ஒட்டிக் கொண்டான்.

இருவர் பேசுவதையும் புன்னைகையுடன் பார்த்துக் கொண்டிருந்த ஸ்வேதா கார்த்திக்கைத் தேடி அவன் அறைக்கு வந்தாள். கணினியின் முன்பு அமர்ந்திருந்தவன் அரவம் உணர்ந்து திரும்பி அவளை நோக்கி புன்னகைத்து ''ஹாய் ஸ்வீட்டி... இப்போது ஹாப்பியா?'' என்று வினவ.. தனக்காக.. தன் சந்தோசத்திற்காகவே செய்திருக்கிறான் என்ற எண்ணம் மேலோங்க... மகிழ்ச்சியில் கண்களில் நீர் கோர்த்தது.



''ஏய்.. ஸ்வேதா..'' என்றபடி அவள் தோளைத் தட்டித் தன்னருகே அமர வைத்தவன் ''நீ சந்தோசமாக இருக்க வேண்டுமென்று தானே கண்ணம்மா அவர்களை வரவழைத்தேன்..., எதற்காக அழுகிறாய்...?'' என்று வினவினான்.

அழுகையினூடே ''எனக்காக.. எனக்காகத் தானே செய்தீர்கள்..?'' என்றவளின் உதட்டில் விரல் பதித்து அவள் கூந்தலை வருடியவன் ''நீ எனக்காக செய்த நன்மைகளின் முன்னே இதெல்லாம் தூசு தான் டா கண்ணம்மா..., இங்கே வருவதற்கு முன்னிருந்த ஸ்வேதா எனக்கு வேண்டும்.., தன் புன்னகையால் அனைவரையும் மயங்கச் செய்யும் அந்த ஸ்வேதா எனக்கு வேண்டும்...'' என்று அவன் கூறியதும் சிரித்துக் கொண்டே கண்களைத் துடைத்துக் கொண்டவள் ''ரொம்ப.. ரொம்ப.. தேங்க்ஸ் சார்..'' என்று கூற..

அதற்குள் அவன் அவளை இடை மறித்து ''அதற்குள் தேங்க்ஸ் சொன்னால் எப்படி? ஆச்சரியங்கள் இத்துடன் நிற்கப் போவதில்லை..'' எனக் கூறிச் சிரித்தான்.

அவன் சிரிப்பதையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்வேதா.. மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். புன்னகையால் நான் மயங்கச் செய்கிறேனாம்! இந்த

வசீகரப் புன்னகை பார்ப்பவரை தன்னிலை இழக்கச் செய்யும் என்பது இவனுக்கு தெரியாது போலும்!

மகளுடனே அன்று முழுதும் தங்கி.. ''பாட்டி..பாட்டி..'' என்று தன் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்த ஹரிஷைக் கொஞ்சிய படியே நாளைக் கழித்த பார்வதி அம்மாள்..அன்று இரவு புறப்படுவதற்கு முன் ஸ்வேதாவிடம் வந்தவர், ''இந்தச் சிறுவன் தான் இப்போது சரியாகி விட்டானே.. நீ இன்னும் ஏன் இந்த வேலையைத் தொடர்கிறாய்..?'' என்று வினவ..

''நீ இன்னும் இதைப் பற்றி ஆரம்பிக்கவில்லையே என்று நினைத்தேன் அம்மா.. நீயே பார்க்கிறாய் தானே..? அவன் மாறத் தொடங்கியிருக்கும் வேளையில் அவனை விட்டுவிட்டு வரச் சொல்கிறாயே..? கருணையும், அன்பும் நீ சொல்லிக் கொடுத்தது தானே மா...? நீங்களே அதைக் கை விடச் சொல்லுகிறாயே..!'' என்றாள் கோபமாக.

''என்னவோ போ.. நீயும் உன் தந்தையும் ஏதோ திட்டமிட்டு விட்டீர்கள்.. நடத்துங்கள்.. எப்போதும் கடைசியில் தானே என்னிடம் விஷயத்தைக் கூறுவீர்கள்..! அப்போது பார்த்துக் கொள்கிறேன்., நீ உன் உடல் நிலையைப் பார்த்துக் கொள்.இப்படி சண்டை போட்டு விட்டதால் எனக்கு போன் செய்யாமல் இருக்காதே... என்ன...?''

சிரித்தபடி அன்னையைக் கட்டிக் கொண்டவள் ''என் செல்ல அம்மா'' என்று செல்லம் கொண்டாட... தானும் சிரித்தபடி. ''விரைவிலேயே மூவரும் மதுரைக்கு வர வேண்டும் தம்பி..'' எனக் கூறி விடை பெற்றுச் சென்றார்.



அடுத்த இரண்டு நாட்களில் ஹரிஷின் பிறந்த நாளென்பதால் வீட்டு அலங்காரத்திற்க்கும்,உணவிற்கும் ஏற்பாடு செய்வதற்காக யோசித்த படியே தேவையானவற்றை ஒரு தாளில் எழுதிக் கொண்டிருக்க, ''ஹாய் ஸ்வேதா..'' என்ற ரம்யா, சத்யாவின் குரல் கேட்டு ''ஏய்.. ரம்யா.. சத்யா..'' என்றபடி வேகமாக எழுந்து சென்று தோழிகள் இருவரையும் வரவேற்றாள்.

''என்னடி அப்படியே எங்களைப் பார்த்ததும் சந்தோசப்படுபவள் போல் நடிக்கிறாய்.., இதே சென்னையில் இருக்கிறோம்.. போன் பேசுவதுடன் சரி, நாங்கள் இருக்கும் பக்கம் எட்டிக் கூட பார்ப்பதில்லை..'' என்று குறை பட்டுக் கொண்ட சத்யாவை முறைத்த ரம்யா ''ஏய்.. ஹரிஷை விட்டு விட்டு ஸ்வேத் எப்படி வருவாள்..? உனக்குத் தேவையென்றால் நீயே வந்து பார்க்க வேண்டியது தானே?'' என்று தனக்காக வக்காலத்து வாங்கியவளை ஆச்சர்யமாக நோக்கினாள் ஸ்வேதா.

''இந்த ஆயா வேலை வேண்டாம்..அப்படி, இப்படி'' என்று குதிப்பவள்...இன்று தன் பக்கம் பேசவும் ஸ்வேதா புரியாமல் சத்யாவை நோக்கினாள்.

''அதை ஏன்டி கேட்கிறாய்..? எப்போது உன் கார்த்திக் இவளிடம் வந்து பேசினாரோ.. அப்போதே இவள் கார்த்திக்கே சரணம் என்று பாடத் துவங்கி விட்டாள்.. நொடிக்கொரு முறை.. எவ்வளவு வசீகரமான கண்கள்! என்னவொரு சிரிப்பு! இந்த இரண்டு வாக்கியங்களைத் தான் கூறிக் கொண்டே இருக்கிறாள். கேட்டுக் கேட்டு என் காதில் ரத்தமே வந்து விட்டது'' என்று எரிச்சலுடன் கூறியவளைக் கண்டு ஸ்வேதா விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள்.

''எதற்குச் சிரிக்கிறாய்..? ஏய்.. முட்டை போண்டா.. என்னைப் பற்றிக் குறை கூறத் தான் உன்னை அழைத்து வந்தேனா..?'' என்று சத்யாவை முறைத்தவள் ஸ்வேதாவின் புறம் திரும்பி '' உனக்குத் தெரியுமா? அவருக்கு எவ்வளவு வசீகரமான கண்கள்'' என்று மீண்டும் தொடங்க ஸ்வேதாவும், சத்யாவும் ''ஐயோ!'' என்றபடி தலையில் அடித்துக் கொண்டனர்.

சிரித்தபடியே சத்யாவிடம் என்ன நடந்தது என்று வினவினாள். ''நான் கூறுகிறேன்..'' என்று முந்திக் கொண்ட ரம்யா நடந்ததை விவரித்தாள். ''நேற்று காலை நானும் இந்த போண்டாவும் டெலிஸியஸ் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். திடீரென்று எங்கள் அருகில் சிரித்த முகத்துடன் ஒரு மன்மதன் வந்தமர்ந்தான். அவன் புன்னகையில் நான் என்னைத் தொலைத்துக் கொண்டிருக்கையிலேயே..'' என்று அவள் கூறியவுடன் அவள் தொடையைக் கிள்ளினாள் சத்யா. ''என்னடி..'' என்று எரிச்சலுடன் வினவியவளை..

''ஏய்... ரம்யா ஸ்வேதாவிடமே அவரைப் புகழ்கிறாயா?'' என்று கேட்க, ''ஏய்.. ஸ்வேத்.. உனக்கு அவர் மீது ஏதேனும் ஃபீலிங்ஸ் இருந்தால்.. அதை மறந்து விடு.. கார்த்திக் இஸ் மை டார்லிங் !'' என்று கூற...

வாய் விட்டு சிரித்த ஸ்வேதா ''என்னடி இப்படி மாறி விட்டாள்...?'' என்று மேலும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள். ''அய்யோ ஸ்வேத்.. நடந்ததைக் கேள்..'' என்றதும் சிரிப்பை நிறுத்தி ரம்யாவின் முகம் நோக்கினாள்.

''அதன் பின்.. நீங்கள் ஸ்வேதாவின் தோழிகள் ரம்யா, சத்யா தானே என்று கேட்டார். நாங்கள் ஆமாம் என்றோம். அப்படியானால் ஒரு உதவி செய்ய வேண்டுமே என்று கூறி விட்டு உங்கள் தோழி உங்களை மிகவும் மிஸ் செய்கிறாள். ஒரு முறை சென்று பார்த்து வர முடியுமா என்று வினவினார்.., அவர் புன்னகையில் மயங்கியிருந்த நான் பதில் கூறாமல் விழித்துக் கொண்டிருந்தேன்.. இந்த முட்டை போண்டா அந்தச் சான்ஸை உபயோகித்து அவரிடம் பேசி விட்டது'' என்று முறைத்தவள்...



தொடர்ந்து ''நாங்கள் கட்டாயம் செல்கிறோம் என்று கூறியதும்.. ரொம்பவும் தேங்க்ஸ்.. என் ஸ்வேதாவின் சந்தோசம் எனக்கு மிக மிக முக்கியமான ஒன்று.. உங்களைச் சந்தித்தால் மிகவும் மகிழ்ச்சியுறுவாள் என்று கூறி விட்டுக் கிளம்பி விட்டார்..'' என்றவள் மீண்டும் பிரகாசமாகி ''அவர் என் ஸ்வேதா என்றதிலிருந்த அன்பு.. வாவ்! அந்த லவர் பாய் எனக்கு தான் உனக்கில்லை போடி..'' என்று ஸ்வேதாவையும் முறைத்துக் கொண்டாள்.

சிரித்தபடியே இருவருக்கும் சிற்றுண்டி அளித்தவள் ஹாஸ்டல் வார்டனிலிருந்து பக்கத்துக்கு ரூம் ரித்திகா வரை அனைவரைப் பற்றியும் பேசி முடித்திருந்த வேளையில் கார்த்திக்கும், ஹரிஷும் வந்து சேர்ந்தனர். ''ஸ்வேதாம்மா...'' என்றபடியே ஓடி வந்தவன் புதிதாக இருவர் அமர்ந்திருப்பதை உணர்ந்து மேலும் புன்னகையை விரித்து ''ரம்யா ஆன்ட்டி... சத்யா ஆன்ட்டி..'' என்றான்.

சத்யா அவனைத் தூக்கி ''உனக்கு எங்களைக் கூட தெரியுமா கண்ணா...?'' என்று வினவ ''ஓ!

போட்டோவில் பார்த்திருக்கிறேன்.. ஸ்வேதாம்மா சொல்லியிருக் கிறார்கள்'' என்று கூற தங்களை என்றும் மறவாத தோழியின் பாசம் கண்டு ரம்யாவை நோக்கினாள்.

எங்கே! அவள் இந்த உலகத்தில் இருந்தாலல்லவா இதை கவனிப்பதற்கு! வாயில் கொசு போவது கூடத் தெரியாமல் ஆ! என்று கார்த்திகை நோக்கி கொண்டிருந்தாள். அவள் கையைப் பற்றிக் கிள்ளி அவளை நடப்பிற்கு கொண்டு வந்தாள் சத்யா.

இருவரிடமும் உரையாடிக் கொண்டிருந்த கார்த்திக்கை மையலுடன் நோக்கினாள் ஸ்வேதா. ''உங்களுக்கு காபி கொண்டு வருகிறேன்...'' என்று உள்ளே சென்றவளின் பின்னே தானும் சென்ற கார்த்திக் சமையலறையில் அவள் அருகில் நின்று அவள் தோளை இடித்து ''என்ன... மேடம்? எப்படி என் சர்ப்ரைஸ் ..'' என்று வினவ அவளும் சிரித்துக் கொண்டே ''நீங்கள் எனக்குக் கொடுக்கும் சர்ப்ரைஸ் இருக்கட்டும்... இப்போது உங்களுக்கு நான் ஒரு சர்ப்ரைஸ் தரப் போகிறேன்..'' என்றவள்..

ரகசியம் சொல்பவளைப் போல் அவனருகில் வந்து தன் பெரிய கண்களை உருட்டி ''என் தோழி ரம்யா உங்கள் மன்மதப் புன்னகையில் மயங்கி விட்டாளாம்.., கார்த்திக் எனக்குத் தான் என்று சொல்லிக் கொண்டு திரிகிறாள்.. அவளை ஏமாற்றி விடாதீர்கள்...'' என்று சிரித்த படியே வெளியே செல்ல ''உன்னை...'' என்று பல்லைக் கடித்தவன் தானும் சிரித்த படியே வெளியே வந்தான்.

சிரித்த படி வந்த இருவரையும் கண்ட ரம்யா.. ''ஏய்.. ஸ்வேதா.. நீ ஏன் என் ஹனியுடன் சேர்ந்து சிரிக்கிறாய்..?''



என்று கேட்க, குடித்துக் கொண்டிருந்த காபி புரையேறுமளவிற்குச் சிரித்த கார்த்திக் ''ஸ்வேதா.. நீ ரம்யாவின் தோழி தானே.. அவள் எவ்வளவு வேகமாக இருக்கிறாள்? நீ ஸ்லோ பிக் அப் தான் ஸ்வேதா மா..'' என்றவன் ரம்யாவின் புறம் திரும்பி ''ஸ்வேதா மட்டும் ஒரு வார்த்தை சொல்லட்டும்.. நான் இப்போதே உங்கள் ஹனியாகி விடுகிறேன்..'' எனக் கூறிச் சிரித்தவனை ஸ்வேதா முறைக்க.. வாவ்! என்று துள்ளிக் குதித்தாள் ரம்யா.

சிரிப்பும்,நகைச்சுவையுமாக அடுத்த சில மணி நேரங்கள் கழிய ரம்யாவும்,சத்யாவும் விடைபெற்றுச் சென்றனர். அவர்கள் சென்றதும் ஸ்வேதாவின் கை பற்றி நிறுத்தியவன் ''சந்தோசமாக இருக்கிறாய் தானே ஸ்வீட்டி..?'' என்று வினவ.. அவன் கண்களை நோக்கி ''என் அன்னையைச் சந்தித்து விட்டேன்,என் தோழிகளைக் கண்டு விட்டேன்.. இவையெல்லாம் எனக்குச் சந்தோசத்தை கொடுக்கின்ற விஷயங்கள் தான்.. ஆனால் இதையெல்லாம் தாண்டிய பெரிய சந்தோசம்...'' என்று நிறுத்தியவள் மனதிற்குள் ''உன்னுடன் இருப்பது தான்'' என்று கூறி விட்டு வெளியில் அவனிடம் ''ஹர்ஷுவுடன் இருப்பது தான்..'' என்று கூற..

ஒரு நிமிடம் விழித்தவன் வேகமாக அவள் கைகளைப் பற்றி அணைத்து அவள் முகம் நிமிர்த்தி ''ஹர்ஷுவுடன் இருப்பதா..? என்னுடன் இருப்பதா..'' என்று வினவ அவன் கைகளை விலக்கி விட்டு சிரித்தபடியே விறு விறுவென ஓடிச் சென்றாள் ஸ்வேதா.

# 13

உன் புன்னகையில்...
பலமுறை இறந்து....!
உன் பார்வையில்.....
புதிதாய்ப் பிறந்து......!
உன் சுவாசத்தில்.....
என் சுவாசம் பெற்று..!
உன் வார்த்தைகளில்..
உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்..!
மொத்தத்தில்..
நீ தான் என் பலம்! நீ தான் என் பலவீனம்!

அன்று காலை அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த கார்த்திக் அன்று எடுத்துச் செல்வதற்காக வைத்திருந்த சிடியைக் காணாமல் தேடிக் கொண்டிருந்தான்.

எங்கே வைத்தேன்! என்றவன்... ''அறையைச் சுத்தம் செய்கிறேன் என்கிற பெயரில் எல்லாவற்றையும் எங்கேனும் வைத்து விட வேண்டியது '' என்றபடியே நடந்து வந்து ''ஸ்வேதா... இங்கே வைத்திருந்த சிடி எங்கே



போயிற்று'' என்று மாடியிலிருந்தபடியே சத்தமிட்டான்.

அதே நேரத்தில் அவன் மகனும் ''ஸ்வேதாம்மா.. என் ஸ்கெட்ச் பாக்ஸில் ஆரஞ்ச் கலர் ஸ்கெட்ச்சைக் காணவில்லை..'' என்று அவனும் தன் அறையிலிருந்து கூவினான்.

ஆரம்பித்தாயிற்று! காலையில் இருவருக்கும் இதே வேலையாய் போயிற்று! என்று புலம்பிய படியே.. படியேறிய ஸ்வேதா ஹரிஷின் அறைக்குச் சென்று கட்டிலின் கீழே உருண்டு கிடந்த ஸ்கெட்ச்சை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு அங்கிருந்த சிடியையும் எடுத்துக் கொண்டு கார்த்திக்கின் அறைக்குச் சென்றாள்.

''ஸ்வேதா.. சுத்தம் செய்யும் பொழுது எதையும் இடம் மாற்றி வைக்காதே என்று எத்தனை முறை கூறியிருக்கிறேன்..?'' என்று பொறியத் துவங்கியவன் அவள் கையில் சிடி இருப்பதைக் கண்டு அடங்கி ''எங்கே இருந்தது..?'' எனக் கேட்ட படி அவளிடமிருந்து வாங்கிக் கொண்டான்.

''நேற்றிரவு ஹரிஷின் அறையில் லேப்டாப்புடன் அமர்ந்திருந்தது உங்களுக்கு ஞாபகமில்லை.. இதில் நான் இடம் மாற்றி வைத்து விட்டதாக என்னையே குறை கூறுகிறீர்கள்!'' என்று அவள் பதிலுக்கு பேசத் துவங்க..

''ஏன்..?, காலையிலிருந்து மாலை வரை வெட்டியாகத் தானே இருக்கிறாய்..? இதையெல்லாம் பார்த்து எடுத்து வைப்பதில் தப்பேதுமில்லை..'' என்று நமுட்டுச் சிரிப்புடன் கூற..... வந்ததே ஸ்வேதாவிற்கு ஆத்திரம்!

இடுப்பில் கை வைத்து அவனை முறைத்தவள் "நான்... நான்.. வெட்டியாக இருக்கிறேனா...? உங்கள் இருவரையும் காலையில் கிளப்பிவிடும் பெரிய வேலையைச் செய்கிறேனே! அது கண்ணில் படவில்லையா..?

உன் சமையல் மிகவும் நன்றாக இருக்கிறது.... ஸ்வீட்டி எனக் கூறி தினமும் மதியம் வந்து கொட்டிக் கொள்கிறீர்களே! அந்தச் சமையல் யார் செய்து வைப்பது! நான்... வெட்டியாக இருக்கிறேனா...?" என்று கத்தியவளைக் கண்டு சிரிப்பை அடக்க முடியவில்லை கார்த்திக்கினால்!

"சரி... சரி... எனக்காக எல்லாம் செய்கிறாய்... சரி தானே? மலை இறங்கு கண்ணம்மா! இப்படி உர்ரென்று நீ முகத்தை வைத்துக் கொண்டு என்னை வழி அனுப்பினால் எனக்கு வேலை எப்படி ஓடும்..?ப்ளீஸ்.. ப்ளீஸ்.." என்று கெஞ்சிக் கொண்டிருக்கையில் உள்ளே நுழைந்த ஹரிஷ் ஸ்வேதா கோபமாக இருப்பதைக் கண்டு உடனே முகத்தை மாற்றிக் கொண்டு...

"ஐயோ டாடி..! இன்றும் காலை நேரத்தில் வேலை வாங்கி ஸ்வேதாமாவை கோபப் படுத்தி விட்டீர்களா..? ஏன் டாடி.. தினமும் காலையில் இப்படி ஸ்வேதாமாவை திட்டிக் கொண்டே இருக்கிறீர்கள்? பாவம் !" என்று கூற.. நன்றாகக் கேளடா..என்பது போல் நின்று கொண்டிருந்த ஸ்வேதாவை நோக்கி விட்டு 'அடப் பாவி!" என்ற கார்த்திக் "ஏன்டா நான் மட்டுமா அவளை வேலை வாங்குகிறேன்?என் ஸ்கெட்ச்சைக் காணவில்லையென்று நீ அழைக்கவில்லை..?"



ஆஹா! டாடி நம்மை மாட்டி விடப் பார்க்கிறார்! என்று நினைத்த ஹரிஷ், எஸ்கேப் என்று கூறி வேகமாக ஸ்வேதாவைக் கட்டிக் கொண்டு "என் ஸ்கெட்ச்சைக் கண்டுபிடித்ததற்கு தேங்க்ஸ் ஸ்வேதாம்மா.." என்று முத்தமிட்டு விட்டு ஓட.. மகனைப் பின் பற்றி கார்த்திக்கும் "சிடியைக் கண்டுபிடித்ததற்கு தேங்க்ஸ் ஸ்வேதாம்மா" என்று முத்தமிட்டு விட்டு ஓடினான்.

மாடியிலிருந்து இருவரையும் நோக்கியவள் "மாலை இங்கே தானே வர வேண்டும்..? அப்போது கவனித்துக் கொள்கிறேன் இருவரையும்.." என்று கூறியவளைக் கண்டு "அதெல்லாம் நாங்கள் சமாளித்து விடுவோம்.." என்று ஹை-ஃபை கொடுத்துக் கொண்டு "பாய்.. ஸ்வேத மா.." என்று கிளம்பி விட்டனர். வரட்டும் மாலையில் என்று கறுவிக் கொண்டு ஸ்வேதாவும் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்.

அன்று மாலை வீட்டிற்கு வந்த கார்த்திக் "ஸ்வேதா" என்றபடியே அவள் அறைக்குள் நுழைந்தான். "கார்த்திக் இங்கே இருக்கிறேன்..." என்று அவள் பால்கனியில் இருந்து குரல் கொடுக்க அவளிடம் சென்ற கார்த்திக் பாவாடை, சட்டை அணிந்து சிறுமியைப் போல் அமர்ந்திருந்த ஸ்வேதாவைக் கண்டு விழி விரித்து, "ஏய்.. ஸ்வீட்டி.. நீ இப்படியெல்லாம் கூட அணிவாயா..?" என்றபடி அவளிடம் ஒரு பார்சலை நீட்டினான். என்னவென்று பிரித்துப் பார்த்த ஸ்வேதாவின் விழிகள் ஆச்சர்யத்தில் விரிந்தன.

அது ஒரு அழகான புடவை! பிங்க் நிறத்தில் வெள்ளைக் கற்கள் பதிக்கப்பட்டிருந்த அந்தப் புடவையின் வேலைப்பாடே அதன் விலைமதிப்பை பறைசாற்றியது..

கேள்வியாக அவனை நோக்கியவளை ''பிடித்திருக்கிறதா...?'' என்று வினவினான்.

''ஹ்ம்ம்..'' என்ற ஸ்வேதா ''ஆனால் எதற்காக..?'' என்று வினவ அவள் தலையில் தட்டி ''நாளை ஹரிஷின் பிறந்த நாளல்லவா.., இன்று ஷாப்பிங் சென்றேன்.. உன்னையும் அழைத்துச் செல்லலாம் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் உனக்கு இந்த சர்ப்ரைஸ் கொடுக்க வேண்டும் என்பதற்காக அந்த நினைப்பைக் கை விட்டு விட்டேன்.., பிடித்திருக்கிறது தானே ?'' என்று மறுபடியும் வினவினான்.

''ஹ்ம்ம், பிடித்திருக்கிறது... ஆனால்.. மிகவும் விலை உயர்ந்ததாகத் தெரிகிறதே...'' என்று இழுக்க ''உன்னை விட.. உன் அன்பை விட.. விலைமதிப்புள்ள விஷயம் உலகத்தில் இல்லை.. சரியா..?'எனக் கூற சிவந்தபடியே தலை ஆட்டினாள் ஸ்வேதா.

''நாளை இந்தப் புடவை தான் கட்ட வேண்டும்..'' என்று கூற அதற்கும் தலையாட்டியவளின் கன்னத்தைக் கிள்ளி ''சரியான தஞ்சாவூர் பொம்மை..'' என்று விட்டுச் சென்றான் கார்த்திக்.

மறுநாள். ஹரிஷின் பிறந்த நாள்..

ஏற்கனவே செய்திருந்த முன்னேற்பாட்டின்படி ஸ்வேதாவும்,கார்த்திக்கும் அவன் எழும் முன்பே அவன் அறையில் கூடி.. அவன் எழுந்ததும் இருவரும் சேர்ந்து ''ஹாப்பி பர்த்டே'' பாடி அவன் வாயில் சாக்லேட்டை ஊட்டி முத்தமிட்டனர். எழுந்ததுமே கிடைத்த சாக்லேட்டில் குஷியாகி விட்டவன்.. ''ஸ்வேதா மா.. அப்படியென்றால் நான் இன்று ஸ்கூல் போக



மாட்டேனா..?''

''ஸ்கூல் போக வேண்டும் கண்ணா.. ராஜி மிஸ், அர்ச்சனா மிஸ், உன் பெஸ்ட் ஃப்ரண்ட் ஸ்ரீ அனைவருக்கும் சாக்லேட் தர வேண்டாமா..? நீ அவர்களுடன் கொண்டாடி விட்டு இங்கே வந்து பார்ட்டியில் கலந்து கொள். சரியா..?'' என்று கூறி அவனை முத்தமிட்டாள். ''சரி'' என வேகமாக தலை ஆட்டியவன்.. அடுத்த சிலமணி நேரங்களில் புத்தாடையுடன்,முகம் முழுக்க சிரிப்புடன் பள்ளிக்குச் சென்றான்.

ஸ்வேதாவும்,கார்த்திக்கும் இரவு நடக்கப் போகும் பார்ட்டிக்கான ஏற்பாட்டை பார்த்துக் கொண்டிருந்தனர். ஸ்வேதாவின் தோழிகள், ஹரிஷின் பள்ளி ஆசிரியர்கள் என்று அனைவருக்கும் அழைப்பு விட்டிருந்த படியால் அனைவரும் ஒவ்வொருவராக வரத் துவங்கினர்.

''ஸ்வேதா.. நீ சென்று உடை மாற்றித் தயாராகி வா..'' என்று கார்த்திக் அவசரப்படுத்த ''இதோ.. ஐந்து நிமிடம்..'' என்றவளிடம் ''இப்படியே ஐந்து நிமிடம், ஐந்து நிமிடமென்று ஒரு மணி நேரம் சென்று விட்டது.. வா.. வா ஸ்வேதா.. என்று கூறிக் கொண்டே அவள் தோள் பற்றி அழைத்துச் சென்றான்.

அவளை அவள் அறைக்குள் விட்டு விட்டு தன் அறைக்குச் சென்று தானும் உடை மாற்றிக் கிளம்பினான். ஸ்வேதாவின் அறைக்குச் சென்று ''ஸ்வேதா...'' என்றபடி கதவைத் தட்ட ''ஹ்ம்ம், வந்து விட்டேன்..'என்றபடியே ஓடி வந்து கதவைத் திறந்தாள் ஸ்வேதா. வாட்ச்சை சரி செய்து கொண்டே நிமிர்ந்தவன் சில நிமிடம் சிலையாகவே நின்று விட்டான்.

அந்த விலை உயர்ந்த புடவையிலும், ஆபரணங்களிலும் ஜொலித்துக் கொண்டிருந்தவளைக் கண்டு இமை தட்டி விழித்தான். விண்ணுலகத்தில் ரம்பை,மேனகை,ஊர்வசி என்று அழகிகள் இருப்பதாகக் கூறுகிறார்களே! அது எந்த அளவிற்கு உண்மை? இதோ.. இங்கே.. தந்தச் சிலை போல்.. ஒட்டு மொத்த அழகையும் தனக்குள் உள்ளடக்கிக் கொண்டு இங்கே ஒரு பிரம்மனின் படைப்பு நின்று கொண்டிருக்கிறதே! இதை என்னவென்று கூறுவார்கள்?

அந்தப் புடவையை அவள் கட்டியிருந்த நேர்த்தியும்.. புடவையின் பின்னே ஒளிந்து கிடந்த அவள் செழுமையும்.. அவனைக் கிறங்கடிக்கச் செய்ய.. அழகான ஓவியமொன்று உயிர் பெற்று வந்ததைப் போல் நின்று கொண்டிருந்தவளை ரசித்துக் கொண்டே அவளை ஒரு முறை சுற்றி வந்தவன் ''ஸ்வேதா...'' என்று கிசுகிசுப்பான குரலில் அழைத்து ''ஒரு பெண்ணைப் புடவையை விட அதிகக் கவர்ச்சியாகக் காட்டும் உடை உலகில் ஏதுமில்லை என்று உனக்குத் தெரியுமா..?'' என்று வினவ...

அவன் அருகாமையிலும் ,அவன் பார்வையிலும் சூடேறத் தொடங்கியிருந்த ஸ்வேதா உதட்டைக் கடித்த படி தலை குனிந்தாள். அவளைத் தன்புறம் திருப்பி அவள் இதழை நோக்கிக் குனிந்தவனை ''ஸ்வேதாம்மா...'' என்ற ஹரிஷின் குரல் தடை செய்ய.. கண்களை இறுக மூடித் தன்னைக் கட்டுப் படுத்தியவன் அவளை இறுக அணைத்து அவள் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு ''சீக்கிரம் வா..'' என்று கரகரப்பான குரலில் கூறி விட்டு அந்த அறையை விட்டு நகர்ந்தான்.



அவன் அணைப்பில் தன்னை மறந்து நின்றிருந்த ஸ்வேதாவை உலுக்கிய ஹரிஷ் ''இந்த டிரஸ் உங்களுக்கு அழகாக இருக்கிறது ஸ்வேதாம்மா..'' என்றவனை முத்தமிட்டு அவனுக்கென்று புதிதாகத் தைக்கப் பட்டிருந்த பிங்க் நிற ஷர்வாணியை அவனுக்கு அணிவித்தாள். இருவரும் தயாராகிப் படியிறங்க.. கீழே நின்று கொண்டிருந்த அனைவரின் பார்வையும் மேலே செல்வதைக் கண்டுத் திரும்பிப் பார்த்த கார்த்திக்..

வண்ண மயிலாக.. தன் அங்கம் அசைய.. மென்னடை புரிந்தவளைக் கண்டு இமைக்க மறந்து அவளையே நோக்கிக் கொண்டிருந்தான். அவனருகில் நின்று கொண்டிருந்த சத்யா அவன் தோளில் இடித்து ''சார்.. உங்கள் பையன் கூட நடந்து வருகிறான்.. அவனையும் கொஞ்சம் பாருங்கள்..'' எனக் கூற அசடு வழிந்து தலை குனிந்தவன் பின் தன் மகனைத் தூக்கிக் கொண்டான்.

விழா துவங்க.. அனைவரும் ''ஹாப்பி பர்த்டே ..'' பாட வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே கேக் வெட்டியவன் ஒரு துண்டை எடுத்து முதலில் ஸ்வேதாவின் அருகே கொண்டுசென்று ஊட்ட முனைந்தான். அவன் கையைப் பற்றித் தடுத்து ''டாடிக்குக் கொடு..'' என்று ஸ்வேதா கூற.. ''இல்லை.. முதலில் அவளுக்குக் கொடு..'' என்று கார்த்திக் மறுக்க. இடையே புகுந்த சத்யா ''இருவருக்கும் வேண்டாமென்றால் எனக்குக் கொடுடா ஹர்ஷு..'' எனக் கூற அனைவரும் சிரித்ததைக் கண்டு ''போங்க ஆன்ட்டி..'' என்றவன் ஸ்வேதாவிற்கு ஊட்டினான். பின் கார்த்திக்கிற்கு ஊட்ட.. ஒரு துண்டை

அவனுக்கு ஊட்டி விட்டனர் இருவரும்.

அடுத்து வருகை தந்திருந்தவர்கள் அனைவருக்கும் விருந்து அளிக்கப் பட்டது. ஸ்வேதா வந்திருந்தவர்கள் அனைவரின் நலம் விசாரித்தாள். ஹரிஷின் பள்ளியிலிருந்து நண்பர்கள், ஆசிரியர்கள் என்று கூடியிருந்த அனைவரும் பரிசைக் கொடுத்து விட்டு சாப்பிட சென்றனர். அவன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு முறுவலித்தபடியே நடந்தவள் எதிரே கார்த்திக் வருவதைக் கண்டு முகம் சிவந்து தலை குனிந்தாள்.

அவளை ரசித்தபடியே அருகே வந்தவன் ''ஸ்வேதா எல்லாரையும் விழுந்து விழுந்து உபசரிக்கிறீர்களே! என்னையும் கவனித்தால் என்ன..?'' என்று குறை கூறியவனிடம் ''ஐயோ.. சாரி.. சாரி.. என்ன வேண்டும் உங்களுக்கு.. ரசகுல்லா, பால்கோவா, இல்லை, உங்களுக்கு ரசமலாய் மிகவும் பிடிக்குமே.. அதைக் கொண்டு வரட்டுமா..?'' என்று வினவ அவளை முறைத்த கார்த்திக் பின் மையலுடன் நோக்கி ''எனக்கு இந்த ஸ்வீட் எல்லாம் தேவையில்லை...'' என்றபடி அவளையே பார்க்க ''இது வேண்டாமா..? வேறென்ன ஸ்வீட் வேண்டும்? முன்னாடியே கூறியிருந்தால் அதற்கும் ஆர்டர் செய்திருக்கலாமே!'' என்று பொறுப்பாகப் பேசினாள்.

தலையில் அடித்துக் கொண்டவன் ''அசடு அசடு... உன்னைப் பிறகு பார்த்துக் கொள்கிறேன்'' எனக் கூறி வழவழப்புடன் அவனை இம்சித்துக் கொண்டிருந்த அவளது இடையைக் கிள்ளி விட்டு அவள் துள்ளுவதைப் பார்த்து விட்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.



யாரவது பார்த்து விட்டார்களோ என்று வெட்கத்துடன் சுற்றியிருந்த அனைவரையும் பார்த்தவள், அனைவரும் சாப்பிடுவதில் முனைந்திருந்ததைக் கண்டு அப்பாடி! என்று பெருமூச்சு விட்டு தானும் நகர்ந்தாள்.

தோழிகளிடம் சென்றவள் ''என்னடி.. சாப்பாடு நன்றாக இருக்கிறதா..?'' என்று வினவ, ''சாப்பாடு இருக்கட்டும் ஸ்வேதா.. இந்தப் புடவையில் நீ எவ்வளவு அழகு தெரியுமா.. கார்த்திக் சார் வைத்த கண் எடுக்காமல் உன்னையே பார்த்தபடி நின்று கொண்டிருந்ததைப் பார்க்க வேண்டுமே..'' எனக் கூறிச் சிரித்த சட்யாவை அடக்கியவள், ''பேசாமல் சாப்பிடுடி.'' என்று சொல்லி விட்டு ஓட.. இருவரும் ''ஓஹோ'' பாடினர்.

வந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் ஒவ்வொருவராக வெளியேற, கடைசி வரை உடனிருந்து பார்த்துக் கொண்ட தோழிகளுக்கு நன்றி கூறி தன் காரிலியே விடுதிக்கு அனுப்பி வைத்தான். ஹரிஷ் சோர்ந்து விட்டதைக் கண்டு அவனை உறங்க வைக்க உள்ளே சென்றாள் ஸ்வேதா. மீதமிருந்தவர்களையும் வழி அனுப்பி வைத்து விட்டு மகிழ்ச்சியும்,களைப்புமாய் உள்ளே நுழைந்தான் கார்த்திக்.

அங்கே... சமையலறைப் பொருட்களை ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்த ஸ்வேதாவைக் கண்டதும் களைப்பு மறைந்து மோகம் குடி கொண்டது அவனுக்குள். அவன் கொடுத்த சேலையை மாற்றாமல்.. வேலையை தொடர்ந்து கொண்டிருந்தவளைக் கண்டு காதலுடன் அவளருகே சென்றான்.

வெகு நேரமாக உள்ளே எரிந்து கொண்டிருந்த மோகமெனும் தீ.. அவனை முழுதாய் ஆக்ரமித்துக் கொள்ள.. இரவும்.. தனிமையும்.. அதற்கு உதவி புரிய.. தன்னிலை மறந்து பின்னாலிருந்தபடியே அவளைப் பற்றி ''ஸ்வேதா...'' என்றபடி அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்தான். ஸ்வேதாவும் தன்னை மறந்து பேச்சற்று நின்று விட்டாள்.

''ஸ்வேதா.... ஸ்வீட்டி...'' என்றபடியே அவள் கழுத்து வளைவில் முத்தமிட்டவன் மெல்ல முன்னேறி அவள் காது மடல்களில் இதழ் பதித்தான். வேகத்துடன் அவளைத் தன் பக்கமாக திருப்பியவன் ''வெகு நேரமாக காத்திருக்கிறேன் கண்ணம்மா.. இதற்கு மேல் என்னால் கட்டுபடுத்திக் கொள்ள முடியாது...'' என்றபடி குனிந்து அவள் இதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

வெகு நேரமாகத் தொடர்ந்த அந்த முத்தத்தில் தன்னை மறந்திருந்த கார்த்திக் அவள் இதழ்களை விட்டுப் பிரிய மனமின்றி பிரிந்து அவள் நெற்றி, கண், கன்னம் என ஆரம்பித்து, கடைசியில் மீண்டும் இதழ்களில் முடித்தான்.

''ஸ்வேதா...'' என்றபடியே அவளை மேலும் மேலும் இறுக அணைத்தவனின் இதழ்கள் கழுத்தில் ஊர்வலம் நடத்தத் துவங்க.. இடம், பொருள், ஏவல் என்று சகலத்தையும் மறந்தவள் அவன் முத்தங்களில் தன்னை இழந்து நின்றாள்.

''ஸ்வீட்டி...'' என்று அவள் கழுத்தை வருடியபடி அவள் காதருகே குனிந்தவன் ''ஐ லவ் யூ கண்ணம்மா.. ஐ லவ் யூ ஸ்வேதா.. ஐ லவ் யூ சோ மச் ஸ்வீட்டி'' என்று



நீண்டநாளாக தனக்குள் ஜபம் செய்து கொண்டிருந்த வார்த்தைகளை ஆயிரம் முத்தங்களுடன் அவள் காதில் முணுமுணுத்தான்.

# 14

காதல் என்ற உணர்வையே
முட்டாள்தனம் எனக் கூறி
கேலி பேசிக் கொண்டிருந்த என்னை...
காதலிக்கும் தோழிகளை
மூடர்கள் என்று ஏசிக் கொண்டிருந்த என்னை...
கண் விழித்தபடி கனவு காணச் செய்தது
நீ மட்டும் தான்!

கார்த்திக்கின் வார்த்தைகள் காதில் ஒலித்த மறுநொடி சுய உணர்வு பெற்ற ஸ்வேதாவிற்கு... அவன் உச்சரித்த வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ள முழுதாக ஒரு நிமிடமாயிற்று! ஆனால் மறு நொடி தன்னுள் எழுந்த சந்தோஷ ஊற்று அவளுக்கு எல்லையில்லா இன்பத்தை வாரி வாரி வழங்கியது...

தன்னிலை மறந்து அவளிடம் முழுவதுமாக தன்னை இழந்து கண் மூடி அவள் தோளில் சாய்ந்து தன் காதல் முழுதையும் அந்தக் கிசுகிசுத்த குரலில் தேக்கி அவளின்

செவியருகில் ''ஐ லவ் யூ ஸ்வேதா'' என்றவனின் உணர்ச்சிகள் நிறைந்த முகம் அவள் மனதில் ஓவியமாய் பதிந்தது.

எல்லையற்ற இந்த ஆனந்தத்தில் அவளின் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் நிம்மதியுடன் அவள் மீது சாய்ந்திருந்தவனை முகம் முழுக்க ஜொலிக்கும் பேரானந்தத்துடனும், கரை புரண்ட காதலுடனும்.. இவன் என்னவன் என்ற கர்வத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தவள் அவன் முகம் வருடி கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள். சிரிப்பில் விரிந்த இதழ்களுடன் மேலும் அவளை இறுக்கி அவள் கூந்தலில் முகம் புதைத்தான்.

''ஸ்வேதாம்மா'' என்று மெல்லிய குரலில் அவளை அழைத்தவன் அவள் முகம் நிமிர்த்தி விழி நோக்கி ''என்னைப் பிடித்திருக்கிறதா...?'' என்று வினவினான். இதென்ன அபத்தமான கேள்வி! இவனை எப்படிப் பிடிக்காமல் போகும்?

முதல் சந்திப்பில் கம்பீரமாக நடந்து வந்து தன் முன்னே நின்ற கார்த்திக்! என்னையே முட்டாள் என்பாயா என்று கோபத்தில் பொறிந்த கார்த்திக்! என் மனம் கவர்ந்தவளின் அழைப்பு எனக் கூறி வசீகரப் புன்னகையை வீசிய கார்த்திக்! ஹரிஷின் நிலையைக் கண்டு கண்களில் நீருடன் தவித்த கார்த்திக்! ஹரிஷின் மலர்ந்த முகத்தைக் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்ட கார்த்திக்! அளவில்லாத காதலுடன் அவளை அணைத்துக் கொள்ளும் கார்த்திக்! மோகத்தில் திளைத்து... ஆசையுடன் முத்தமிடும் கார்த்திக்! கடைசியாக இதோ! இன்று காதலை வெளிப்படுத்தி விட்டு நிம்மதியுடன் தோள்



சாய்ந்திருக்கும் கார்த்திக்!

கார்த்திக்! கார்த்திக்! கார்த்திக்! காணும் இடங்களிலெல்லாம்... ஒலிக்கும் ஓசைகளில் எல்லாம்... செய்யும் செயல்களிலெல்லாம்.. அவன் ஒருவனை மட்டுமே மனதில் கொண்டு.. அவனுடனே வாழ்ந்து கொண்டிருப்பவளைப் பார்த்து என்ன ஒரு அபத்தமான கேள்வி!

அவள் பதிலேதும் கூறாமல் அவனையே பார்த்துக் கொண்டிருப்பவளைக் கண்டு,''உன் முட்டைக் கண் முழியிலேயே தெரிகிறது... இந்த ஸ்வேதாமாவிற்கு.. இந்த கார்த்திக்கை எவ்வளவு பிடிக்குமென்பது'' என்றபடி அவள் மூக்கைப் பிடித்து ஆட்ட ''ஆ! வலிக்கிறது..'' என்று அலறினாள்.

அவன் கைகளைப் பற்றி தன் கன்னத்தில் வைத்து அழுத்தி.. ''உங்களைக் கண்ட நாளிலிருந்து... தவிர்க்கவும் முடியாமல், மறக்கவும் முடியாமல்.. தவித்துக் கொண்டிருக்கும் என்னிடம் இப்படியொரு கேள்வி கேட்டால், என்ன பதில் கூறுவேன்?'' என்று சிணுங்கிக் கொள்ள,உல்லாசமாக நகைத்தவன் ''ஸ்வேதா...'' என்று அவளது கன்னத்தைப் பற்றினான்..

''நீ என் வாழ்வில் எவ்வளவு முக்கியமானவள் என்று உனக்குத் தெரியுமா..? வெகு நாட்களாக சிரிப்பைத் தொலைத்திருந்த என் இதழ்கள்.. உன் வருகையால் மோட்சம் பெற்றதை நீ அறிவாயா..? என் பசியைத் தீர்க்கும் உணவினைப் போல்.. என் தாகம் தீர்க்கும் தண்ணீரைப் போல்.. நீ என் வாழ்வின் இன்றியமையாத தேவையாகி விட்டாய்! ஏன் முன்னமே உன்னை என்

கண்ணில் ஆண்டவன் காட்டவில்லை என்று எத்தனை முறை அவரிடம் முறையிட்டிருப்பேன் தெரியுமா..?''

''என் காரை வழிமறித்து அன்று நீ நின்ற கோலம்.. என்னை உன்னுடன் வாயாட வைத்தது.. நீ அடித்து விட்டுச் சென்றதும் உள்ளெழுந்த கோபம், உன்னை என் வீட்டில் வைத்துப் பார்த்த பின்பு உன்னுடன் வம்பு செய்ய வைத்தது; என்னுடைய இந்தக் குணங்கள் எல்லாம் என்னுள் புதைந்து விட்டதாக, நான் இழந்து விட்டதாகவே எண்ணியிருந்தேன். ஆனால் உன்னைக் கண்ட பின், அவை உயிர் பெற்று விட்டதைக் கண்டு ஆச்சர்யம் எழுந்தது என்னுள்!''

''மீண்டும் உன்னுடன் சந்திப்பு ஏற்படுகையில் என்னுள்ளே விளைந்த அந்தப் புன்னகை... அது என்னை, எனக்கே புதிதாகக் காட்டியது.. நீ என் வாழ்வில் வந்த வசந்தம் என்று நம்பச் சொன்னது. உன்னை விட்டு விடக் கூடாதென்பதில் உறுதியாக இருந்தது! அடுத்தடுத்த சந்திப்புகளில் நீ என்னை சிறிது சிறிதாக மாற்றினாய்... என்னுள் நிம்மதியைப் பரப்பினாய்.. அந்த விபத்தின் போது நீ சொல்லிச் சென்ற வார்த்தைகள்... உன் கண்கள், உன் அன்பு, உன் புன்னகை என்னை முழுமையாக மாற்றியது.''

''உன்னுள் நிறைந்திருந்த அன்பைக் கண்டு, உன்னால் என் மகனை நிச்சயம் மாற்ற முடியுமென்ற நம்பிக்கை பிறந்தது. அதனால் நானே உன்னை அழைத்து என்னிடம் வேலைக்குச் சேருமாறு வற்புறுத்தினேன்.. ஆனால் என்னுள் நிறைந்திருக்கும் காதலை விட_ பன்மடங்காக நீ என்னை விரும்புகிறாய் என்பதை, எனக்காக நீ ஹரிஷைப் பொறுத்துக் கொண்டதிலிருந்து நான் அறிந்து கொண்டேன்.''



''வேலையை விட்டுச் சென்று விடு என்று நான் கூறிய பின்பும் கூட, போகமாட்டேனென்று நீ என்னை எதிர்த்துப் பேசியது, அனைத்தும் நீ என்னை விரும்புகிறாய் என்பதை உறுதி செய்தது. ஆனால்... என் மகனுக்காக நான் உன்னை உபயோகப்படுத்திக் கொள்வதாக நீ என்னைத் தவறாக நினைத்து விடுவாயோ என்று எனக்குள் பயமாக இருந்தது...''

''ஐந்து வயது சிறுவனுடன் இருக்கும் ஒருவனை எந்தப் பெண் ஏற்றுக் கொள்வாள்? இந்த எண்ணம் என்னை உன்னிடம் வெளிப்படுத்த முடியாமல் கட்டிப் போட்டது.. அதன் பின் தீக்காயம் பட்ட அன்று, நீயாக என் மார்பில் சாய்ந்தது, உன் மனதை எனக்குக் காட்டியது.. கஷ்டம் என்கையில் நீ என் தோள் சாய இருக்கிறாய் என்பதை பரிபூர்ணமாக உணர்ந்தேன்.''

''ஹரிஷ் உன்னிடம் ஒன்றிய பின்பு, நீ அவனிடம் காட்டிய அன்பு.. அவனுக்கு அளித்த நம்பிக்கை! அவனிடம் ஏற்படுத்திய மாற்றங்கள்!இதையெல்லாம் கண்ட பின், நீ என்னை மட்டுமல்ல.. ஹரிஷையும் நேசிக்கிறாய் என்று முடிவு செய்தேன்... ஆனாலும் ஸ்வேதா... உன் வாயால் அதை கேட்க விரும்புகிறேன்...'' என்றவன் அவளை விட்டு விலகி நின்று..

''என்னையும், என் மகனையும் ஏற்றுக் கொள்வாயா கண்ணம்மா...?''என்று வினவ..

''என் உலகமாகவே மாறி விட்ட உங்கள் இருவரையும் பிரிந்து செல்ல என்னால் எப்படி முடியும் கார்த்திக்? ஹரிஷைப் போன்ற ஒரு அன்பான சிறுவனை ஏற்றுக் கொள்ள யாருக்கேனும் தயக்கம் ஏற்படுமா..? நீங்கள் நேசிக்கும் அனைத்தையும் நானும் நேசிக்கிறேன் கார்த்திக்.. நீங்கள் என் மீது வைத்திருக்கும் அன்பைப் போல.. ஹரிஷ் என் மீது காட்டும் பாசமும் தூய்மையானது! ஸ்வேதா மா என்றழைக்கச் சொல்லி நம்மிருவரில் யாரேனும் அவனை வற்புறுத்தினோமா? அவனாகவே அழைத்திருக்கிறான் என்றால் அவன் என்னை அன்னையாகவே உணர்கிறான் கார்த்திக்.''

''என்னுள் இருந்த தாய்மை உணர்வை முதன் முதலில் உணர வைத்தவனும், அதை முழுதாக அனுபவிப்பவனும் ஹரிஷ் ஒருவனே! அவன் எனக்குச் சொந்தமானவன் கார்த்திக். என்னுள்ளே நிறைந்து விட்டவன். எக்காரணம் கொண்டும் அவனை விட்டுத் தர என்னால் முடியாது.'' என்று கூறியவளை பெருமையுடன் நோக்கி, அவளருகே வந்து அவள்து கன்னத்தை உரசி ''ஸ்வேதா மா.. உங்கள் அருமை மகனைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் நிறுத்தவே மாட்டீர்களே..! அவன் தந்தையைப் பற்றிக் கூட ஏதேனும் கூறலாமே!'' என இழுத்தான்.

அவள் விரல்களுடன் தன் விரல் கோர்த்து ''என்னை எப்போதிலிருந்து நேசிக்க ஆரம்பித்தாய்?'' என்று கேட்டவனுக்கு, ''ம்ம்ம்., எப்போது என்னுள் நேசம் தோன்றியது என்பது எனக்குத் தெரியாது.. ஆனால், அதை நான் உணர்ந்த நாள், நீங்கள் என் அலுவலக விழா அன்று



என்னைப் பார்க்காமல்... பேசாமல்... சென்ற போது தான். ஆனால் கார்த்திக்.. அன்று உங்களை மலையாகவும், என்னை மடுவாகவும் உருவகப்படுத்தினேன்.. நீங்கள் என்னை நேசிக்க வேண்டும் என்கிற என் எண்ணம் கனவிலும் கூட நடக்காது என்று எண்ணினேன்...'' என்றவளை நிறுத்தி ''ஏன்..?'' என்று வினவினான்.

''நீங்களோ மிகப் பெரிய பணக்காரர். அவ்வளவு நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்தி வரும் திறமைசாலி! பலரும் அண்ணாந்து பார்க்கும் உயரத்தில் இருப்பவர்! என்னைப் போன்ற ஒரு சாதாரணப் பெண்ணை எப்படி..'' என்றவளை இடைமறித்தவன் ''ஸ்வேதா.. உன்னிடம் நான் பலமுறை கூறியிருக்கிறேன்.. உன் அன்பு விலை மதிப்பில்லாதது! நீ காட்டும் காதல்,கருணை இவை அனைத்திற்கும் உலகிலுள்ள எந்த விலை மதிப்புள்ள பொருளும் ஈடு செய்யாது...''

''அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருந்த நானும்.. என் மகனும்.. இந்த உண்மையை நன்கு அறிவோம்.. ஸ்வேதா.. இன்னொரு முறை இந்த வளங்களோடு உன்னை ஒப்பிட்டுப் பார்க்காதே! என் வாழ்வை எனக்கு மீட்டுக் கொடுத்த உன்னைத் தவிர இந்த உலகில் எனக்கு எதுவுமே பெரிதில்லை'' என்று கூறியவனின் மார்பில் தலை சாய்த்து கண் மூடினாள் ஸ்வேதா.

''இது கனவல்லவே கார்த்திக்?'' என்று வினவ ''சோதித்துப் பார்ப்போமா..?'' என்று அவள் காதில் கிசுகிசுத்தவன் அவள் இடையைக் கிள்ளினான். பதறி துள்ளிக் குதித்து விலகியவளைக் கண்டு சிரித்து அவள் முகம் பற்றி முத்தமிட்டு ''ஐ லவ் யூ கண்ணம்மா...''

''காதலும்,காமமும் என்னுள் அழிந்து விட்டதாகவே எண்ணிக் கொண்டிருந்தேன் ஸ்வேதா உன்னைக் காணும் வரை. ஆனால் இந்த கண்களின் பாஷையை... இந்த இதழ்களின் மௌனத்தை... புரிந்து கொண்ட பின்பு, புதைந்து போய் கிடந்த உணர்வுகள் அனைத்தும் வெளிவரத் தொடங்கிவிட்டதை உணர்ந்தேன். உன்னைச் சந்திக்கும் போதெல்லாம் உன்னை முத்தமிடாமல்... உன் விரல் தொடாமல்... உன் கன்னத்தை வருடாமல் விலக நேர்கையில் நான் கொண்ட தவிப்பிற்கு அளவேயில்லை ஸ்வேதா..''

''உன் அருகில் நிற்கும் ஒவ்வொரு நொடியும் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள ஆயிரம் கட்டளைகளை என் மனதிற்கு இடுவேன்.. ஆனால் ஒரு நொடி உன் முகம் பார்த்து விட்டால்.. என் மனம் என் பேச்சை கேட்பதே இல்லை..'' என்று கிசுகிசுப்பான குரலில் கூறிய படியே அவன் கைகள் எல்லை மீறத் துவங்க, முகம் சிவந்து அவனை தள்ளிவிட்டு விலகி நின்றாள் ஸ்வேதா.

அவளை சோபாவில் அமர வைத்து மடியில் தலை சாய்த்தவன் ''இனியும் என்னால் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியுமென்று எனக்கு தோன்றவில்லை ஸ்வேதா...நாம் விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும்'' என்றவன் அவள் பக்கமாகத் திரும்பி ''என்னை மணம் புரிவாயா கண்மணி..?'' என்று வேண்டினான்.

'இதற்காகத் தானேடா காத்துக் கொண்டிருக்கிறேன் ராஸ்கல்' என்றெண்ணிய ஸ்வேதா தலைகுனிந்து அவன்



கைகளைப்பற்றி ''ம்ம்'' என்றாள். மீண்டும் அவள் மடியில் தலைசாய்த்தவன் ''ஸ்வேதா... உனது இந்த வெட்க பாஷைக்கு ஆயிரம் அர்த்தங்கள் இருக்கின்றன தெரியுமா..?'' என்றவனிடம் ''ம்ம் அப்படியா..? இப்போது என்ன கூறுகிறது என் வெட்க பாஷை?'' என்றாள்..

எழுந்து அமர்ந்தவன், ''இப்போது.. என் ஆப்பிள் கன்னங்களில் முத்தமிடேன் என்று கேட்கிறது'' எனக் குனிந்து அவள் பட்டுக் கன்னங்களில் முத்தமிட்டான். ''ஸ்வேதா.. வெகு நேரமாகி விட்டது... தூங்கச் செல்லலாம்..'' என்று, அவளை அவள் அறை வாசலில் விட்டவனிடம் ''குட் நைட்..'' என்று கூறினாள்.

அந்த பிங்க் நிறப் புடவையில் லேசாகக் கலைந்த தலையுடன், கண்களில் உறக்கமும்,மயக்கமும் கலந்து நின்றவளிடம் மீண்டும் மனம் மயங்க ''ஸ்வீட்டி'' என்றபடி அவள் இடையைப் பற்றி அருகிலிழுத்து ''கண்டிப்பாக போகத்தான் வேண்டுமா..?'' என்று முணுமுணுத்தான்..

சிரித்தபடியே ''ம்ம்'' எனவும் தொங்கட்டான்கள் ஆட தலையசைத்து அவன் தோளைப் பற்றி அவனைத் தள்ளி விட்டு விலகி ஓடிச் சென்று தன் அறைக்குள் மறைந்தாள் ஸ்வேதா. புன்னகையுடனே தன் அறைக்குள் நுழைந்தான் கார்த்திக். அன்றைய இரவு இருவருக்கும் வாழ்வில் மறக்க முடியாத இரவாகிப் போனது.

மறுநாள் காலை கண் விழிக்கையிலேயே நேற்றிரவு நடந்தது முழுதும் நினைவிற்கு வர மகிழ்ச்சியுடன் குளித்துத் தயாரானாள். தலைமுடியைத் துடைத்துக் கொண்டே கண்ணாடியில் தன் முகத்தை பார்த்த ஸ்வேதாவிற்கு... கண்முன்னே தெரிந்த மாற்றம் வியக்க

வைத்தது... சிவந்திருந்த கன்னமும், உதட்டில் உறைந்திருந்த புன்னகையும், மயக்கத்திலிருக்கும் கண்களும்.. தன் முகம் தனக்கே வித்தியாசமாகத் தோன்ற வேகமாகத் திரும்ப எத்தனித்தவள், கண்ணாடியில் தெரிந்த கார்த்திக்கின் முகம் கண்டு திகைத்து நின்றாள்.

நீர் சொட்டிக் கொண்டிருந்த அவள் கூந்தலில் கை நுழைத்தவன் அவள் இடையைப் பற்றி தன் புறம் திருப்பினான். இறுகக் கண் மூடி தன்னை தொலைக்கத் தொடங்கியவளைக் கண்டு சிரிப்புடன் அவள் இதழ் நோக்கி குனிந்தான் கார்த்திக்.

தன்னை யாரோ உலுக்குவதை உணர்ந்து திடுக்கிட்டுக் கண் விழித்தவள் தான் கண்டது அனைத்தும் கனவென்பதை உணர்ந்து தலையை உலுக்கினாள்.

அவனை எண்ணி ஏங்கிக் கொண்டிருந்த போது அரைப் பைத்தியமாக இருந்தாள்! இப்போது முழுப் பைத்தியமாக மாறி விட்டாள்! ஸ்வேதா அசடே! என்று தன்னையே கடிந்து கொண்டு ஹரிஷிடம் திரும்பினாள். அவனோ வாய்மூடி சிரித்துக் கொண்டிருந்தான்.

''என்னடா...'' தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு வினவினாள்.

''ஏன் ஸ்வேதாம்மா.. தூக்கம் வந்தால் பெட்டில் படுத்துத் தூங்காமல்.. நின்று கொண்டே தூங்குகிறீர்கள்..?'' என்று மீண்டும் சிரிக்கத் தொடங்கினான்.

நீயெல்லாம் என்னை கேலி செய்கிறாயா?, எல்லாம் என் நேரம்! என்றெண்ணிக் கொண்டு அவனைத் தூக்கிக் கொண்டு படி இறங்கினாள். ஹரிஷ் பள்ளிக்குச் செல்லத்



தயாராகும் வரை அவன் அறையை விட்டு வெளியே வரவில்லை. என்னவாயிற்று இவனுக்கு! அவ்வளவு நிம்மதியான உறக்கமா? இது உங்களுக்கே கொஞ்சம் ஓவராக இல்லையா பாஸ் என்று புலம்பியவள் ஹரிஷிடம் ''டாடி எங்கே டா..?'' என்று வினவினாள்.

''தெரியல ஸ்வேதாம்மா.. இன்னைக்கு முத்து அண்ணா கூட ஸ்கூலுக்கு போகச் சொன்னாங்க'' என்று முடித்து விட்டான். எதற்காக என்று நினைத்தபடி, உடல் நிலை சரியில்லையோ என்றெண்ணிக் கொண்டு அவன் அறைக்குச் சென்று பார்த்தாள். அங்கே அவன் இல்லாததைக் கண்டு யோசனையுடன் படியிறங்கினாள்.

காலை எழுந்ததும் எங்கே மறைந்து விட்டான்! அவன் முகம் பார்க்க நான் தவிப்பது போல் அவனுக்கு ஏதுமில்லையா?, சொல்லாமல் செல்ல மாட்டானே!

கீழே வந்து தேவகியிடம் விசாரித்தாள். ''தம்பி காலைல வேகமாகவே வெளிய போய்ட்டாரும்மா.., ஹரிஷை முத்துவுடன் அனுப்பி வைக்க சொல்லி விட்டு போய்ட்டாரு மா..'' என்று கூற மேலும் குழம்பினாள்.

இப்படியே குழம்பிக் கொண்டே திரிய வேண்டுமென்பது தலையெழுத்து போலும்! காதல் என்கிறான்...! காதலி என்கிறான்! ஆனால் எதையும் கூற மறுக்கிறான். காதலர்களுக்குள் ஒளிவு மறைவு இருக்கக் கூடாது என்று கூறுவார்களே! இவையெல்லாம் அந்த மரமண்டைக்குப் புரியாதா? இவன் எப்படி ஆறடி வளர்ந்தான்! குடித்த காம்ப்ளான் மூளையை வளரச் செய்ததோ இல்லையோ, இவன் நன்றாக வளர்ந்திருக்கிறான்! அசடு!

ஐயோ! கணவனாகப் போகிறவனை இப்படியெல்லாம் கூறுவது பாவமாயிற்றே என்றபடி வேகமாகக் கன்னத்தில் போட்டுக் கொண்டவள், சலித்தபடி இவனோடு எப்போதும் இம்சை தான்! இரவு முழுவதும் அவன் தான் அதிகம் பேசினான். ஆனால் அதற்கு எதிர்மறையாக விடிந்ததும் எங்கோ தொலைந்து விட்டான்! எவ்வளவு ஆசையாகக் கண் விழித்தேன்! கார்த்திக்! மவனே! நீ மட்டும் இப்போது என் கையில் சிக்கினால் இந்தச் சப்பாத்தி கட்டையால் மண்டையில் அடித்து விடுவேன்!

விதவிதமாக அவனைக் கற்பனையில் தண்டித்துக் கொண்டும், புலம்பிக் கொண்டும் நாள் முழுதும் கடத்தியவள் இரவு வெகு நேரமாகியும் அவன் வீடு வந்து சேராததைக் கண்டு வருத்ததுடன் அமர்ந்திருந்தாள். அலுவலகத்திற்கும் செல்லாமல்.. கைப்பேசியையும் உயிரூட்டாமல் இந்த விடாது கருப்பு என்ன தான் செய்கிறது! காரணமே சொல்லாமல் இப்படிக் காணாமல் போய் விட்டால் என்னவென்று முடிவு செய்வாள்..? இதோ வந்து விட்டேன் என்று கண்ணீரும் எட்டிப் பார்க்கும் நேரம் அவன் கார் வந்து நிற்கும் ஒலி கேட்டு, வேகமாக ஓடி வந்து எட்டிப் பார்த்தாள்.

சோர்ந்திருந்த கார்த்திக்கைக் கண்டு அவள் தடுமாறி நிற்கையில், அங்கு அவள் நிற்பது கூடத் தெரியாமல்.. தன் அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான் அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு கோபமும், அழுகையும் ஒரு சேர எழுந்தது.

போகட்டும்! யார் இவனிடம் பேச ஏங்கிக் கொண்டிருப்பது! நேற்றிரவு பேசிய பேச்சென்ன..! நீ



என்னை மயக்குகிறாய் ஸ்வீட்டி.. நீ என்னை ஆட்கொள்கிறாய் ஸ்வீட்டி.. என்றெல்லாம் வசனம் பேசியவன் இப்பொழுது நிற்பது கூடத் தெரியாமல் செல்கிறான்.

கோபத்துடன் அமர்ந்திருந்தவள்... அவனுடைய சோர்ந்த நடையை நினைவு கூர்ந்தாள். ஏன் வருத்தமாகத் தெரிகிறான்? அலுவலகத்தில் ஏதேனும் பிரச்சனையா..? ஹரிஷ் முழுவதுமாக சரியாகி விட்ட பின்பு.. புன்னகை முகத்துடன் மட்டுமே காட்சியளித்துக் கொண்டிருந்தவன்... இன்று ஏன் இவ்வளவு சோகமாகச் செல்கிறான்?

சில வினாடிகள் யோசனையில் ஆழ்ந்தவளுக்கு அவன் காலையிலிருந்து சாப்பிடாதது நினைவிற்கு வர.. இதைச் சாக்காக வைத்து அவனிடம் பேசலாம் என்று முடிவெடுத்துக் கொண்டு அவன் அறையை நோக்கிச் சென்றாள்.

அங்கிருந்த ஒரு சாய்வு நாற்காலியில்.. கண் மூடி அமர்ந்திருந்தான் கார்த்திக்.

மெல்ல ''கார்த்திக்'' என்று அவள் அழைத்தும் பதிலில்லாமல் போக, அருகில் சென்று அவன் நெற்றியில் கை வைத்தாள். திடுக்கிட்டு ''அம்மா..'' என்றபடி கண் விழித்தவன், எதிரில் நின்று கொண்டிருந்த ஸ்வேதாவைக் கண்டு விழித்தான்.

''கார்த்திக்.. ரிலாக்ஸ்...ரிலாக்ஸ்.. நான் தான்..'' என்றவளிடம் உணர்ச்சியற்ற பார்வையை செலுத்தி ''என்ன?'' என்றான். ''சா... சாப்பாடு?'' என்று அவள் இழுக்க ''வேண்டாம்'' என்றவன் மீண்டும் கண்மூடிக் கொண்...

என்ன தான் நடந்ததென்று சொல்லி தொலையேன்டா பாவி! வழக்கத்திற்கு மாறான அவனது சோர்வும், உணர்ச்சியற்ற விழிகளும் மனதில் கிலியை ஏற்படுத்த நகரத் தோன்றாமல் அவனையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். அவள் இன்னும் செல்லாதிருப்பதை உணர்ந்து, நிமிர்ந்து அவளை அவன் கேள்வியுடன் நோக்க, ''வ..வந்து...'' என்று மீண்டும் இழுக்கத் தொடங்கினாள்.

கேட்க நினைப்பதை கேட்கவும் முடியாமல்.. அவன் கூறுவான் என்று காத்திருக்கவும் முடியாமல்.. அவள் தவிப்புடன் நிற்பதைப் பார்த்த கார்த்திக்கிற்கு மனம் கனிந்தது. அவளை நோக்கி கைகளை நீட்டினான். அதற்காகவே காத்துக் கொண்டிருந்த ஸ்வேதா வேகமாக ஓடி வந்து அவன் கரத்தோடுத் தன் கரத்தைச் சேர்த்தாள். அவளைத் தன் மடியில் அமர வைத்தவன்.. அவளை அணைத்து.. தோளில் முகம் புதைத்தான்.

நேரம் செல்லச் செல்ல அவன் அணைப்பு இறுக.. அவன் அமைதியற்று தவிப்புடன் இருப்பதை அவன் ஸ்பரிசத்தில் உணர்ந்து.. தோளில் சாய்ந்திருந்தவனின் முடி கோதி.. அவன் முதுகை வருடி.. ''வேண்டாம் கார்த்திக்.... எதையும் நினைக்காதீர்கள்... சரி செய்ய முடியாத பிரச்சனை என்று உலகில் ஏதுமில்லை.. வருத்தப்படாதீர்கள்.. ப்ளீஸ்..'' என்று கூறியவளிடம்..

விரக்தியாக முறுவலித்தவன் ''நானும் கூட இப்படித் தான் நினைத்திருந்தேன் ஸ்வேதா.. ஆனால்...'' என்றவன் நிறுத்தி அவளை விட்டு விலகி பால்கனிக்குச் சென்றான்.



சில நிமிடங்களில் ஆழ்ந்த மூச்செடுத்தவன் ''இறப்பு...என்பது உலகில் சரிப்படுத்த முடியாத விஷயம் தானே...?'' என்று கேட்கவும் அதிர்ந்து அவனை நோக்கினாள். ஏதோ புரிந்தும் புரியாததும் போல் இருக்க, திகைத்து அவனது சோர்ந்த முகத்தை நோக்கினாள்.

# 15

**என் முகத்திலிருந்தே மனதைக் கண்டறிந்து...**
**பார்வைகளாலே கேள்விக்கணை**
**தொடுக்கும் உன்னிடம்!**
**வார்த்தைகளாலே என்னைப் பரவசப்படுத்தி..**
**என் மனம் முழுவதையும்**
**ஆக்ரமித்துக் கொள்ளும் உன்னிடம்!**
**புன்னகையாலே என்னை வசியப்படுத்தி**
**என் வசமிழந்து...**
**செயல் படவைக்கும் உன்னிடம்!**
**உன்னைக் கண்டதும் பேச்சிழந்து**
**நிற்கும் என்னை...**
**மௌனத்தாலேயே சாகடித்து**
**விடும் உன்னிடம்...!**
**உன்னை நீயே நினைக்காத தருணத்தில் கூட...**
**உன்னையே நினைத்துக் கொண்டு திரியும்-என்**
**இதயம் முழுதும் உனது வசம்!**

''வாழ்க்கை எனக்கு எந்தவித ஏமாற்றத்தையும் அளித்ததே இல்லை ஸ்வேதா. அன்பான, கருணையுள்ளம் கொண்ட, பாசத்திற்காகவே படைக்கப்பட்ட பிறவி என்று நான் பல முறை வியக்கும் என் அம்மா..., அவரை மணந்ததைத் தன் வாழ்வின் வரமாகக் கருதி காதலையும்,நேசத்தையும் பொழியும் என் தந்தை! பாசத்தில் கண்டிப்பையும் கலந்து எனக்கு வழிகாட்டியாக விளங்கிய என் அண்ணன்! இவை தான் என் உலகமாக இருந்தது ... சந்தோசத்தைத் தவிர வேறெதையும் என் வீடு சந்தித்ததில்லை..''

''என் அன்னை! அவளைப் போன்ற மென்மையான குணம் படைத்த ஒருவரை இது வரையில் நான் சந்தித்ததே இல்லை ஸ்வேதா.. கோபப்படாமல் எப்படிம்மா பொறுமையாக இருக்கிறீர்களென்று பலமுறை கேட்டிருக்கிறேன். அனைத்திற்கும் கிடைத்த ஒரே பதில் அவரது புன்னகை. புன்னகை மட்டுமே..! எப்போதும் சிரிப்புடன் இருக்க வேண்டும் கண்ணா.. நம்முடைய சிரிப்பு.. நம்மைப் பார்ப்பவர் முகத்திலும் பிரதிபலிக்கும்.. என்பார்கள்..''

''அது நூற்றுக்கு நூறு உண்மை ஸ்வேதா.. அவருடைய சிரித்த முகத்தைக் கண்டதும் மனம் லேசாகி விடும்.. அவரோடு சேர்ந்து புன்னகைக்கத் தோன்றி விடும்.. என்னவோ ஒரு வசிய சக்தி... அப்பா தினமும் அலுவலகம் முடிந்து வீட்டிற்கு வரும் போது என் அன்னையைக் கண்டதும் முதலில் கூறும் வார்த்தை இது தான்.. உன் முகத்தைப் பார்த்த பின்பு கவலைகள் எல்லாம் மறந்து விடுகிறது லக்ஷ்மி என்பார்..''



''அவர்களுக்குள் இருந்த அன்யோன்யம் விவரிக்க முடியாதது ஸ்வேதா.. என் தந்தையின் முகத்தை வைத்தே மனதைக் கண்டறிந்து விடுவாள் அன்னை. அவள் முகத்தில் எப்போதும் சிரிப்பு குடி கொண்டிருந்தாலும் அவர் வருத்தத்தில் இருப்பதை சரியாகக் கணித்து விடுவார் என் தந்தை..., உங்களுக்கும் அம்மாவுக்கும் என்ன ஒரு கெமிஸ்ட்ரி என்று நாங்கள் கேலி செய்தாலும் அவர் பார்வை எப்போதும் அன்னையைத் தொடர்ந்து தான் இருக்கும்..''

''அம்மா அவர் அருகில் அமர்ந்தால் போதும்.. கால் வலிக்கிறதா,கை வலிக்கிறதா என்று பிடித்து விட ஆரம்பித்து விடுவார். பிள்ளைகள் முன்னால் என்ன இது என்று அம்மா கடிந்து கொண்டாலும் கேட்க மாட்டார். எங்களை விட அவருக்கு எப்போதும் அம்மாவின் மேல் தான் பாசம் அதிகம். அம்மாவிற்கும் நாங்கள் மூவர் மட்டும் தான் உலகம்..''

''இவ்வளவு கம்பெனிகளை வைத்து நடத்தும் பணக்கார மனைவி! ஏன் வீட்டிலேயே அடைந்து கிடக்கிறாய்..? எத்தனை லேடீஸ் கிளப் இருக்கிறது.. நீ சேர்ந்து கொள் என்று அப்பா எத்தனையோ முறை கூறினார். ஆனால் அம்மாவுக்கு அதிலெல்லாம் ஈடுபாடு இல்லை.. சேவை மனப்பான்மை அதிகம் உள்ளவள். நம் தமிழ்நாட்டில் இருக்கும் ஆசிரமங்களின் எண்ணிக்கையை, அவர்களது செயல்களை விரல் நுனியில் வைத்திருப்பாள். ஆனால் மிகவும் பழமை விரும்பி..''

''ஸ்வேதா.. நீ நம்ப மாட்டாய். பணம் இன்று வரும் நாளை சென்று விடும் என்கிற கொள்கையில்

பிடிவாதமாக இருப்பார்கள். ஆடம்பரத்தை விரும்ப மாட்டார்கள். தாலிக் கயிறைக் கூட மஞ்சள் கயிறில் தான் அணிந்திருப்பார்கள்.

தங்கத்திலான செயினில் அணிந்து கொள்ளுங்கள் அம்மா என்று எத்தனையோ முறை அசோக் அண்ணன் கூறிய போதும் மறுத்து விட்டார். ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் பூஜை அறையில் என் தந்தையை நிறுத்தி வைத்து ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு... தாலியை கண்ணில் ஒற்றிக் கொள்வார்.''

''அண்ணன் கடவுள் நம்பிக்கை இல்லாதவன்.ஏன்...அவனுக்கு இந்தத் தாலி செண்டிமெண்ட் கூட கிடையாது.. அம்மாவுக்கு நேர் எதிர் அவன்.. இருவருக்கும் எப்போதும் வீட்டில் வாக்குவாதம் தான்.. என் மனைவிக்கு தாலியே கட்ட மாட்டேன் என்பான் அவன்.. பின் தாலியின் மகத்துவத்தை அவனுக்கு நான்கு பக்கங்களில் விவரிப்பார் அம்மா..''

''சிரிப்பும் கேலியும் நிறைந்திருக்கும் நாங்கள் நால்வரும் ஒன்று கூடி விட்டால்.! நான் எப்போதும் அம்மாவின் பக்கம் தான் பேசுவேன். அண்ணன் அப்பாவுடன் தான் இருப்பான். இரு கட்சிகளாகப் பிரிந்து கொண்டு நாங்கள் அடிக்கும் லூட்டி.. ஸ்வேதா.. அவை எனக்கு இனிமேல் வாழ்கையில் கிடைக்காது என்பதை நினைக்கையில் நெஞ்சுக் கூடு காலியானதைப் போல ஒரு உணர்வு ஏற்படுகிறது...''

''எங்களைப் பிரிந்து ஒரு நாள் கூட அம்மாவும்,அப்பாவும் வெளியில் தங்கியதில்லை..



நாங்கள் தான் வளர்ந்து விட்டோமே.. பிசினஸையும் கூட இப்போது நாங்களே பார்க்கத் தொடங்கி விட்டோம். .அம்மா நீங்கள் அப்பாவுடன் எங்கேனும் வெளி நாடு சென்று வாருங்கள் என்று அண்ணன் எவ்வளவோ வற்புறுத்தினான். உங்களை விட்டுவிட்டுச் செல்வதா? கார்த்திக் நான் சாப்பாடு பரிமாறினால் தான் நன்றாக சாப்பிடுவான். அதெல்லாம் முடியாது, நான் செல்ல மாட்டேன் என்று மறுத்து விட்டார்.''

''நீ சிறு குழந்தையாடா இன்னும்....? என்று என்னுடன் சண்டைக்கு வருவான் அண்ணன். அப்பாவின் பிசினஸை நானும், அண்ணனும் பார்க்கத் தொடங்கிய பிறகு.. அப்பாவிற்கு அதிக ஓய்வு நேரம் கிட்டியது.. அவருக்குத் தான் மனைவியுடன் இருப்பது சந்தோஷமான விஷயமாயிற்றே.. எப்போதும் அம்மா பின்னாலேயே சுற்றி வருவார். ஸ்வேதா... நான் உன் மீது அவ்வளவு அன்புடன் அந்த வயதில் நடந்து கொள்வேனோ என்னவோ? ஏன், அவரைப் போல் மனைவியை விரும்பும் கணவன்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.''

''அந்த நேசத்தைக் கண்டே பழகி விட்டதாலோ என்னவோ, அசோக் அடிக்கடி கூறுவான் அம்மா, அப்பா போல தான்டா நாமும் இருக்க வேண்டுமென்று. சொன்னதைப் போல்... இருக்கவும் செய்தான்.. இந்த பிசினஸில் ஓரளவு இருவரும் உயர்ந்து வரும் சமயம் வீட்டில் அசோக்கின் கல்யாணப் பேச்சு நடந்தது.. அண்ணன் தான் யாரையோ விரும்புவதாகக் கூற அனைவரும் திகைத்து விட்டோம்.''

''ஏனெனில் அண்ணன் எதையும் எங்களிடமிருந்து மறைக்க மாட்டான். அதை அவன் மறைத்ததற்கானக் காரணமும் புரியவில்லை.. அம்மாவோ, அப்பாவோ காதல் திருமணத்தை எதிர்ப்பவர்கள் அல்ல.., ஏன் மறைத்தாய் என்று நான் கோபத்துடன் வினவியதற்கு.. நான் இப்போது தான்டா காதலிக்கவே ஆரம்பித்திருக்கிறேன்.. இன்னும் அவளிடம் கூட அதை வெளிப்படுத்தவில்லை என்றான். யார் அந்தப் பெண் என்ற கேள்விக்கு அவன் அளித்த பதில் எங்களை வியக்க வைத்தது. முக்கியமாக அம்மாவை.''

''மாதம் ஒரு முறை ஆசிரமங்களுக்குச் சென்று வர வேண்டுமென்பது அம்மாவின் எழுதப் படாத சட்டங்களுள் ஒன்று. அதனால் அனைவரும் சென்று வருவது பழக்கமானதாக இருந்து வந்தது. அப்படி அந்த மாதத்தில் நாங்கள் சென்றிருந்த ஆசிரமத்தில் தான் நித்யா அண்ணியை சந்தித்தோம். சிறு வயதிலேயே அவர் அங்கு வந்து விட்டதாகவும், இங்கேயே இருந்து படித்ததாகவும்.. நல்ல மதிப்பெண்கள் பெற்றதால்... இன்ஜினியரிங் படிப்பை முடித்து விட்டு பிரபல நிறுவனத்தில் வேலை பார்ப்பதாகவும் கூறினார்.''

''வெளியே சென்று வேலை பார்க்கத் தொடங்கி விட்டாலும் அண்ணி அங்கேயே தங்கி ஆசிரம வேலைகளில் ஈடுபட்டிருப்பதாக சொன்னார்கள். அப்போதே அண்ணனுக்கும், அம்மாவிற்கும் பிடித்து விட்டது.. சிரித்த முகத்துடன்,சாந்தமாக வலம் வரும் அண்ணியைக் கண்டு அண்ணன் காதல் கொண்டதில் ஆச்சரியமொன்றும் இல்லை.. அவளைக் கண்டதிலிருந்து



ஏதோ மாற்றத்தை உணர்வதாகவும்.. இது தான் காதல் போல அம்மா என்று அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு அவன் கூறும் போது நானும் அப்பாவும் அவனைத் துரத்தி துரத்தி ஆடினோம்..''

''மறுநாளே நான், அம்மா, அப்பா மூவரும் சென்று ஆசிரம நிர்வாகியிடம் பேசினோம். அண்ணன் விரும்புவதாகக் கூறியதும் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

ஆனால் அண்ணி மட்டும் பயந்தார்கள் பணக்கார குடும்பமா என்று. அண்ணன் அவரிடம் தனியாக பேச விரும்புவதாகக் கூறவும் இருவரும் ஆசிரமத்திலேயே சந்தித்துப் பேசினார்கள்.. அண்ணன் என்ன சொன்னானோ தெரியாது. திரும்பி வருகையில் அண்ணி முகமெல்லாம் சிரிப்பாக வந்தார்கள்..''

''நித்யா அண்ணியை அண்ணன் அளவுக்கதிகமாக நேசித்தான்.. காதலிக்க நேரமில்லை என்றவன் தடாலடியாக கல்யாணத்தில் இறங்கி விட்டான். அதன் பின் எங்கள் வீட்டில் ஜோடி புறாக்கள் இரண்டாயிற்று. அப்பா அம்மாவை அழைத்தால்... வேண்டுமென்றே இவன் நித்யா என்றழைப்பான்.. அவர் அம்மாவிற்கு தைலம் தேய்த்து விட்டால்.. இவனும் தன் மனைவிக்குத் தைலம் தேய்ப்பான்.. எனக்கு தலைவலியே இல்லை.. விட்டு விடுங்களேன் என்று அண்ணி அடம் பிடித்தாலும் அடங்கவே மாட்டான்..''

''அப்பா, அம்மாவை வம்பிழுத்துக் கொண்டு இருப்பது தான் அவனது முழு நேர வேலையே.. திருமணம் ஆன பின்பும் அண்ணன் எவ்வளவோ

வற்புறுத்தியும் அண்ணி வேலைக்குச் செல்வதை நிறுத்தவில்லை.. அந்த சம்பளப் பணம் முழுவதும் ஆசிரமத்திற்கு அனுப்புவதாகக் கூறினார்கள். அதை நான் கொடுக்கிறேன் என்று அண்ணன் கூறிய போது மறுத்து விட்டார்கள். என்னை வளர்த்து... படிக்க வைத்து.. இப்போது.. இப்படி ஒரு திருமண வாழ்கையும் அளித்திருக்கும் அந்தப் பிறந்த வீட்டிற்கு என்னால் முடிந்த ஒன்று இந்த உதவி தான் எனக் கூறிவிட்டதால், அதன் பின் யாரும் அவரை வற்புறுத்தவில்லை.''

''அடுத்த இரண்டு வருடங்களில் எங்கள் பரம்பரையின் அடுத்த தலைமுறையாய், எங்கள் இல்லத்தின் ஒளி விளக்காக ஹரிஷ் பிறந்தான்.. விழிகளில் நீரோடு அண்ணியைப் பற்றி அண்ணன் முத்தமிட்ட காட்சி இன்னுமும் எனக்கு நினைவிருக்கிறது. அதற்கு அண்ணியிடமிருந்து வந்த கண்ணீருடன் கூடிய புன்னகை..''

''தகப்பன் என்கிற உணர்வு தன்னை வேறொரு உலகத்திற்கு அழைத்துச் செல்வதாக அவன் அடிக்கடி கூறுவான்''

''முதல் குழந்தை.. முதல் பேரன்.. வீட்டில் பாராட்டி சீராட்டி வளர்த்தார்கள்.., அண்ணி கர்ப்பமாக இருந்த போதும் சரி.. ஹரிஷ் பிறந்த பின்பும் சரி அண்ணியை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினோம்.. என் அண்ணியைப் பற்றி கூறியாக வேண்டும் ஸ்வேதா.., என் அம்மாவின் அனைத்து குணங்களையும் குறைவில்லாமல் உள்ளடக்கியவள்.. அண்ணி அன்னைக்குச் சமம் என்பார்களே.. என் அம்மாவிற்குப் பிறகு எனக்கு அண்ணி தான்..''



''அசோக்கிற்கு ஏற்றவள் அவள். அவனது சுட்டித் தனத்திற்கும், குறும்புக்கும் நேர்மாறாக அமைதியான குணம் படைத்தவள்.. அண்ணன் பேசப் பேச வயிற்றைப் பிடித்தபடி சிரித்துக் கொண்டிருப்பார்கள். அண்ணன் எப்போதும் அண்ணியைச் சிரிக்க வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பான்''.

நீ எப்போதும் இப்படியே சிரித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று அவன் கூறுகையில் புன்னகையுடன் அவன் மடியில் தலை சாய்த்துக் கொள்ளும் அண்ணியை நாங்கள் மூவரும் கேலி செய்வது வழக்கமானது..''

''ஹரிஷ் கை சூப்புவதிலிருந்து ஆரம்பித்து தவழ்ந்தது, நடந்தது என்று அனைத்தையும் கொண்டாடுவது தான் எங்கள் வேலையே. அவன் தவழ ஆரம்பித்ததைக் கொண்டாட அனைவரும் பீச்சிற்கு சென்று ஆட்டம் போட்டது இன்றும் கண் முன்னே நிற்கிறது.

அண்ணியைப் பிடித்தபடி அண்ணனும், அம்மாவைப் பிடித்தபடி அப்பாவும் விளையாட ஆரம்பிக்க.. நீ இன்னும் சிங்கிள் தானே கார்த்திக் என்றபடி ஹரிஷை என் கையில் விட்டுச் சென்ற அண்ணியிடமும், அண்ணனிடமும் எனக்கு இப்பவே கல்யாணம் செய்து வை என்று நான் அடம் பிடித்தேன். அப்போது பூக்கூடையுடன் வந்த பெண்மணியைப் பார்த்து, இவள் ஓகே வா? என்று கேட்ட அசோக்கை நான் துரத்தி அடித்த காட்சியை.. என்றேனும் என்னால் மறக்க முடியுமா..''

''சகோதரனுக்கும் மேலானவன் அவன்.. என் இன்னொரு தந்தை... என் வழிகாட்டி... என் நலம்

விரும்பி... என் தோழன்... ஸ்வேதா.. எனக்குப் பள்ளியில், கல்லூரியில் எத்தனை நண்பர்கள் இருந்தாலும். அண்ணனைப் போன்ற தோழன் வேறு யாருமில்லை. எது நடந்தாலும் அவனிடம் கூறினால் மட்டுமே என் மனம் திருப்தி அடையும்.

சிறு வயதில் எனக்குக் கையைப் பிடித்து எழுதக் கற்று கொடுத்தது... அவன் கைகளைப் பிடித்தபடி நான் பள்ளிக்குச் சென்றது... அறியாதவர்களைக் காண்கையில் அவன் பின்னே மறைந்து கொள்வது... எனக்கு அண்ணன் கண், கைகளைப் போல தேவையானவன்.. ஒவ்வொரு நிகழ்விலும் நல்லது,கெட்டதை எடுத்துச் சொல்லி என்னை வழி நடத்துவான்''

''என் பிறந்த நாள்,பிசினஸில் வெற்றி என்று என்னைத் தேடி வரும் ஒவ்வொரு நன்மையிலும் அண்ணனின் வாழ்த்து தான் முதலாவதாக இடம் பிடிக்கும். அண்ணி வந்த பின், அவரும் அவனுடன் இணைந்து கொண்டார்.

நான் இரவில் தாமதமாக வந்தால் எப்போதும் அம்மா காத்திருந்து சாப்பாடு பரிமாறுவார். அண்ணி வந்த பின் அம்மாவை அனுப்பி விட்டு அண்ணியே பரிமாறுவார்கள். உனக்காக பன்னிரெண்டு மணி வரை நானும் அமர்ந்திருக்கிறேன் என்ற படி அண்ணனும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வான்.''

''பாசம் நிறைந்த.. நேசம் கலந்த.. உன்னதமான உறவுகளுடனே சென்று கொண்டிருந்தது என் வாழ்க்கை.. சந்தோசம் மட்டுமே வாழ்க்கை இல்லை.. துக்கத்தையும் நீ சந்தித்துத் தான் ஆக வேண்டுமென்று பேரிடியை..



பெரும் இழப்பை.. ஏற்படுத்தி விட்டார் ஆண்டவன்..'' எனக் கூறியவன் நிறுத்தினான்.

தன் அன்னை, தந்தை, அண்ணன், அண்ணி என்று மலர்ந்த முகத்துடன் பேசிக் கொண்டிருந்த கார்த்திக்கை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த ஸ்வேதா, அவனது கவலை சூழ்ந்த முகத்தைக் கண்டு கலங்கி விட்டாள். கண்கள் சிவந்து உதடு துடிக்க,நீள் மூச்செடுத்துத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு.. கைகளை இறுக்கி சுவற்றில் குத்தியவனை செய்வதறியாது தவிப்புடன் நோக்கினாள்.

''எப்போதும் போல அந்த நாளும் மகிழ்ச்சியுடனே தான் விடிந்தது. குழந்தை நல்லபடியாக பிறக்க வேண்டுமென்று திருப்பதிக்கு வேண்டிக் கொண்டதாகவும், ஒரு முறை சென்று வர வேண்டுமென்றும் அம்மா அடிக்கடி கூறிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் அதற்கான சந்தர்ப்பம் சரியாக அமையாமல் அந்தப் பயணம் ஒத்தி வைக்கப்பட்டுக் கொண்டே இருந்தது. அந்த வாரக் கடைசியில் கட்டாயம் சென்றே ஆகவேண்டுமென்று அம்மா பிடிவாதம் பிடிக்க அண்ணனும் வேறு வழி இல்லாமல் ஒப்புக் கொண்டான்...''

''அவசரமாக அன்று ஒரு முக்கியமான வேலை வந்து விட்டதால்.. அண்ணன் என்னிடம் அலுவலகத்தைக் கவனிக்கச் சொல்லிவிட்டான்.. நான் செல்லவில்லையென்றால் அம்மா கோபித்து கொள்வார்கள் கார்த்திக். அவர்களின் வேண்டுதலே எங்களுக்காகத் தானே அதனால் நாங்கள் மட்டும் செல்கிறோம் எனக் கூறி விட்டான்.''

''அம்மாவிடம் நான் வரவில்லை என்பதைத் தெரிவித்த போது... அய்யோ கார்த்திக்.. நீ சரியாகச் சாப்பிட மாட்டாயே என்று கவலைப்பட, அம்மா கார்த்திக்கிற்கு இரண்டு கை, இரண்டு கால் எல்லாம் நன்றாகத் தான் இருக்கிறது. உங்கள் அருமை அமுல் பேபிக்கு சாப்பாடு எடுத்துப் போட்டுச் சாப்பிடத் தெரியும். அதுவும் முடியாதென்றால் வேலைக்காரர்களிடம் பரிமாறச் சொல்லிக் கொள்வான்.''

''நண்பர்களுடன் வெளியே செல்லும்போது.. ஹோட்டலில் கொட்டிக் கொள்கிறானே அப்போதெல்லாம் உங்களை எதிர்பார்த்துக்கொண்டா இருக்கிறான். நீங்கள்தான் உங்கள்பிள்ளை உங்களையே எதிர்பார்ப்பதாக நினைக்கிறீர்கள். அவன் நன்றாக உங்களை ஏமாற்றுகிறான் என்று கூறி விட.. நிஜமாகவாடா கார்த்திக் எனச் சோர்ந்தது என அன்னையின் முகம்.. அசோக்கை இரண்டு அடி அடித்து விட்டு என் அன்னையைக் கட்டிக் கொண்டு சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தேன்..'

''அண்ணன், அண்ணி, அம்மா, அப்பா, ஹரிஷ் என அதிகாலை மூன்று மணிக்குக் காரில் பயணமானார்கள்.. ஓராயிரம் முறை நேராநேரத்திற்கு சாப்பிட்டு விடுடா என்று அம்மாவும், அண்ணியும் மாறி மாறி கூறுவதைக் கேட்டுச் சலித்த அண்ணன் இருவரையும் விரட்டியபடி புறப்பட்டுச் சென்றான். அதன் பின் நடக்கவிருக்கும் அந்தக் கொடூரமான சம்பவத்தை நினைத்துக் கூட பார்த்திருக்க மாட்டார்கள் அவர்கள்.''

''அவர்கள் சென்ற இரண்டு மணி நேரத்தில் எனக்கு போலீஸில்காரர் ஒருவரிடமிருந்து அழைப்பு வந்தது. அவர்கள் சென்ற சார் விபத்துக்குள்ளாகி விட்டதென்று.. அவர் கூறிய இடத்திற்கு நான் சென்ற போது.. ரத்த வெள்ளத்தில் என் ஒட்டு மொத்த குடும்பத்தையும் கண்ட போது... கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலவும் கால்கள் தொய்ந்தும் போனது ஸ்வேதா''

''ஏன் ஏன் என்று நான் இன்று வரை கேட்டுக் கொண்டிருக்கும் கேள்விக்கு விடை தெரியவே இல்லையே... ஏன் நடந்தது? ஏன் இவ்வளவு பெரிய துன்பம்.. ஸ்வேதா... என் வாழ்வின் ஆதாரமே என் குடும்பம் தான்.

அந்த கூட்டுக்குள்ளேயே வளர்ந்துவிட்டிருந்த எனக்கு... அந்தப் பாசக் கட்டுக்குள் பிணைக்கப்பட்டிருந்த எனக்கு... அப்படி ஒரு பேரிடி.. என் காலடி பூமி நழுவிச் சென்றதாகவே உணர்ந்தேன்.''

''ஏன் அப்படி நடக்க வேண்டும்? சிரிப்பும், சந்தோசமுமாக சென்று கொண்டிருந்த வாழ்கையில் நான் எதற்காக இப்படி ஒரு இழப்பை சந்தித்தாக வேண்டும். என் அண்ணனும், அண்ணியும் எவ்வளவு கனவுகளைச் சுமந்திருந்தார்கள் தெரியுமா? அனைத்தும் ஒரே ஒரு நொடியில் தவிடு பொடியாகி அழிந்தே போய் விட்டது.''

''இனி என்னுடன் சிரித்து விளையாட அண்ணன் வர மாட்டான். என்னை அணைத்துக் கொள்ள அம்மா வர மாட்டார்கள். சிரிப்பும்,புன்னகையும் நிறைந்த அப்பா, அண்ணியின் முகங்களை இனி நான் காண முடியாது. என் உயிரில் கலந்து விட்ட உறவுகளை என்னால் எப்படி மறக்க முடியும்? நானும் அவர்களுடனே சென்று விட்டிருந்தால் இந்த ஆயுள் தண்டனையிலிருந்து தப்பித்திருப்பேனே.

ஒவ்வொரு இரவும் அந்தக் காட்சி கண் முன்னே வருகிறது ஸ்வேதா.''

''நேர் வெறித்த விழிகளுடன் என் அன்னை கிடந்த கோலம்.. அந்த முகத்தை மறந்து ஒரு நாள் இரவு கூட என்னால் விழி மூட முடியவில்லை. நிம்மதி, சந்தோசமென்ற அனைத்தையும் தொலைத்து விட்டதாக உணர்ந்தேன். எனக்கென்று உறவுகள் இல்லாத இந்த உலகத்தில் தனித்து விடப்பட்டதாக உணர்ந்தேன். எனக்கென்று இனி வாழ்கையில் இனி என்ன இருக்க போகிறது?''

''அண்ணனின் உதவி இல்லாமல், தந்தையின் அன்பில்லாமல், அம்மாவின் கையால் உண்ணாமல் இருக்க முடியுமா? அந்த நொடியே தற்கொலை செய்து கொண்டு அவர்களுடனே சென்று விட வேண்டுமென்று முடிவு செய்தேன் .

என்னால்... என்னால்... எப்படி வாழ முடியும் ஸ்வேதா... இனி வீட்டிற்குச் சென்றால் அன்னையும், அண்ணியும் வரவேற்க மாட்டார்கள். எப்போதும் ஏதேனும் விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அண்ணன், அப்பாவின் குரலை கேட்க முடியாதென்கையில் என்னால் எப்படி உயிர் வாழ முடியும்?

ஆணிவேரற்று சாய்ந்துவிட்ட மரத்தைப் போல் மயங்கிச் சரிந்த என்னை, அந்த போலீஸ்காரர்தான் தாங்கினார். என் கன்னத்தில் தட்டி விழிக்கச்சொல்லி கெஞ்சினார். ஹரிஷ் உயிருடன் இருப்பதாகத் தெரிவித்தார். கடவுள் புண்ணியம் என்றார்கள்! எது புண்ணியம் எது பாவம் ஸ்வேதா?''



''எறும்பிற்குக் கூடத் தீங்கு நினைக்காத என் அன்னை... அனைவரும் நன்றாக வாழ வேண்டுமென்று வேண்டிக் கொள்ளும் அவருக்கா இந்தத் தண்டனை..? மரணம் நேரிட்ட அந்த நிமிடம்.. உயிர் பிரிந்த அந்த நொடி.. என்ன நினைத்திருப்பாள் என் அம்மா? அனைவரையும் நேசிக்கும் அவருக்கா இந்த நிலைமை... என்ன பாவம் செய்தது என் குடும்பம் இப்படி ஒரு நிலைமைக்கு உள்ளாவதற்கு?''

''ஹரிஷ் மட்டும் இல்லாதிருந்தால் நானும் நிச்சயம் உயிரை விட்டிருப்பேன் ஸ்வேதா.. புழுவாக அரிக்கிறது மனதை. ஒரு நொடி கூட நிம்மதி இல்லை... ஏன் நடந்தது என எனக்கு நானே கேட்டுக் கொண்டு பைத்தியம் போல் அலைகிறேன்.

சமையலறை, தோட்டம், பூஜை அறை எங்கு பார்த்தாலும் என் அன்னை நிற்பது போல் இருக்கிறது. என்னை மறந்து சில நிமிடங்கள் உறங்கினால் அம்மா என் தலைமுடியை கோதுவது போல் இருக்கிறது கார்த்திக் என்று அண்ணன் அழைக்கும் ஓசை காதில் கேட்டுக் கொண்டே இருக்கிறது.''

என் உயிராகி விட்ட அவர்களை மறக்க முடியாமல்.. நான் கொண்ட இந்தத் தவிப்பிற்கு விளக்கமே கூற முடியாது ... வாழ்கையில் பிடிப்பற்று, எதிலும் நாட்டமில்லாமல் போனது.. பசி,தூக்கம் அனைத்தையும் மறந்து பிணம் போல் நடமாடினேன்.. டாக்டர் அங்கிள், ஏசிபி அங்கிள் இருவரும் ஹரிஷிற்காக நீ வாழ வேண்டுமென்று என்னை வேறு விஷயங்களில் ஈடுபடுத்தினார்கள்.. அலுவலகத்தில் அதிக நேரம் செலவழிக்க வைத்தார்கள்.. வீட்டை மாற்றினார்கள்...''

''அதன் பின் நானே தெளிந்து என் ஹரிஷிடம் கவனத்தைத் திருப்பினேன்.

மகனைப் பற்றிய கனவுகள் பல இருந்தது அசோக்கிற்கு. அனைத்தையும் செயல்படுத்த உறுதி எடுத்துக் கொண்டேன். அவனை வளர்ப்பதை லட்சியமாக நினைத்தேன். அதற்காகவேனும் வாழ வேண்டுமென்று முடிவெடுத்தேன்.

அலுவலகம், ஹரிஷ் என்று முழுவதுமாக நேரத்தைச் செலவழித்தேன்.. ஒரு நாளில் நான் தூங்கும் நேரம் மிக மிகக் குறைவு. வீட்டிற்கு வரப் பிடிக்காமல் அலுவலகத்திலேயே உறங்கி விடுவேன். டாக்டர் அங்கிள் என்னை பல முறை வீட்டிற்கு அழைத்து வந்து தூக்க மாத்திரை உதவியுடன் தூங்க வைத்திருக்கிறார்.

ஹரிஷை விடுதியில் சேர்த்தேன். அவனை நன்றாக படிக்க வைக்கவேண்டுமென்று முடிவு செய்தேன்..'' என்று நிறுத்தியவன்...நிமிர்ந்து வானத்தை நோக்கினான்.

''என் அன்னை எங்கே இருப்பாள்..? என்னைப் பார்த்துக் கொண்டிருப்பாளா.. ஆவியென்று ஒன்று இருப்பதாகக் கூறுகிறார்களே.. அது உண்மையெனில் நிச்சயம் என் அன்னையின் ஆவி என்னைச் சுற்றியே தான் இருக்கும்..'' என்றவன், ''அம்மா...''என்று கண்ணீருடன் அழைக்கத் தொடங்க வேகமாக அவன் கையைப் பற்றி அணைத்தாள்.

அவள் அணைப்பில் முழுவதுமாக உடைந்தவன் ''அம்மா.. அம்மா..'' என்று கதறித் துடிக்க ஆரம்பித்தான். அவனைத் தேற்ற வார்த்தைகளே இல்லாமல் அவன் கதறுவதைக் காண சகிக்காமல் கண்ணீருடன் நின்றிருந்தாள்.



ஆறுதலாய் அவன் முதுகை வருடி.. ''கார்த்திக்... அம்மா எப்போதும் உங்களுடனே தான் இருப்பார்கள்.. அப்பா, அண்ணி, அண்ணன் அனைவரும் உங்களைச் சுற்றியே தான் இருக்கிறார்கள். நீங்கள் இப்படிக் கதறுவதை, நிம்மதியில்லாமல் தவிப்பதைக் கண்டால் அவர்கள் மனம் ஆறுமா..?''

''கார்த்திக்.. நீங்கள் ஒரு வேளை உணவு உண்ணாமல் போனாலே தவித்துப் போகும் அம்மா... உங்களை நீங்களே இப்படி வருத்திக் கொள்வதைப் பார்த்துக்கொண்டு நிம்மதியாக இருப்பார்களா..? இதையெல்லாம் மனதில் கொண்டு.. நீங்கள் அவர்களுக்காகவேனும் மகிழ்ச்சியாக வாழ வேண்டாமா..?

மிகப் பெரிய இழப்பு.. வாழ்வில் மாற்ற முடியாத.. நீங்கள் மறக்க நினைத்தால் கூட தவிர்க்க இயலாத இழப்பு...''

''நீங்கள் அந்தச் சம்பவத்தை நினைக்காதீர்கள் உங்கள் அன்னையின் புன்னகை நிறைந்த முகம் மட்டுமே மனதில் வரட்டும். அண்ணனின் குறும்பையும், அண்ணியின் சிரிப்பையும் நினைத்துப் பாருங்கள். அன்னையின் முகத்தை காதலுடன் நோக்கும் தந்தையை நினைவு கூறுங்கள். நினைவுகள் என்றும் அழியாதவை தானே கார்த்திக். பசுமையாக உங்கள் மனதில் பதிந்திருக்கும் அழகான நினைவுகளை நினைத்துக் மகிழுங்கள்.

உங்களுக்கோ.. ஹரிஷிற்கோ.. இன்னும் வாழ்க்கை ஆரம்பிக்கவில்லை. நீங்கள் இப்படியே உழன்று கொண்டு, அவனையும் வருத்தப் போகிறீர்களா? வேண்டாம்

கார்த்திக். அன்னை இந்த விஷயத்தை எப்படிப் பார்ப்பாள்? அண்ணன் இந்த விஷயத்திற்கு எப்படி வழிகாட்டுவான் என்று அவர்களின் சார்பாக நீங்களே யோசியுங்கள். நிச்சயம் அவர்கள் உங்களுடன் இருப்பதாக உணர்வீர்கள்.''

''நீங்களும், ஹரிஷும் சிரிப்புடன் மகிழ்ச்சியாக வலம்வர வேண்டுமென்பதே அவர்களது ஆசை. அதை நிறைவேற்றுவது மட்டும்தான் உங்கள் பணி. எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடுங்கள் கார்த்திக்... இனி ஒருபோதும் இப்படி அழமாட்டேனென்று... உங்கள் அன்னையின் ஆசைப்படி வாழ்க்கை முழுதும் மகிழ்ச்சியாக இருப்பேனென்று...'' என்றவள் கையை நீட்டினாள்.

இடது கையால் கண்ணீரைத் துடைத்தபடி அவள் கைகளை இறுகப் பற்றியவன் ''இனி ஒரு போதும் அழ மாட்டேன் ஸ்வேதா.. என் அன்னையுடன் கழிந்த மகிழ்ச்சியான சம்பவங்களை மட்டுமே நினைத்து பார்ப்பேன்..'' எனக் கூற ''நிச்சயமாகக கார்த்திக்...'' எனக் கூறி அவனை அணைத்துக் கொண்டாள். அமைதியாகக் கழிந்த சில நிமிடங்களை தானே உடைத்தான்.

''வாழ்க்கையே சூன்யமாகி விட்ட அந்த சமயத்தில் தான், உன்னுடன் எதிர்பாராத அந்த சந்திப்பு நிகழ்ந்தது.. உன்னுடைய குறும்பும், சிரிப்பும், அன்பும் என் குடும்பத்திலிருந்த அனைவரையும் எனக்கு நினைவூட்டியது... நீ ஒருத்தி என் அருகிலிருந்தால்.. அவர்கள் அனைவரும் என்னுடன் இருப்பதைப் போல் நிம்மதியாக உணர்ந்தேன். உனக்குத் தெரியாது. நீ இந்த வீட்டிற்கு வந்த பிறகு தான் நான் இந்தப் படுக்கையில் நிம்மதியான உறக்கம் கொள்வது.



அதற்கு முன் பாதி இரவில் தான் வீட்டிற்கு வருவேன். மீதி இரவை தூங்காமல் கழிந்த, விடியற்காலை தான் கண்ணயர்வேன். நீ என் வீட்டில் தங்கியிருக்கிறாய் என்கிற உணர்வே... என்னைப் பாதுகாப்பாக... மீண்டும் அன்னையிடம் சேர்ந்து விட்டதைப் போல் உணர்ந்தேன் ஸ்வேதா..'' என்று அவன் கூறுகையில், ஹரிஷை விட அதிகமாக அன்னைக்காக ஏங்குபவன் இவனே என்று நினைத்தாள்.

''ஹரிஷ் முழுவதுமாக மாறி விட்ட பின்பு வீட்டில் ஒலிக்கும் உன்னுடைய சிரிப்புச் சத்தம்... ஹரிஷின் கூச்சல் இவையனைத்தும் நான் இழந்த வாழ்வை திருப்பிக் கொடுத்தது போல் உணர்ந்தேன். அன்னையைப் போலவே நீயும் பல விஷயங்களில் செயல்பட்டாய். ஆசையுடன் நீ பரிமாறுவதைப் போலவே என் அன்னையும் பரிமாறுவார்.

அந்தச் சோபாவில் எப்போதும் அவர் அமரும் போதெல்லாம்... நான் மடி சாய்ந்து கொள்கையில் அன்புடன் என் தலை கோதுவார். நீயும் அதைப் பிரதிபலிக்கையில், என்னுள் உண்டான நிம்மதிக்கு அளவே இல்லை.

நான் இழந்த அனைத்தையும் நீ எனக்கு திருப்பித் தந்தாய்.. என் நிம்மதி,சந்தோசம் அனைத்தும் எனக்கு உன்னால் திரும்பக் கிடைத்து விட்டது... மறந்து போயிருந்த, மரத்துப் போயிருந்த பல உணர்வுகளை... நீ சுலபமாகத் தட்டி எழுப்பினாய்.. என் மீது மட்டுமில்லாமல் ஹரிஷின் மீதும் நீ காட்டும் அன்பும் என்னை வியக்க வைத்தது.

''ஆறுதலாக என்னிடம் நடந்து கொள்கையில் அன்னையாகத் தெரிந்த நீ.. என்னை எதிர்த்துப் பேசும் போது, அண்ணனாகத் தெரிந்தாய். கண்டிக்கும் போது என் தந்தையையும், ஹரிஷிடம் பாசம் காட்டும் போது என் அண்ணியையும் பிரதிபலித்தாய். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒட்டுமொத்தமாக உன் உருவம் கொண்டு விட்டதாக உணர்ந்தேன்...

என் வாழ்வில் இன்னுமொரு இழப்பை தாங்க முடியாதென்றே உன்னிடம் என் நேசத்தை... என்னைப் பற்றிய உண்மையை தெரிவிக்காமலே இருந்தேன்..'' என்றவனை அவள் ஏன் என்ற கேள்வியுடன் நோக்கினாள். ''ஏற்கனவே கூறியது தான் ஸ்வேதா.. ஒரு சிறுவனுக்குத் தந்தையாக இருப்பவனை யார் ஏற்றுக் கொள்வார்கள்? அதை நான் உன்னிடம் வெளிப்படுத்திய பின்பு.. நீ என்னை விட்டுச் சென்று விட்டால் என்ன செய்வதென்று பயம்..''

''நீ ஹரிஷிடம் காட்டும் பாசத்தைக் குறைத்து விடுவாயோ என்கிற பயம்... அப்படிப் பார்க்காதே ஸ்வேதா... ஆரம்பத்தில் அப்படித் தான் நினைத்தேன். ஆனால் அதன் பின், உன்னுடன் இதைப் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தேன்.. அது இன்று அமைந்தது'' என்றபடி பெருமூச்சு விட்டான் கார்த்திக்.

''இன்றோடு முழுதாக இரண்டு வருடம் ஆகி விட்டது...'' என்றவன் தொடர்ந்து.. ''ஹரிஷ்.. என் குடும்பம் விட்டுச் சென்ற எனக்கான ஆதாரம். அவனை வளர்ப்பது தான் என் வாழ்வின் லட்சியம். அதனால்



அவனை என் மகனாக தத்தெடுத்துக் கொண்டேன். அசோக் உயிருடன் இருக்கும் போதே அவனை அப்பா என்றும் என்னை டாடி என்றும் அழைப்பது அவன் வழக்கம் அதுவே தொடரவும் எனக்கு பிரச்சனை இல்லாமல் போனது.''

''இனி அவன் நம் வாழ்வின் ஆதாரம் சரி தானே கண்மணி?'' என்று வினவ, அவனுக்கு முறுவலித்து.. ''உங்களுக்காகவே, உங்கள் நேசத்திற்காகவே இந்த வேலையையே ஏற்றுக் கொண்டேன் கார்த்திக். ஆனால் ஹரிஷ் என் மீது இயல்பாகக் காட்டிய தாய்ப் பாசத்தை கண்டு விட்ட பிறகு... இப்போது... இவ்வளவு உண்மைகளைத் தெரிந்து கொண்ட பிறகு என்னால் விலக முடியுமா?'' என்றவள், சிறிது இடைவெளி விட்டாள்.

பெரு மூச்சு விட்டபடி, ''இனி தான் எனக்கு பெரிய பொறுப்பு உள்ளது. ஹரிஷை நன்றாகப் படிக்க வைத்து.. உங்களைப் போல பெரியாளாக்க வேண்டும்...'' என்றவள் நிறுத்தி, ''ச்ச,ச்ச உங்களைப் போல் எல்லாம் வேண்டாம்.. நீங்கள் ஆள் வளர்ந்த அளவுக்கு மூளை வளரவில்லை.. அதனால் என்னைப் போல ஸ்மார்ட் ஆக வளர்க்க வேண்டும்..'' என்று கூறியவளின் காதைத் திருகி சிரித்தவனை காதலுடன் நோக்கி..

''நீங்கள் எப்போதும்.. இப்படி சிரித்துக் கொண்டே மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் கார்த்திக்.. உங்கள் அன்னையைப் போல்.. உங்கள் அண்ணனைப் போல்.. நானும் உங்கள் மீது அளவுக்கதிகமாக பாசம் வைத்திருக்கிறேன்..'' என்று விழிகளில் கோர்த்த நீருடன் கூறியவளை இழுத்து அணைத்து, ''அதை நான்

பரிபூரணமாக ஒத்துக் கொள்கிறேன் கண்ணம்மா..., நீ என் நன்மையை மட்டுமே நாடுபவள்.. என்னை மட்டுமே சார்ந்திருப்பவள்.. என்னவள்..'' எனக் கூறிய படி அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்டான்.

''இத்தனை நாட்கள் பட்ட கஷ்டத்திற்கு புதையலைப் போல் உன்னை என் வாழ்வில் அளித்து விட்டார் கடவுள். மீண்டும் என் வாழ்வு அழகாக இருப்பதாக உணர்கிறேன் கண்ணம்மா... இவை அனைத்திற்கும் காரணம் என் ஸ்வேதா மட்டுமே.., விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும்..'' என்றபடி அணைப்பை இறுக்கியவன்... அவள் முகத்தை நிமிர்த்தி ''உன் அன்னை இந்தத் திருமணத்திற்கு சம்மதிப்பார்கள் தானே? உன் தந்தைக்கு அனைத்தும் தெரியும்..'' என்று நிறுத்தியவன்

அவள் ஆச்சரியமாக நோக்குவதைக் கண்டு, ''ஆம் ஸ்வேதா. அன்று கான்பரன்ஸ் வந்த போதே அவர் என் மனதைப் பற்றி அறிந்து கொண்டார். அதனால் அப்போதே என்னைப் பற்றிய அனைத்து உண்மைகளையும் அன்றே அவரிடம் தெரிவித்து விட்டேன். அவருக்கும் இதில் சம்மதம் தான். ஆனால் என் பயமனைத்தும் உன் அன்னையைப் பற்றித் தான். சம்மதிப்பார்களா..?'' என்று வினவினான்.

மையலுடன் அவனை நோக்கியவள், ''சம்மதிக்கா விட்டால் என்ன செய்வீர்கள்..?'' என்று புருவம் தூக்கி வினவ.. அவள் கண்களில் முத்தமிட்டவன் ''சம்மதிக்கா விட்டால்.. தூக்கிக் கொண்டு போய் கல்யாணம் செய்து கொள்வேன்..'' என்று கூறினான்.



தன் முட்டைக் கண்களை மேலும் விரித்து வாயில் கை வைத்து ''அய்யயோ! திருட்டுக் கல்யாணமா..? நான் ஒத்துக்க மாட்டேன்ப்பா!'' என்றவள் நிறுத்தி அவன் தோளில் தன் இரு கைகளையும் மாலையாகக் கோர்த்து.. ''உங்களைப் போன்ற ஒரு சூப்பர் மாப்பிள்ளையை யார் வேண்டாமென்பார்கள்...? இங்கே கொஞ்சம் சரி இல்லை என்றாலும்...'' என்ற படி தலையைக் கை காட்டியவள், ''ஆறடி இருக்கிறீர்களே.. அதற்காகவேனும் ஒப்புக் கொள்வார்கள்..'' என்று கூறிச் சிரித்தவளின்..

குண்டுக் கன்னத்தில் பற்கள் பதியக் கடித்தவன், ''ஏய்.. ராட்சஷி.. எனக்கு மூளை சரி இல்லையா..?'' என்று வினவ.. ''அவ்வபொழுது கொஞ்சம் கழண்ட மாதிரி நடந்து கொள்வீர்களா அதனால் தான்..'' எனக் கூறி மேலும் சிரிக்க..

அவனோ மிகச் சாதாரணமாக, ''உனக்கு வேண்டாமென்றால் கூறு.. உன் தோழி ரம்யா.. என்னை அவளது டார்லிங் என்கிறாள்.., அவ்வப்போது காதல் பார்வை வேறு வீசுகிறாள்.. உன் அளவிற்கு இல்லை என்றாலும் பரவாயில்லை.. நான் அவளையே..'' என்று அவன் முடிப்பதற்குள் அவன் காதைத் திருகியவள்...

''யூ .. யூ ..ராஸ்கல்.. நான் இருக்கையிலேயே.. வேறு யாரையோ கல்யாணம் செய்வாயா...?'' என்றவளிடம் ''ஆ! வேறு யாரையோ இல்லை பாஸ்! உங்கள் தோழி தான்'' என்று அவன் கூற மேலும் திருகியவள், ''ம்ஹ்ம்ம்... என்னைத் தவிர யாரும் என் கார்த்திக்கை கல்யாணம் செய்து கொள்ள முடியாது...'' என்று தலை அசைத்து கூற.. தன் காதல் அனைத்தையும் கண்களில் தேக்கி அவளை நோக்கியவன்..

அவள் தலை முடியைக் கோதி, ''எப்படி நீ என் வாழ்கையில் வந்தாய்க் கண்ணம்மா.. எப்படி என் வாழ்வில் ஒன்றிப் போனாய்.. வாழ்க்கை விசித்திரமானது ஸ்வேதா.. ஒரு பகுதி கண்ணீரில் கரைந்து கொண்டிருக் கையில். மறு பகுதி.. மகிழ்ச்சியின் உச்சத்தைத் தொட வைக்கிறது.. நீ தான் என் மகிழ்ச்சி... நீ தான் என் கோபம்... நீ தான் என் கண்ணீர்... நீ தான் என் சிரிப்பு... என் உணர்வுகள் அனைத்திற்கும் சொந்தமானவள் நீ மட்டுமே...'' எனக் கூற நெகிழ்ந்து அவன் கைப் பற்றி முத்தமிட்டாள்.

''எப்போதும்.. யாரையேனும் சார்ந்திருப்பதே மனித குலத்தின் வழக்கமாகிவிட்டது.. எனக்கு அப்போது என் அன்னை.. இப்போது நீ..., எப்போதும்.. எந்தச் சூழ்நிலையிலும் நான் உன்னை விட்டுப் பிரிய மாட்டேன் ஸ்வேதா. அது மரணமே என்றாலும் கூட. என் அன்னை என் தந்தையுடனே சென்று விட்டதைப் போல்.. நானும் உன்னுடனே..'' என்றவனின் இதழ்களை அவசரமாக மூடி

''வேண்டாம் கார்த்திக்.. நாம் நூறு வருடம் ஆதர்ச தம்பதிகளாக ஒற்றுமையுடன் வாழ்வோம்..'' என்று நிறுத்தியவள்.. தேவர்கள் கூறுவதைப் போல் தானே ''ததாஸ்து!'' பாடிக் கொண்டாள். அதைக் கண்டு நகைத்த கார்த்திக்... அவளையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். ''என்ன பார்க்கிறீர்கள்..'' என்று வினவியவளை வெண் பற்கள் பளிச்சிட புன்னகைத்த படி ஆழ்ந்து நோக்கி...

''சுட்டும் விழிச் சுடர் தான் கண்ணம்மா...
சூரிய சந்திரரோ...''



அவள் கண்களை தன் ஆள் காட்டி விரலால் வருடி...

''வட்டக் கரிய விழி கண்ணம்மா...
வானக் கருமை கொல்லோ...''

என்றவன்... தோளில் இருந்து வழிந்த அவள் புடவையைப் பற்றி..

''பட்டுக் கருநீலப் புடவை...
பதித்த நல்வைரம்...''

என்று அவள் இடையில் அழுந்த கரம் பதித்தவன்..

'' நட்டநடு நிசியில்தெரியும் நட்சத்திரங்களடி"

என்றவன் பின் அவளின் ரோஜா இதழ்களில் தெரிந்த புன்னகையை வருடி..

''சோலை மலர் ஒளியோ...
உனது சுந்தரப் புன்னகை தான்...''

எனக் கூறி அவள் நெற்றியிலிருந்து கன்னம் பதித்து அவள் நெஞ்சில் முகம் புதைத்து...

''நீலக் கடலலையை...
உனது நெஞ்சின் அலைகளடி...''

எனப் பாடிய படி முன்னேறி அவள் கழுத்தில் முத்தமிட்டவன்..

''கோலக் குயிலோசை உனது
குரலின் இனிமையடி..''

என்றவன் அவளை முழுதாக அணைத்து...

''வாலைக் குமரியடி கண்ணம்மா...
மருவக் காதல் கொண்டேன்...''

என்றான். பின் அவள் முகத்தைப் பற்றி ஒற்றை விரலால் அவளை நிமிர்த்தி...

''சாத்திரம் பேசுகிறாய் கண்ணம்மா...
சாத்திரம் எதுக்கடி..?
ஆத்திரம் கொண்டவர்க்கே கண்ணம்மா..
சாத்திரம் உண்டோடி...?''

என்றபடி அவள் கன்னத்தில் தன் கன்னம் பதித்தவன்...

''மூத்தவர் சம்மதியில்... வதுவை
முறைகள் பின்பு செய்வோம்...''

என்று நிறுத்தியவன்... லேசாகத் தலையைப் பின் சாய்த்து... தன் கண்களை மூடி..

''காத்திருப்பேனோடி.... இது பார்...
கன்னத்து முத்தமொன்று...!''

என்று பாடி முடித்தான்.

தன் ஒட்டு மொத்த அன்பையும்... கட்டுக் கடங்காத காதலையும்... அவள் மீது கொண்ட மோகத்தையும்... நேசத்தையும்.. பாசத்தையும்... உணர்ச்சி நிறைந்த குரலில்... அந்த முண்டாசுக் கவிஞனின் வார்த்தைகளில் அவன் தேக்கிய போது...

சொல்ல முடியாத... வரையறுக்க முடியாத... உணர்ச்சிகள் மனதில் எழுச்சியாய் எழ... விழிகளில் வற்றாமல் பொங்கி வழிந்த கண்ணீரோடு, இனி நமக்குள் பிரிவேயில்லை என்பது போல் அவனை இறுக அணைத்து அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள், அவனின் கண்ணம்மா.


# ஸ்ரீ சுபம் வெளியீடுகள்

## இலக்கியா

❖ என் இதய ஸ்வரமே

## ஸ்ரீகலா

❖ என்னை மறந்ததேன் என்னுயிரே

## நித்யா கார்த்திகன்

❖ இரும்பின் இதயம்
❖ மௌனம் - காதலின் மொழி
❖ இதயத்தில் ஒரு யுத்தம்

## ஹன்சிகா சுகா

❖ இதயம் இடம் மாறும்

## நிவேதா ஜெயாநந்தன்

❖ இதயம் முழுதும் உனது வசம்